பாரதியாரின்

# பாஞ்சாலி சபதம்

(NOTES AND LITERARY CRITICISM ON
**BHARATHI'S**
'PĀNCHĀLI SAPATHAM')

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை
677/9, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்

வித்துவான், பண்டிதர்
**வி. சீ. கந்தையா B. O. L.** அவர்கள்
எழுதிய
அரும்பதவுரையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் கொண்டது.

பதிப்பாளர் :
**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**
234, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

முதலாம் பதிப்பு: புரட்டாதி 1963.

அச்சுப்பதிப்பு:
**ஸ்ரீ லங்கா அச்சகம்,**
யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை]

[விலை ரூபா 2 - 75

# முன்னுரை

வரகவி என்றும், மகாகவி என்றும் போற்றப் படுபவர் பாரதியார். பாரத நாடு அடிமைப்பட்டுக்கிடந்த காலத் திலே தோன்றிய பாரதியார், உணர்ச்சியூட்டக்கூடிய பாடல்களைப் பாடி உறங்கும் மக்களைத் தட்டியெழுப்பினார். தேச விடுதலைப் போரில் தம் உயிரையும் கொடுக்கச் சித்த மான வீரர்கள் தோன்றுதற்குக் காரணமாயிருந்த அவரது பாடல்கள், பாரதியாரை ஒரு "தேசீயகவி" என்று முத்திரை பொறித்து வைத்து விட்டன. எனினும், பாரதி அறுபத்தாறு முதலான நீதிப் பாக்களையும், சக்திப்பாடல்கள் முதலான எத்தனையோ பக்திப்பாடல்களையும் பாடியதோடு கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு, பாஞ்சாலிசபதம் என்ற காவியங்களை யும் அவர் பாடி யிருக்கின்றார்.

பாரதி ஒரு சக்திவழிபாட்டுக்காரர். அதே சக்தியினை, அன்னை பராசக்தி, பாரத அன்னை, மானிடப் பெண் என்ற மூன்று அம்சங்களிலும் வைத்துத் தனித் தனி பாடி மகிழ்ந்த பாரதியாருக்கு அம் மூன்று அம்சங்களையும் ஒன் றிலே மறுபடியும் சேர்த்துக் கண்டு மகிழ இடமளித்தது பாஞ்சாலிசபதம் என்னும் இச்சிறு கதைநூல். சக்தியின் அம்சமாகிய பெண்ணினம் சமுதாயத்திலே படும் கொடுமை களை விளக்கி அந்த நிலை மாறவேண்டியதன் அவசியத்தை யும், அவசரத்தையும் பாட இடமளிக்கும் காவியமாக அவ ருக்கு இது அமைந்து விட்டது. அளவாற் சிறியதாயினும் சிறந்ததொரு காவியம் என்று போற்றப்படத்தக்க பெருமை உடையது, மகாகவி ஷெல்லியின் "பிராமித்யுஸ்" போல.

மனித உணர்ச்சியையே நடுநாயகமாக வைத்துப் பாடியவர் பாரதி. பிரபல சீன இலக்கிய விமர்சகரான சி. இன். ஷெக்டாங் என்பவர் கவிதையைப் பற்றிக் கூறுகிறார்:- "கவிதை என்பது என்ன? இதயத்தின் குரல் தானே! பெண் களின் இதயத்திலும் குழந்தைகளின் இதயத்திலும் அக் குரல் வாழும்; அந்தக் குரல் உனக்குக் காலையிலும் இர விலும் நன்கு கேட்கும்" என்று அவர் கூறுவது இந்த மனித

உணர்ச்சியைப் பற்றியே தான். பாரதியாருக்குக் கேட்ட பெண்ணினத்தின் அதே உணர்ச்சிக் குமுறலே பாஞ்சாலி சபதம் என்னும் இந்நூலாக வடிவெடுத்தது. மகாகவிகள் பேருண்மைகளைக் காட்டக் கூடிய பெரும் பொருள்களைப் பற்றியே பாடுவார்கள் என்பர். அப்படியானால் சிறிய பொருள் ஒன்றன் மூலம் பல பேருண்மைகளைப் புலப்படுத்தும் தனது பேராற்றலால், பாரதி அத்தகையோருள்ளே சிறந்து விளங்கு கிறார் என்று நாம் கூறல் வேண்டும். உண்மையும் அது தான். பாரதியார் தனது பாஞ்சாலி சபதத்திலே ஒவ்வொரு உணர்ச்சி நிலையையும், ஒவ்வொருவர் மனப் பான்மையை யும் நன்கு அறிந்து சித்திரித்திருக்கின்றார். கவிதையின் பயன் கவிஞனின் திறமையையே பொறுத்திருக்கிறது. ஆற் றல் மிக்க கவிஞனாலே சிறப்பிக்க முடியாதது ஒன்றுமே இல்லை என்பதைப் பாரதியார் நிரூபித்து விட்டார். கவிதை யையும் கவிஞனது உள்ளத்தொடர்பையும் பற்றி மகாகவி யான ஷெல்லி கூறியிருப்பது இவ்விடத்துக்குப் பொருந்தும்;

> ''கவிதை ஆயிரக்கணக்கான உணர்ச்சிபாவங்களாகிய எண்ணங் களின் சேர்க்கையால் மனத்தை விரியச்செய்வது. உலகத்தின் அழகை மூடிக்கொண்டிருக்கும் திரையை அது விலக்குகின்றது. நீதி யின் பெரிய இரகசியம் அன்பேயாகும். நாம் நமது இயற்கைநிலையை விட்டு வெளிவருவது என்றும் கூட அதைச் சொல்லலாம். அதுமட்டு மின்றி நம்மைச் சேராத எண்ணம், செய்கை, எல்லாவற்றிலு முள்ள அழகு முழுவதையும் கிரகித்து உணர்வதும் கூட''

என்று அவர் விளக்கம் தருகின்றார். இக் கூற்று, பாரதியா ரது பாஞ்சாலி சபதக் கவிகளுக்கு முற்றிலும் பொருந்துவது என்னலாம்.

இந்த வகையில் உயர்ந்த ஒரு கவிஞர் பாரதியார். கிரேக் கர்களுக்கு ஒரு ஹோமரும், இத்தாலியருக்கு ஒரு தாந்தே யும், சுவீடன் தேசத்தாருக்கு ஒரு இப்சனும், பெல்சிய நாட்டா ருக்கு ஒரு மேடர்லிங்கும், வடமொழியாளருக்கு ஒரு காளி தாசனும், பழந்தமிழ் மொழிக்கு ஒரு இளங்கோவும், இடைக் காலத் தமிழுக்கு ஒரு கம்பனும் கிடைத்தது போலப், பிற் காலத் தமிழுக்கு ஒரு பாரதி நமக்கு வாய்த்திருக்கின்றார். தங்கள் தங்கள் நாட்டிற்கும் காலத்திற்கும் ஏற்றவாறு மேற்

காட்டிய கவிஞர்கள் தத்தம் திறமையை இலக்கிய உருவில் வடித்துத் தந்ததைப்போலவே, பாரதியாரும் எங்கோ ஒளி விடும் சுதந்திர சூரியனை வேண்டிப், பெண்ணடிமைத் தளையினை நொறுக்கவல்ல சம்மட்டியினை நோக்கி, விதியின் வலிமையிலும், இறைவன் அருளிலும் கொண்ட அசையாத நம்பிக்கையோடு வெளிப்படும் இந்திய மக்களின் உணர்ச்சியைப் புதுமைத் தமிழிற் பாடி அளித்திருக்கின்றார். பாஞ்சாலியும், பாண்டவரும் செய்த சபதம் போன்ற சபதத்தை, இந்திய அன்னையின் அடிமை நீக்கத்திற்கு உழைக்கும் உறுதிப்பிடியை ஒவ்வொரு இந்திய மகனும் கைப்பிடிக்கவேண்டும் என்ற தமது பேராவலை வெளிப்படுத்தியுள்ளார். இதுதான் பாஞ்சாலி சபதத்தின் இரகசியம்.

'பாப்பாப் பாட்டு' முதல் 'பாரதி அறுபத்தாறு' வரை, 'சிட்டுக்குருவி' முதல் 'சக்திக் கூத்து' வரை பாடிய அவர், பாரதநாட்டின் பழங்கதையினையும் விட்டுவைக்கவில்லை. மகா பாரதக்கதையின் ஒரு சிறுபகுதிக்கு அவர் கொடுத்த மெருகு தான் 'பாஞ்சாலிசபதம்' என்னும் காப்பியத்தில் பளிச்சிடுகின்றது. கம்பனதைப்போன்றதொரு காவியஞ் செய்திருப்பரேல் பாரதியாரும் பண்டிதர்களுக்கு மட்டுமே உரியகவியாய் அமைந்திருப்பார். ஆனால், பாரதி பொது மக்களின் கவியாகிவிட்டனர். அதுதான் உலக இலக்கிய இயக்கத்திலே பாரதி செய்த ஒரு புதுமை. 'பொதுமக்களின் கவி' யென்று உலகம் போற்றத்தக்க பெருமையாளர்கள் ஆங்கில மகாகவியாகிய ஷேக்ஸ்பியர், அமெரிக்க நாட்டு விட்மன் முதலிய ஒரு சிலரே. பாரதியாரது பாஞ்சாலி சபதம் என்ற காவியச் சிறப்பு, காவியத்தின் மூலம் பொதுமக்களைத்தொட்டு நிற்கின்ற பெரிய கவிஞர்களின் வரிசையில் அவரையுஞ் சேர்த்துவிட்டது.

பாரத தேவியின் வீரமக்கள் தம் இளமைமுதல் இயற்றிய வேதம், கீதம், வெற்றி, வேள்வி, ஓவியம், சிற்பம், காவியம், நீதி, நியமம், எல்லாமே பாரத சக்தியின் பெருமைக் காகத்தான் என்பது அவர் தீர்ப்பு. பாரத சக்தி எல்லா நற்குணங்களும் அமையப்பெற்றவள்; ஆனால் கட்டுக்கடந்த செயல்களைக் கண்டால் அவள் கொள்ளும் பயங்கர ரூபத்தை எவராலும் பொறுக்கமுடியாது. இந்தத் தத்துவந்தான் பாரதியாரால் அவ

ரது காவியத்திலே பாஞ்சாலிமூலம் கற்பித்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

பாஞ்சாலிசபதம் சிறந்ததொரு சமதர்ம காவியம். பல கருத்துக்கள் அதனுள் பொதிந்து கிடக்கின்றன. திரும்பத் திரும்ப அதைப் படித்து, அறிந்து இன்புறவேண்டும். தருமன் சூதாடுகின்றான்; தம்பிமார் அதைப் பொறுத்துக்கொண்டனர். நாட்டை வைத்திழந்தான்; பொறுத்துக்கொண்டனர். மாடு, மனை, மக்கள், செல்வம் எல்லாவற்றையும் சூதில் இழந்தான்; பொறுத்துக்கொண்டனர். தம்பிமாரையும், இறுதியில் தன்னையும் முறையே வைத்திழந்துகொண்டே போனான்; வீமன் முதலிய நால்வரும் பொறுத்துக்கொண்டே இருந்தனர். இறுதியில் பாஞ்சாலியை வைத்திழந்தான். பாரத தர்மத்துக்கே அவமானம்; பேரழிவுக்குக் காரணமான இச்செய்கையை யாரால் பொறுக்கமுடியும்! பெண்குலத்தை அடிமை செய்பவனைப் 'பேடி' என்று காறி உமிழ்கின்றவரான பாரதியாருடைய உணர்ச்சி, ஆவேசம் எல்லாம் சேர்ந்து தருமனைச் சபிக்கின்றன. பாரதியாரது வீரக் குரல் வீமன்மூலம் புறப்படுகின்றது.

"சாமி புகழினுக் கே — வெம்போர்ச்
சண்டனப் பாஞ்சாலன்
அவன் சுடர் மகளை — அண்ணே
ஆடி இழந்து விட்டாய்
................................"

"இது பொறுப்பதில்லை — 'தம்பி
எரி தழல் கொண்டுவா'
கதிரை வைத்திழந்தான் — அண்ணன்
கையை எரித்திடுவோம்"

தருமனுக்கிளைய நால்வரும் தமையன் சொற் கடவாச் செம்மையாளர்; தருமன் செயலில் தப்புக்காணாதிருப்பதில் பெயர்பெற்றவர்கள். அந்த நியதியை வீமன் கடந்துவிட்டதாகக் காட்டுவதல்ல இங்குப் பாரதியாரது நோக்கம். உணர்ச்சியின் உயர்ச்சி, காவியத்தின் உயிர்த்துடிப்பு எது என்பதையே இதனால் நம்மைக் காணவைக்கின்றார்! பாரதியாரது கோபக்கனல் பறக்கும் பாடல்கள் இவை.

பாஞ்சாலி துகிலுரியப்படுதல் காவியத்திலே ஒரு முக்கியமான கட்டம். சபையிடை நின்ற திரௌபதியின் நிலை, அவளைச்

சபைக்கிழுத்துவரும் பாதகனின் கோலம் இவைகள் மூலமே பாஞ்சாலி படுகின்ற துன்பக் காட்சியை யாம் கண்டு, கதைப் போக்கிற் கலந்து, அந்த உணர்ச்சியில் ஒன்ருகிவிடக்கூடிய தாய் இருக்கின்றது.

> "ஆடை குலேவுற்று நிற்கிருள் — அவள்
> ஆவென் றழுது துடிக்கிருள் — வெறும்
> மாடு நிகர்த்ததுச் சாதனன் — அவள்
> மைக்குழல் பற்றி இழுக்கிருன்" (272)

என்ன அருமையான சித்திரம்! இந்தப் பாட்டின்மூலம் காவியமனைத்துமே நம் கண்முன் வந்துநிற்கின்றது. அதோ பாஞ்சாலி! அவளது அவிழ்ந்த கூந்தல் தொங்குகின்றது; குலேந்த ஆடை ஒரு கையில்; கண்ணீர் தாரை தாரையாகப் பொழிகின்றது; 'கண்ணு, கண்ணு!' என்று கதறுகின்ருள். *(அட்டைப்படம்)* 'ஒ பெரியோர்களே! நீங்களுமா பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்! இந்த அநியாயத்திற்கு முடிவுகட்ட யாருமே இல்லேயா' என்று கதறிக் கதறித் துடிக்கின்ருள். பக்கத்தில் துச்சாதனன்; "மாடுநிகர்த்த துச்சாதனன்"என்று அவனேக் கூறுகின்ருர் பாரதியார். அவருக்கு அத்தோடு திருப்தி ஏற்படுகின்றது. துச்சாதனன்மீது உண்டான கோபத்தையும் வெறுப்பு உணர்ச்சியையும் எப்படிச் சொன்ருலும் முழுவதும் வெளிப்படுத்த முடியாதல்லவா! பண்டைய தமிழகச் செல்வம் அனேத்தையும் கொள்ளேகொண்டு, மீட்கமுடியாத பெருநட்டத்தைச் செய்த கடலே, "கொடுங்கடல்" என்று சுருங்கிய அடைமொழி ஒன்றினுற் காட்டித் தமது ஆத்திரத்தைத் தீர்த்து அமைதிகொண்ட இளங்கோவடிகளேப்போல, "மாடு நிகர்த்த" என்ற தொடர் மட்டும் பாரதியாரைத் திருப்திப் படுத்திற்றெனல் வேண்டும்.

இத்தகைய சிறந்த காட்சிகளும், கற்பனே வளமும் நிறைந்த காவியத்தினே ஓரளவு தமிழ் கற்ருேரும் இலகுவிற் படித்து விளங்கத்தக்க முறையிலே யாத்தளித்த பாரதியார் தமது நூற் பொருளே அனேவரும் சரிவர அறிந்து பயன்கொள்ளுதல் வேண்டும் என்றும் ஆசைப்பட்டார். அதனுல் தாமே 1912 - ல் இந்நூலின் 1-ம் பாகத்தை முதன் முதலிற் பதிப்பித்து வெளியிடும்போது 'பொருள் விளக்கமும் குறிப்புகளும்' என்று

ஒரு பகுதியையும் எழுதிச் சேர்க்கலானுர். அரும்பத உரையும், சில இடங்களுக்கு விளக்கமும், செய்யுட்போக்கின் மாற்றம் பற்றிய குறிப்புகளும் கொண்டு விளங்கும் அப்பகுதி, பாரதியாருடைய உள்ளத்திலே பாஞ்சாலிசபதம் பெற்றிருந்த உயர்ந்த இடத்தை நன்கு காட்டுவது.

இருபதாம் நூற்ருண்டு தந்த தமிழ்ச்செல்வம் என்று போற்றத்தக்க முத்தமிழறிஞரான விபுலானந்த அடிகளார் பாரதிபாடல்களிலே பெரிதும் ஈடுபாடுகொண்டவர். பாரதியாரை ஒரு 'பஞ்சைப் புலவன்' என்றும் 'கவிஞன்' என்று சொல்லுவதற்கே தகுதி இல்லாதவன் என்றும் தமிழகத்திற 'பெரும்பெரும் தமிழறிஞர்கள்' எல்லாரும் சொல்லிப் புறக்கணித்துவந்த காலத்திலே பாரதியாரை ஒரு மகாகவியென்று மேடைதோறும் நிறுவித், தமிழறிஞரிடைப் பாரதி பாடல்களுக்கு ஒரு சிறந்த மதிப்பை ஊட்டிவைத்த பெருமையும் அடிகளுக்கே உரித்தானது எனலாம். பாரதிபாடல்கள் அனைத்தையும் துறைதேர்ந்து கற்றறிந்த அடிகளாரே, 'பாரதியாரின் உள்ளத் துடிப்பனைத்தையும் எதிரொலி செய்து நிற்கின்ற இலக்கியப்படைப்பு பாஞ்சாலி சபதம் என்னும் காவியந்தான்' என்று அடிக்கடி கூறுவார்.

அவ்வாறு உயர்ந்து விளங்குவதான இந்த அழகிய காவியத்திற்குப் பொருளும் விளக்கக் கட்டுரைகளும் எழுத முனைந்தேன். பத்துப் பன்னிரண்டு கட்டுரைகள், அரும்பத உரைக் குறிப்புகள் எழுந்தன. கற்ருேர் குழு எனது முயற்சிக்கு ஊக்கம் தரும் என்ற நம்பிக்கையும் துணை நின்றது. எனினும் அந்த எண்ணமும் துணிவும், நம்பிக்கையும் எல்லாம் ஒன்றுகூடி நூல் வடிவில் அமைவுபெறக் காரணமானவர் வடமொழிப் புலவரும், எமது கலாசாலை உடனுசிரியருமான பிரம்மஸ்ரீ தியாகராஜ ஐயர் அவர்கள்தான். ஓய்வுவேளைகளிற் பாரதி பாடல்களைப் படித்தின்புறுவேன்; மாணவர்களுக்கும் சொல்லிக் கொடுப்பேன்; கேட்டிருக்கிருர் போலும்! எனது விருப்பினை வளர்த்து இவ்வுரைத் தொடர்களோடு நூல் வெளிவருவதற்கு வழிகோலினுர். போதாதென்று அணிந்துரையும் ஒன்று தந்து என் முயற்சியை ஆசீர்வதித்தும் உள்ளனர். அவரது இத்தகைய பேரன்புக்கு என்றும் மறவாத நன்றி உடையேன்.

மட்டக்களப்பில் இருந்துகொண்டு யாழ்ப்பாணத்திலே நூலை அச்சிடுவதில் ஏற்படக்கூடிய காலக்கழிவை நீக்கி, நூல் அச்சாகும்போது பார்வைப் பிரதிகள் அனைத்தையும் தாமே கவனித்துத் திருத்திக்கொடுத்ததோடு பாக்களை நன்கு சீர் பிரித்தமைத்தல் முதலாக வேண்டிய உதவிகள் பலவற்றையும் **பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா** அவர்கள் அன்புடன் செய்து தந்தார்கள். அவர்களுக்கு யான் மிகுதியும் நன்றி பாராட்டுகின்றேன். அழகிய வடிவில், பிழைகளின்றி விரைந்து இந்நூல் வெளிவருவதற்குப் பெரிதும் துணைசெய்த ஸ்ரீ லங்கா அச்சகத்துத் துணையாளர் அனைவருக்கும், சிறப்பாக அந்நிலைய அதிபர் **திரு. நா. தேவேந்திரம்பிள்ளை** அவர்களுக்கும் எனது உளம் கலந்த நன்றி உரியது. அட்டைப் படத்தினை அழகும் பொருத்தமுமுற வரைந்து தந்தவர் மட்டக்களப்புச் சிற்றாண்டியைச் சேர்ந்த கலைஞர் 'குமார்' அவர்கள். அன்னாருக்கும் எனது நன்றி. இவ்வாண்டின் பாரதி நினைவு நாளாகிய இன்று இந்நூலை வெளியிட முடிந்தமை குறித்துப் பெரிதும் மகிழ்ச்சியுறுகின்றேன்.

நல்லறிஞர்கள், ஆசிரியர்கள், தமிழ் மாணவர்கள் ஆகியோர் யாவரும் எனது முயற்சிக்கு நல்லாதரவு தந்து மேலும் என்னை ஊக்குவிப்பார்கள் என நம்புகின்றேன்.

வணக்கம்.

சிவானந்த வித்தியாலயம்,
மட்டக்களப்பு.

**வி. சீ. கந்தையா,**
**11-9-1963.**

# அணிந்துரை

வியாகரண சிரோமணி
**ஸ்ரீ பூ. தியாகராஜ ஐயர் அவர்கள்**
சம்ஸ்கிருத விரிவுரையாளர்
**சிவானந்த வித்தியாலயம்**
மட்டக்களப்பு.

மகாபாரதத்தின் முக்கியமான கதை நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் வித்தாக அமைந்து விளங்கும் பகுதியே 'த்யூத பர்வம்' (சூது போர்ச்சருக்கம்) ஆகும். அப்பகுதியின் இறுதி நிகழ்ச்சியான துகிலுரிதற் சம்பவத்தை வைத்துக் கொண்டுதான் மகாகவி பாரதியார் "பாஞ்சாலி சபதம்" என்னும் காவியத்தினை எழுதியிருக்கின்றார். பாஞ்சாலி சபதம் என்னும் இந் நூலானது, நவரசங்களையும் உள்ளடக்கிப் பாமரரும் பண்டிதரும் சுவைத்துப் பயனடையக் கூடிய முறையில் அமைந்துள்ள தென்பது யாவருமறிந்ததே.

இந் நூலுக்கு வித்துவான், பண்டிதர், வி. சீ. கந்தையா, பீ. ஓ. எல். அவர்கள் அரும்பதவுரையும், அருமையான விளக்கக் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்கள்.

தமிழையும் சம்ஸ்கிருதத்தையும் நன்கு கற்ற பெரும் புலவரான பாரதியார் வியாச பாரதத்துக் கதையினையே அடிப்படையாகக் கொண்டு பாஞ்சாலி சபதத்தை எழுதியிருக்கிறாரெனினும், அத்தோடு தாம் வாழ்ந்த காலத்துக்குப் பொருத்தமான சில நிகழ்ச்சிகளைக் கதைப் போக்கிலும், கதா பாத்திரங்களிலும் சேர்த்துத் தம் நூலினை ஒரு புதுப் படைப்பாகத் திகழவும் வைத்திருக்கின்றார்.

சுதந்திரக் கவிஞரான பாரதியாரது உள்ளத் துணர்ச்சியை நன்கு உணர்ந்து அவரது பாடல்களிலே பெரிதும் ஈடுபாடு கொண்டிருப்பவராகிய நண்பர் கந்தையா அவர்கள் இந் நூலுக்கு எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் மிகுதியும் பொருத்தமான முறையிலே அமைந்து விளங்குவதில் ஆச்சரியமில்லை.

அவர் யாழ்ப்பாணம் மதுரைத் தமிழ்ச் சங்கங்களின் பண்டிதர்; இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் வித்து

வான்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து பீ. ஓ. எல். பட்டதாரி; காலஞ்சென்ற தமிழ்ப் பேரறிஞராகிய விபுலானந்த சுவாமிகளின் உத்தம மாணவர். இச்சிறப்புகளோடு மட்டக்களப்புநாடு பெற்ற மாணிக்கங்களில் ஒருவராயுமிருக்கின்ற பண்டிதர் கந்தையா அவர்கள், தமது நாவன்மையாலும் எழுத்துத் திறனாலும் ஈழநாட்டிலேயே தமக்கென ஒரு நிரந்தர ஸ்தானத்தைப் பெற்றுத் திகழ்கின்றார்.

உயர்தர மாணவர்களுக்குப் பெரிதும் பயன் படத்தக்க முறையில் இவர் எழுதிய "கட்டுரை இயல்" என்னும் நூற் சிறப்பைக் கல்வி உலகம் நன்கறியும். இன்னார் ஒரு சிறந்த பதிப்பாசிரியர் என்பதற்கு இவர் வெளியிட்ட "கண்ணகியம்மன் குளுத்திப்பாடல்" முதலிய நூல்கள் பெற்ற பாராட்டுதல்கள் சான்று பகர்வன. இவ்வாறு தமிழன்னைக்குச் சிறந்த தொண்டாற்றிக் கொண்டிருக்கும் இவ்வாசிரியரின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பாஞ்சாலி சபதம் என்னும் பூங்காவினில் நுழைந்து அதன் நறுமணத்திற் றிளைக்க விரும்புவோருக்குச் சிறந்த வழிகாட்டிகளாக விளங்குகின்றன என்பதை இதனைப் படித்து அனுபவிப்பவர் எவரும் நன்கு உணர்வார்கள்.

பண்டிதர் அவர்கள், பல வருடகாலம் இந் நூலைத் தம் மாணவர்களுக்குப் போதித்த அனுபவ முதிர்ச்சியின் பயன், கட்டுரைப் பொருள்களில் ஆங்காங்கே பளிச்சிடுகின்றது. கல்லூரி மாணவரும், கட்டுரையாளர்களும் காவிய ஆராய்ச்சியில் ஈடுபட்டோருமாகிய அனைவரும் படித்தின் புறத்தக்க வகையில் இந் நூல் அமைந்துள்ளது.

இவ்வாசிரியர் இது போன்று மேன் மேலும் பல அரிய நூல்களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதித் தமிழன்னைக்குச் சிறந்த அணிகலனாகச் சூட்டி நீடூழி வாழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவானந்த வித்தியாலயம்,
கல்லடி, உப்போடை,
மட்டக்களப்பு.

பூ. தியாகராஜ ஐயர்
10-9-63.

பாரதியார்

இந்நூலின் முதற் பதிப்பில் செய்துள்ள

## ஸமர்ப்பணம்

தமிழ் மொழிக்கு

அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு

இனிப் பிறந்து

காவியங்கள் செய்யப்போகிற

**வர கவிகளுக்கும்**

அவர்களுக்குத் தக்கவாறு

கைங்கரியங்கள் செய்யப்போகிற

**பிரபுக்களுக்கும்**

இந் நூலைப்

பாதகாணிக்கையாகச் செலுத்துகிறேன்.

ஆசிரியன்.

**1912-ம் ஆண்டு,**
**புதுச்சேரி வித்யாபிவர்த்தினி அச்சகத்தில் பதிப்பித்து**
**வெளியிடப்பெற்ற தமது முதலாவது பதிப்பில்**
**பாரதியார் எழுதியுள்ள**

## முகவுரை

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்துதருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்.

காரியம் மிகப் பெரிது; எனது திறமை சிறிது. 'ஆசையால்' இதனை எழுதி வெளியிடுகின்றேன், பிறருக்கு ஆதர்சமாக அன்று; வழிகாட்டியாக.

இந் நூலிடையே திருதராஷ்டிரனை உயர்ந்த குணங்களுடையவனாகவும், சூதில் விருப்ப மில்லாதவனாகவும், துரியோதனனிடம் வெறுப்புள்ளவனாகவும் காட்டியிருக்கின்றேன். அவனும் மகனைப் போலவே துர்க்குணங்களுடையவன் என்று கருதுவோருமுளர். எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது, பெரும்பான்மையர்க. இந்நூலை வியாச பாரதத்தின் மொழிபெயர்ப்பென்றே கருதிவிடலாம். அதாவது, 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்தச் சரக்கு' அதிகமில்லை; தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி.

தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமென்று கங்கணங்கட்டிநிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினாளாதலின், இதன் நடை நம்மவர்க்குப் பிரியந்தருவதாகும் என்றே நம்புகிறேன்.

ஓம் வந்தே மாதரம்.

**சுப்பிரமணிய பாரதி**

# பொருளடக்கம்


பக்கம்

அ: நூலும் அரும்பதவுரையும் 1—105

முதற்பாகம்

முதலாவது: அழைப்புச் சருக்கம் 1 — 50

1 பிரம ஸ்துதி
2 ஸரஸ்வதி வணக்கம்
3 ஹஸ்திநுபுரம்
4 துரியோதனன் சபை
5 துரியோதனன் பொருமை
6 துரியோதனன் சகுனியிடம் சொல்வது
7 சகுனியின் சதி
8 சகுனி திரிதராட்டிரனிடம் சொல்லுதல்
9 திரிதராட்டிரன் பதில் கூறுதல்
10 துரியோதனன் சினங் கொள்ளுதல்
11 துரியோதனன் தீமொழி
12 திரிதராட்டிரன் பதில்
13 துரியோதனன் பதில்
14 திரிதராட்டிரன் ஸம்மதித்தல்
15 சபா நிர்மாணம்
16 விதுரனைத் தூது விடல்
17 விதுரன் தூது செல்லுதல்
18 விதுரனை வரவேற்றல்
19 விதுரன் அழைத்தல்
20 தருமபுத்திரன் பதில்
21 விதுரன் பதில்
22 தருமபுத்திரன் தீர்மானம்
23 வீமனுடைய வீரப்பேச்சு
24 தருமபுத்திரன் முடிவுரை
25 நால்வரும் ஸம்மதித்தல்
26 பாண்டவர் பயணமாதல்
27 மாலை வருணனை

இரண்டாவது: சூதாட்டச் சருக்கம் 51 — 65

28 வாணியை வேண்டுதல்
29 பாண்டவர் வரவேற்பு

பக்கம்

30 பாண்டவர் சபைக்கு வருதல்
31 சூதுக்கு அழைத்தல்
32 தருமன் மறுத்தல்
33 சகுனியின் ஏச்சு
34 தருமனின் பதில்
35 சகுனி வல்லுக்கு அழைத்தல்
36 தருமன் இணங்குதல்
37 சூதாடல்
38 நாட்டை வைத்தாடுதல்

## இரண்டாம் பாகம்

**மூன்றாவது: அடிமைச் சருக்கம்** 66 — 77

39 பராசக்தி வணக்கம்
40 ஸரஸ்வதி வணக்கம்
41 விதுரன் சொல்லியதற்குத் துரியோதனன் மறுமொழி செல்லுதல்
42 விதுரன் சொல்வது
43 சூது மீட்டும் தொடங்குதல்
44 சகுனி சொல்வது
45 ஸஹாதேவனைப் பந்தயம் கூறுதல்
46 நகுலனை இழத்தல்
47 பார்த்தனை இழத்தல்
48 வீமனை இழத்தல்
49 தருமன் தன்னைத்தானே பணயம்வைத்திழத்தல்
50 துரியோதனன் சொல்வது
51 சகுனி சொல்வது

**நான்காவது: துகிலுரிதற் சருக்கம்** 78 — 88

52 திரௌபதியை இழத்தல்
53 திரௌபதி சூதில் வசமானதுபற்றிக் கௌரவர்கொண்ட மகிழ்ச்சி
54 துரியோதனன் சொல்வது
55 திரௌபதியைத் துரியோதனன் மன்றுக்கு அழைத்துவரச்சொல்லியதுபற்றி ஜகத்தில் உண்டான அதர்மக் குழப்பம்
56 துரியோதனன் விதுரனை நோக்கி உரைப்பது
57 விதுரன் சொல்வது
58 துரியோதனன் சொல்வது

பக்கம்

59 திரௌபதி சொல்லுதல்
60 துரியோதனன் சொல்வது

**ஐந்தாவது: சபதச் சருக்கம்** 89 — 105

61 துச்சாதனன் திரௌபதியை ஸபைக்குக் கொணர்தல்
62 திரௌபதிக்கும் துச்சாதனனுக்கும் ஸம்வாதம்
63 ஸபையில் திரௌபதி நீதி கேட்டழுதல்
64 வீட்டுமாசார்யன் சொல்வது
65 திரௌபதி சொல்வது
66 வீமன் சொல்வது
67 அர்ஜுனன் சொல்வது
68 விகர்ணன் சொல்வது
69 கர்ணன் பதில்
70 திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் பிரார்த்தனை
71 வீமன் செய்த சபதம்
72 அர்ஜுனன் சபதம்
73 பாஞ்சாலி சபதம்

**ஆ: பொருள் விளக்கமும் குறிப்புக்களும்** 106 — 117

**இ: விளக்கக் கட்டுரைகள்** 119 — 214

1. பாரதி தோன்றிய சூழ்நிலை
2. பாஞ்சாலி சபதத்தின் காவியப் பண்பு
3. கதைப்போக்கும் நூலமைப்பும்
4. அத்தினபுரச் சிறப்புகள்
5. தருமர் செய்த இராசசூயயாகம்
6. மாலை வருணனை
7. கண்ணன் புகழ்
8. விதி! விதி! விதி!
9. பெண்ணடிமை
10. பாஞ்சாலி சபதத்தினூடு அடிமையுற்ற பாரதமும், அக்கால அரசியல் நிலையும்
11. பாஞ்சாலி சபதத்தினூடு பாரதியாரது எதிர்கால இந்தியா
12. பாரதியாரது உவம உருவகச்சிறப்பு
13. கதாபாத்திரக் குணநலன்
14. பாரதியார் — உரையாசிரியர்

ஓம் சக்தி

# பாஞ்சாலி சபதம்

[முதற் பாகம்]

## முதலாவது
## அழைப்புச் சருக்கம்
## அல்லது
## துரியோதனன் சூழ்ச்சிச் சருக்கம்

### 1. பிரம ஸ்துதி

**நொண்டிச் சிந்து**

1. ஓமெனப் பெரியோர் கள் — என்றும்
ஓதுவ தாய்,வினை மோதுவ தாய்,
தீமைகள் மாய்ப்பது வாய், — துயர்
தேய்ப்பது வாய்,நலம் வாய்ப்பது வாய்,
நாமமும் உருவும்அற் றே — மனம்
நாடரி தாய்ப்புந்தி தேடரி தாய்,
ஆமெனும் பொருளனைத் தாய், — வெறும்
அறிவுடன் ஆநந்த இயல்புடைத் தாய்.

அ - உ: *பிரமம் - முழுமுதற்பொருள்; பெரியோர்கள் ஓம் என்று சொல்வதாய்; துயரை அழிப்பதுவாய் நாமமும் உருவுமற்றே பெயரும், உருவுமில்லாத ஒன்று. "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்பது திருவாசகம்; அறிவுடன்......அறிவுமயமாயும், ஆனந்தமாயும் உள்ளது பிரமம்.*

2. நின்றிடும் பிரமம்என் பார்; — அந்த
நிர்மலப் பொருளினை நினைத்திடு வேன்;
நன்றுசெய் தவம் யோகம் — சிவ
ஞானமும் பக்தியும் நணுகிட வே,
வென்றிகொள் சிவசக் தி — எனை
மேவுற வே,இருள் சாவுற வே,
இன்றமிழ் நூலிது தான் — புகழ்
எய்ந்தினி தாயென்றும் இலகிட வே.

அ - உ: *நிர்மலப்பொருள் - களங்கம் இல்லாத பொருள்; நணுகிட - உண்டாக.*

## 2. ஸரஸ்வதி வணக்கம்

3. வெள்ளைக் கமலத்தி லே — அவள்
வீற்றிருப் பாள், புக ழேற்றிருப் பாள்,
கொள்ளைக் கனியிசை தான் — நன்கு
கொட்டுநல் யாழினைக் கொண்டிருப் பாள்,
கள்ளைக் கடலமு தை — நிகர்
கண்டதோர் பூந்தமிழ்க் கவிசொல வே
பிள்ளைப் பருவத்தி லே — எனைப்
பேணவந் தாளருள் பூணவந் தாள்.

*அ - உ: 'வெள்ளைத்தாமரைப் பூவிலிருப்பாள்' - என்னும் சரஸ்வதி தேவியின் புகழ்ப்பாட்டினை ஒப்பு நோக்குக. நிகர்கண்ட - ஒப்பென்று கொள்ளத்தக்க;*

4. வேதத் திருவிழி யாள், — அதில்
மிக்கபல் லுரையெனுங் கருமையிட் டாள்,
சீதக் கதிர்மதி யே — நுதல்
சிந்தனை யேகுழ லென்றுடை யாள்,
வாதத் தருக்கமெ னுஞ் — செவி
வாய்ந்தநற் றுணிவெனுந் தோடணிந் தாள்,
போதமென் நாசியி னாள், — நலம்
பொங்குபல் சாத்திர வாயுடை யாள்.

*அ - உ: வேதத்திருவிழி - வேதத்தினைத் திருவிழியாக உடையவள் சரஸ்வதி என்று கொண்டதற்கேற்ப, கரிய மை, நுதல், குழல், செவி, தோடு, நாசி முதலான உறுப்புகளும் ஏற்ற உருவகங்களாகப் புனையப் பெறுகின்றன.*

5. கற்பனைத் தேனித ழாள், — சுவைக்
காவிய மெனுமணிக் கொங்கையி னாள்,
சிற்பமு தற்கலை கள் — பல
தேமலர்க் கரமெனத் திகழ்ந்திருப் பாள்,
சொற்படு நயமறி வார் — இசை
தோய்ந்திடத் தொகுப்பதின் சுவையறி வார்
விற்பனத் தமிழ்ப்புல வோர் — அந்த
மேலவர் நாவெனும் மலர்ப்பதத் தாள்.

*அ - உ: கற்பனை யென்னும் இனிய இதழ்களைஉடையவள்; மணிக் கொங்கை – இரத்தினக் குடம் போன்ற கொங்கை அல்லது அழகிய கொங்கை; சரஸ்வதியின் கைகள் சிற்பம் முதலான கலைகளாயின; இசை தோய்ந்திடத் தொகுப்பது - செஞ்சொற்களினாற் தொகுக்கப் பெற்ற கவிதைகள்; கலையரசியின் பாதம் தமிழ்ப் புலவர்களின் நாவாகும்.*

6. வாணியைச் சரண்புகுந் தேன், — அருள்
வாக்களிப் பாளெனத் திடமிகுந் தேன்;
பேணிய பெருந்தவத் தாள், — நிலம்
பெயரள வும்பெயர் பெயரா தாள்,
பூணியல் மார்பகத் தாள், — ஐவர்
பூவை, திரௌபதி புகழ்க் கதையை
மாணியல் தமிழ்ப்பாட் டால் — நான்
வகுத்திடக் கலைமகள் வாழ்த்துக வே.

*அ - உ: நிலம் பெயரளவும் பெயர் பெயராதாள் - உலகு அழிந்தாலும் திரௌபதி தேவியின் புகழ் அழியாது என்பதாம். மாண் இயல் - மாட்சிமை விளங்குகின்ற.*

## 3. ஹஸ்திநுபுரம்

7. அத்தின புரமுண் டாம்; — இவ்
அவனியி லேயதற் கிணையிலை யாம்;
பத்தியில் வீதிக ளாம்; — வெள்ளைப்
பனிவரை போற்பல மாளிகையாம்;
முத்தொளிர் மாடங்களாம்; — எங்கும்
மொய்த்தளி சூழ்மலர்ச் சோலை களாம்;
நத்தியல் வாவிக ளாம்; — அங்கு
நாடுமி ரதிநிகர் தேவிக ளாம்.

*அ - உ: பத்தியில் - வரிசைவரிசையாக உள்ள; பனிவரை - பனி நிறைந்த முடிகளை உடைய உயர்ந்த மலை; ஒளிர் - விளங்குகின்ற, அளிசூழ் - வண்டுகள் நிறைந்த; நத்து இயல் - சங்குகள் ஊர்கின்ற, இரதி - மன்மதனுடைய காதலியின் பெயர்.*

8. அந்தணர் வீதிக ளாம்; — மறை
யாதிக ளாம்கலைச் சோதிக ளாம்;
செந்தழல் வேள்விக ளாம்; — மிகச்
சீர்பெறுஞ் சாத்திரக் கேள்விக ளாம்;
மந்திர கீதங்க ளாம்; — தர்க்க
வாதங்க ளாம்; தவ நீதங்க ளாம்;
சிந்தையி லறமுண் டாம்; — எனிற்
சேர்ந்திடுங் கலிசெயும் மறமுமுண் டாம்.

*அ - உ: மறை ஆதிகளாம் - வேத முழக்கங்கள் முதலான; தவ நீதம் - தவமாகிய நீதி, தவஒழுக்கம்; கலிசெயும் - (மற்றையோரைத்) துன்புறுத்தும்.*

9. மெய்த்தவர் பலருண் டாம்; — வெறும்
வேடங்கள் பூண்டவர் பலருமுண் டாம்;
உய்த்திடு சிவஞா னம் — கனிந்
தோர்ந்திடு மேலவர் பலருண் டாம்;
பொய்த்தவிந் திரசா லம் — நிகர்
பூசையும் கிரியையும் புலைநடை யும்
கைத்திடு பொய்ம்மொழி யும் — கொண்டு
கண்மயக் காற்பிழைப் போர்பல ராம்.

அ - உ: *மெய்த்தவர் - உண்மையான தவசிகள்; உய்த்திடு - நற்கதிக்குச் செலுத்தும்; பொய்த்த இந்திரசாலம் நிகர் - பொய்யாகிய இந்திரசால வித்தையைப்போன்ற; புலைநடை - கீழான ஒழுக்கம்; கைத்திடு - வெறுப்பைத் தருகின்ற.*

10. மாலைகள் புரண்டசை யும் — பெரு
வரையெனத் திரண்டவன் தோளுடை யார்,
வேலையும் வாளினை யும் — நெடு
வில்லையுந் தண்டையும் விரும்பிடு வார்,
காலையும் மாலையி லும் — பகை
காய்ந்திடு தொழில்பல பழகிவெம் போர்
நூலையும் தேர்ச்சிகொள் வோர், — கரி
நூறினைத் தனிநின்று நொறுக்கவல் லார்.

அ - உ: *போர்நூலையுந் தேர்ச்சி கொள்வோர் - போர்க்கலைகளைப் பயில்வோர்; கரி - யானை.*

11. ஆரிய வேல்மற வர், — புவி
யாளுமோர் கடுந்தொழில் இனிதுணர்ந் தோர்,
சீரியல் மதிமுகத் தார் — மணித்
தேனித ழமுதென நுகர்ந்திடு வார்,
வேரியங் கள்ளருந் தி — எங்கும்
வெம்மத யானைகள் எனத்திரி வார்,
பாரினில் இந்திரர் போல் — வளர்
பார்த்திவர் வீதிகள் பாடுவ மே.

அ - உ: *ஆரிய வேல்மறவர் - வேலை ஏந்திய ஆரியராகிய மறவர்; ஆரியர் - உயர்ந்தோர். பாரதியாரின் வாக்கிலே 'ஆரியர்' என்னும் சொல் வடஇந்தியரையன்றி இந்திய மக்கள் அனைவரையுமே குறிக்கும் பொதுச்சொல்லாயிருத்தலைப் பாரதிபாடலின் மற்றைய இடங்களிலும் காணலாம். மணித்தேனிதழ் - அழகும் இனிமையும் வாய்ந்த இதழ்; வேரியங்கள் - தேன் போன்ற வாசனையுடைய கள். பார்த்திவர் - அரசர்.*

12. நல்லிசை முழக்கங்க ளாம்; — பல
நாட்டிய மாதர்தம் பழக்கங்க ளாம்;
தொல்லிசைக் காவியங் கள் — அருந்
தொழிலுணர் சிற்பர்செய் ஓவியங் கள்
கொல்லிசை வாரணங் கள் — கடுங்
குதிரைக ளொடுபெருந் தேர்களுண் டாம்;
மல்லிசை போர்களுண் டாம்; — திரள்
வாய்ந்திவை பார்த்திடு வோர்களுண் டாம்.

அ - உ: ***தொல்லிசை - பழம் புகழ்வாய்ந்த; வாரணங்கள் - யானைகள்; திரள் வாய்ந்து - பெருங் கூட்டங்களாகக் கூடி.***

13. எண்ணரு கனிவகை யும் — இவை
இலகிநல் லொளிதரும் பணிவகை யும்,
தண்ணறுஞ் சாந்தங்க ளும் — மலர்த்
தார்களும் மலர்விழிக் காந்தங்க ளும்
சுண்ணமும் நறும்புகை யும் — சுரர்
துய்ப்பதற் குரியபல் பண்டங்க ளும்
உண்ணநற் கனிவகை யும் — களி
யுவகையுங் கேளியும் ஓங்கின வே.

அ - உ: ***விழிக்காந்தம் - 'விழியாகிய காந்தம்' என்று கண்களின் கவர்ச்சிச் சிறப்பினை இங்குக் குறித்து நின்றது. கேளி - கேளிக்கை, வேடிக்கை.***

14. சிவனுடை நண்பன்என் பார், — வட
திசைக்கதி பதியள கேசன்என் பார்,
அவனுடைப் பெருஞ்செல் வம் — இவர்
ஆவணந் தொறும்புகுந் திருப்பது வாம்;
தவனுடை வணிகர்க ளும் — பல
தரனுடைத் தொழில்செயும் மாசனமும்
எவனுடைப் பயமு மிலா — தினி
திருந்திடுந் தன்மைய தெழில்நக ரே.

அ - உ: ***ஆவணம் - கடைவீதி, தவன் - தவம்; இங்குள்ள வணிகர் தந் தொழிலை வெற்றியுடன் நடத்தும் நற்பேறுடையார் என்பது கருத்து. மாசனம் - பொதுமக்கள்.***

## 4. துரியோதனன் சபை

15. கன்னங் கரியது வாய் — அகல்
காட்சிய தாய்மிகு மாட்சிய தாய்,
துன்னற் கினியது வாய் — நல்ல
சுவைதரும் நீருடை யமுனை யெனும்
வன்னத் திருநதி யின் — பொன்
மருங்கிடைத் திகழ்ந்தஅம் மணிநக ரில்,
மன்னவர் தங்கோ மான் — புகழ்
வாளர வக்கொடி யுயர்த்துநின் றான்.

அ - உ: துன்னல் - சேருதல், இங்கு நீராடுதலைக் குறிக்கும்; மருங்கு - பக்கம்; வாளரவக்கொடி - விளங்குகின்ற பாம்புக்கொடி.

16. துரியோ தனப்பெய ரான், — நெஞ்சத்
துணிவுடை யான், முடி பணிவறி யான்,
'கரியோ ராயிரத் தின் — வலி
காட்டிடு வோன்' என்றக் கவிஞர் பிரான்
பெரியோன் வேத முனி — அன்று
பேசிடும் படிதிகழ் தோள்வலி யான்,
உரியோர் தாமெனி னும் — பகைக்
குரியோர் தமக்குவெந் தீயனை யான்.

அ - உ: முடிபணிவறியான் - யாருக்கும் தலை வணங்குதலைச் செய்யாதவன்; வணங்கா முடிமன்னன் என்று துரியோதனன் வழங்கப் பெறுவான். அக்கவிஞர் பிரான் என்றது வேதவியாசரை; உரியோர் - உறவினர், வேண்டியோர்; பகைக்குரியோர் - பகைத்தற்குரியார்.

17. தந்தைசொல் நெறிப்படி யே — இந்தத்
தடந்தோள் மன்னவன் அரசிருந் தான்,
மந்திர முணர்பெரி யோர் — பலர்
வாய்த்திருந் தார்அவன் சபைதனி லே;
அந்தமில் புகழுடை யான் — அந்த
ஆரிய வீட்டுமன், அறம் அறிந் தோன்;
வந்தனை பெறுங்குர வோர் — பழ
மறைக்குல மறவர்கள் இருவரொ டே.

அ - உ: மந்திரர் - அரசநீதி, ஆலோசனை கூறும் ஆற்றல்; ஆரிய வீட்டுமன் - பெரியோனாகிய வீட்டுமாச்சாரியார்; மறைக்குல மறவர்களிருவர் - வேதியர்குல வீரர்களான துரோணாசாரியார், கிருபாச்சாரியார் என்னும் இருவர்.

18. மெய்ந்நெறி யுணர்விது ரன் — இனி
வேறுபல் அமைச்சரும் விளங்கி நின்றார்;
பொய்ந்நெறித் தம்பிய ரும் — அந்தப்
புலைநடைச் சகுனியும் புறமிருந் தார்;
மைந்நெறி வான்கொடை யான் — உயர்
மானமும் வீரமும் மதியுமு ளோன்,
உய்ந்நெறி யறியா தான் — இறைக்கு
உயிர்நிகர் கன்னனும் உடனிருந் தான்.

*அ - உ: புலைநடைச் சகுனி - தீய ஒழுக்கங்களிலே பயின்ற சகுனி, மைந்நெறி - மேகத்தினை ஒத்த; இறை - அரசனாகிய துரியோதனன்.*

## 5. துரியோதனன் பொறாமை

வேறு

19. எண்ணி லாத பொருளின் குவையும்
யாங்க ணுஞ்செலுஞ் சக்கர மாண்பும்
மண்ணி லார்க்கும் பெறலரி தாமோர்
வார்க டற்பெருஞ் சேனையு மாங்கே
விண்ணி லிந்திரன் துய்ப்பன போன்று
வேண்டு மின்பமும் பெற்றவ னேனும்
கண்ணி லாத்திரி தாட்டிரன் மைந்தன்
காய்ந்த நெஞ்சுடன் எண்ணுவ கேளீர்.

*அ - உ: சக்கர மாண்பு - ஆணையின் சிறப்பு; துய்ப்பன - அனுபவிப்பன; காய்ந்த நெஞ்சு - சினம்முற்றி ஈரம் அற்றுப்போன நெஞ்சு.*

வேறு

20. 'பாண்டவர் முடியுயர்த் தே — இந்தப்
பார்மிசை யுலவிடு நாள்வரை, நான்
ஆண்டதோர் அரசா மோ? — எனது
ஆண்மையும் புகழுமோர் பொருளா மோ?
காண்டகு வில்லுடை யோன் — அந்தக்
காளை யருச்சுனன் கண்களிலும்
மாண்டகு திறல்வீ மன் — தட
மார்பிலும் எனதிகழ் வரைந்துள தே!

*அ - உ: மாண்தகு - மாட்சிமைப்பட்ட; இகழ் - இகழ்ச்சி.*

21. 'பாரத நாட்டி லுள்ள — முடிப்
பார்த்திவர் யார்க்குமோர் பதியென் றே
நாரதன் முதன்முனி வோர் — வந்து
நாட்டிடத் தருமன்அவ் வேள்விசெய் தான்;
சோரனவ் வெதுகுலத் தான் — சொலும்
சூழ்ச்சியும் தம்பியர் தோள்வலி யும்
வீரமி லாத்தரு மன் — தனை
வேந்தர்தம் முதலென விதித்தன வே.

அ - உ: *பதி - தலைவன்; நாட்டிட - நிலை நிறுத்திக் கூறத்தக்கதாக; எது குலத்தான் - இடையர் குலத்தவனான கண்ணன்; வேந்தர் தம் முதல் - அரசர்களுக்கரசன்.*

22. 'ஆயிரம் முடிவேந் தர் — பதி
னாயிர மாயிரங் குறுநிலத் தார்
மாயிருந் திறைகொணர்ந்தே — அங்கு
வைத்ததோர் வரிசையை மறந்திட வோ?
தூயிழை யாடைக ளும் — மணித்
தொடையலும் பொன்னுமோர் தொகைப்படுமோ?
சேயிழை மடவா ரும் — பரித்
தேர்களுங் கொடுத்தவர் சிறுதொகை யோ?

அ - உ: *தூயிழை ஆடை - பரிசுத்தமான மெல்லிய நூலால் நெசவிடப்பெற்ற சீலை.*

23. 'ஆணிப்பொற் கலசங்க ளும் — ரவி
யன்னநல் வயிரத்தின் மகுடங்க ளும்
மாணிக்கக் குவியல்க ளும் — பச்சை
மரகதத் திரளும்நன் முத்துக்க ளும்
பூணிட்ட திருமணி தாம் — பல
புதுப்புது வகைகளிற் பொலிவன வும்
காணிக்கை யாக்கொணர்ந் தார்; — அந்தக்
காட்சியை மறப்பதும் எளிதா மோ?

அ - உ: *ஆணிப்பொன் - மிக உயர்ந்த பொன்; ரவி - சூரியன்; பூணிட்ட - ஆபரணங்களிற் பதிக்கத்தக்கனவான.*

24. 'நால்வகைப் பசும்பொன் னும் — ஒரு
நாலா யிரவகைப் பணக்குவை யும்
வேல்வகை வில்வகை யும் — அம்பு
விதங்களும் தூணியும் வாள்வகை யும்
சூல்வகை தடிவகை யும் — பல
தொனிசெயும் பறைகளும் கொணர்ந்துவைத் தே
பால்வகை மன்னவர் தாம் — அங்குப்
பணிந்ததை என்னுளம் மறந்திடு மோ?

அ - உ: நால்வகைப் பொன் - ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என்னும் நான்கு வகையான பொன்; சூல் - சூலம் என்னும் சொல் இங்கு 'அம்' குறைந்து நின்றது. பால்வளர் - பல பகுதிகளாக உள்ள.

25. 'கிழவியர் தபசியர் போல் — பழங்
கிளிக்கதை படிப்பவன், பொறுமையென் றும்
பழவினை முடிவென் றும் — சொலிப்
பதுங்கிநிற் போன்,மறத் தன்மையி லான்,
வழவழத் தருமனுக் கோ — இந்த
மாநில மன்னவர் தலைமைதந் தார்?
முழவினைக் கொடிகொண் டான் — புவி
முழுதையுந் தனியே குடிகொண் டான்.

அ - உ: வழவழத் தருமன் - வழவழ என்று திடமற்ற வார்த்தைகளைப் பேசுகின்ற அல்லது வீரம் அற்றவனான தருமன்; முழவு - முரசம்.

26. 'தம்பியர் தோள்வலி யால் — இவன்
சக்கர வர்த்தியென் றுயர்ந்தது வும்,
வெம்பிடு மதகரி யான் — புகழ்
வேள்விசெய் தந்நிலை முழக்கிய தும்,
அம்புவி மன்னரெ லாம் — இவன்
ஆணைதம் சிரத்தினில் அணிந்தவ ராய்
நம்பரும் பெருஞ்செல் வம் — இவன்
நலங்கிளர் சபையினில் பொழிந்தது வும்,

அ - உ: நம்பரும் - நம்புதற்கரிய.

27. 'எப்படிப் பொறுத்திடு வேன்? — இவன்
இளமையின் வளமைகள் அறியே னே?
குப்பைகொ லோமுத் தும்? — அந்தக்
குரைகடல் நிலத்தவர் கொணர்ந்துபெய் தார்
சிப்பியும் பவளங்க ளும் — ஒளி
திரண்டவெண் சங்கத்தின் குவியல்க ளும்
ஒப்பில்வை டூரிய மும் — கொடுத்து
ஒதுங்கிநின் றார்இவன் ஒருவனுக் கே.

அ - உ: குப்பை என்ற சொல் மிக அதிகமான முத்துக்களின் தொகையைக் குறிப்பிடுகின்றது.

28. 'மலைநா டுடையமன் னர் — பல
மான்கொணர்ந் தார்,புதுத் தேன்கொணர்ந் தார்,
கொலைநால் வாய்கொணர்ந் தார், — மலைக்
குதிரையும் பன்றியும் கொணர்ந்துதந் தார்,
கலைமான் கொம்புக ளும் — பெருங்
களிறுடைத் தந்தமும் கவரிக ளும்
விலையார் தோல்வகை யும் — கொண்டு
மேலும்பொன் வைத்தங்கு வணங்கிநின் றார்.

அ - உ; நால்வாய் - தொங்குகின்ற வாயையுடையது, யானை;

29. 'செந்நிறத் தோல்,கருந் தோல் — அந்தத்
திருவளர் கதலியின் தோலுட னே
வெந்நிறப் புலித்தோல் கள், — பல
வேழங்கள் ஆடுகள் இவற்றுடைத் தோல்,
பன்னிற மயிருடை கள், — விலை
பகரரும் பறவைகள், விலங்கினங் கள்,
பொன்னிறப் பாஞ்சா லி — மகிழ்
பூத்திடும் சந்தனம் அகில்வகை கள்.

அ - உ: கதலியின் தோல் - பட்டுடை செய்தற்குகந்த வாழைநார், கதலி என்பது ஒருவகை மானைக் குறிக்கும் என்றும் கொள்வர்.

30. 'ஏலம் கருப்பூ ரம் — நறும்
இலவங்கம் பாக்குநற் சாதி வகை,
கோலம் பெறக்கொணர்ந் தே — அவர்
கொட்டி நின்றார்,கரம் கட்டிநின் றார்,
மேலுந் தலத்திலு ளார் — பல
வேந்தர்அப் பாண்டவர் விழைந்திட வே
ஓலந் தரக்கொணர்ந் தே — வைத்த
தொவ்வொன்றும் என்மனத் துறைந்தது வே.

**அ - உ: சாதி - சாதிக்காய்; வகை என்பது ஏலம், கருப்பூரம், இல வங்கம், பாக்கு, சாதிக்காய் ஆகிய ஐந்துவகை வாசனைப் பொருட்க ளையும் உளப்படுத்தும் சொல்; ஓலம்தர - பேராரவாரத்தோடு.**

31. 'மாலைகள் பொன்னுமுத் தும் — மணி
வகைகளிற் புனைந்தவும் கொணர்ந்துபெய் தார்;
சேலைகள் நூறுவன் னம் — பல
சித்திரத் தொழில்வகை சேர்ந்தன வாய்,
சாலவும் பொன்னிழைத் தே — தெய்வத்
தையலர் விழைவன பலர்கொணர்ந் தார்;
கோலநற் பட்டுக்க ளின் — வகை
கூறுவ தோ?எண்ணில் ஏறுவ தோ?

**அ - உ: வன்னம் - வர்ணம், வகை.**

32. 'கழல்களும் கடகங்க ளும் — மணிக்
கவசமும் மகுடமும் கணக்கில வாம்
நிழல்நிறப் பரிபல வும் — செந்
நிறத்தன பலவும்வெண் ணிறம்பல வும்
தழல்நிறம் மேக நிறம் — விண்ணில்
சாரும்இந் திரவில்லை நேரும் நிறம்
அழகிய கிளிவயிற் றின் — வண்ணம்
ஆர்ந்தன வாய்ப்பணி சேர்ந்தன வாய்.

**அ - உ: கடகம் - போர்வீரர் புயத்திலணியும் வாகுவலயம் என் னும் ஆபரணம், மோதிரம்; இந்திரவில் - வானவில்; பணி - ஆபரணங் கள்.**

33. 'காற்றெனச் செல்வன வாய், — இவை
கடிதுகைத் திடுந்திறல் மறவரோ டே,
போற்றிய கையின ராய்ப் — பல
புரவலர் கொணர்ந்தவன் சபைபுகுந் தார்;
சீற்றவன் போர்யா னை — மன்னர்
சேர்த்தவை பலபல மந்தையுண் டாம்;
ஆற்றல் மிலேச்சமன் னர் — தொலை
அரபியர் ஒட்டைகள் கொணர்ந்துதந் தார்.

***அ - உ. கடிதுஉகைத்திடும் - வேகமாகச் செலுத்திடும்; புரவலர் - அரசர்; ஒட்டை - ஒட்டகம்.***

34. 'தென்றிசைச் சாவக மாம் — பெருந்
தீவு தொட்டேவட திசையத னில்
நின்றிடும் புகழ்ச்சீ னம் — வரை
நேர்ந்திடும் பலபல நாட்டின ரும்,
வென்றிகொள் தருமனுக் கே, — அவன்
வேள்வியில் பெரும்புகழ் விளையும்வண் ணம்,
நன்றுபல் (பொருள்)கொணர்ந் தார் — புவி
நாயகன் யுதிட்டிரன் எனவுணர்ந் தார்.

***அ - உ: புவிநாயகன் - பூமிக்கு அதிபன்; யுதிட்டிரன் - தருமன்.***

35. 'ஆடுகள் சிலர்கொணர்ந் தார்; — பலர்
ஆயிர மாயிரம் பசுக்கொணர்ந் தார்;
மாடுகள் பூட்டின வாய்ப் — பல
வகைப்படு தானியம் சுமந்தன வாய்
ஈடுறு வண்டி கொண்டே — பலர்
எய்தினர்; கரும்புகள் பலர்கொணர்ந் தார்;
நாடுறு தயிலவ கை — நறு
நானத்தின் பொருள்பலர் கொணர்ந்துதந் தார்.

***அ - உ: ஈடுறு - பாரம் நிறைந்த, நாடுறு - சிறந்த; தயிலவகை - எண்ணெய்வகைகள்; நானத்தின் பொருள் - பூசிக்குளிப்பதற்கு வேண்டிய வாசனைப் பொருட்கள்.***

36. 'நெய்க்குடம் கொண்டுவந் தார், — மறை
நியமங்கொள் பார்ப்பனர் மகத்தினுக் கே;
மொய்க்குமின் கள்வகை கள் — கொண்டு
மோதினர் அரசினம் மகிழ்வுற வே;
தைக்குநற் குப்பா யம், — செம்பொற்
சால்வைகள், போர்வைகள், கம்பளங் கள்,
கைக்குமட் டினுந்தா னே — அவை
காண்பவர் விழிகட்டும் அடங்குப வோ?

***அ - உ: மகம் – வேள்வி; மொய்க்கும் - வண்டுகள் மொய்க்கின்ற அல்லது நுரையால் மொய்க்கப்படுகின்ற, குப்பாயம் - சட்டை.***

37. 'தந்தத்தில் கட்டில்க ளும், — நல்ல
தந்தத்தில் பல்லக்கும், வாகன மும்,
தந்தத்தின் பிடிவா ளும் — அந்தத்
தந்தத்தி லேசிற்பத் தொழில்வகை யும்,
தந்தத்தி லாதன மும் — பின்னும்
தமனிய மணிகளில் இவையனைத் தும்
தந்தத்தைக் கணக்கிட வோ? — முழுத்
தரணியின் திருவும்இத் தருமனுக் கோ?'

***அ - உ: ஆதனம் - ஆசனம்; தமனியம் - பொன்; தந்தத்தைக் கணக்கிடவோ - இவ்வாறு தந்தவற்றைக் கணக்கிலிட்டுச் சொல்லலாமோ?***

**வேறு**

38. என்றிவ் வாறு பலபல எண்ணி
ஏழை யாகி இரங்குத லுற்றான்,
வன்றி றத்தொரு கல்லெனும் நெஞ்சன்,
வானம் வீழினும் அஞ்சுதல் இல்லான்,
குன்ற மொன்று குழைவுற் றிளகிக்
குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்
கன்று பூதலத் துள்ளுறை வெம்மை
காய்ந்தெ ழுந்து வெளிப்படல் போல.

39. நெஞ்சத் துள்ளோர் பொருமை யெனுந்தீ
நீள்வ தால்உள்ளம் நெக்குரு கிப்போய்,
மஞ்சன் ஆண்மை மறந்திண்மை மானம்
வன்மை யாவும் மறந்தன னாகிப்
பஞ்சை யாமொரு பெண்மகள் போலும்
பாலர் போலும் பரிதவிப் பானாய்க்
கொஞ்ச நேரத்திற் பாதகத் தோடு
கூடி யேஉற வெய்தி நின்றானல்.

அ - உ: மஞ்சன் – மைந்தன், மைத்துனன், மாமன் என்போரைக்குறிக்கும் சொல். இங்கு இளமையும் வலிமையும் பொருந்தியவன் என்னும் பொருளில் வந்தது.

40. யாது நேரினும் எவ்வகை யானும்
யாது போயினும் பாண்டவர் வாழ்வைத்
தீது செய்து மடித்திட எண்ணிச்
செய்கை யொன்றறி யான்திகைப் பெய்திச்
சூதும் பொய்யும் உருவெனக் கொண்ட
துட்ட மாமனைத் தான்சர ணெய்தி,
'ஏது செய்வம்' எனச் சொல்லி நைந்தான்
எண்ணத் துள்ளன யாவும் உரைத்தே.

அ - உ: சரணெய்தி - அடைக்கலமாகப் புக்கு.

41. மன்னர் மன்னன் யுதிட்டிரன் செய்த
மாம கத்தினில் வந்து பொழிந்த
சொன்னம் பூண்மணி முத்திவை கண்டும்,
தோற்றங் கண்டும், மதிப்பினைக் கண்டும்,
என்ன பட்டது தன்னுளம் என்றே
ஈன மாமன் அறிந்திடும் வண்ணம்
முன்னம் தான் நெஞ்சிற் கூறிய வெல்லாம்
மூடன் பின்னும் எடுத்து மொழிந்தான்.

அ - உ: சொன்னம் - பொன்; ஈனமாமன் - இழிந்த குணமனைத்தும் கொண்ட மாமனான சகுனி.

## 6. துரியோதனன் சகுனியிடம் சொல்வது

*வேறு*

42. 'உலகு தொடங்கிய நாள்முத லாகநம்
சாதி யில் — புகழ்
ஓங்கிநின் ருரித் தருமனைப் போலெவர்?
மாம னே!
இலகு புகழ்மனு வாதி முதுவர்க்கும்,
மாம னே! — பொருள்
ஏற்றமும் மாட்சியும் இப்படி யுண்டுகொல்?
மாம னே!
கலைக ளுணர்ந்தநல் வேதியப் பாவலர்
செய்த வாம் — பழங்
கற்பனைக் காவியம் பற்பல கற்றனை,
மாம னே!
பலகடல் நாட்டையும் இப்படி வென்றதை
எங் கணும் — சொல்லப்
பார்த்ததுண் டோ?கதை கேட்டதுண் டோ?புகல்
மாம னே!

**அ - உ:** *மனுவாதி - மனுச்சக்கரவர்த்தி முதல்; பல கடல்நாட்டையும் - பலவாகிய கடல்களையும், அவற்றால் சூழப்பெற்ற நாடுகளையும்.*

43. 'எதனை யுலகில் மறப்பினும், யானினி,
மாம னே! — இவர்
யாகத்தை என்றும் மறந்திட லென்பதொன்
றேது காண்?
விதமுறச் சொன்ன பொருட்குவை யும்பெரி
தில்லை காண்; — அந்த
வேள்வியில் என்னை வெதுப்பின வேறு
பலவுண் டே;
இதனை யெலாமவ் விழியற்ற தந்தையின்
பாற்சென் றே — சொல்லி,
இங்கிவர் மீதவ னும்பகை எய்திடச்
செய்கு வாய்,
மிதமிகு மன்பவர் மீதுகொண் டானவன்
கேட்க வே, — அந்த
வேள்விகண் டென்னுயிர் புண்படுஞ் செய்தி
விளம்பு வாய்.

**அ - உ:** *வெதுப்பின - வருத்தியவை.*

44\. 'கண்ணைப் பறிக்கும் அழகுடை யாரிள
மங்கை யர் — பல
காமரு பொன்மணிப் பூண்க ளணிந்தவர்
தம்மை யே
மண்ணைப் புரக்கும் புரவலர் தாமந்த
வேள்வி யில் — கொண்டு
வாழ்த்தி யளித்தனர் பாண்டவர்க் கே,எங்கள்
மாம னே!
எண்ணைப் பழிக்குந் தொகையுடை யாரிள
மஞ்ச ரைப் — பலர்
ஈந்தனர் மன்ன ரிவர்தமக் குத்தொண்
டியற்ற வே!
விண்ணைப் பிளக்குந் தொனியுடைச் சங்குகள்
ஊதி னர்; — தெய்வ
வேதியர் மந்திரத் தோடுபல் வாழ்த்துக்கள்
ஓதி னர்.

**அ - உ:** *இளமஞ்சர் - இளம் வீரர்.*

45\. 'நாரதன் தானும்அவ் வேதவி யாசனும்
ஆங்ங னே — பலர்
நானிங் குரைத்தற் கரிய பெருமை
முனிவ ரும்,
மாரத வீரர்,அப் பாண்டவர் வேள்விக்கு
வந்த தும் — வந்து
மாமறை யாசிகள் கூறிப் பெரும்புகழ்
தந்த தும்,
வீரர்தம் போரின் அரியநற் சாத்திர
வாதங் கள் — பல
விப்பிரர் தம்முள் விளைத்திட உண்மைகள்
வீச வே,
சாரம றிந்தயு திட்டிரன் கேட்டுவி
யந்த தும், — நல்ல
தங்க மழைபொழிந் தாங்கவர்க் கேமகிழ்
தந்த தும்.

**அ - உ:** *பாரதவீரர் - பாரத வம்சத்தைச் சேர்ந்த வீரர்களாகிய பாண்டவர்; போரின் அரிய - போரைப்போன்று பயங்கரமான; விப்பிரர் - அந்தணர்.*

46. 'விப்பிர ராதிய நால்வரு ணத்தவர்
துய்ப்பவே — நல்
விருந்து செயலில் அளவற்ற பொன்செல
விட்ட தும்,
'இப்பிற விக்குள்இ வையொத்த வேள்விவி
ருந்துகள் — புவி
எங்கணும் நான்கண்ட தில்லை' எனத்தொனி
பட்ட தும்,
தப்பின்றி யேநல் விருந்தினர் யார்க்குந்
தகுதிகள் — கண்டு
தக்கசன் மானம் அளித்து வரிசைகள்
இட்ட தும்,
செப்புக நீயவ் விழியற்ற தந்தைக்கு;
'நின்மகன் — இந்தச்
செல்வம் பெருவிடில் செத்திடு வான்'என்றும்
செப்பு வாய்.

அ - உ: *விருந்து செயலில் - விருந்திடுதலில்.*

47. 'அண்ணன் மைந்தன் அவனிக் குரியவன்
யானன்றோ? — அவர்
அடியவ ராகி யெமைப்பற்றி நிற்றல்
விதியன் றோ?
பண்ணும் வேள்வியில் யார்க்கு முதன்மை
அவர்தந்தார்? — அந்தப்
பாண்ட வர்நமைப் புல்லென எண்ணுதல்
பார்த்தை யோ?
கண்ண னுக்கு முதல்உப சாரங்கள்
காட்டினர், — சென்று
கண்ணி லாத்தந்தைக் கிச்செய லின்பொருள்
காட்டு வாய்;
மண்ணில் வேந்தருட் கண்ணன் எவ்வாறு
முதற்பட்டான்? — என்றன்
மாம னே! அவன் நம்மில் உயர்ந்த
வகைசொல் வாய்.

அ - உ: *நம்மில் - நம்மைப்பார்க்கிலும்.*

48. 'சந்தி ரன்குலத் தேபிறந் தோர்தந்
தலைவன்யான் — என்று
சகமெ லாஞ்சொலும் வார்த்தைமெய் யோவெறுஞ்
சால மோ?
தந்தி ரத்தொழில் ஒன்றுண ரும்சிறு
வேந்தனை — இவர்
தரணி மன்னருள் முற்பட வைத்திடல்
சாலு மோ?
மந்தி ரத்திலச் சேதியர் மன்னனை
மாய்த்திட்டார், — ஐய!
மாம கத்தில் அதிதியைக் கொல்ல
மரபுண் டோ?
இந்தி ரத்துவம் பெற்றிவர் வாழும்
நெறிநன்றே! — இதை
எண்ணி எண்ணிஎன் நெஞ்சு கொதிக்குது,
மாம னே!

*அ - உ: சேதியர் மன்னன் - சிசுபாலன்; அதிதி - விருந்தாளியாக வந்தவன்.*

49. 'சதிசெய் தார்க்குச் சதிசெயல் வேண்டும்,என்
மாமனே! — இவர்
தாமென் அன்பன் சராசந் தனுக்குமுன்
எவ்வ கை
விதிசெய் தார்? அதை என்றும்என் உள்ளம்
மறக்குமோ? — இந்த
மேதினி யோர்கள் மறந்துவிட் டார்,இ ஃதோர்
விந்தை யே!
நிதிசெய் தாரைப் பணிகுவர் மானிடர்,
மாமனே! — எந்த
நெறியி னுலது செய்யினும், நாயென
நீள்பு வி
துதிசெய் தேயடி நக்குதல் கண்டனை,
மாமனே! — வெறுஞ்
சொல்லுக் கேயற நூல்கள் உரைக்கும்
துணிவெ லாம்.

*அ - உ: விதி செய்தார் - மரணத்தைக் கொடுத்தார்.*

வேறு

50\. ‘பொற்றடந் தேரொன்று வாலிகன்
கொண்டு விடுத்ததும், — அதில்
பொற்கொடி சேதியர் கோமகன்
வந்து தொடுத்ததும்,
உற்றதோர் தம்பிக்குத் தென்னவன்
மார்பணி தந்ததும், — ஒளி
யோங்கிய மாலையம் மாகதன்
தான்கொண்டு வந்ததும்,
பற்றல ரஞ்சும் பெரும்புகழ்
ஏக லவியனே — செம்பொற்
பாதுகை கொண்டு யுதிட்டிரன்
தாளினில் ஆர்த்ததும்,
முற்றிடு மஞ்சனத் திற்குப்பல
பலதீர்த் தங்கள் — மிகு
மொய்ம்புடை யான் அவ் அவந்தியர்
மன்னவன் சேர்த்ததும்.

*அ – உ: வாலிகன் - வாலிக மன்னன்; சேதியர் கோமகன் - சேதி நாட்டரசன்: தென்னவன் – பாண்டியன்; மாகதன் - மகதநாட்டு மன்னன்; பாதுகை - பாதகுறடு.*

51\. ‘மஞ்சன நீர்தவ வேத
வியாசன் பொழிந்ததும், — பல
வைதிகர் கூடிநன் மந்திர
வாழ்த்து மொழிந்ததும்,
குஞ்சரச் சாத்தகி வெண்குடை
தாங்கிட, வீமனும் — இளங்
கொற்றவ னும்பொற் சிவிறிகள்
வீச, இரட்டையர்
அஞ்சுவர் போலங்கு நின்று
கவரி இரட்டவே, — கடல்
ஆளு மொருவன் கொடுத்ததொர்
தெய்விகச் சங்கினில்
வஞ்சகன் கண்ணன் புனிதமுறுங்கங்கை
நீர்கொண்டு — திரு
மஞ்சன மாட்டும் அப் போதில்
எவரும் மகிழ்ந்ததும்.

*அ – உ: வைதிகர் - வேதங்களை நன்குணர்ந்தவரான பழமறையோர்; குஞ்சரச் சாத்தகி – யானையைப்போன்ற சாத்தகி; இளங்கொற்றவன் - அரிச்சுனன்; இரட்டையர் - தேவ மருத்துவர்களது புத்திரராகிய நகுலனும் சகாதேவனும்: கடல் ஆளும் ஒருவன் - வருணன்.*

52. 'மூச்சை யடைத்த தடா! சபை
தன்னில் விழுந்துநான் — அங்கு
மூர்ச்சை யடைந்தது கண்டனையே!
என்றன் மாமனே!
ஏச்சையும் அங்கவர் கொண்ட
நகைப்பையும் எண்ணுவாய், — அந்த
ஏந்திழை யாளும் எனைச்சிரித்
தாளிதை எண்ணுவாய்;
பேச்சை வளர்த்துப் பயனொன்று
மில்லை என் மாமனே; — அவர்
பேற்றை அழிக்க உபாயஞ்சொல்லுவாய்,
என்றன் மாமனே!
தீச்செயல் நற்செயல் ஏதெனினும்
ஒன்று செய்து,நாம் — அவர்
செல்வங் கவர்ந்த வரைவிட
வேண்டும் தெருவிலே.

அ - உ: ஏச்சு - வசைமொழி, ஏந்திழையாள் - பாஞ்சாலி;பேற்றை-செல்வத்தை.

## 7. சகுனியின் சதி

### வேறு

53. என்று சுயோதனன் கூறியே — நெஞ்சம்
ஈர்ந்திடக் கண்ட சகுனி தான் — 'அட!
இன்று தருகுவன் வெற்றியே, — இதற்கு
இத்தனை வீண்சொல் வளர்ப்ப தேன்? — இனி
ஒன்றுரைப் பேன்நல் உபாயந் தான்; — அதை
ஊன்றிக் கருத்தொடு கேட்பை யால்; — ஒரு
மன்று புனைந்திடச் செய்தி நீ, — தெய்வ
மண்டப மொத்த நலங்கொண்டே.

அ - உ: மன்று – மன்னரவை கூடும் மாளிகை.

54. 'மண்டபங் காண வருவி ரென் — றந்த
மன்னவர் தம்மை வரவழைத் — தங்கு
கொண்ட கருத்தை முடிப்ப வே — மெல்லக்
கூட்டிவன் சூதுபொரச் செய்வோம், — அந்த
வண்டரை நாழிகை யொன்றிலே — தங்கள்
வான்பொருள் யாவையும் தோற்றுனைப் — பணி
தொண்ட ரெனச்செய் திடுவன் யான், — என்றன்
சூதின் வலிமை அறிவை நீ.

அ - உ: வண்டரை - வலியோரை, (வண்டன் - திண்மை உடைய வன்),

55. ‘வெஞ்சமர் செய்திடு வோமெனில் — அதில்
வெற்றியும் தோல்வியும் யார் கண்டார்? — அந்தப்
பஞ்சவர் வீரம் பெரிதுகாண்? — ஒரு
பார்த்தன்கை வில்லுக் கெதிருண்டோ? — உன்றன்
நெஞ்சத்திற் சூதையி கழ்ச்சியாக் — கொள்ள
நீதமில் லை,முன்னைப் பார்த்திவர் — தொகை
கொஞ்சமி லைப்பெருஞ் சூதினால் — வெற்றி
கொண்டு பகையை அழித்துளோர்.

*அ - உ: நீதம் - நீதி. பார்த்திவர் - அரசர்.*

56. ‘நாடும் குடிகளும் செல்வமும் — எண்ணி,
நானிலத் தோர்கொடும் போர்செய்வார்; — அன்றி
ஓடும் குருதியைத் தேக்கவோ? — தமர்
ஊன்குவை கண்டு களிக்கவோ? — அந்த
நாடும் குடிகளும் செல்வமும் — ஒரு
நாழிகைப் போதினில் சூதினால் — வெல்லக்
கூடு மெனிற்பிறி தெண்ணலேன்? — என்றன்
கொள்கை இது’வெனக் கூறினான்.

57. இங்கிது கேட்டசு யோதனன் — ‘மிக
இங்கிதம் சொல்லினை, மாமனே!’ — என்று
சங்கிலிப் பொன்னின் மணியிட்ட, — ஒளித்
தாமம் சகுனிக்குச் சூட்டினான்; — பின்னர்
‘எங்கும் புவிமிசை உன்னைப்போல் — எனக்
கில்லை இனியது சொல்லுவோர்’ — என்று
பொங்கும் உவகையின் மார்புறக் — கட்டிப்
பூரித்து விம்மித் தழுவினான்.

*அ - உ: இங்கிதம் - இனிய வார்த்தைகள்; தாமம் - மாலை.*

## 8. சகுனி திரிதராட்டிரனிடம் சொல்லுதல்

58. மற்றதன் பின்னர் இருவரும் — அரு
மந்திரக் கேள்வி உடையவன் — பெருங்
கொற்றவர் கோன்திரி தாட்டிரன் — சபை
கூடி வணங்கி இருந்தனர்; — அருள்
அற்ற சகுனியும் சொல்லுவான்; — ‘ஐய!
ஆண்டகை நின்மகன் செய்திகேள்; — உடல்
வற்றித் துரும்பொத் திருக்கின்றான்; — உயிர்
வாழ்வை முழுதும் வெறுக்கின்றான்.

*அ - உ: கேள்வி - அறிவு. ஆண்டகை - வீரன்.*

59. 'உண்பசு வையின்றி உண்கின்றான்; — பின்
உடுப்ப திகழ உடுக்கின்றான்; — பழ
நண்பர்க ளோடுற வெய்திடான்; — இள
நாரியரைச் சிந்தை செய்திடான்; — பிள்ளை
கண்பச லைகொண்டு போயினன்; — இதன்
காரணம் யாதென்று கேட்பையால்; — உயர்
திண்பரு மத்தடந் தோளினாய்!' — என்று
தீய சகுனியும் செப்பினன்.

*அ - உ: இகழ - மற்றையோர் இகழும்படியாக; கண்பசலை கொண்டு - கண்ணின் சொந்த நிறம்மாறிப் பசப்பு நிறமடைந்து (மங்கி).*

60. தந்தையும் இவ்வுரை கேட்டதால் — உளம்
சாலவும் குன்றி வருந்தியே, — 'என்றன்
மைந்த! நினக்கு வருத்தமேன்? — இவன்
வார்த்தையி லேதும் பொருளுண்டோ? — நினக்கு
எந்தவி தத்துங்கு றையுண்டோ? — நினை
யாரும் எதிர்த்திடு வாருண்டோ? — நின்றன்
சிந்தையில் எண்ணும் பொருளெலாம் — கணந்
தேடிக் கொடுப்பவர் இல்லையோ?

*அ - உ: கணம் - உடனுக்குடன்.*

61. 'இன்னமு தொத்த உணவுகள், — அந்த
இந்திரன் வெஃகுறும் ஆடைகள், — பலர்
சொன்னப ணிசெயும் மன்னவர், — வருந்
துன்பந் தவிர்க்கும் அமைச்சர்கள், — மிக
நன்னலங் கொண்ட குடிபடை, — இந்த
நானில மெங்கும் பெரும்புகழ் — மிஞ்சி
மன்னும்அப் பாண்டவர் சோதரர் — இவை
வாய்ந்தும் உனக்குத் துயருண்டோ?'

*அ - உ: வெஃகுறும் - ஆசைப்பெருக்கம் கொள்ளும்.*

62. தந்தை வசனஞ் செவியுற்றே — கொடி
சர்ப்பத்தைக் கொண்டதொர் கோமகன்
வெந்தழல் போலச்சி னங்கொண்டே — தன்னை
மீறிப்ப லசொல்வி ளம்பினன்; — இவன்
மந்த மதிகொண்டு சொல்வதை — அந்த
மாமன் மறித்துரை செய்குவான் — 'ஐய!
சிந்தை வெதுப்பத்தி னாலிவன் — சொலும்
சீற்ற மொழிகள் பொறுப்பையால்.

*அ — உ: வெதுப்பம் - துன்பம்; பொறுப்பையால் - பொறுத்துக் கொள்வாயாக.*

63. 'தன்னுளத் துள்ள குறையெலாம் — நின்றன்
சந்நிதி யிற்சென்று சொல்லிட — முதல்
என்னைப் பணித்தனன்; யானிவன் — றனை
இங்கு வலியக் கொணர்ந்திட்டேன்; — பிள்ளை
நன்னய மேசிந்தை செய்கின்றான்; — எனில்
நன்கு மொழிவ தறிந்திலன்; — நெஞ்சைத்
தின்னுங் கொடுந்தழல் கொண்டவர் — சொல்லுஞ்
செய்தி தெளிய உரைப்பரோ?

அ - உ: நன்னயமே - நல்லனவற்றையே.

64. 'நீ பெற்ற புத்திர னேயன்றோ? — மன்னர்
நீதி யியல்பில் அறிகின்றான் — ஒரு
தீபத்தில் சென்று கொளுத்திய — பந்தம்
தேசு குறைய எரியுமோ? — செல்வத்
தாபத்தை நெஞ்சில் வளர்த்திடல் — மன்னர்
சாத்திரத் தேமுதற் சூத்திரம்; — பின்னும்
ஆபத் தரசர்க்கு வேறுண்டோ — தம்மில்
அன்னியர் செல்வம் மிகுதல்போல்?

அ - உ: தேசு - ஒளி; தாபம் - ஆசை. மன்னர் சாத்திரம் - ஆட்சி யியல்.

65. 'வேள்வியில் அன்றந்தப் பாண்டவர் — நமை
வேண்டுமட் டுங்குறை செய்தனர்; — ஒரு
கேள்வி யிலாதுன் மகன்றனைப் — பலர்
கேலிசெய் தேநகைத் தார்,கண்டாய்! — புவி
ஆள்வினை முன்னவர்க் கின்றியே — புகழ்
ஆர்ந்திளை யோரது கொள்வதைப் — பற்றி
வாள்விழி மாதரும் நம்மையே — கய
மக்களென் றெண்ணி நகைத்திட்டார்.

அ - உ: புவி ஆள்வினை - பூமியை ஆளும் செயல்; முன்னவர்க்கு - (அரசகுடியில்) மூத்தவர்க்கு; கயமக்கள் - கீழ்மக்கள்.

66. 'ஆயிரம் யானை வலிகொண்டான் — உன்றன்
ஆண்டகை மைந்தனி வன்,கண்டாய்! — இந்த
மாயிரு ஞாலத்து யர்ந்ததாம்; — மதி
வான்குலத் திற்குமு தல்வனும்; — ஒளி
ஞாயிறு நிற்பவும் மின்மினி — தன்னை
நாடித் தொழுதிடுந் தன்மைபோல், — அவர்
வேயிருந் தூதுமோர் கண்ணனை — அந்த
வேள்வியில் சால உயர்த்தினார்.

அ - உ: மதிவான் குலம் - சந்திரகுலம்; வேய் - புல்லாங்குழல்.

67. 'ஐய!நின் மைந்தனுக் கில்லைகாண் — அவர்
அர்க்கியம் முற்படத் தந்ததே; — இந்த
வையகத் தார்வியப் பெய்தவே, — புவி
மன்னவர் சேர்ந்த சபைதனில் — மிக
நொய்யதோர் கண்ணனுக் காற்றினர், — மன்னர்
நொந்து மனங்குன்றிப் போயினர்; — பணி
செய்யவும் கேலிகள் கேட்கவும் — உன்றன்
சேயினை வைத்தனர் பாண்டவர்.

அ - உ: *அர்க்கியம் - முன்னீடு; பல்லோருள்ள கூட்டத்திலே ஒருவரை அவருட் சிறந்தோராகத் தேர்ந்து அவர்க்குக் கொடுக்கும் முதல் உபசாரப் பொருள்.*

68. 'பாண்டவர் செல்வம் விழைகின்றான்; — புவிப்
பாரத்தை வேண்டிக் குழைகின்றான்; — மிக
நீண்ட மகிதலம் முற்றிலும் — உங்கள்
நேமி செலும்புகழ் கேட்கின்றான்; — குலம்
பூண்ட பெருமை கெடாதவா — றெண்ணிப்
பொங்குகின் றான்நலம் வேட்கின்றான்; — மைந்தன்
ஆண்டகைக் கிஃது தகுமன்றோ? — இல்லை
யாமெனில் வையம் நகுமன்றோ?

அ - உ: *மகிதலம் - பூமி; நேமி - அரசன் ஆணை.*

69. 'நித்தங் கடலினிற் கொண்டுபோய் — நல்ல
நீரை அளவின்றிக் கொட்டுமாம் — உயர்
வித்தகர் போற்றிடுங் கங்கையா — றது
வீணிற் பொருளை யழிப்பதோ? — ஒரு
சத்த மிலாநெடுங் காட்டினில் — புனல்
தங்கிநிற் குங்குளம் ஒன்றுண்டாம், — அது
வைத்ததன் நீரைப் பிறர்கொளா — வகை
வாரடைப் பாசியில் மூடியே.

அ- உ: *வாரடைப்பாசியில் - நெருக்கமான இலைகொண்ட பாசியினால்; அடை - இலை.*

70. 'சூரிய வெப்பம் படாமலே — மரம்
சூழ்ந்த மலையடிக் கீழ்ப்பட்டே — முடை
நீரினை நித்தலும் காக்குமாம்; — இந்த
நீள்சுனை போல்வர் பலருண்டே? — எனில்
ஆரியர் செல்வம் வளர்தற்கே — நெறி
ஆயிரம் நித்தம் புதியன — கண்டு
வாரிப் பழம்பொருள் எற்றுவார்; — இந்த
வண்மையும் நீயறி யாததோ?

அ - உ: *எற்றுவார் - பிறர்க்குக் கொடுப்பார். செல்வம் வளர்த்தற்கான புதுப்புது வழிகள் பலவற்றைக் கண்டு (அவற்றால் பொருள்பெருக்கி) பின்னர் வறியோர்க்கு அச் செல்வத்தினை வாரி வழங்குவார் ஆரியர்.*

## 9. திரிதராட்டிரன் பதில் கூறுதல்

71. கள்ளச் சகுனியும் இங்ஙனே — பல
கற்பனை சொல்லித்தன் உள்ளத்தின் — பொருள்
கொள்ளப் பகட்டுதல் கேட்டபின் — பெருங்
கோபத் தொடேதிரி தாட்டிரன், — 'அட!
பிள்ளையை நாசம் புரியவே — ஒரு
பேயென நீ வந்து தோன்றினுய்; — பெரு
வெள்ளத்தைப் புல்லொன் றெதிர்க்குமோ? — இள
வேந்தரை நாம்வெல்ல லாகுமோ?

அ - உ: *பகட்டுதல் - பசப்பு வார்த்தைகள் கூறுதல்; இளவேந்தர் - பஞ்சபாண்டவர்.*

72. 'சோதரர் தம்முட் பகையுண்டோ? — ஒரு
சுற்றத்தி லேபெருஞ் செற்றமோ? — நம்மில்
ஆதரங் கொண்டவ ரல்லரோ? — முன்னர்
ஆயிரஞ் சூழ்ச்சி இவன்செய்தும் — அந்தச்
சீதரன் தண்ணரு ளாலுமோர் — பெருஞ்
சீலத்தி ஞலும் புயவலி — கொண்டும்
யாதொரு தீங்கும் இலாமலே — பிழைத்
தெண்ணருங் கீர்த்திபெற் ருரன்ரே?

அ - உ: *செற்றம் - கோபம், பகைமை; ஆதரம் - அன்பு; சீதரன் - இலக்குமிதேவியின் கணவன், கண்ணபிரான்; சீலம் - நற்குண நற்செயலுடைமை.*

73. 'பிள்ளைப் பருவந் தொடங்கியே — இந்தப்
பிச்சன் அவர்க்குப் பெரும்பகை — செய்து
கொள்ளப் படாத பெரும்பழி — யன்றிக்
கொண்டதோர் நன்மை சிறிதுண்டோ? — நெஞ்சில்
எள்ளத் தகுந்த பகைமையோ? — அவர்
யார்க்கும் இளைத்த வகையுண்டோ? — வெறும்
நொள்ளைக் கதைகள் கதைக்கிருய், — பழ
நூலின் பொருளைச் சிதைக்கிருய்.

அ - உ: *பிச்சன் - பைத்தியகாரன்; எள்ளத்தகுந்த - அற்பமாக எண்ணி இகழத்தக்க; நொள்ளைக் கதைகள் - குருட்டுத்தனமான (அறிவற்ற) கதைகள்; நொள்ளை - குருடு.*

74. 'மன்னவர் நீதி சொலவந்தாய், — பகை
மாமலை யைச்சிறு மட்குடம் — கொள்ளச்
சொன்னதொர் நூல்சற்றுக் காட்டுவாய்! — விண்ணில்
சூரியன் போல்நிக ரின்றியே — புகழ்
துன்னப் புவிச்சக்க ராதிபம் — உடற்
சோதரர் தாங்கொண் டிருப்பவும், — தந்தை
என்னக் கருதி அவரெனைப் — பணிந்
தென்சொற் கடங்கி நடப்பவும்,

*அ - உ: சக்கராதிபம் - சக்கராதிபத்தியம், பேரரசாட்சி.*

75. 'முன்னை இவன்செய்த தீதெலாம் — அவர்
முற்றும் மறந்தவ ராகியே, — தன்னைத்
தின்ன வருமொர் தவளையைக் — கண்டு
சிங்கஞ் சிரித்தருள் செய்தல்போல் — துணை
யென்ன இவனை மதிப்பவும் — அவர்
ஏற்றத்தைக் கண்டும்அஞ் சாமலே — (நின்றன்
சின்ன மதியினை என்சொல்வேன்!) — பகை
செய்திட எண்ணிப் பிதற்றினாய்.

*அ - உ: சின்னமதி - அற்பபுத்தி.*

76. 'ஒப்பில் வலிமை யுடையதாந் — துணை
யோடு பகைத்தல் உறுதியோ? — நம்மைத்
தப்பிழைத் தாரந்த வேள்வியில் — என்று
சாலம் எவரிடஞ் செய்கிறாய்! — மயல்
அப்பி விழிதடு மாறியே — இவன்
அங்கு மிங்கும்விழுந் தாடல் கண் — டந்தத்
துப்பிதழ் மைத்துனி தான்சிரித் — திடில்
தோஷ மிதில்மிக வந்ததோ?

*அ - உ: மயல் அப்பி - மயக்கங்கொண்டு; துப்பிதழ் - பவழம் போன்ற இதழ். தோஷம் - குற்றம்.*

77. 'தவறி விழுபவர் தம்மையே — பெற்ற
தாயுஞ் சிரித்தல் மரபன்றோ? — எனில்
இவனைத் துணைவர் சிரித்ததோர் — செயல்
எண்ணரும் பாதக மாகுமோ? — மனக்
கவலை வளர்ந்திடல் வேண்டுவோர் — ஒரு
காரணங் காணுதல் கஷ்டமோ? — வெறும்
அவல மொழிகள் அளப்பதேன்? — தொழில்
ஆயிர முண்டவை செய்குவீர்.

*அ - உ: துணைவர் - தருமன் முதலிய சகோதரர், அவல மொழிகள் - துன்பத்தைப்பற்றிய வார்த்தைகள்.*

78. 'சின்னஞ் சிறிய வயதிலே — இவன்
தீமை அவர்க்குத் தொடங்கினன் — அவர்
என்னரும் புத்திரன் என்றெண்ணித் — தங்கள்
யாகத் திவனைத் தலைக்கொண்டு — பசும்
பொன்னை நிறைத்ததோர் பையினை — 'மனம்
போலச் செலவிடு வாய்' என்றே — தந்து
மன்னவர் காண இவனுக்கே — தம்முள்
மாண்பு கொடுத்தன ரல்லரோ?

அ - உ: *தலைக்கொண்டு - சேர்த்து அழைத்து.*

79. 'கண்ணனுக் கேமுதல் அர்க்கியம் — அவர்
காட்டினர் என்று பழித்தனை! — எனில்,
நண்ணும் விருந்தினர்க் கன்றியே — நம்முள்
நாமுப சாரங்கள் செய்வதோ? — உறவு
அண்ணனும் தம்பியும் ஆதலால் — அவர்
அன்னிய மாநமைக் கொண்டிலர் — முகில்
வண்ணன் அதிதியர் தம்முளே — முதல்
மாண்புடை யானெனக் கொண்டனர்.

அ - உ: *முதல் அர்க்கியம் - செய். 68 உரையுள் காண்க. அதிதி - செய் 48 உரை. அன்னியம்ஆ - வேருக.*

80. 'கண்ணனுக் கேயது சாலுமென்று — உயர்
கங்கை மகன்சொலச் செய்தனர்; — இதைப்
பண்ணரும் பாவமென் றெண்ணினல் — அதன்
பார மவர்தமைச் சாருமோ? — பின்னும்
கண்ணனை ஏதெனக் கொண்டனை? — 'அவன்
காலிற் சிறுதுக ளொப்பவர் — நிலத்
தெண்ணரும் மன்னவர் தம்முளே — பிறர்
யாரு மிலை' யெனல் காணுவாய்.

அ - உ: *சொலச் செய்தனர் - சொல்லியபடி செய்தனர்.*

81. 'ஆதிப் பரம்பொருள் நாரணன், — தெளி
வாகிய பாற்கடல் மீதிலே — நல்ல
சோதிப் பணுமுடி யாயிரம் — கொண்ட
தொல்லறி வென்னுமோர் பாம்பின் மேல் — ஒரு
போதத் துயில்கொளும் நாயகன் — கலை
போந்து புவிமிசைத் தோன்றினன் — இந்தச்
சீதக் குவளை விழியினன்' — என்று
செப்புவர் உண்மை தெளிந்தவர்.

அ - உ: *பரம் பொருள் - மேலான பொருள்; பணுமுடி - (பாம்பின்) படமாகிய தலை; போதம் - ஞானம்; சீதக்குவளை விழி - குளிர்ச்சி பொருந்திய குவளைமலர் போன்ற விழிகள்.*

82. 'நானெனும் ஆணவந் தள்ளலும் — இந்த
ஞாலத்தைத் தானெனக் கொள்ளலும் — பர
மோன நிலையின் நடத்தலும் — ஒரு
மூவகைக் காலங் கடத்தலும் — நடு
வான கருமங்கள் செய்தலும் — உயிர்
யாவிற்கும் நல்லருள் பெய்தலும் — பிறர்
ஊனைச் சிதைத்திடும் போதினும் — தனது
உள்ளம் அருளின் நெகுதலும்,

*அ - உ: பரமோனநிலை - மேலான மௌனநிலை; மூவகைக் காலங்களையும் கடந்த பெரு நிலையாளர் ஞானியர்; பிறர் ஊனைச் சிதைத்தல் - பிறர் தன்னுடைய உடம்பை வருத்துதல்; "செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சு சோர்ந்தோடாத" நடுநிலை ஞானியர்க்குரியது. நெகுதல் - நெகிழ்தல், இளகுதல்.*

83. 'ஆயிரங் காலமு யற்சியால் — பெற
லாவர்இப் பேறுகள் ஞானியர்; — இவை
தாயின் வயிற்றில் பிறந்தன்றே — தமைச்
சார்ந்து விளங்கப் பெறுவரேல், — இந்த
மாயிரு ஞாலம் அவர்தமைத் — தெய்வ
மாண்புடை யாரென்று போற்றுங்காண்! — ஒரு
பேயினை வேதம் உணர்த்தல்போல், — கண்ணன்
பெற்றி உனக்கெவர் பேசுவார்?'

*அ - உ: ஆயிரம் காலம் - பல்லாண்டு காலம் எனும் பொருளில் வந்தது; பேயினை - பேய்க்கு. பெற்றி - தன்மை.*

## 10. துரியோதனன் சினங்கொள்ளுதல்

### வேறு

84. வெற்றி வேற்கைப் பரதர்தங் கோமான்,
மேன்மை கொண்ட விழியகத் துள்ளோன்,
பெற்றி மிக்க விதுர னறிவைப்
பின்னும் மற்றொரு கண்ணெனக் கொண்டோன்,
முற்று ணர்திரி தாட்டிரன் என்போன்
மூடப் பிள்ளைக்கு மாமன் சொல்வார்த்தை
எற்றி நல்ல வழக்குரை செய்தே
ஏன்ற வாறு நயங்கள் புகட்ட,

*அ - உ: பரதகுலத்தவர் தலைவனும் அகத்தே விழியுடையானும், அத்தோடு விதுரனுடைய நல்ல ஆலோசனைகளையும் கண்போலக் கருதுபவனுமாகிய திருதராட்டிரன்: மூடப்பிள்ளை - துரியோதனன்; மாமன் - சகுனி; எற்றி - தள்ளி; ஏன்றவாறு - பொருத்தமாக.*

85. கொல்லும் நோய்க்கு மருந்துசெய் போழ்தில்
கூடும் வெம்மைய தாய்ப்பிணக் குற்றே
தொல்லு ணர்வின் மருத்துவன் றன்னைச்
சோர்வு றுத்துதல் போல்,ஒரு தந்தை
சொல்லும் வார்த்தையி லேதெரு ளாதான்
தோமி ழைப்பதி லோர்மதி யுள்ளான்,
கல்லும் ஒப்பிடத் தந்தை விளக்கும்
கட்டு ரைக்குக் கடுஞ்சின முற்றான்.

அ - உ: *பிணக்குற்று - (மருத்துவனோடு) மாறுபட்டு; தெருளாதான் - தெளிவுடையாதவன்; தோம் - தீமை; கட்டுரை - வார்த்தை.*

## 11. துரியோதனன் தீமொழி

**வேறு**

86. பாம்பைக் கொடியென் றுயர்த்தவன் — அந்தப்
பாம்பெனச் சீறி மொழிகுவான்; — 'அட!
தாம்பெற்ற மைந்தர்க்குத் தீதுசெய் — திடும்
தந்தையர் பார்மிசை உண்டுகொல்? — கெட்ட
வேம்பு நிகரிவ னுக்குநான்; — சுவை
மிக்க சருக்கரை பாண்டவர்; — அவர்
தீம்பு செய்தாலும் புகழ்கிறான், — திருத்
தேடினும் என்னை இகழ்கிறான்.

அ - உ: *தீம்பு - தீங்கு; திரு - செல்வம், மேன்மை.*

87. 'மன்னர்க்கு நீதி யொருவகை; — பிற
மாந்தர்க்கு நீதிமற் றோர்வகை' — என்று
சொன்ன வியாழ முனிவனை — இவன்
சுத்த மடையனென் றெண்ணியே, — மற்றும்
என்னென்ன வோகதை சொல்கிறான், — உற
வென்றும்நட் பென்றும்க தைக்கிறான், — அவர்
சின்ன முறச்செய வேதிறங் — கெட்ட
செத்தையென் றென்னை நினைக்கிறான்;

அ - உ: *அரசனுக்குரிய நீதியும், பொது மக்களுக்குரிய நீதியும் வேறுவேறானவை என வியாழபகவான் கூறினன் என்பது பொருள். சின்னம் - அவமானம்; அழிவு. செத்தை - உலர்ந்த சருகு; வலியற்றது.*

88. 'இந்திர போகங்கள் என்கிறான், — உண
வின்பமும் மாதரின் இன்பமும் — இவன்
மந்திர மும்படை மாட்சியும் — கொண்டு
வாழ்வதை விட்டிங்கு வீணிலே — பிறர்
செந்திரு வைக்கண்டு வெம்பியே — உளம்
தேம்புதல் பேதைமை என்கிறான்; — மன்னர்
தந்திரந் தேர்ந்தவர் தம்மிலே — எங்கள்
தந்தையை ஒப்பவர் இல்லைகாண்!

89. 'மாதர்தம் இன்பம் எனக்கென்றான், — புவி
மண்டலத் தாட்சி அவர்க்கென்றான், — நல்ல
சாதமும் நெய்யும் எனக்கென்றான், — எங்கும்
சாற்றிடும் கீர்த்தி அவர்க்கென்றான்; — அட!
ஆதர விங்ஙனம் பிள்ளைமேல் — வைக்கும்
அப்பன் உலகினில் வேறுண்டோ? — உயிர்ச்
சோதரர் பாண்டவர் தந்தைநீ — குறை
சொல்ல இனியிட மேதையா'

அ - உ: ஆதரவு - அன்பு. பாண்டவர் தந்தை நீ என்றது இகழ்ச்சிக் குறிப்பு.

90. 'சொல்லின் நயங்கள் அறிந்திலேன், — உனைச்
சொல்லினில் வெல்ல விரும்பிலேன்; — கருங்
கல்லிடை நாருரிப் பாருண்டோ? — நினைக்
காரணங் காட்டுத லாகுமோ? — என்னைக்
கொல்லினும் வேறெது செய்யினும், — நெஞ்சில்
கொண்ட கருத்தை விடுகிலேன்; — அந்தப்
புல்லிய பாண்டவர் மேம்படக் — கண்டு
போற்றி உயிர்கொண்டு வாழ்கிலேன்;

அ - உ: புல்லிய - இழிவான.

91. 'வாது நின்னோடு தொடுக்கிலேன்; — ஒரு
வார்த்தை மட்டுஞ்சொலக் கேட்பையால்; — ஒரு
தீது நமக்கு வராமலே — வெற்றி
சேர்வதற் கோர்வழி யுண்டு,காண்! — களிச்
சூதுக் கவரை யழைத்தெலாம் — அதில்
தோற்றிடு மாறு புரியலாம், — இதற்
கேதுந் தடைகள் சொல்லாமலே — என
தெண்ணத்தை நீகொளல் வேண்டுமால்.'

## 12. திரிதராட்டிரன் பதில்

வேறு

92. திரிதாட் டிரன்செவியில் — இந்தத்
தீமொழி புகுதலுந் திகைத்து விட்டான்!
'பெரிதாத் துயர் கொணர்ந்தாய்; — கொடும்
பேயெனப் பிள்ளைகள் பெற்று விட்டேன்;
அரிதாக் குதல்போலே — அமர்
ஆங்கவ ரொடுபொரல் அவலம் என்றேன்;
நரிதாக் குதல்போலாம் — இந்த
நாணமில் செயலினை நாடுவ னோ?

அ - உ: அரி - சிங்கம். பொரல் - போரிடுதல்.

93. 'ஆரியர் செய்வாரோ? — இந்த
ஆண்மையி லாச்செயல் எண்ணுவரோ?
பாரினில் பிறருடைமை — வெஃகும்
பதரினைப் போலொரு பதருண்டோ?
பேரியற் செல்வங்களும் — இசைப்
பெருமையும் எய்திட விரும்புதியேல்,
காரியம் இதுவாமோ? — என்றன்
காளை யன்றோ? — இது கருதலடா!

அ - உ: ஆரியர் - மேன்மக்கள், வெஃகும் - விரும்பும்; பேரியல் செல்வம் - புகழ் வளருகின்ற செல்வம்.

94. 'வீரனுக் கேயிசை வார் — திரு,
மேதினி எனுமிரு மனைவியர்தாம்;
ஆரமர் தமரல்லார் — மிசை
ஆற்றிநல் வெற்றியில் ஓங்குதியேல்,
பாரத நாட்டினிலே — அந்தப்
பாண்டவ ரெனப்புகழ் படைத்திடுவாய்;
சோரர்தம் மகனோ நீ? — உயர்
சோமன்ற னுருகுலத் தோன்றலன்றோ?

அ - உ: திருமகளும் புவிமகளும் ஆகிய இரு மனைவியரும் வீரனையே விரும்பி அடைவர். தமரல்லார் மிசை - உறவினரல்லாதவர்களுடன்; சோமன் - சந்திரன்.

95. 'தம்மொரு கருமத்திலே — நித்தம்
தளர்வறு முயற்சி,மற் றோர்பொருளை
இம்மியுங் கருதாமை, — சார்ந்
திருப்பவர் தமைநன்கு காத்திடுதல்,
இம்மையில் இவற்றினையே — செல்வத்
திலக்கணம் என்றனர் முதறிஞர்.
அம்ம,இங் கிதனை யெலாம் — நீ
அறிந்திலை யோ?பிழை யாற்றல் நன்றோ?

*அ - உ: அம்ம - ஐயோ, வியப்புச் சொல்.*

96. 'நின்னுடைத் தோளனையார் — இள
நிருபரைச் சிதைத்திட நினைப்பாயோ?
என்னுடை யுயி ரன்றோ? — எனை
எண்ணிஇக் கொள்கையை நீக்குதியால்!
பொன்னுடை மார்பகத்தார் — இளம்
பொற்கொடி மாதரைக் களிப்பதினும்
இன்னும்பல் இன்பத்தினும் — உளம்
இசையவிட் டேஇதை மறந்தி டடா!'

*அ - உ: இளநிருபர் - பாண்டவராகிய இளவரசர்கள். பொன்னுடை மார்பு - அழகு விளங்கும் மார்பு.*

## 13. துரியோதனன் பதில்

### வேறு

97. தந்தை இஃது மொழிந்திடல் கேட்டே,
தாரி சைந்த நெடுவரைத் தோளான்,
'எந்தை, நின்னொடு வாதிடல் வேண்டேன்
என்று பன்முறை கூறியும் கேளாய்,
வந்த காரியங் கேட்டி,மற் றுங்குன்
வார்த்தை யின்றிஅப் பாண்டவர் வாரார்,
இந்த வார்த்தை உரைத்து விடாயேல்
இங்கு நின்முன் என் ஆவி இறுப்பேன்.

*அ - உ: பாண்டவரை இங்கு வருமாறு நீ சொல்லி அனுப்பா விடில் உன்முன் உயிர் துறப்பேன் என்று துரியோதனன் கூறுகின்றான்.*

98. 'மதித மக்கென் றிலாதவர் கோடி
வண்மைச் சாத்திரக் கேள்விகள் கேட்டும்
பதியுஞ் சாத்திரத் துள்ளுறை காணுர்,
பானைத் தேனில் அகப்பையைப் போல்வார்;
துதிகள் சொல்லும் விதுரன் மொழியைச்
சுருதி யாமெனக் கொண்டனை நீதான்;
அதிக மோகம் அவனுளங் கொண்டான்
ஐவர் மீதில்,இங் கெம்மை வெறுப்பான்.

அ - உ: உள்ளுறை - உட்பொருள்; தேன்பானையுள் கிடந்தாலும் அகப்பை அத்தேனின் சுவையை அறியாது; சுருதி - வேதவாக்கு.

99. 'தலைவன் ஆங்குப் பிறர்கையில் பொம்மை;
சார்ந்து நிற்பவர்க் குய்ந்நெறி உண்டோ?
உலைவ லால்,திரி தாட்டிர வர்க்கத்
துள்ள வர்க்கு நலமென்ப தில்லை;
நிலையி லாதன செல்வமும் மாண்பும்
நித்தம் தேடி வருந்த லிலாமே
விலையி லாநிதி கொண்டனம்' என்றே
மெய்கு ழைந்து துயில்பவர் மூடர்.

அ - உ: பிறர் கையிற் பொம்மையாக உள்ள தலைவர்களைச் சார்ந்து நிற்பவர்க்கு உய்ந்நெறி இல்லை. உலைவு - அழிவு; நிலையில்லா தனவாகிய செல்வமும் பெருமையும் என்க. இலாமே - இல்லாமல்;

100. 'பழைய வானிதி போதுமென் றெண்ணிப்
பாங்கு காத்திடு மன்னவர் வாழ்வை
விழையும் அன்னியர் ஓர்கணத் துற்றே
வென்ற ழிக்கும் விதிஅறி யாயோ?
குழைத லென்பது மன்னவர்க் கில்லை;
கூடக் கூடப்பின் கூட்டுதல் வேண்டும்;
பிழைஒன் றேஅர சர்க்குண்டு, கண்டாய்,
பிறரைத் தாழ்த்து வதிற்சலிப் பெய்தல்.

அ - உ: வானிதி - பெருஞ் செல்வம்,

வேறு

101. 'வெல்வதெங் குலத்தொழி லாம்; — எந்த
விதத்தினில் இசையினும் தவறிலை காண்!
நல்வழி தீய வழி — என
நாமதிற் சோதனை செயத்தகு மோ?
செல்வழி யாவினு மே — பகை
தீர்த்திடல் சாலுமென் றனர்பெரி யோர்;
கொல்வது தான் படையோ? — பகை
குமைப்பன யாவும்நற் படையல வோ?

அ - உ; குமைப்பன - அழிப்பன. பகைவரை அழிப்பனவேயன்றி வெறும் கொலைத்தொழிலை மட்டும் புரிவன படையாகா என்றவாறு.

5

வேறு

102. 'சுற்றத் தாரிவர் என்றனை ஐயா!
தோற்றத் தாலும் பிறவியி னாலும்,
பற்றலா ரென்றும் நண்பர்க ளென்றும்
பார்ப்ப தில்லை உலகினியில் யாரும்;
மற்றெத் தாலும் பகையுறல் இல்லை;
வடிவினில் இல்லை, அளவினில் இல்லை;
உற்ற துன்பத்தி னுற்பகை உண்டேம்,
ஓர்தொ ழில்பயில் வார்தமக் குள்ளே.

103. 'பூமித் தெய்வம் விழுங்கிடும் கண்டாய்
புரவ லர்பகை காய்கிலர் தம்மை;
நாமிப் பூதலத் தேகுறை வெய்த
நாளும் பாண்டவர் ஏறுகின் றூரால்;
நேமி மன்னர் பகைசிறி தென்றே
நினைவ யர்ந்திருப் பாரெனில், நோய்போல்
சாமி, அந்தப் பகைமிக லுற்றே
சடிதி மாய்த்திடும் என்பதும் காணாய்.

அ - உ: *பற்றலார் - பகைவர்; பகைகாய்கிலர் - பகைவர்களை அழிக்காதவர்; நேமி - அரச ஆணை; சடிதி - சடுதி, விரைவாக.*

104. 'போர்செய் வோமெனில் நீதடுக் கின்றாய்;
புவியி னோரும் பழிபல சொல்வார்;
தார்செய் தோளிளம் பாண்டவர் தம்மைச்
சமரில் வெல்வதும் ஆங்கெளி தன்றாம்;
யார்செய் புண்ணியத் தோநமக் குற்றான்
எங்க ளாருயிர் போன்றஇம் மாமன்;
நேர்செய் சூதினில் வென்று தருவான்;
நீதித் தர்மனும் சூதில்அன் புள்ளோன்.

அ - உ: *நேர்செய் - நேராகப் பொருகின்ற.*

105. 'பகைவர் வாழ்வினில் இன்புறு வாயோ?
பார தர்க்கு முடிமணி யன்னாய்!
புகையும் என்றன் உளத்தினை வீறில்
புன்சொற் கூறி அவித்திட லாமோ?
நகைசெய் தார்தமை நாளை நகைப்போம்;
நமரிப் பாண்டவர் என்னில் இஃதாலே
மிகையு றுந்துன்ப மேது?நம் மோடு
வேறு றாதெமைச் சார்ந்துநன் குய்வார்.

அ - உ: *வீறில் - வீறு இல்லாத, பொருந்தாத; அவித்திடலாமோ - அடக்கிவிடலாமோ?; நமர் - நம்மவர்.*

106. 'ஐய, சூதிற் கவரை அழைத்தால்,
ஆடி உய்குதும், அ∴தியற் றுயேல்,
பொய்யன் றென்னுரை; என்னியல் போர்வாய்;
பொய்ம்மை வீறென்றுஞ் சொல்லிய துண்டோ?
நைய நின்முனர் என்சிரங் கொய்தே
நானிங் காவி இறுத்திடு வேனல்;
செய்ய லாவது செய்குதி' என்றான்;
திரித ராட்டிரன் நெஞ்ச முடைந்தான்.

அ - உ: என்னியல்பு ஓர்வாய் - எனது தன்மையை நன்கு அறிவாய்; செய்யலாவது - செய்யக்கூடியதை.

## 14. திரிதராட்டிரன் சம்மதித்தல்

வேறு

107. 'விதிசெயும் விளைவி னுக்கே — இங்கு
வேறு செய்வார் புவிமீ துளரோ?
மதிசெறி விதுரன் அன்றே — இது
வருந்திறன் அறிந்துமுன் எனக்குரைத்தான்.
"அதிசயக் கொடுங் கோலம் — விளைந்
தரசர்தங் குலத்தினை அழிக்கும்" என்றான்;
சதிசெயத் தொடங்கி விட்டாய்; — "நின்றன்
சதியினிற் றனது விளையும்" என்றான்.

அ - உ: 'இது' என்பது "அதிசயக் கொடுங்கோலம் விளைந்து அரசர் தங்குலத்தினை அழிக்கும்" என்று குறிப்பிடப்படுவனவற்றைக் குறிக்கும்.

108. 'விதி! விதி! விதி! மகனே! — இனி
வேறெது சொல்லுவன் அட மகனே!
கதியுறுங் கால னன்றே — இந்தக்
கயமக னெனநினைச் சார்ந்து விட்டான்?
கொதியுறு முளம் வேண்டா; — நின்றன்
கொள்கையின் படிஅவர் தமை அழைப்பேன்;
வதியுறு மனை செல்வாய்' — என்று
வழியுங்கண் ணீரொடு விடை கொடுத்தான்.

அ - உ: கதியுறுங்காலன் - முடிபு காலத்திற் சேரவேண்டிய யமன்; கயமகன் - கீழ்மகன், இங்குச் சகுனியைச் சுட்டிற்று. வதியுறுமனை - வாழும்மனை,

## 15. சபா நிர்மாணம்

**வேறு**

109. மஞ்சனும் மாமனும் போயின பின்னர்,
மன்னன் வினைஞர் பலரை அழைத்தே,
'பஞ்சவர் வேள்வியிற் கண்டது போலப்
பாங்கி னுயர்ந்ததொர் மண்டபஞ் செய்வீர்!
மிஞ்சு பொருளதற் காற்றுவன்' என்றான்;
மிக்க உவகையொ டாங்கவர் சென்றே
கஞ்ச மலரிற் கடவுள் வியப்பக்
கட்டி நிறுத்தினர் பொற்சபை ஒன்றே.

*அ - உ: மஞ்சனும் மாமனும் - தன் மைந்தனும், அவனது மாமனாகிய சகுனியும்; ஆற்றுவன் - தருவேன் அல்லது செலவிடுவேன்; கஞ்சமலரிற் கடவுள் - தாமரைமலரில் உறையும் படைத்தற் கடவுளாகிய பிரமன்.*

**வேறு**

110. வல்லவன் ஆக்கிய சித்திரம் போலும்,
வண்மைக் கவிஞர் கனவினைப் போலும்,
நல்ல தொழிலுணர்ந் தார்செய லென்றே
நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறக்
கல்லையும் மண்ணையும் பொன்னையும் கொண்டு
காமர் மணிகள் சிலசில சேர்த்துச்
சொல்லை யிசைத்துப் பிறர்செயு மாறே
சுந்தர மாமொரு காப்பியஞ் செய்தார்.

*அ - உ: வல்லவன் - கைவல்லான், நல்ல ஓவியன்; கனவு - கற்பனை; பிறர் - என்றது இங்குக் கவிஞரையாம். மிக்க அழகுள்ள காப்பியம்போன்று விளங்கும் ஒரு மாளிகையினை அமைத்தனர்.*

## 16. விதுரனைத் தூதுவிடல்

111. தம்பி விதுரனை மன்னன் அழைத்தான்;
'தக்க பரிசுகள் கொண்டினி தேகி,
எம்பியின் மக்கள் இருந்தர சாளும்
இந்திர மாநகர் சார்ந்தவர் தம்பால்,
"கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்
கூடிஇங் கெய்தி விருந்து களிக்க
நம்பி அழைத்தனன், கௌரவர் கோமான்
நல்லதொர் நுந்தை" எனஉரை செய்வாய்.

*அ - உ: எம்பியின் - எனது தம்பியாகிய பாண்டுவின்; இந்திர மாநகர் - இந்திரப் பிரஸ்தம்; கொம்பினை - பூங்கொம்பை; மடப்பிடி - இளைய பெண்யானை; இங்குத் திரௌபதியைச் சுட்டிற்று; நம்பி - கௌரவர் கோமானாகிய நம்பி; வருவீர்கள் என்னும் நம்பிக்கையுடன் என்னுமாம். நுந்தை - உமது தந்தை; பெரிய தந்தை.*

112. 'நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறும்
நன்மணி மண்டபம் செய்ததும் சொல்வாய்;
"நீடு புகழ்ப்பெரு வேள்வியில் அந்நாள்
நேயமொ டேகித் திரும்பிய பின்னர்
பீடுறு மக்களை ஓர்முறை இங்கே
பேணி அழைத்து விருந்துக ளாற்றக்
கூடும் வயதிற் கிழவன் விரும்பிக்
கூறினன் இஃதெ"னச் சொல்லுவை கண்டாய்.

*அ - உ: பீடுறுமக்களை - பெருமையுடைய மக்களாகிய உங்களை; திரிதராட்டிரன் தன்னை இங்குக் 'கிழவன்' என்று குறிப்பிடுகின்றான்.*

113. 'பேச்சி னிடையிற் "சகுனிசொற் கேட்டே
பேயெனும் பிள்ளை கருத்தினிற் கொண்ட
தீச்செயல் இஃதெ"ன் றதையுங் குறிப்பாற்
செப்பிடு வாய்,என மன்னவன் கூறப்
'போச்சுது! போச்சுது பாரத நாடு!
போச்சுது நல்லறம்! போச்சுது வேதம்!
ஆச்சரி யக்கொடுங் கோலங்கள் காண்போம்;
ஐய, இதனைத் தடுத்தல் அரிதோ?"

*அ - உ: பேயெனும் பிள்ளை என்று துரியோதனன் குறிப்பிடப் படுகின்றான்.*

114. என்று விதுரன் பெருந்துயர் கொண்டே
ஏங்கிப் பலசொல் இயம்பிய பின்னர்
'சென்று வருகுதி, தம்பி, இனிமேல்
சிந்தனை ஏதும் இதிற்செய மாட்டேன்.
வென்று படுத்தனன் வெவ்விதி என்னை;
மேலை விளைவுகள் நீஅறி யாயோ?
அன்று விதித்ததை இன்று தடுத்தல்
யார்க்கெளி' தென்றுமெய் சோர்ந்து விழுந்தான்.

*அ - உ: வெவ்விதி என்னை - வென்றுதான் மேம்பட்டுவிட்டான் என்று திரிதராட்டிரன் கூறுகின்றான்.*

## 17. விதுரன் தூது செல்லுதல்

வேறு

115. அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்;
அடவிமலை ஆறெல்லாம் கடந்து போகித்
திண்ணமுறு தடந்தோளும் உளமுங் கொண்டு,
திருமலியப் பாண்டவர்தாம் அரசு செய்யும்
வண்ணமுயர் மணிநகரின் மருங்கு செல்வான்
வழியிடையே நாட்டினுறு வளங்கள் நோக்கி
எண்ணமுற லாகித்தன் இதயத் துள்ளே
இனையபல மொழிகூறி இரங்கு வானால்.

*அ - உ: அடவி - பெருங்காடு; மருங்கு - பக்கம்; இனைய-இத்தகைய.*

116. 'நீலமுடி தரித்தபல மலைசேர் நாடு,
நீரமுதம் எனப்பாய்ந்து நிரம்பு நாடு,
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழுங்
குளிர்காவுஞ் சோலைகளுங் குலவு நாடு,
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையும் நறுநெய்யும் தேனு முண்டு
பண்ணவர்போல் மக்களெலாம் பயிலும் நாடு.

*அ - உ: பாலடை - பாலாடை, இங்குத் தயிரைக் குறித்து நின்றது; பண்ணவர் - தேவர்.*

117. 'அன்னங்கள் பொற்கமலத் தடத்தின் ஊர
அளிமுரலக் கிளிமழலை அரற்றக் கேட்போர்
கன்னங்கள் அமுதூறக் குயில்கள் பாடும்
காவினத்து நறுமலரின் கமழைத் தென்றல்
பொன்னங்க மணிமடவார் மாட மீது
புலவிசெயும் போழ்தினிலே போந்து வீச,
வன்னங்கொள் வரைத்தோளார் மகிழ, மாதர்
மையல்விழி தோற்றுவிக்கும் வண்மை நாடு.

*அ - உ: தடம் — குளம்; அளி - வண்டு, கமழை - மணம் உடைய; பொன்னங்கம் - பொன்போன்ற அழகிய உடல்; புலவி- காதற் கோபம், வன்னம் - அழகு.*

118. 'பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு,
பெண்க ளெல்லாம் அரம்பையர்போல் ஒளிரும் நாடு,
வீரமொடு மெய்ஞ்ஞானம் தவங்கள் கல்வி
வேள்விளனும் இவையெல்லாம் விளங்கு நாடு,
சோரமுதற் புன்மையெதுந் தோன்ரு நாடு,
தொல்லுலகின் முடிமணிபோல் தோன்றும் நாடு,
பாரதர்தந் நாட்டிலே நாசமெய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே!'

*அ - உ: பிறங்கு — விளங்குகின்ற, அரம்பையர் - தேவமகளிர்; சோரம் - களவு.*

## 18. விதுரனை வரவேற்றல்

*வேறு*

119. விதுரன் வருஞ்செய்தி தாஞ்செவி யுற்றே,
வீறுடை ஐவர் உளமகிழ் பூத்துச்
சதுரங்க சேனை யுடன்பல பரிசும்
தாளமும் மேளமும் தாங்கொண்டு சென்றே
எதிர்கொண் டழைத்து, மணிமுடி தாழ்த்தி,
ஏந்தல் விதுரன் பதமலர் போற்றி,
மதுர மொழியிற் குசலங்கள் பேசி,
மன்ன னெடுந்திரு மாளிகை சேர்ந்தார்.

*அ - உ: சதுரங்கசேனை - யானை, குதிரை, தேர், காலாள் என்ற நால்வகைப்படை; ஏந்தல் - தலைவன்; குசலம் - சுக சேதிகள்.*

120. குந்தி எனும்பெயர்த் தெய்வதந் தன்னைக்
கோமகன் கண்டு வணங்கிய பின்னர்,
வெந்திறல் கொண்ட துருபதன் செல்வம்
வெள்கித் தலைகுனிந் தாங்குவந் தெய்தி,
அந்தி மயங்க விசும்பிடைத் தோன்றும்
ஆசைக் கதிர்மதி யன்ன முகத்தை
மந்திரந் தேர்ந்ததொர் மாமன் அடிக்கண்
வைத்து வணங்கி வனப்புற நின்ருள்.

*அ - உ: தெய்வதம் - தெய்வம்; துருபதன் செல்வம் - திரௌபதி; அந்தி மயங்க - மாலைக்காலமாகும் பொழுது; கதிர்மதி - பூரணைச் சந்திரன்; மந்திரந் தேர்ந்ததொர் மாமன் - வேதங்களை எல்லாம் நன்கு கற்றறிந்த மாமனுகிய விதுரன்.*

121. தங்கப் பதுமை எனவந்து நின்ற
தையலுக் கையன், நல் லாசிகள் கூறி
அங்கங் குளிர்ந்திட வாழ்த்திய பின்னர்,
ஆங்குவந் துற்ற உறவினர் நண்பர்
சிங்க மெனத்திகழ் வீரர் புலவர்
சேவகர் யாரொடுஞ் செய்திகள் பேசிப்
பொங்கு திருவின் நகர்வ லம்வந்து
போழ்து கழிந்திர வாகிய பின்னர்.

**அ - உ: பொங்கு திருவின் - நிறைந்த செல்வத்தினை உடைய.**

## 19. விதுரன் அழைத்தல்

122. ஐவர் தமையுந் தனிக்கொண்டு போகி,
ஆங்கொரு செம்பொன் னரங்கில் இருந்தே,
'மைவரைத் தோளன், பெரும்புக ழாளன்,
மாமகள் பூமகட் கோர்மண வாளன்,
மெய்வரு கேள்வி மிகுந்த புலவன்,
வேந்தர் பிரான், திரி தாட்டிரக் கோமான்
தெய்வ நலங்கள் சிறந்திட நும்மைச்
சீரொடு நித்தலும் வாழ்கென வாழ்த்தி,

**அ - உ: அரங்கு - மேடை; மைவரைத் தோளன் - மேகம்படியும் உயர்ந்தமலை போன்ற தோள்களையுடையவன்; மாமகள் - இலக்குமி, பூமகள் - நிலமடந்தை.**

123. 'உங்களுக் கென்னிடம் சொல்லி விடுத்தான்
ஓர்செய்தி; மற்றஃ துரைத்திடக் கேளீர்!
மங்களம் வாய்ந்தநல் அத்தி புரத்தே
வையக மீதில் இணையற்ற தாகத்
தங்கும் எழிற்பெரு மண்டபம் ஒன்று
தம்பியர் சூழ்ந்து சமைத்தனர், கண்டீர்!
அங்கதன் விந்தை அழகினைக் காண
அன்பொடு நும்மை அழைத்தனன் வேந்தன்.

124. 'வேள்விக்கு நாங்கள் அனைவரும் வந்து
மீண்டு பலதின மாயின வேனும்,
வாள்வைக்கும் நல்விழி மங்கை யொடேநீர்
வந்தெங்க ளூரில் மறுவிருந் தாட
நாள்வைக்குஞ் சோதிட ராலிது மட்டும்
நாயகன் நும்மை அழைத்திட வில்லை;
கேள்விக் கொருமிதி லாதிப னொத்தோன்
கேடற்றமாதம் இது வெனக் கண்டே.

அ - உ: வாள்வைக்கும் நல்விழி மங்கை - ஒளிபடைத்த கண்ணின ளான பாஞ்சாலி; கேள்விக்கொரு மிதிலாதிபனொத்தோன் என்றது இங்குத்திருதராட்டினனையாகும். மிதிலைக் கதிபனுன ஜனகமகாராசன் கல்வி, கேள்வி, தவம் என்பவற்றில் தன் காலத்தே நிகரற்று விளங் கியதனுல் 'ஜனகமகா முனிவன்' என்று அழைக்கப்பட்ட பெருமை யாளன்.

125. 'வந்து விருந்து களித்திட நும்மை
வாழ்த்தி அழைத்தனன், என்னரு மக்காள்!
சந்துகண் டேஅச் சகுனிசொற் கேட்டுத்
தன்மை இழந்த சுயோதன மூடன்
விந்தை பொருந்திய மண்டபத் தும்மை
வெய்யபுன் சூது களித்திடச் செய்யும்
மந்திர மொன்றும் மனத்திடைக் கொண்டான்;
வன்ம மிதுவும் நுமக்கறி வித்தேன்.'

அ - உ: சந்துகண்டே - இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு; களித்திட - இன்பமூட்ட; மந்திரம் - தந்திரம்; வன்மம் - பகைமை; சதி.

## 20. தருமபுத்திரன் பதில்

126. என்று விதுரன் இயம்பத் தருமன்
எண்ணங் கலங்கிச் சிலசொல் உரைப்பான்;
'மன்று புனைந்தது கேட்டுமிச் சூதின்
வார்த்தையைக் கேட்டுமிங் கென்றன் மனத்தே,
சென்று வருத்தம் உளைகின்ற தையா!
சிந்தையில் ஐயம் விளைகின்ற தையா!
நன்று நமக்கு நினைப்பவ னல்லன்;
நம்ப லரிது சுயோதனன் றன்னை.

அ - உ: மன்று - சபை, மண்டபம்; உளைகின்றது - நோவுறுத்து கின்றது.

127. ‘கொல்லக் கருதிச் சுயோதனன் முன்பு
குத்திர மான சதிபல செய்தான்;
சொல்லப் படாதவ னுலெமக் கான
துன்ப மனைத்தையும் நீஅறி யாயோ?
வெல்லக் கடவர் எவரென்ற போதும்
வேந்தர்கள் சூதை விரும்பிட லாமோ?
தொல்லைப் படுமென் மனந்தெளி வெய்தச்
சொல்லுதி நீஒரு சூழ்ச்சிஇங்' கென்றான்.

அ - உ: குத்திரம் - வஞ்சனை.

## 21. விதுரன் பதில்

வேறு

128. விதுரனும் சொல்லுகி றான் — ‘இதை:
விடமெனச் சான்றவர் வெகுளுவர் காண்;
சதுரெனக் கொள்ளுவ ரோ? — இதன்
தாழ்மை யெலாமவர்க் குரைத்து விட்டேன்;
இதுமிகத் தீதென் றே — அண்ணன்
எத்தனை சொல்லியும் இள வரசன்,
மதுமிகுத் துண்டவன் போல் — ஒரு
வார்த்தையை யேபற்றிப் பிதற்றுகிறான்.

அ - உ: *சதுர் - சாதுரியம், திறமை; அளவுமீறி மதுவை அருந்திய களிமகன் ஒருவார்த்தையையே திருப்பித் திருப்பிச் சொல்லுவது போல் துரியோதனனும் சூதாட்டம் பற்றித் தான் கூறியவற்றினையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டு நிற்கின்றான்.*

129. ‘கல்லெனில் இணங்கி விடும், — அண்ணன்
காட்டிய நீதிகள் கணக்கில வாம்;
புல்லனிங் கவற்றை யெல்லாம் — உளம்
புகுதவொட் டாதுதன் மடைமையினால்
சல்லியச் சூதினி லே — மனம்
தளர்வற நின்றிடுந் தகைமை சொன்னேன்;
சொல்லிய குறிப்பறிந் தே — நலந்
தோன்றிய வழியினைத் தொடர்க’ என்றான்.

அ - உ: *சல்லியம் - மாயவித்தை, நஞ்சு; தளர்வற - தளர்வு இல்லாது, உறுதியாக.*

## 22. தருமபுத்திரன் தீர்மானம்

130. தருமனும் இவ்வள வில் — உளத்
தளர்ச்சியை நீக்கியோர் உறுதி கொண்டே
பருமங்கொள் குரலின னாய் — மொழி
பதைத்திட லின்றிஇங் கிவைஉரைப் பான்;
'மருமங்கள் எவைசெயி னும், — மதி
மருண்டவர் விருந்தறஞ் சிதைத்திடி னும்,
கருமமொன் றேஉள தாம் — நங்கள்
கடன்; அதை நெறிப்படி புரிந்திடு வோம்.

**அ - உ: ஓர் - ஓர் எனும் சொல் முதல் குறுகி நின்றது; பருமம் - தடிப்பு, உறுதி; மருமம் - மறைவாகச் செயும் சூழ்ச்சி, நங்கள் - எங்கள்.**

131. 'தந்தையும் வரப்ப ணித்தான்; — சிறு
தந்தையும் தூதுவந் ததைஉரைத் தான்;
சிந்தை யொன்றினி இல்லை, — எது
சேரினும் நலமெனத் தெளிந்துவிட் டேன்;
முந்தையச் சிலைரா மன் — செய்த
முடிவினை நம்மவர் மறப்பது வோ?
நொந்தது செயமாட் டோம்; — பழ
நூலினுக் கிணங்கிய நெறிசெல் வோம்.

**அ - உ: சிறு தந்தை - சிறியதந்தையாகிய விதுரன்; சிந்தை ஒன்று - வேறொரு சிந்தனை; முந்தை - முற்காலத்தில்; இராமன் தன் தந்தையின் சொல்லைக் கடவாது கானகம் சென்றமை இங்குக் குறிப்பிடப் பெற்றது.**

132. 'ஐம்பெருங் குரவோர் தாம் — தரும்
ஆணையைக் கடப்பதும் அறநெறி யோ?
வெம்பெரு மத யானை — பரி
வியன்தேர் ஆளுடன் இருதினத் தில்
பைம்பொழில் அத்தி நகர் — செலும்
பயணத்திற் குரியன புரிந்திடு வாய்,
மொய்ம்புடை விறல் வீமா!' — என
மொழிந்தனன் அறநெறி முழுதுணர்ந் தான்.

**அ - உ: ஐம்பெருங்குரவோர் - தாய், தந்தை, தமையன், அரசன், உபாத்தியாயன் எனும் ஐவர்; மொய்ம்பு - வலிமை.**

## 23. வீமனுடைய வீரப்பேச்சு

133. வீமனும் திகைத்துவிட் டான்; — இள
விசயனை நோக்கி இங் கிதுசொலு வான்;
'மாமனும் மருகனு மா — நமை
மழித்திடக் கருதிஇவ் வழிதொடர்ந் தார்;
தாமதஞ் செய்வோ மோ? — செலத்
தகுந்தகு' மெனஇடி யுறநகைத் தான்;
கோமகன் உரைப்படி யே — படை
கொண்டுசெல் வோமொரு தடையிலை காண்.

அ - உ: *மழித்திட - மொட்டையாக்க, செல்வம் புகழ் முதலிய வற்றைக் குறைத்துவிட; 'தாமதம் செய்யாது செல்லுதலேதகுதி' என்று வீமன் இழிவுக்குறிப்புத் தோன்றக் கூறுகின்றான்.*

134. 'நெடுநாட் பகைகண் டாய்! — இந்த
நினைவினில் யான்கழித் தனபல நாள்;
கெடுநாள் வருமள வும் — ஒரு
கிருமியை அழிப்பவர் உலகிலுண் டோ?
படுநாட் குறி அன்றோ — இந்தப்
பாதகம் நினைப்பவர் நினைத்தது தான்?
விடுநாண் கோத்திட டா! — தம்பி!
வில்லினுக் கிரைமிக விளையு தடா!

அ - உ: *படுநாட்குறி - அழிவு நாளைக்குறிக்கும் அடையாளம்.*

135. 'போரிடச் செல்வம டா! — மகன்
புலைமையும் தந்தையின் புலமைக ளும்
யாரிடம் அவிழ்க்கின் றார்? — இதை
எத்தனை நாள்வரை பொறுத்திருப் போம்?
பாரிடத் திவரொடு நாம் — எனப்
பகுதியிவ் விரண்டிற்கும் காலமொன் றில்
நேரிட வாழ்வுண் டோ? — இரு
நெருப்பினுக் கிடையினில் ஒருவிற கோ?'

அ - உ. *மகன்புலைமை - துரியோதனனது கீழ்த்தரமான செயல்கள்; தந்தையின்புலமை - திருதராட்டிரனது அறிவு; பாரிடத்து - இப் பூமியில்; பகுதி இவ்விரண்டு - நாமும் இவரும் என்ற இரண்டு பகுதிகள்; ஒன்றில் நேரிட - இரண்டில் ஒரு பகுதியே ஆக.*

## 24. தருமபுத்திரன் முடிவுரை

**வேறு**

136. வீமன் உரைத்தது போலவே — உளம்
வெம்பி நெடுவில் விசயனும் — அங்கு
காமனும் சாமனும் ஒப்பவே — நின்ற
காளை இளைஞர் இருவரும் — செய்ய
தாமரைக் கண்ணன் யுதிட்டிரன் — சொல்லைத்
தட்டிப் பணிவொடு பேசினர்; தவ
நேமந் தவறலும் உண்டுகாண், — நரர்
நெஞ்சம் கொதித்திடு போழ்திலே.

*அ - உ: காமனும் சாமனும் சகோதரர்களாவர். இவர்களை ஒத்து அங்கு நின்றவர் நகுலசகாதேவர். நேமம் - நியமம், ஒழுங்கு;*

137. அன்பும் பணிவும் உருக்கொண்டோர் — அணு
வாயினும் தம்சொல் வழாதவர் — அங்கு
வன்பு மொழிசொல்லக் கேட்டனன்; — அற
மன்னவன் புன்னகை பூத்தனன்; — 'அட!
முன்பு சுயோதனன் செய்ததும் — இன்று
மூண்டிருக்குங் கொடுங் கோலமும் — இதன்
பின்பு விளைவதும் தேர்ந்துளேன்; — என்னைப்
பித்தனென் றெண்ணி உரைத்திட்டீர்!

*அ - உ: வன்பு மொழி - அன்பு இல்லாத மொழி, கடுஞ்சொல்.*

138. 'கைப்பிடி கொண்டு சுழற்றுவோன் — தன்
கணக்கிற் சுழன்றிடும் சக்கரம் — அது
தப்பி மிகையுங் குறையுமாச் — சுற்றும்
தன்மை அதற்குள தாகுமோ? — இதை
ஒப்பிட லாகும் புவியின்மேல் — என்றும்
உள்ள உயிர்களின் வாழ்விற்கே, — ஒரு
செப்பிடு வித்தையைப் போலவே — புவிச்
செய்திகள் தோன்றிடு மாயினும்,

*அ - உ: சக்கரம்-சுழற்றப்படுகின்றவளையம்; மிகையும் குறையுமா - கூடியும் குறைந்தும்; செப்பிடுவித்தை - சொல்லியபடி நடப்பதாகக் காட்டப்படுகின்றதாகிய மாயவித்தை.*

139. 'இங்கிவை யாவுந் தவறிலா — விதி
ஏற்று நடக்குஞ் செயல்களாம்; — முடி
வெங்கணு மின்றி எவற்றினும் — என்றும்
ஏறி இடையின்றிச் செல்வதாம் — ஒரு
சங்கிலி யொக்கும் விதி கண்டீர்; — வெறுஞ்
சாத்திர மன்றிது சத்தியம்; — நின்று
மங்கியொர் நாளில் அழிவதாம் — நங்கள்
வாழ்க்கை இதனைக் கடந்ததோ ?

அ - உ: விதி முடிவின்றி எங்கணும் என்றும் ஏறிச் செல்வதாம். சாத்திரம் - நூன்முடிபு,

140. 'தோன்றி அழிவது வாழ்க்கைதான்; — இங்குத்
துன்பத்தொ டின்பம் வெறுமையாம் — இவை
மூன்றில் எதுவரு மாயினும், — களி,
மூழ்கி நடத்தல் முறைகண்டீர்! — நெஞ்சில்
ஊன்றிய கொள்கை தழைப்பரோ, — துன்பம்
உற்றிடு மென்பதோர் அச்சத்தால்? — விதி
போன்று நடக்கும் உலகென்றே — கடன்
போற்றி ஒழுகுவர் சான்றவர்.

அ - உ: துன்பம், இன்பம், அவை இரண்டும் இல்லாத நிலை ஆகிய மூன்றில்; ஊன்றிய - (மாறுபட்டு) எழுந்த. தழைப்பரோ - வளர்ப்பார்களோ.

141. 'சேற்றில் உழலும் புழுவிற்கும், — புவிச்
செல்வ முடைய அரசர்க்கும், — பிச்சை
ஏற்றுடல் காத்திடும் ஏழைக்கும், — உயிர்
எத்தனை உண்டவை யாவிற்கும், — நித்தம்
ஆற்றுதற் குள்ள கடமைதான் — முன்வந்து
அவ்வக் கணந்தொறும் நிற்குமால் — அது
தோற்றும் பொழுதிற் புரிகுவார் — பல
சூழ்ந்து கடமை அழிப்பரோ?

அ - உ: புரிகுவார் - செய்பவர்கள், வினையாலணையும் பெயர்.

142. 'யாவருக் கும்பொது வாயினும் — சிறப்
பென்பர் அரசர் குலத்திற்கே — உயர்
தேவரை யொப்ப முன்னோர் தமைத் — தங்கள்
சிந்தையிற் கொண்டு பணிகுதல்; — தந்தை
ஏவலை மைந்தர் புரிதற்கே — வில்
லிராமன் கதையையும் காட்டினேன்; — புவிக்
காவலர் தம்மிற் சிறந்தநீர் — இன்று
கர்மம் பிழைத்திடு வீர்கொலோ?'

அ - உ: முன்னோர்தமைத் தேவரென மதித்துப்பணிதல் அரசர்களுக்குச் சிறப்பான ஒழுகலாறுகும்; கர்மம் - கருமம், செய்யவேண்டியது, கடமை.

## 25. நால்வரும் சம்மதித்தல்

### வேறு

143. என்றிணைய நீதிபல தரும ராசன்
எடுத்துரைப்ப, இளைஞர்களுந் தங்கை கூப்பிக்
'குன்றினிலே ஏற்றிவைத்த விளக்கைப் போலக்
குவலயத்திற் கறங்காட்டத் தோன்றி னுய் நீ!
வென்றிபெறுந் திருவடியாய்! நினது சொல்லை
மீறிஒரு செயலுண்டோ? ஆண்டான் ஆணை
யன்றிஅடி யார்தமக்குக் கடன்வே றுண்டோ?
ஐயனே! பாண்டவர்தம் ஆவிநீயே!

144. 'துன்பமுறும் எமக்கென்றே எண்ணி நின்வாய்ச்
சொல்லைமறுத் துரைத்தோமோ? நின்பாலுள்ள
அன்புமிகை யாலன்றே திருவுள்ளத்தின்
ஆக்கினையை எதிர்த்துரைத்தோம் அறிவில் லாமல்
மன்பதையின் உளச்செயல்கள் தெளியக் காணும்
மன்னவனே! மற்றதுநீ அறியா தொன்றே
வன்புமொழி பொறுத்தருள்வாய், வாழி! நின்சொல்
வழிச்செல்வோம்,' எனக்கூறி வணங்கிச் சென்றார்.

*அ - உ: எமக்குத் துன்பமுறும் என்றே எனக்கூட்டுக; ஆக்கினை - ஆணை; மன்பதை - உயிர்க்குலம்; நின்சொல்வழி - உனது சொற்படி.*

## 26. பாண்டவர் பயணமாதல்

145. ஆங்கதன்பின் மூன்றாம்நாள் இளைஞரோடும்
அணியிழையப் பாஞ்சாலர் விளக்கி னோடும்
பாங்கினுறு பரிசனங்கள் பலவி னோடும்
படையினொடும் இசையினொடும், பயண மாகித்
தீங்கதனைக் கருதாத தருமக் கோமான்
திருநகர்விட் டகல்கின்றான் தீயோர் ஊர்க்கே!
நீங்கிஅகன் றிடலாகுந் தன்மை உண்டோ,
நெடுங்கரத்து விதிகாட்டும் நெறியில் நின்றே?

*அ - உ: நெடுங்கரத்தினையுடைய விதியின் பிடிப்பிலிருந்து நீங்கிச் செல்லல் இயலாதென்பது கருத்து.*

146. நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவிவிழும்; சிற்றெறும்பால் யானை சாகும்;
வரிவகுத்த உடற்புலியைப் புழுவுங் கொல்லும்;
வருங்கால முணர்வோரும் மயங்கி நிற்பார்;
கிரிவகுத்த ஓடையிலே மிதந்து செல்லும்;
கீழ்மேலாம்; மேல் கீழாம்; கிழக்கு மேற்காம்;
புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மைப்
போற்றிடுவார், விதிவகுத்த போழ்தி னன்றே.

அ - உ: *மயங்கி – எதனையும் அறியாது மயக்கமுற்று; கிரி – மலை.*

## 27. மாலை வருணனை

147. மாலைப்போ தாதலுமே, மன்னன் சேனை
வழியிடைஓர் பூம்பொழிலின் அமர்ந்த காலை,
சேலைப்போல் விழியாளைப் பார்த்தன் கொண்டு
சென்றாங்கோர் தனியிடத்தே பசும்புல் மேட்டில்
மேலைப்போம் பரிதியினைத் தொழுது கண்டான்;
மெல்லியலும் அவன்தொடைமேல் மெல்லச் சாய்ந்து
பாலைப்போல் மொழிபிதற்ற அவளை நோக்கிப்
பார்த்தனும்அப் பரிதிஎழில் விளக்கு கின்றான்.

அ - உ: *சேல் - கயல் மீன்; மேலைப்போம் - மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற, மறையப் போகின்ற; பரிதி - சூரியன்.*

148. 'பாரடியோ! வானத்திற் புதுமை யெல்லாம்,
பண்மொழீ! கணந்தோறும் மாறி மாறி
ஓரடிமற் றோரடியோ டொத்த லின்றி
உவகையுற நவநவமாத் தோன்றுங் காட்சி;
யாரடிஇங் கிவைபோலப் புவியின் மீதே
எண்ணரிய பொருள்கொடுத்தும் இயற்ற வல்லார்!
சீரடியால் பழவேத முனிவர் போற்றுஞ்
செழுஞ்சோதி வனப்பையெலாம் சேரக் காண்பாய்!

அ - உ: *பண்மொழீ - இசைகலந்த மொழி; ஓரடித்தூரத்தில் உள்ளவை பக்கத்தில் உள்ள இன்னோரடித்தூரத்துக் காட்சியினை ஒத்ததாகாத புதுப்புது விதமான காட்சிகள். செழுஞ்சோதி - சிறந்த ஒளி; பாரதியார் இங்கு ஒளிமயமான ஆண்டவனை நினைவூட்டுகின்றார்.*

"பழவேத முனிவர் சீரடியாற் போற்றும்
செழுஞ்சோதி வனப்பை"

*என இசைத்துப் பொருள் கொள்க; சீரடி - சீர்களும், அடிகளும் இயைந்த வேத மந்திரங்கள்.*

149. ‘கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்;
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்;
கணந்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்;
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ? ஆங்கே,
கணந்தோறும் ஒருபுதிய வண்ணங் காட்டிக்
காளிபரா சக்தி அவள் களிக்குங் கோலம்
கணந்தோறும் அவள்பிறப்பாள் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்.

அ - உ: கனவு - கற்பனைக்காட்சி. நவ நவமாம் - புதிது புதிதான.

150. ‘அடிவானத் தேஅங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்;
இடிவானத் தொளிமின்னல் பத்துக்கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து,
முடிவான வட்டத்தைக் காளி ஆங்கே,
மொய்குழலாய், சுற்றுவதன் மொய்ம்பு காணாய்!
வடிவான தொன்றாகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து கண்பாய்,

அ - உ: இடிவானம் - இடிமுழக்கம் உள்ளவானம்; மொய்குழலாய் என்று பாஞ்சாலி விளிக்கப்படுகின்றாள். மொய்ம்பு - வலிமை.

151. ‘அமைதியொடு பார்த்திடுவாய் மின்னே! பின்னே
அசைவுறுமோர் மின்செய்த வட்டு; முன்னே,
சமையுமொரு பச்சைநிற வட்டங் காண்பாய்;
தரணியிலிங் கிதுபோலோர் பசுமை உண்டோ?
இமைகுவிய மின்வட்டின் வயிரக் கால்கள்
எண்ணில்லா திடையிடையே எழுதல் காண்பாய்;
உமை கவிதை செய்கின்றாள், எழுந்து நின்றே
உரைத்திடுவோம், “பல்லாண்டுவாழ்க” என்றே.

அ - உ: பொறுமையோடு பரபரப்பின்றி உற்று நோக்கும்போதே இக்காட்சிகள் தோன்றும் என்பது கருத்து. மின்செய்த வட்டு - ஒளியினாற் சமைத்த (பொன்னிற) வட்டம்; இமைகுவிய - கண் கூச்சமடையத்தக்கதாக; கால்கள் - ஒளிக்கற்றைகள்; உமை - உமாதேவி, காளி; கவிதையொன்றே இத்தகைய வனப்பை எல்லாம் கொண்டு விளங்குவதென்பது பாரதியாரின் கருத்து. ஆதலால் இக்காட்சியினை உமை செய்யும் கவிதை என்று குறிப்பிடுகின்றார்.

### வேறு

152. 'பார்; சுடர்ப்பரிதியைச் சூழவே படமுகில்
எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
என்னடீ! இந்த வன்னத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்! — செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்! — வெம்மை தோன்றுமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்! — பாரடீ!
நீலப் பொய்கைகள்! — அடடா, நீல
வன்ன மொன்றில் எத்தனை வகையடீ!
எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்
எத்தனை! — கரிய பெரும்பெரும் பூதம்!
நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்
தோணிகள் சுடரொளிப் பொற்கரை யிட்ட,
கருஞ்சிக ரங்கள்! — காண்டி, ஆங்கு,
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட் கடல்! — ஆஹா! எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்!,

அ - உ: படமுகில் - வேறுவேறான உருவப்படங்களாகத் தோன்றும் முகில்; பரந்த முகில்.

### வேறு

153. 'செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளியினைத்
தேர்கின்றோம் — அவன்
எங்க ளறிவினைத் தூண்டி நடத்துக'
என்பதோர் — நல்ல
மங்களம் வாய்ந்த சுருதி மொழிகொண்டு
வாழ்த்தியே — இவர்
தங்க ளினங்க ளிருந்த பொழி லிடைச்
சார்ந்தனர் — பின்னர்
அங்கவ் விரவு கழிந்திட, வைகறை
யாதலும் — மன்னர்
பொங்கு கடலொத்த சேனைக ளோடு
புறப்பட்டே, — வழி
எங்குந் திகழும் இயற்கையின் காட்சியில்
இன்புற்றே, — கதிர்
மாங்கிடு முன்னொளி மங்கு நகரிடை
வந்துற்றார்.

அ - உ: தங்களினம் – தமது சுற்றத்தாரும் பரிவாரமும்; கதிர் மங்கிடுமுன் - மாலைக்காலமாகுமுன்; ஒளி மங்கு நகர் – அருளொளி குன்றிய நகரம், துரியோதனனது தீய சூழ்ச்சியால் அவனது அத்தினபுரம் இவ்வாறு குறிக்கப்பட்டது. சுருதிமொழி - வேதவாக்கியம்.

முதலாவது அழைப்புச் சருக்கம் முற்றிற்று.

# இரண்டாவது
# சூதாட்டச் சருக்கம்

## 28. வாணியை வேண்டுதல்

154. தெளிவுறவே அறிந்திடுதல்; தெளிவுதர மொழிந்திடுதல்;
சிந்திப் பார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆநந்தக் கனவுபல
காட்டல், கண்ணீர்த்
துளிவரஉள் ளுருக்குதல்,இங் கிவையெல்லாம் நீ அருளும்
தொழில்க ளன்றோ?
ஒளிவளருந் தமிழ்வாணீ! அடியனேற் கிவையனைத்தும்
உதவு வாயே.

அ - உ: *களிவளர - மகிழ்வுபொங்க.*

## 29. பாண்டவர் வரவேற்பு

155. அத்தின மாநக ரத்தினில் வந்தனர்
ஆரியப் பாண்டவர் என்றது கேட்டலும்,
தத்தி எழுந்தன எண்ணருங் கூட்டங்கள்;
சந்திகள், வீதிகள், சாலைகள், சோலைகள்:
எத்திசை நோக்கினும் மாந்தர் நிறைந்தனர்;
இத்தனை மக்களும் எங்கண் இருந்தனர்
இத்தின மட்டும் எனவியப் பெய்துற
எள்ளும் விழற்கிட மின்றி யிருந்தார்.

அ - உ: *தத்தி - துள்ளி.*

156. மந்திர கீதம் முழக்கினர் பார்ப்பனர்;
வன்றடந் தோள்கொட்டி ஆர்த்தனர் மன்னவர்;
வெந்திறல் யானையும் தேரும் குதிரையும்
வீதிகள் தோறும் ஒலிமிகச் செய்தன;
வந்தியர் பாடினர், வேசையர் ஆடினர்;
வாத்தியங் கோடி வகையின் ஒலித்தன;
செந்திரு வாழும் நகரினில் அத்தினஞ்
சேர்ந்த ஒலியைச் சிறிதென லாமோ!

அ - உ: *வந்தியர் — மங்கலப்பாடகர்.*

157. வாலிகன் தந்ததொர் தேர்மிசை ஏறி, அம்
மன்னன் யுதிட்டிரன் தம்பியர் மாதர்கள்
நாலிய லாம்படை யோடு நகரிடை
நல்ல பவனி எழுந்த பொழுதினில்,
சேலியல் கண்ணியர் பொன்விளக் கேந்திடச்
சீரிய பார்ப்பனர் கும்பங்கள் ஏந்திடக்
கோலிய பூமழை பெய்திடத் தோரணம்
கொஞ்ச, நகரெழில் கூடிய தன்றே.

*அ - உ: தருமனுக்கு வாலிகன் தேர் கொடுத்தமையைச் செய் யுள் 50-ல் காணலாம்.*

**வேறு**

158. மன்னவன் கோயிலிலே — இவர்
வந்து புகுந்தனர் வரிசை யொடே,
பொன்னரங் கினிலிருந்தான் — கண்ணில்
புலவனைப் போய்நின்று போற்றிய பின்,
அன்னவன் ஆசிகொண் டே, — உயர்
ஆரிய வீட்டுமன் அடி வணங்கி,
வின்னய முணர் கிருபன் — புகழ்
வீரத்து ரோணன்அங் கவன்புதல்வன்.

*அ - உ: பொன்னரங்கு - பொன்னாசனம்; விற்றொழிலின் சிறப்பனைத்தையும் உணர்ந்த கிருபாச்சாரியார்; துரோணன் புதல்வன் - அசுவத்தாமன்.*

159. மற்றுள பெரியோர் கள் — தமை
வாழ்த்திஉள் ளன்பொடு வணங்கி நின்றார்;
கொற்றமிக் குயர்கன் னன் — பணிக்
கொடியோன் இளையவர் சகுனியொடும்
பொற்றடந் தோள் சருவப் — பெரும்
புகழினர் தழுவினர், மகிழ்ச்சிகொண் டார்;
நற்றவக் காந்தாரி — முதல்
நாரியர் தமைமுறைப் படிதொழு தார்.

*அ - உ: இளையவர் - துரியோதனனுடைய தம்பிமார் ; சருவ-தழுவ.*

160. குந்தியும் இளங்கொடி யும் — வந்து
கூடிய மாதர்தம் மொடுகுலவி
முந்திய கதைகள் சொல்லி — அன்பு
மூண்டுரை யாடிப்பின் பிரிந்து விட்டார்;
அந்தியும் புகுந்தது வால்; — பின்னர்
ஐவரும் உடல்வலித் தொழில் முடித்தே
சந்தியுஞ் சபங்களுஞ் செய் — தங்கு
சாருமின் னுணவமு துண்டதன் பின்;

*அ - உ: இளங்கொடி - பாஞ்சாலி; உடல் வலித்தொழில் - உடற் பயிற்சிகள், சந்தியும் - சந்தியாவந்தனமும்,*

161. சந்தன மலர்புனைந் தே, — இளந்
தையலர் வீணைகொண் டுயிருருக்கி
விந்தைகொள் பாட்டிசைப்ப, — அதை
விழைவொடு கேட்டனர் துயில்புரிந் தார்;
வந்ததொர் துன்பத்தினை — அங்கு
மடித்திட லன்றிப்பின் வருந்துயர்க்கே
சிந்தனை உழல்வா ரோ? — உளச்
சிதைவின்மை ஆரியர் சிறப்பன் றோ?

*அ - உ: வீணையின் இன்னிசையால் உயிர் உருகிற்று; கேட்டனர் - முற்றெச்சம், கேட்டு என்று பொருள். வழிநடையால் வந்த களைப்பை அங்குத் துயிலால் மடித்தனரன்றிப் பின்னர் வரப்போகும் துயரினை நினைந்து வருந்திற்றிலர். வருங்காலத்துயரை நினைந்து உள்ளம் சிதைவுறாமை ஆரியர்க்குச் சிறப்பான குணமாம்.*

## 30. பாண்டவர் சபைக்கு வருதல்

162. பாணர்கள் துதி கூற — இளம்
பகலவன் எழுமுனர்த் துயிலெழுந் தார்
தோணலத் திணையில்லார் — தெய்வந்
துதித்தனர்; செய்யபொற் பட்டணிந்து
பூணணிந் தாயுதங் கள் — பல
பூண்டுபொற் சபையிடைப் போந்தனரால்;
நாணமில் கவுரவரும் — தங்கள்
நாயக னொடுமங்கு வீற்றிருந் தார்.

*அ - உ: இளம்பகலவன் - காலையில் தோன்றும் இளைய சூரியன்; தோள்நலம் - தோள்வலி; கௌரவர் - நூற்றுவரான துரியோதனனுதியர்; நாயகன் - துரியோதனன்; திருதராட்டிரன் எனலுமாம்.*

163. வீட்டுமன் தானிருந் தான்; — அற
விதுரனும், பார்ப்பனக் குரவர்க ளும்,
நாட்டுமந் திரிமா ரும், — பிற
நாட்டினர் பலபல மன்னர்களும்,
கேட்டினுக் கிரையாவான் — மதி
கெடுந்துரி யோதனன் கிளையின ரும்,
மாட்டுறு நண்பர்களும் — அந்த
வான்பெருஞ் சபையிடை வணங்கி நின்றார்.

## 31. சூதுக்கு அழைத்தல்

164. புன்தொழிற் கவறத னில் — இந்தப்
புவிமிசை இணையிலை எனும்புக ழான்
நன்றறி யாச்சகுனி, — சபை
நடுவினில் ஏறெனக் களித்திருந் தான்;
வென்றிகொள் பெருஞ்சூதர் — அந்த
விவிஞ்சதி, சித்திர சேனனுடன்
குன்றுசத் தியவிர தன் — இதழ்
கூர்புரு மித்திரன், சயனென்பார்;

**அ - உ: விவிஞ்சதி, சித்திரசேனன், சத்தியவிரதன், புருமித்திரன், சயன் என்பார் சூதாடலிலும், சதிக் குணங்களிலும் சிறந்தவர்; சகுனியின் தோழர்; இதழ்கூர் - உதடுகள் முன்னேக்கிக் குவிந்த;**

165. சாலவும் அஞ்சு தரும் — கெட்ட
சதிக்குணத் தார்பல மாயம் வல்லோர்
கோலநற் சபைதனி லே — வந்து
கொக்கரித் தார்ப்பரித் திருந்தனரால்;
மேலவர் தமை வணங்கி — அந்த
வெந்திறற் பாண்டவர் இளைஞர் தமை
ஆல முற்றிடத் தழுவிச் — செம்பொன்
ஆதனத் தமர்ந்தவப் பொழுதினி லே;

**அ - உ: ஆலம் உற்றிட - அகலம் உற, அதாவது (அகன்ற) மார்பு பொருந்த; ஆதனம் - ஆசனம்.**

166. சொல்லுகின் றான் சகுனி; — 'அறத்
தோன்றல்! உன் வரவினைக் காத்துளர் காண்
மல்லுறு தடந் தோளார் — இந்த
மன்னவ ரனைவரும் நெடும்பொழு தா;
வில்லுறு போர்த்தொழி லாற் — புவி
வென்றுதங் குலத்தினை மேம்படுத்தீர்!
வல்லுறு சூதெனும் போர் — தனில்
வலிமைகள் பார்க்குதும் வருதி' என்றான்.

**அ - உ: மல் - வலி; வல் - சூதாடுகருவி.**

## 32. தருமன் மறுத்தல்

167. தருமனங் கிவைசொல் வான் —'ஐய!
சதியுறு சூதினுக் கெனை அழைத் தாய்;
பெருமைஇங் கிதி லுண்டோ? — அறப்
பெற்றிஉண் டோ? மறப் பீடுள தோ?
வருமம் நின் மனத்துடை யாய்! — எங்கள்
வாழ்வினை உகந்திலை என லறிவேன்;
இருமையுங் கெடுப்பது வாம் — இந்த
இழிதொழி லாலெமை அழித்த லுற்றாய்.

**அ - உ: பீடு - பெருமை; வருமம் - வன்மம், பகைமை; இருமை - இம்மை, மறுமை என்னும் இரண்டு.**

## 33. சகுனியின் ஏச்சு

168. கலகல வெனச்சிரித் தான் — பழிக்
கவற்றையோர் சாத்திர மெனப்பயின் றோன்;
'பலபல மொழிகுவ தேன்? — உனைப்
பார்த்திவன் என்றெணி அழைத்துவிட் டேன்,
''நிலமுழு தாட்கொண் டாய் — தனி
நீ'' எனப் பலர்சொலக் கேட்டதனால்,
சிலபொருள் விளையாட்டிற் — செலுஞ்
செலவினுக் கழிகலை என நினைத்தேன்.

**அ - உ: பழிக்கவறு - பழியொடு பொருந்திய சூது; அழிகலை - வருந்தமாட்டாய்.**

169. 'பாரத மண்டலத் தார் — தங்கள்
பதிஒரு பிசுனனென் றறிவே னோ?
சோரமிங் கிதிலுண் டோ? — தொழில்
சூதெனி லாடுநர் அரசரன் றோ?
மாரத வீரர்முன் னே, — நடு
மண்டபத்தே, பட்டப் பகலினிலே,
சூர சிகாமணி யே, — நின்றன்
சொத்தினைத் திருடுவ மெனுங்கருத் தோ?

**அ - உ: பிசுனன் - பிசுனம் உடையவன், பிசுனம் - உலோப குணம்.**

170. 'அச்சமிங் கிதில்வேண் டா, — விரைந்
தாடுவம் நெடும்பொழு தாயின தால்;
கச்சையொர் நாழிகை யா — நல்ல
காயுடன் விரித்திங்கு கிடந்திடல் காண்!
நிச்சயம் நீவெல் வாய்; — வெற்றி
நினக்கியல் பாயின தறியா யோ?
நிச்சயம் நீவெல் வாய்; — பல
நினைகுவ தேன்?களி தொடங்கு' கென்றான்.

அ - உ: *கச்சை - சூதாட்டமனை வரையப்பெற்றுள்ள சீலை; காய் - சூதாட்டக்காய், களி - சூது.*

## 34. தருமனின் பதில்

வேறு

171. தோல் விலைக்குப் பசுவினைக் கொல்லும்
துட்டன் இவ்வுரை கூறுதல் கேட்டே,
நூல்வி லக்கிய செய்கைக ளஞ்சும்
நோன்பி னேனுளம் நொந்திவை கூறும்;
'தேவ லப்பெயர் மாமுனி வோனும்
செய்ய கேள்வி அசிதனும் முன்னர்
காவ லர்க்கு விதித்த தந்நூலிற்
கவறு நஞ்செனக் கூறினர், கண்டாய்!

அ - உ: *நூல் விலக்கிய - அறநூல்களாற் தள்ளப்பட்ட; தேவல முனிவனும், அசிதமுனிவனும் தாம் செய்த அரசநீதி நூல்களில் சூதின் தீமைகளை நன்கு விளக்கி அது நஞ்சு எனக் காட்டியுள்ளனர். செய்ய கேள்வி - சிறந்த அறிவு.*

172. "வஞ்ச கத்தினில் வெற்றியை வேண்டார்,
மாயச் சூதைப் பழியெனக் கொள்வார்,
அஞ்ச லின்றிச் சமர்க்களத் தேறி
ஆக்கும் வெற்றி அதனை மதிப்பார்,
துஞ்ச நேரினுந் தூயசொல் லன்றிச்
சொல்மி லேச்சரைப் போலென்றுஞ் சொல்லார்,
மிஞ்சு சீர்த்திகொள் பாரத நாட்டில்
மேவு மாரியர்" என்றனர், மேலோர்.

அ - உ: *துஞ்சநேரினும் - மரணம் வந்தாலும், மிலேச்சர் - அறிவினர், மதிகேடர்.*

173. 'ஆத லாலிந்தச் சூதினை வேண்டேன்!
ஐய, செல்வம் பெருமை இவற்றின்
காத லாலர சாற்றுவ னல்லேன்,
காழ்ந்த நல்லறம் ஓங்கவும் ஆங்கே
ஓத லானும் உணர்த்துத லானும்
உண்மை சான்ற கலைத்தொகை யாவும்
சாத லின்றி வளர்ந்திடு மாறும்,
சகுனி, யானர சாளுதல், கண்டாய்!

அ - உ: *காழ்ந்த - ஊன்றிப்பதிந்த, முதிர்ந்த.*

174. 'என்னை வஞ்சித்தென் செல்வத்தைக் கொள்வோர்
என்ற னக்கிடர் செய்பவ ரல்லர்,
முன்னை நின்றதோர் நான்மறை கொல்வார்
மூது ணர்விற் கலைத்தொகை மாய்ப்பார்,
பின்னை என்னுயிர்ப் பாரத நாட்டில்
பீடை செய்யுங் கலியை அழைப்பார்,
நின்னை மிக்க பணிவொடு கேட்பேன்;
நெஞ்சிற் கொள்கையை நீக்குதி' என்றான்.

அ - உ: *முன்னைநின்ற - பழைமையாக நிலைபெறுற்ற, மூதுணர்வின் - பழைமையான பேரறிவினையுடைய; பீடை - துன்பம்.*

## 35. சகுனி வல்லுக்கு அழைத்தல்

*வேறு*

175. 'சாத்திரம் பேசுகின் றாய்' — எனத்
தழல்படு விழியொடு சகுனிசொல் வான்:
'கோத்திரக் குலமன் னர் — பிறர்
குறைபடத் தம்புகழ் கூறுவ ரோ?
நாத்திறன் மிகஉடை யாய்! — எனில்
நம்மவர் காத்திடும் பழவழக் கை
மாத்திரம் மறந்துவிட் டாய்; — மன்னர்
வல்லினுக் கழைத்திடல் மறுப்பதுண் டோ?

அ - உ: *கோத்திரம் - நன்மரபு; வல் - சூது.*

176. 'தேர்ந்தவன் வென்றிடு வான்; — தொழில்
தேர்ச்சி இல் லாதவன் தோற்றிடு வான்;
நேர்ந்திடும் வாட்போரில் — குத்து
நெறி அறிந் தவன்வெலப் பிறனழி வான்;
ஓர்ந்திடு சாத்திரப் போர் — தனில்
உணர்ந்தவன் வென்றிட, உணரா தான்
சோர்ந்தழி வெய்திடு வான்; — இவை
சூதென்றும் சதிஎன்றும் சொல்வா ரோ?

அ - உ: *சாத்திரப் போர் - கலை நூல்களின் தொடர்பான சொற்போர்.*

177. 'வல்லவன் வென்றிடு வான்; — தொழில்
வன்மை இலாதவன் தோற்றிடு வான்;
நல்லவ னல்லா தான் — என
நாண மிலார்சொலுங் கதைவேண் டா;
வல்லமர் செய்திட வே — இந்த
மன்னர்முன் னேநினை அழைத்துவிட் டேன்;
சொல்லுக வருவதுண் டேல், — மனத்
துணிவிலை யேலதுஞ் சொல்லு'என் றான்.

## 36. தருமன் இணங்குதல்

### வேறு

178. வெய்ய தான விதியை நினைந்தான்
விலக்கொ ணாதறம் என்ப துணர்ந்தோன்;
பொய்ய தாகுஞ் சிறுவழக் கொன்றைப்
புலனி லாதவர் தம்முடம் பாட்டை
ஐயன் நெஞ்சில் அறமெனக் கொண்டான்
ஐயகோ! அந்த நாள்முத லாகத்
துய்ய சிந்தைய ரெத்தனை மக்கள்
துன்பம் இவ்வகை எய்தினர், அம்மா!

அ - உ: *அறம் விலக்கொணாது - தருமத்தை யாரும் அழிக்கமுடியாது; மன்னர் சூதாடுதல் முறையாகும் என்ற சகுனி முதலானோரின் கருத்துக்கு உடம்படுதலைத் தருமன் அறமெனக் கொண்டதற்கு இரங்கிய கவிஞரின் துன்பக்குரல் 'ஐயகோ' என்று வெளிப்படுகின்றது.*

179. முன்பி ருந்ததோர் காரணத் தாலே,
மூடரே, பொய்யை மெய்யென லாமோ?
முன்பெனச் சொலுங் கால மதற்கு,
மூடரே, ஓர் வரையறை உண்டோ?
முன்பெனச் சொலின் நேற்றுமுன் பேயாம்;
மூன்று கோடி வருடமும் முன்பே;
முன்பிருந் தெண்ணி லாது புவிமேல்
மொய்த்த மக்க ளெலாம்முனி வோரோ?

180. நீர்பி றக்குமுன் பார்மிசை மூடர்
நேர்ந்த தில்லை எனநினைந் தீ ரோ?
பார்பி றந்தது தொட்டின்று மட்டும்,
பலப லப்பல பற்பல கோடி
கார்பி றக்கும் மழைத்துளி போலே
கண்ட மக்க ளனைவருள் ளேயும்,
நீர்பி றப்பதன் முன்பு, மடைமை
நீசத் தன்மை இருந்தன வன்றே?

அ - உ: *பார்பிறந்தது - உலகின் தோற்றம்.*

181. பொய்யொ ழுக்கை அறமென்று கொண்டும்,
பொய்யர் கேலியைச் சாத்திர மென்றும்,
ஐயகோ, நங்கள் பாரத நாட்டில்
அறிவி லாரறப் பற்றுமிக் குள்ளோர்
நொய்ய ராகி அழிந்தவர் கோடி,
நூல்வ கைபல தேர்ந்து தெளிந்தோன்
மெய்ய றிந்தவர் தம்மு ளுயர்ந்தோன்
விதியி னுலத் தருமனும் வீழ்ந்தான்.

அ - உ: *நொய்யராகி - வலியிழந்தவராகி.*

182. மதியி னும்விதி தான்பெரி தன்றோ?
வைய மீதுள வாகு மவற்றுள்
விதியி னும்பெரி தோர்பொரு ளுண்டோ?
மேலை நாம்செயும் கர்ம மல்லாதே,
நதியி லுள்ள சிறுகுழி தன்னில்
நான்கு திக்கி லிருந்தும் பல்மாசு
பதியு மாறு, பிறர்செயுங் கர்மப்
பயனும் நம்மை அடைவ துண்டன்றே?

அ - உ: *கர்மம் - புண்ணியப்பாவச் செயல்கள்.*

## 37. சூதாடல்

### வேறு

183. மாயச் சூதி னுக்கே — ஐயன்
மன மிணங்கி விட்டான்;
தாய முருட்ட லானுர்; — அங்கே
சகுனி ஆர்ப்ப ரித்தான்;
நேய முற்ற விதுரன் — போலே
நெறியு ளோர்க ளெல்லாம்
வாயை மூடி விட்டார்; — தங்கள்
மதி மயங்கி விட்டார்.

அ - உ: *தாயம் - சூதாடுகருவி.*

184. அந்த வேளே யதனில், — ஐவர்க்
கதிபன் இஃது துரைப்பான்;
'பந்த யங்கள் சொல்வாய்; — சகுனி,
பரபரத் திடாதே!
விந்தை யான செல்வம் — கொண்ட
வேந்த ரோடு நீதான்
வந்தெ திர்த்து விட்டாய்; — எதிரே
வைக்க நிதிய முண்டோ?'

185. தருமன் வார்த்தை கேட்டே — துரியோ
தன னெழுந்து சொல்வான்;
'அருமை யான செல்வம் — என்பால்
அளவி லாத துண்டு;
ஒரு மடங்கு வைத்தால் — எதிரே
ஒன்ப தாக வைப்பேன்;
பெருமை சொல்ல வேண்டா, — ஐயா!
பின் னடக்கு' கென்ருன்.

அ - உ: *பின் நடக்குக - தொடர்ந்து சூதினை ஆடுக, அன்றி 'பின் அடக்குக எனக்கொண்டு' உனது கருவமான வார்த்தைகளை அடக்கிக்கொள்க என்றும் கொள்வர்.*

186. 'ஒருவ னுடைப் பணயம் — வேறே
ஒருவன் வைப்ப துண்டோ?
தரும மாகு மோடா! — சொல்வாய்,
தம்பி இந்த வார்த்தை?'
'வரும மில்லை ஐயா; — இங்கு
மாம னுடைப் பணயம்
மருகன் வைக்கொ ணுதோ? — இதிலே
வந்த குற்ற மேதோ?'

அ - உ: *வருமம் - வன்மம், பகைமை;*

187. 'பொழுது போக்கு தற்கே — சூதுப்
போர் தொடங்கு கின்றோம்;
அழுத லேனி தற்கே?' — என்றே
அங்கர் கோன் நகைத்தான்.
'பழு திருப்ப தெல்லாம் — இங்கே
பார்த்தி வர்க்கு ரைத்தேன்;
முழுது மிங் கிதற்கே — பின்னர்
முடிவு காண்பிர்' என்றான்.

*அ - உ: அழுதல் - குளறுபடியாகப் பேசிக்கொண்டிருத்தல். ''பழு திருப்ப தெல்லாம் ........... முடிவு காண்பர்'' என்பவை தருமனுடைய வார்த்தைகள்.*

188. ஒளி சிறந்த மணியின் — மாலை
ஒன்றை அங்கு வைத்தான்;
களி மிகுந்த பகைவன் — எதிரே
கன தனங்கள் சொன்னான்;
விழி இமைக்கு முன்னே — மாமன்
வென்று தீர்த்து விட்டான்;
பழி இலாத தருமன் — பின்னும்
பந்த யங்கள் சொல்வான்:

189. 'ஆயிரங் குடம் பொன் — வைத்தே
ஆடுவோ' மிதென்றான்;
மாயம் வல்ல மாமன் — அதனை
வசம தாக்கி விட்டான்!
'பாயு மாவொ ரெட்டில் — செல்லும்
பார மான பொற்றேர்;'
தாய முருட்ட லானர்; — அங்கே
சகுனி வென்று விட்டான்,

அ - உ: *பாயுமா - குதிரை.*

190. 'இளைய ரான மாதர், — செம்பொன்
எழி லிணைந்த வடிவும்
வளை அணிந்த தோளும் — மாலை
மணி குலுங்கு மார்பும்
விளையு மின்ப நூல்கள் — தம்மில்
மிக்க தேர்ச்சி யோடு
களை இலங்கு முகமும் — சாயற்
கவினும் நன்கு கொண்டோர்,

191. ஆயி ரக்க ணக்கா — ஐவர்க்
கடிமை செய்து வாழ்வோர்
தாய முருட்ட லானுர்' — அந்தச்
சகுனி வென்று விட்டான்
ஆயி ரங்க ளாவார் — செம் பொன்
னணிகள் பூண்டி ருப்பார்
தூயி ழைப்பொ ஞடை — சுற்றுந்
தொண்டர் தம்மை வைத்தான்;

*அ - உ: மாதர், வடிவும், தோளும், மார்பும், முகமும், கவினும் கொண்டோராய் ஐவருக்கு அடிமைசெய்து வாழ்வோர் ஆயிரக்கணக் கானவர்; அவர்களைப் பணயமாகத் தருமன் வைத்தான்.*

192. சோர னங்க வற்றை — வார்த்தை
சொல்லு முன்னர் வென்ருன்.
தீர மிக்க தருமன் — உள்ளத்
திடன ழிந்தி டாதே;
'நீரை யுண்ட மேகம் — போலே
நிற்கு மாயி ரங்கள்
வார ணங்கள் கண்டாய், — போரில்
மறலி யொத்து மோதும்'

*அ - உ: சோரன் - களவு நிறைந்த சூதில் வல்லோனுகிய சகுனி; வாரணங்கள் - யானைகள்; மறலி - யமன்.*

193. என்று வைத்த பணயந் — தன்னை
இழிஞன் வென்று விட்டான்;
வென்றி மிக்க படைகள் — பின்னர்
வேந்தன் வைத் திழந்தான்;
நன்றி ழைத்த தேர்கள் — போரின்
நடை யுணர்ந்த பாகர்
என்றி வற்றை யெல்லாம் — தருமன்
ஈடு வைத் திழந்தான்.

*அ - உ: இழிஞன் - தாழ்ந்தோன்; போரின்நடை - போரினது பாங்கு; பாகர் - சாரதிகள்.*

194. எண்ணி லாத, கண்டீர், — புவியில்
இணையி லாத வாகும்
வண்ண முள்ள பரிகள் — தம்மை
வைத்தி ழந்து விட்டான்;
நண்ணு பொற் கடாரந் — தம்மில்
நாலு கோடி வைத்தான்;
கண்ணி ழப்ப வன்போல் — அவையோர்
கண மிழந்து விட்டான்.

*அ - உ; பொற்கடாரம் - பொன் நிறைந்த பெரிய பானைகள்.*

195. மாடி ழந்து விட்டான், — தருமன்
மந்தை மந்தை யாக;
ஆடி ழந்து விட்டான், — தருமன்
ஆளி ழந்து விட்டான்;
பீடி ழந்த சகுனி — அங்கு
பின்னுஞ் சொல்லு கின்றான்;
நாடி ழக்க வில்லை, — தருமா!
நாட்டை வைத்தி' டென்றான்.

## 38. நாட்டை வைத்தாடுதல்

வேறு

196. 'ஐய கோஇதை யாதெனச் சொல்வோம்?
அரச ரானவர் செய்குவ தொன்றோ?
மெய்ய தாகவொர் மண்டலத் தாட்சி
வென்று சூதினி லாளுங் கருத்தோ?
வைய மிஃது பொறுத்திடு மோ,மேல்
வான்பொ றுத்திடு மோ?பழி மக்காள்!
துய்ய சீர்த்தி மதிக்குல மோநாம்?
தூ!'வென் றெள்ளி விதுரனும் சொல்வான்.

அ - உ: மண்டலத்தாட்சி - பூமியை ஆளுதல்; அரசாட்சி; மேல் வான் - விண்ணுலகு.

197. "பாண்டவர்பொறை கொள்ளுவ ரேனும்,
பைந்து ழாயனும் பாஞ்சாலத் தானும்
மூண்ட வெஞ்சினத் தோடுநஞ் சூழல்
முற்றும் வேரறச் செய்குவ ரன்றோ?
ஈண்டி ருக்குங் குருகுல வேந்தர்
யார்க்கு மிஃதுரைப் பேன்,குறிக் கொண்மின்;
"மாண்டு போரில் மடிந்து நரகில்
மாழ்கு தற்கு வகைசெயல் வேண்டா."

அ - உ: பொறை - பொறுமை; பைந்துழாயன் - பசிய துளவ மாலையை அணிந்த கண்ணன்;

198. 'குலமெ லாமழி வெய்திடற் கன்றோ
குத்தி ரத்துரி யோதனன் றன்னை
நலமி லாவிதி நம்மிடை வைத்தான்;
ஞால மீதி லவன்பிறந் தன்றே
அலறி யோர்நரி போற்குரைத் திட்டான்;
அஃது ணர்ந்த நிமித்திகர் வெய்ய
கலகந் தோன்றுமிப் பாலக னாலே
காணு வீரெனச் சொல்லிடக் கேட்டோம்.

அ - உ: குத்திரத் துரியோதனன் - வஞ்சகத் துரியோதனன்; நிமித்திகர் - சோதிடர்.

199. 'சூதிற் பிள்ளை கெலித்திடல் கொண்டு
சொர்க்க போகம் பெறுபவன் போலப்
பேதை நீயு முகமலர் வெய்திப்
பெட்பு மிக்குற வீற்றிருக் கின்றாய்;
மீது சென்று மலையிடைத் தேனில்
மிக்க மோகத்தி னுலொரு வேடன்
பாத மாங்கு நழுவிட மாயும்
படும லைச்சரி வுள்ளது காணான்.

*அ - உ: கெலித்திடல் - வெல்லுதல்; பெட்பு - பெருமை; மீது - மேல், உயரத்தில்.*

200. 'மற்று நீருமிச் சூதெனுங் கள்ளால்
மதிமயங்கி வருஞ்செயல் காணீர்!
முற்றுஞ் சாதி சுயோதன னுமோர்
மூடற் காக முழுகிட லாமோ?
பற்று மிக்கஇப் பாண்டவர் தம்மைப்
பாத கத்தி லழித்திடு கின்றாய்;
கற்ற கல்வியும் கேள்வியும் அண்ணே!
கடலிற் காயங் கரைத்ததொப் பாமே?

*அ - உ: உன் சாதிமுற்றும் என மாற்றிப் பொருள் கொள்க; காயம் - பெருங்காயம்.*

201. 'வீட்டு ளேநரி யை,விடப் பாம்பை
வேண்டிப் பிள்ளை எனவளர்த் திட்டோம்;
நாட்டு ளேபுக ழோங்கிடு மாறிந்
நரியை விற்றுப் புலிகளைக் கொள்வாய்;
மோட்டுக் கூகையைக் காக்கையை விற்று
மொய்ம்பு சான்ற மயில்களைக் கொள்வாய்,
கேட்டி லேகளி யோடுசெல் வாயோ?
கேட்குங் காதும் இழந்துவிட் டாயோ?

*அ - உ: மொய்ம்பு - வலி, இங்கே அழகினைக் குறித்தது. நரி, விடப் பாம்பு, கூகை, காக்கை என்பன திருதராட்டினன் மக்களை யும், புலி, மயில் என்பன பாண்டவரையும் குறித்து நின்றன.*

202. 'தம்பி மக்கள் பொருள் வெஃகு வாயோ
சாதற் கான வயதினில் அண்ணே?
நம்பி நின்னை அடைந்தவ ரன்றோ?
நாத னென்றுனைக் கொண்டவ ரன்றோ?
எம்பி ரானுளங் கொள்ளுதி யாயின்
யாவுந் தான மெனக்கொடுப் பாரே;
கும்பி மாநர கத்தினி லாழ்த்துங்
கொடிய செய்கை தொடர்வதும் என்னே?

*அ - உ: நாதன் - தலைவன்; எம்பிரான் - எமது தலைவனாகிய நீ, இது திருதராட்டிரனைச் சுட்டிற்று; "கும்பி" நரகலோகத்தின் வகை களுள் ஒன்று.*

203. 'குருகு லத்தலை வன்சபைக் கண்ணே,
கொற்ற மிக்க துரோணன் கிருபன்
பெருகு சீர்த்திஅக் கங்கையின் மைந்தன்
பேதை நானும்ம திப்பிழந் தேகத்
திருகு நெஞ்சச் சகுனி ஒருவன்
செப்பு மந்திரஞ் சொல்லுதல் நன்றே!
அருகு வைக்கத் தகுதியுள் ளானே?
அவனை வெற்பிடைப் போக்குதி அண்ணே!

**அ - உ:** *குருகுலத்தலைவன் - திருதராட்டிரன்; கங்கையின் மைந்தன் - வீட்டுமன்; திருகு நெஞ்சம் - மாறுபாடுகொண்ட சிந்தை.*

204. 'நெறி இழந்தபின் வாழ்வதி லின்பம்
நேரு மென்று நினைத்திடல் வேண்டா;
பொறி இழந்த சகுனியின் சூதால்
புண்ணி யர்தமை மாற்றல ராக்கிச்
சிறியர் பாதகர் என்றுல கெல்லாம்
சீஎன் றேசஉ கந்தர சாளும்
வறிய வாழ்வை விரும்பிட லாமோ?
வாழி, சூதை நிறுத்துதி' என்றான்.

**அ - உ:** *பொறி இழந்த - நன் மதிகெட்ட; புண்ணியர் - நன்மக்களான பாண்டவர்; மாற்றலர் - பகைவர்.*

இரண்டாவது

சூதாட்டச் சருக்கம் முற்றிற்று.

முதற் பாகம் முற்றிற்று.

# பாஞ்சாலி சபதம்

[இரண்டாம் பாகம்]

## மூன்றாவது
## அடிமைச் சருக்கம்

(சூதாட்டத்தின் தொடர்ச்சி)

### 39. பராசக்தி வணக்கம்

205. ஆங்கொரு கல்லை வாயிலிற் படியென்
றமைத்தனன் சிற்பி,மற் றொன்றை
ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்
றுயர்த்தினன்; உலகினோர் தாய் நீ!
யாங்கணே, எவரை, எங்ஙனஞ் சமைத்தற்
கெண்ணமோ, அங்ஙனம் சமைப்பாய்.
ஈங்குனைச் சரணென் றெய்தினேன்; என்னை
இருங்கலைப் புலவனாக் குதியே.

*அ - உ: சிற்பி தன் விருப்பப்படி ஒரு கல்லை வாயிற்படியாகச் சமைத்தான்; பலருடைய காலின்கீழும் கிடக்கும் நிலைமையை அக்கல் பெற்றது சிற்பியினால். மற்றொரு கல்லைக் கடவுளின் உருவமாகச் சமைத்தான்; எல்லாரும் தலையால் வணங்கத்தக்க நிலை அக்கல்லுக்குச் சிற்பியினால் கிடைத்தது. அதுபோன்று அனைவரையும் நீ விரும்பிய வண்ணம் சமைத்தளிக்கும் பெருஞ் சிற்பியாகிய அன்னையே, என்னை நீ இருங்கலைப் புலவனாக்குதி என்பது கருத்துரை.*

### 40. சரஸ்வதி வணக்கம்

206. இடையின்றி அணுக்களெலாம் சுழலுமென
இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்;
இடையின்றிக் கதிர்களெலாஞ் சுழலுமென
வானூலார் இயம்பு கின்றார்.
இடையின்றித் தொழில்புரிதல் உலகி னிடைப்
பொருட்கெல்லாம் இயற்கை யாயின்
இடையின்றிக் கலைமகளே! நினதருளில்
எனதுள்ளம் இயங்கொ ணாதோ?

*அ - உ: இடையின்றி - இடைவிடாது; இயல்நூலார் - இயற்கைத் தத்துவ அறிஞர்; கதிர்கள் - சூரியன், சந்திரன், செவ்வாய் முதலான கோள்களும் விண்மீன்கள் ஆதியன்வுமாம்.*

## 41. விதுரன் சொல்லியதற்குத் துரியோதனன் மறுமொழி சொல்லுதல்

வேறு

207. அறிவு சான்ற விதுரன்சொற் கேட்டான்
அழலு நெஞ்சின் அரவை உயர்த்தான்;
நெறிஉ ரைத்திடும் மேலவர் வாய்ச்சொல்
நீச ரானவர் கொள்ளுவ துண்டோ?
பொறிப றக்க விழிக ளிரண்டும்
புருவ மாங்குத் துடிக்கச் சினத்தின்
வெறித லைக்க,ம திமழுங் கிப்போய்
வேந்தன் இஃது விளம்புத லுற்றான்.

அ - உ: அழலும் - நெருப்புப்போல் எரிகின்ற; நீசர் - இழ்மக்கள்; வெறிதலைக்க - வெறி அதிகரிக்க;

வேறு

208. 'நன்றி கெட்ட விதுரா! — சிறிதும்
நாண மற்ற விதுரா!
தின்ற உப்பி னுக்கே — நாசந்
தேடு கின்ற விதுரா!
அன்று தொட்டு நீயும் — எங்கள்
அழிவு நாடு கின்றாய்;
மன்றி லுன்னை வைத்தான் — எந்தை
மதியை என் னுரைப்பேன்!

அ - உ: தின்ற உப்பு - உண்டசோறு; இங்குச் சோறிட்டவர்களைக் குறிப்பிட்டது. மன்றில் - அரசவையில்.

209. 'ஐவ ருக்கு நெஞ்சும் — எங்கள்
அரண்ம னைக்கு வயிறும்,
தெய்வ மன்று னக்கே — விதுரா!
செய்துவிட்ட தேயோ?
மெய்வ குப்ப வன்போல், — பொதுவாம்
விதிஉ ணர்ந்த வன்போல்,
ஐவர் பக்கம் நின்றே, — எங்கள்
அழிவு தேடு கின்றாய்.

அ - உ: மெய்வகுப்பவன் - உண்மையை எடுத்துக்காட்டுபவன்.

210. ‘மன்னர் சூழ்ந்த சபையில் — எங்கள்
மாற்ற லார்க ளோடு
முன்னர் நாங்கள் பணயம் — வைத்தே
முறையில் வெல்லு கின்றோம்.
என்ன குற்றங் கண்டாய்? — தருமம்
யார்க்கு ரைக்க வந்தாய்?
கன்னம் வைக்கி றோமோ? — பல்லைக்
காட்டி ஏய்க்கி றோமோ?

அ - உ: கன்னம் வைக்கிறோமோ - சுவரையிடித்துக் கொள்ளை யடிக்கின்றோமோ; ஏய்த்தல் - ஏமாற்றுதல்.

211. ‘பொய்யு ரைத்து வாழ்வார் — இதழிற்
புகழு ரைத்து வாழ்வார்,
வைய மீதி லுள்ளார்; — அவர்தம்
வழியில் வந்த துண்டோ?
செய்யொ ணாத செய்வார் — தம்மைச்
சீரு றுத்த நாடி,
ஐய! நீள முந்தால் — அறிஞர்
அவல மெய்தி டாரோ?

212. ‘அன்பி லாத பெண்ணுக் — கிதமே
ஆயி ரங்கள் செய்தும்,
முன்பின் எண்ணு வாளோ? — தருணம்
மூண்ட போது கழிவாள்;
வன்பு ரைத்தல் வேண்டா, — எங்கள்
வலி பொறுத்தல் வேண்டா,
இன்ப மெங்க ணுண்டோ, — அங்கே
ஏகி’ டென்று ரைத்தான்.

அ - உ: இதம் - இனியவை; கழிவாள் - விட்டுநீங்குவாள்; வன்பு - பொல்லாங்கு.

## 42. விதுரன் சொல்வது

### வேறு

213. நன்றுகும் நெறியறியா மன்னன், அங்கு
நான்குதிசை அரசர்சபை நடுவே, தன்னைக்
கொன்றாலும் ஒப்பாகா வடுச்சொற் கூறிக்
குமைவதனில் அணுவளவுங் குழப்ப மெய்தான்,
‘சென்றாலும் இருந்தாலும் இனிஎன் னேடா?
செய்கைநெறி அறியாத சிறியாய், நின்னைப்
பொன்றாத வழிசெய்ய முயன்று பார்த்தேன்:
பொல்லாத விதிஎன்னைப் புறங்கண் டானல்!

அ - உ: குமைவு - அழிவு: பொன்றாத — அழியாத; புறங்கண் டான் - தோற்கச் செய்தது.

214. 'கடுஞ்சொற்கள் பொறுக்காத மென்மைக் காதும்
கருங்கல்லில் விடந்தோய்ந்த நெஞ்சுங் கொண்டோர்
படுஞ்செய்தி தோன்றுமுனே படுவர் கண்டாய்;
"பால்போலும் தேன்போலும் இனிய சொல்லோர்
இடும்பைக்கு வழிசொல்வார்; நன்மை காண்பார்
இளகுமொழி கூறுர்"என் றினைத்தே தானும்,
நெடும்பச்சை மரம்போலே வளர்ந்து விட்டாய்
நினக்கெவரும் கூறியவ ரில்லை கொல்லோ?

*அ - உ: (தனக்கு நன்றி பயப்பதான) கடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்ளமுடியாத (மென்மையான) காதும், கருங்கல் போன்று கடுமையானதும் நஞ்சுத்தன்மை கொண்டதுமான நெஞ்சமும் உடையோர் விரைந்து அழிவர் என்பது பொருள். படுவர் - அழிவர்; இடும்பைக்கு - துன்பங்கள் வந்து சேருவதற்கு; இனைத்தே தானும் - இதனைத்தானும். "பால்போலும்...கூருர்" என்று இனைத்தே தானும் நினக்கு எவரும் கூறியவரில்லையோ ? எனக் கூட்டுக.*

215. 'நலங்கூறி இடித்துரைப்பார் மொழிகள் கேளா
நரபதி!நின் அவைக்களத்தே அமைச்ச ராக
வலங்கொண்ட மன்னரொடு பார்ப்பார் தம்மை
வைத்திருத்தல் சிறிதேனுந் தகாது கண்டாய்;
சிலங்கைப்பொற் கச்சணிந்த வேசை மாதர்
சிறுமைக்குத் தலைகொடுத்த தொண்டர், மற்றுங்
குலங்கெட்ட புலைநீசர், முடவர், பித்தர்,
கோமகனே! நினக்குரிய அமைச்சர் கண்டாய்!

*அ - உ: இடித்துரைப்பார் - கண்டித்தும் நன்மை கூறுபவர்களது; வலம் - வெற்றி; சிலங்கை - பளபளப்பான, சிலங்கம் - வெள்ளி மரம்; சிறுமைக்குத் தலைகொடுத்துக் காப்பாற்றுகிற; புலைநீசர் - மிகக் கீழானவர்.*

216. 'சென்றாலும் நின்றாலும் இனிஎன் னேடா?
செப்புவன நினக்கெனநான் செப்பி னேனே?
மன்றார நிறைந்திருக்கும் மன்னர், பார்ப்பார்,
மதியில்லா மூத்தோனும் அறியச் சொன்னேன்;
இன்றோடு முடிகுவதோ? வருவ தெல்லாம்
யானறிவேன், வீட்டுமனும் அறிவான் கண்டாய்,
வென்றான்உள் ஆசையெலாம் யோகி யாகி
வீட்டுமனும் ஒன்றுரையா திருக்கின் றானே.

*அ - உ: மன்று ஆர - சபை பொலிவுற; மூத்தோன் என்றது திருதராட்டிரனை.*

217. ‘விதிவழிநன் குணர்ந்திடினும், பேதை யேன்யான்
வெள்ளைமன முடைமையினால், மகனே, நின்றன்
சதிவழியைத் தடுத்துரைகள் சொல்லப் போந்தேன்;
சரி,சரி,இங் கேதுரைத்தும் பயனென் றில்லை,
மதிவழியே செல்லு’கென விதுரன் கூறி
வாய்மூடித் தலைகுனிந்தே இருக்கை கொண்டான்.
பதிவுறுவோம் புவியிலெனக் கலிம கிழ்ந்தான்;
பாரதப்போர் வருமென்று தேவ ரார்த்தார்.

**அ - உ: சதிவழி - சூழ்ச்சியான வழி; பதிவு உறுவோம் - நிலை பேறடைவோம்; கலி - பெருந்துன்பம், வறுமை, கலியன்; பாரதப் போர் வரப்போகிறது (துட்டர்கள் அழிவுறப் போகிறார்கள்) என்று தேவர்கள் மகிழ்ச்சியினால் ஆரவாரித்தார்கள்.**

## 43. சூது மீட்டும் தொடங்குதல்

**வேறு**

218. காயு ருட்ட லானார் — சூதுக்
களிதொ டங்க லானார்;
மாய முள்ள சகுனி — பின்னும்
வார்த்தை சொல்லு கின்றான்:
‘நீஅ ழித்த தெல்லாம் — பின்னும்
நின் னிடத்து மீளும்;
ஓய்வ டைந்தி டாதே, — தருமா!
ஊக்க மெய்து’ கென்றான்.

**அ - உ: களி - களிப்பு, சூது; “சூதுக்களி” சூதாகிய களி எனலுமாம்.**

219. கோயிற் பூசை செய்வோர் — சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன் — வீட்டை
வைத் திழத்தல் போலும்,
ஆயி ரங்க ளான — நீதி
யவைஉ ணர்ந்த தருமன்
தேயம் வைத்தி ழந்தான்; — சிச்சீ!
சிறியர் செய்கை செய்தான்.

**அ - உ: தேயம் வைத்து - நாட்டைப் பணயமாக வைத்து.**

220. 'நாட்டு மாந்த ரெல்லாம் — தம்போல்
நரர்க ளென்று கருதார்;
ஆட்டு மந்தை யாமென்' — றுலகை
அரச ரெண்ணி விட்டார்.
காட்டு முண்மை நூல்கள் — பல தாங்
காட்டினுர்க ளேனும்,
நாட்டு ராஜ நீதி — மனிதர்
நன்கு செய்ய வில்லை.

*அ- உ: ''நாட்டுமாந்தர் ......... அரசரெண்ணிவிட்டார்'' என்று மன்னர், தம் குடிமக்களை அடிமைகளாகக் கருதிச் சூதில் பணயமாக வைக்கும் எளிய நிலையைக் கண்டிக்கின்றுர் பாரதியார்.*

221. ஓரஞ் செய்தி டாமே, — தருமத்
துறுதி கொன் றிடாமே,
சோரஞ் செய்தி டாமே — பிறரைத்
துயரில் வீழ்த்தி டாமே
ஊரை யாளு முறைமை — உலகில்
ஓர் புறத்து மில்லை.
சார மற்ற வார்த்தை! — மேலே
சரிதை சொல்லு கின்றேம்.

*அ - உ: ஓரம் செய்தல் - ஒரு பக்கம் சார்ந்து நிற்றலால் நீதி பிறழ்ந்து செய்தல்.*

## 44. சகுனி சொல்வது

### வேறு

222. 'செல்வம்முற் றிழந்து விட்டாய்; — தருமா!
தேசமுங் குடிகளுஞ் சேர்த்திழந் தாய்.
பல்வளம் நிறை புவிக்கே — தருமன்
பார்த்திவன் என்பதினிப் பழங்கதை காண்!
சொல்வதொர் பொருள் கேளாய்; — இன்னுஞ்
சூழ்ந்தொரு பணயம்வைத் தாடுதி யேல்,
வெல்வதற் கிட முண்டாம்; — ஆங்கவ்
வெற்றியி லனைத்தையும் மீட்டிட லாம்.

*அ - உ: இன்னும் சூழ்ந்து - இன்னும் சிந்தித்து.*

223. 'எல்லா மிழந்த பின்னர் — நின்றன்
இளைஞரும் நீயும்மற் றெதிற் பிழைப்பீர்?
பொல்லா விளையாட்டில் — பிச்சை
புகநினை விடுவதை விரும்புகிலோம்;
வல்லார் நின திளைஞர் — சூதில்
வைத்திடத் தகுந்தவர் பணய மென்றே;
சொல்லால் உளம் வருந்தேல்; — வைத்துத்
தோற்றதை மீட்'கென்று சகுனி சொன்னான்.

*அ - உ: பிச்சைபுக - பிச்சை எடுக்கப் போகுமாறு; சொல்லால் - நான் இவ்வாறு சொல்லியவற்றுக்காக.*

*வேறு*

224. கருண னும்சி ரித்தான்; — சபையோர்
கண்ணின் நீரு திர்த்தார்.
இருள்நி றைந்த நெஞ்சன், — களவே
இன்ப மென்று கொண்டான்
அரவு யர்த்த வேந்தன் — உவகை
ஆர்த்தெ ழுந்து சொல்வான்;
'பரவு நாட்டை யெல்லாம் — எதிரே
பணய மாக வைப்போம்.

225. 'தம்பி மாரை வைத்தே — ஆடித்
தருமன் வென்று விட்டால்,
முன்பு மாமன் வென்ற — பொருளை
முழுதும் மீண்ட ளிப்போம்.
நம்பி வேலை செய்வோம்; — தருமா
நாடிழந்த பின்னர்,
அம்பி னொத்த விழியாள் — உங்கள்
ஐவ ருக்கு முரியாள் —

226. 'அவள் இகழ்ந்தி டாளோ? — அந்த
ஆயன் பேசு வானோ?
கவலை தீர்த்து வைப்போம்; — மேலே
களி நடக்கு' கென்றான்.
இவள வான பின்னும் — இளைஞர்
ஏதும் வார்த்தை சொல்லார்;
துவளும் நெஞ்சி னராய் — வதனம்
தொங்க வீற்றி ருந்தார்.

*அ - உ: அவள் - பாஞ்சாலி; ஆயன் - இடையன், கண்ணன்; களி நடக்குக - சூது தொடர்ந்து நடக்கட்டும்; துவளும் - நலிந்த.*

227. வீமன் மூச்சு விட்டான் — முழையில்
வெய்ய நாகம் போலே;
காம னொத்த பார்த்தன் — வதனக்
களையி ழந்து விட்டான்;
நேம மிக்க நகுலன் — ஐயோ!
நினை வயர்ந்து விட்டான்;
ஊமை போலி ருந்தான் — பின்னோன்
உண்மை முற்று ணர்ந்தான்.

*அ - உ: முழை - குகை, பாம்புப்புற்று; காமன் - மன்மதன்; நேமம் - ஒழுங்குமுறை; பின்னோன் (சகாதேவன்) உண்மை முற்றுணர்ந்தோன் ஊமைபோலிருந்தான் என்று கூட்டிப் பொருளறிக.*

228. கங்கை மைந்த னங்கே — நெஞ்சம்
கனலு றத்து டித்தான்;
பொங்கு வெஞ்சி னத்தால் — அரசர்
புகையு யிர்த்தி ருந்தார்;
அங்கம் நொந்து விட்டான், — விதுரன்
அவல மெய்தி விட்டான்,
சிங்க மைந்தை நாய்கள் — கொல்லுஞ்
செய்தி காண லுற்றே.

*அ - உ: புகையுயிர்த்து - புகைபோல் நெடுமூச்சுவிட்டு; அங்கம் - உடல் முழுவதும்; சிங்கமைந்தை - ஐந்து சிங்கங்களை.*

## 45. சகாதேவனைப் பந்தயம் கூறுதல்

*வேறு*

229. எப்பொழு தும்பிர மத்திலே — சிந்தை
ஏற்றி உலகமொ ராடல் போல் — எண்ணித்
தப்பின்றி இன்பங்கள் துய்த்திடும் — வகை
தானுணர்ந் தான்ஸஹ தேவனும் — எங்கும்
ஒப்பில் புலவனை ஆட்டத்தில் — வைத்தல்
உன்னித் தருமன் பணயமென்று — அங்குச்
செப்பினன்; காயை உருட்டினர் — அங்குத்
தீய சகுனி கெலித்திட்டான்.

*அ - உ: சிந்தை ஏற்றி - சிந்தையைப் பொருத்தி; உலகமோரா டல் - உலக நிகழ்ச்சிகளனைத்தும் ஒரு விளையாட்டு; ஒப்பில் புலவனை - நிகரற்ற பேரறிஞனை சகாதேவனை. கெலித்திட்டான் - வென்றான்.*

## 46. நகுலனை இழத்தல்

230. நகுலனை வைத்தும் இழந்திட்டான்; — அங்கு
நள்ளிருட் கண்ணொரு சிற்றொளி — வந்து
புகுவது போலவன் புந்தியில் — 'என்ன
புன்மை செய்தோம்?' என எண்ணினன், - எண்ணம்
மிகுவதன் முன்பு சகுனியும் — 'ஐய!
வேறொரு தாயிற் பிறந்தவர் — வைக்கத்
தகுவரென் றிந்தச் சிறுவரை — வைத்துத்
தாயத்தி லேஇழந் திட்டனை'.

அ - உ: பேரிருளின் மத்தியில் ஒரு சிற்றொளி வந்ததுபோல், தருமனுடைய களிமயக்கால் இருண்ட உள்ளத்திலே 'என்ன எளிய காரியத்தைச் செய்கின்றோம்' என்ற ஒரு நல்ல எண்ணம் தோன்றலாயிற்று. வேறொரு தாயிற்பிறந்தவர் - நகுலனும் சகாதேவனும் மற்றைய மூவரதும் தாயான குந்திதேவியின் வயிற்றிலன்றி மத்தரையின் வயிற்றிற் பிறந்த மக்கள் என்பதைச் சகுனி இங்குத் தனது தீய நோக்கத்துக்குப் பயன்படுமாறு எடுத்துக் காட்டுகின்றான்.

231. 'திண்ணிய வீமனும் பார்த்தனும் — குந்தி
தேவியின் மக்களு ளையொத்தே — நின்னிற்
கண்ணியம் மிக்கவர் என்றவர் — தமைக்
காட்டுதற் கஞ்சினை போலும் நீ?' — என்று
புண்ணியம் மிக்க தருமனை — அந்தப்
புல்லன் வினவிய போதினில், — தர்மன்
துண்ணென வெஞ்சின மெய்தியே, — அட!
சூதில் அரசிழந் தேகினும்,

அ - உ: கண்ணியம் - பெருமதிப்பு, பேரன்பு; துண்ணென - உடனே.

## 47. பார்த்தனை இழத்தல்

232. 'எங்களில் ஒற்றுமை தீர்ந்திடோம்; — ஐவர்
எண்ணத்தில்; ஆவியில் ஒன்றுகாண்; — இவர்
பங்கமுற் றேபிரி வெய்துவார்; — என்று
பாதகச் சிந்தனை கொள்கிறாய், — அட!
சிங்க மறவர்த மக்குள்ளே — வில்லுத்
தேர்ச்சியி லேமிக ஏற்றவன், — எண்ணில்
இங்குப் புவித்தலம் ஏழையும் — விலை
யீடெனக் கொள்ளத் தகாதவன்.

அ - உ: எண்ணத்தில் - எண்ணிக்கையில்; சிங்க மறவர் - சிங்கம் போன்ற வீரர்.

233. ‘கண்ணனுக் காருயிர்த் தோழனும் — எங்கள்
கண்ணிலுஞ் சால இனியவன்,
வண்ணமுந் திண்மையுஞ் சோதியும் — பெற்று
வானத் தமரரைப் போன்றவன் — அவன்
எண்ணரு நற்குணஞ் சான்றவன், — புக
ழேறும் விஜயன் பணயங்காண்! — பொய்யில்
பண்ணிய காயை உருட்டுவாய் — என்று
பார்த்திவன் விம்மிஉ ரைத்திட்டான்.

*அ - உ: சால - மிகுதியும்; வண்ணம் - அழகு; விம்மி - பெரு மிதத்தோடு.*

234. மாயத்தை யேஉரு வாக்கிய — அந்த
மாமனும் நெஞ்சில் மகிழ்வுற்றே — கெட்ட
தாயத்தைக் கையினில் பற்றினன்; — பின்பு
சாற்றி விருத்தமங் கொன்றையே — கையில்
தாய முருட்டி விழுத்தினன்; — அவன்
சாற்றிய தேவந்து வீழ்ந்ததால், — வெறும்
ஈயத்தைப் பொன்னென்று காட்டுவார் — மன்னர்
இப்புவி மீதுள ராமன்றே?

*அ - உ: விருத்தம் - ஒருபாட்டு; அவன் சாற்றியதே வந்து வீழ்ந் தது - அவன் சொன்னதே தாயத்தில் வந்து வீழ்ந்தது.*

## 48. வீமனை இழத்தல்

235. கொக்கரித் தார்த்து முழங்கியே — களி
கூடிச் சகுனியுஞ் சொல்லுவான்: — ‘எட்டுத்
திக்கனைத் தும்வென்ற பார்த்தனை — வென்று
தீர்த்தனம் வீமனைக் கூ’றென்றான், — தர்மன்
தக்கது செய்தல் மறந்தனன், — உளஞ்
சார்ந்திடு வெஞ்சின வெள்ளத்தில் — எங்கும்
அக்கரை இக்கரை காண்கிலன், — அறத்
தண்ணல் இதனைஉ ரைக்கின்றான்:

236. ‘ஐவர் தமக்கொர் தலைவனை, — எங்கள்
ஆட்சிக்கு வேர்வலி அஃதினை, — ஒரு
தெய்வம்முன் னேநின் றெதிர்ப்பினும் — நின்று
சீறி அடிக்குந் திறலனை — நெடுங்
கைவளர் யானை பலவற்றின் — வலி
காட்டும் பெரும்புகழ் வீமனை, — உங்கள்
பொய்வளர் சூதினில் வைத்திட்டேன் — வென்று
போ!’ என் றுரைத்தனன் பொங்கியே.

*அ - உ: வேர்வலி - அடிப்படையான வல்லமை; வலிகாட்டும் - வல்லமைகொண்ட.*

237. போரினில் யானைவி ழக்கண்ட — பல
பூதங்கள் நாய்நரி காகங்கள் — புலை
ஓரி கழுகென் றிவையெலாம் — தம
துள்ளங் களிகொண்டு விம்மல்போல், — மிகச்
சீரிய வீமனைச் சூதினில் — அந்தத்
தீயர் விழுந்திடக் காணலும் — நின்று
மார்பிலுந் தோளிலுங் கொட்டினர் — களி
மண்டிக் குதித்தெழுந் தாடுவார்.

**அ - உ:** *ஓரி - நரியில் ஒரு இனம், ஆண்நரி எனலுமாம்; விம்மல் - மகிழ்வால் நிறைதல்; களிமண்டி - மகிழ்ச்சி பொங்கி.*

## 49. தருமன் தன்னைத்தானே பணயம் வைத்திழத்தல்

238. மன்னவர், தம்மை மறந்துபோய், — வெறி
வாய்ந்த திருடரை யொத்தனர், — அங்கு
சின்னச் சகுனி சிரிப்புடன் — 'இன்னும்
செப்புக பந்தயம் வே'றென்றான் — இவன்
தன்னை மறந்தவ னாதலால் — தன்னைத்
தான்பண யம்மென வைத்தனன், — பின்பு
முன்னைக் கதையன்றி வேறுண்டோ? — அந்த
மோசச் சகுனி கெலித்தனன்.

## 50. துரியோதனன் சொல்வது

239. பொங்கி யெழுந்துசு யோதனன்; — 'அங்கு
பூதல மன்னர்க்குச் சொல்லுவான்': — 'ஒளி
மங்கி யழிந்தனர் பாண்டவர்; — புவி
மண்டலம் நம்ம தினிக்கண்டீர், — இவர்
சங்கை யிலாத நிதியெல்லாம் — நம்மைச்
சார்ந்தது; வாழ்த்துதிர் மன்னர்காள்! — இதை
எங்கும் பறையறை வாயடா — தம்பி!'
என்றது கேட்டுச் சகுனி தான்.

**அ - உ:** *சங்கை - அளவு.*

## 51. சகுனி சொல்வது

240. 'புண்ணிடைக் கோல்கொண்டு குத்துதல் — நின்னைப்
போன்றவர் செய்யத் தகுவதோ? — இரு
கண்ணி லினியவ ராமென்றே — இந்தக்
காளையர் தம்மைஇங் குந்தைதான் — நெஞ்சில்
எண்ணி யிருப்ப தறிகுவாய்; — இவர்
யார்?நின்றன் சோதர ரல்லரோ? — களி
நண்ணித் தொடங்கிய சூதன்றோ? — இவர்
நாணுறச் செய்வது நேர்மையோ?

**அ - உ:** *உந்தை - உனது தந்தையான திருதராட்டிரன்; களி நண்ணி - விளையாட்டை விரும்பி;*

241. 'இன்னும் பணயம்வைத் தாடுவோம்; — வெற்றி
இன்னும் இவர்பெற லாகுங்காண்;
பொன்னுங் குடிகளுந் தேசமும் — பெற்றுப்
பொற்பொடு போதற் கிடமுண்டாம்; — ஒளி
மின்னும் அமுதமும் போன்றவள் — இவர்
மேவிடு தேவியை வைத்திட்டால், — (அவள்)
துன்னும் அதிட்ட முடையவள் — இவர்
தோற்ற தனைத்தையும் மீட்டலாம்.'

அ - உ: *பொற்பு - பொலிவு; ஒளிபொருந்திய மின்னலையும், அமுதத்தையும் போன்றவள் பாஞ்சாலி; துன்னும் அதிட்டம் - நிறைந்த நல்வினை வாய்ப்பு.*

242. என்றந்த மாமன் உரைப்பவே — வளர்
இன்பம் மனத்தி லுடையனாய் — 'மிக
நன்றுநன்' றென்று சுயோதனன் — சிறு
நாயொன்று தேன்கல சத்தினை — எண்ணித்
துன்று முவகையில் வெற்றுநா — வினைத்
தோய்த்துச் சுவைத்து மகிழ்தல்போல் — அவன்
ஒன்றுரை யாம லிருந்திட்டான்; — அழி
வுற்ற துலகத் தறமெலாம்.

அ - உ: *பாஞ்சாலியினைப் பணயம் வைக்குமாறு சகுனி கேட்டதைக்கூடப் பொறுக்கமுடியாத கவிஞரின் உள்ளம் அவ்வளவிலேயே "அழிவுற்ற துலகத்து அறம் எல்லாம்" என்று கதறுகின்றது.*

மூன்றாவது

அடிமைச் சருக்கம் முற்றிற்று.

## நான்காவது

# துகிலுரிதற் சருக்கம்

### 52. திரௌபதியை இழத்தல்

243. பாவியர் சபைதனி லே, — புகழ்ப்
பாஞ்சால நாட்டினர் தவப்பய னை,
ஆவியில் இனியவ ளை, — உயிர்த்
தணிசுமந் துலவிடு செய்யமு தை,
ஓவியம் நிகர்த்தவ ளை, — அரு
ளொளியினைக் கற்பனைக் குயிரத னைத்
தேவியை, நிலத்திரு வை, — எங்குந்
தேடினுங் கிடைப்பருந் திரவியத் தை,

அ - உ: *உயிர்த்து - உயிருடையதாய்; நிலத்திருவை - இந்நிலவுலகத்தில் அவதரித்துள்ள திருமகள் போன்றவளை.*

244. படிமிசை இசையுற வே — நடை
பயின்றிடுந் தெய்விக மலர்க்கொடி யைக்
கடிகமழ் மின்னுரு வை, — ஒரு
கமனியக் கனவினைக் காதலி னை,
வடிவுறு பேரழ கை, — இன்ப
வளத்தினைச் சூதினில் பணயம்என் றே
கொடியவர் அவைக்களத் தில் — அறக்
கோமகன் வைத்திடல் குறித்துவிட் டான்.

அ - உ: *படிமிசை இசையுறவே - இப்பூமியின்மீது புகழ் விளங்குமாறு; கடிகமழ் - நன்மணம் கமழ்கின்ற, கமனியக்கனவு - விண்வழிப் பறந்து செல்வதுபோன்ற உயர்ந்த கற்பனையின்பம்; கமனியம் - வான்வெளியில் செல்லுதல்; வடிவுறு பேரழகு - உடல்வளம் கனிந்த நல்லெழில். குறித்துவிட்டான் - கருதிவிட்டான்.*

வேறு

245. வேள்விப் பொருளினை யே — புலை நாயின் முன்
மென்றிட வைப்பவர் போல்,
நீள்விட்டப் பொன்மாளி கை — கட்டிப் பேயினை
நேர்ந்து குடியேற்றல் போல்,
ஆள்விற்றுப் பொன்வாங்கி யே — செய்த பூணையோர்
ஆந்தைக்குப் பூட்டுதல் போல்,
கேள்விக் கொருவரில்லை — உயிர்த் தேவியைக்
கீழ்மக்கட் காளாக்கி னன்.

அ - உ: *மென்றிட - உண்ணுமாறு; நீள்விட்டம் - நெடிய உத்தரங்கள் (பொருத்திச்செய்த); நேர்ந்து - குறிப்பிட்டு.*

246. செருப்புக்குத் தோல்வேண்டி யே, — இங்குக் கொல்வரோ
செல்வக் குழந்தையி னை?
விருப்புற்ற சூதினுக் கே — ஒத்த பந்தயம்
மெய்த்தவப் பாஞ்சாலி யோ?
ஒருப்பட்டுப் போன வுடன், — கெட்டமாமனும்
உன்னியத் தாயங்கொண் டே
இருப்பகடை போடென் றுன், — பொய்மைக் காய்களும்
இருப்பகடை போட்டன வே.

அ - உ: ஒருப்பட்டுப் போனவுடன் - பாஞ்சாலியைச் சூதுக்குப் பணயமாக ஏற்றுக்கொண்டவுடன்; உன்னி - மனக்கருத்தோடு.

### 53. திரௌபதி சூதில் வசமானதுபற்றிக் கௌரவர் கொண்ட மகிழ்ச்சி

247. திக்குக் குலுங்கிட வே — எழுந் தாடுமாம்
தீயவர் கூட்டமெல் லாம்
தக்குத்தக் கென்றே அவர் — குதித் தாடுவார்
தம்மிரு தோள்கொட்டு வார்
ஒக்குந் தருமனுக் கே — இஃதென்பர், 'ஓ!
ஓ!'வென் றிரைந்திடு வார்;
கக்கக்கென் றேநகைப் பார் — 'துரியோ தனு,
கட்டிக் கொள் எம்மை' என் பார்.

248. 'மாமனைத் தூக்கா'யென் பார் — அந்த மாமன்மேல்
மாலை பலவீசு வார்.
'சேமத் திரவியங் கள் — பல நாடுகள்
சேர்ந்ததி லொன்றுமில் லை;
காமத் திரவிய மாம் — இந்தப் பெண்ணையும்
கைவச மாகச்செய் தான்,
மாமனுர் தெய்வ'மென் பார்; — துரியோ தனன்
வாழ்க'வென் றுர்த்திடு வார்.

அ - உ: சேமத்திரவியங்கள் - புதையலிலிருந்து கிடைத்த செல்வங்கள்.

### 54. துரியோதனன் சொல்வது

249. நின்று துரியோத னன் — அந்த மாமனை
நெஞ்சொடு சேரக் கட்டி
'என்துயர் தீர்த்தா யடா! — உயிர் மாமனே!
ஏளனந் தீர்த்துவிட் டாய்.
அன்று நகைத்தா ளடா! — உயிர் மாமனே;
அவளைஎன் ஆளாக்கி னுய்.
என்றும் மறவே னடா! — உயிர் மாமனே!
என்ன கைம்மாறுசெய் வேன்!

அ - உ: அன்று - தருமன் செய்த இராசசூயயாகத்தின்போது.

250. 'ஆசை தணித்தா யடா! — உயிர் மாமனே!
ஆவியைக் காத்தா யடா!
பூசை புரிவோ மடா! — உயிர் மாமனே!
பொங்க லுனக்கிடு வோம்.
நாச மடைந்த தடா! — நெடு நாட் பகை,
நாமினி வாழ்ந்தோ மடா!
பேசவுந் தோன்று தில்லை; — உயிர் மாமனே!
பேரின்பங் கூட்டிவிட் டாய்.'

*அ - உ: மகிழ்ச்சிப் பெருக்கினாலே தன்னால் பேசவும் கூடுவ தில்லை என்கிறான் துரியோதனன்.*

251. என்று பலசொல்லு வான், — துரியோ தனன்
எண்ணி எண்ணிக்குதிப் பான்;
குன்று குதிப்பது போல் — துரியோ தனன்
கொட்டிக் குதித்தாடு வான்;
மன்று குழப்பமுற் றே, — அவர் யாவரும்
வகைதொகை யொன்று மின்றி
அன்று புரிந்ததெல் லாம் — என்றன் பாட்டிலே
ஆக்கல் எளிதாகு மோ?

*அ - உ: மன்று - மன்னரவை.*

### 55. திரௌபதியைத் துரியோதனன் மன்றுக்கு அழைத்துவரச் சொல்லியதுபற்றி ஜகத்தில் உண்டான அதர்மக் குழப்பம்

*வேறு*

252. தருமம் அழிவெய்தச் சத்தியமும் பொய்யாக,
பெருமைத் தவங்கள் பெயர்கெட்டு மண்ணாக,
வானத்துத் தேவர் வயிற்றிலே தீப்பாய,
மோன முனிவர் முறைகெட்டுத் தாமயங்க,
வேதம் பொருளின்றி வெற்றுரையே யாகிவிட,
நாதங் குலைந்து நடுமையின்றிப் பாழாக,
கந்தருவ ரெல்லாங் களையிழக்கச் சித்தர்முதல்
அந்தரத்து வாழ்வோ ரனைவோரும் பித்துறவே,
நான்முகனார் நாவடைக்க, நாமகட்குப் புத்திகெட,
வான்முகிலைப் போன்றதொரு வண்ணத் திருமாலும்

அறிதுயில்போய் மற்றங்கே ஆழ்ந்ததுயி லெய்திவிட
செறிதருநற் சீரழகு செல்வமெலாந் தானாகுஞ்
சீதேவி தன்வதனம் செம்மைபோய்க் காரடைய,
மாதேவன் யோகம் மதிமயக்க மாகிவிட,—
வாலை, உமாதேவி, மாகாளி, வீறுடையாள்,
மூலமா சக்தி,ஒரு மூவிலைவேல், கையேற்றாள்,
மாயை தொலைக்கும் மஹாமாயை தானாவாள்,
பேயைக் கொலையைப் பிணக்குவையைக் கண்டுவப்பாள்,
சிங்கத்தி லேறிச் சிரித்தெவையுங் காத்திடுவாள்,
நோவுங் கொலையும் நுவலொண்ணாப் பீடைகளும்
சாவுஞ் சலிப்புமெனத் தான்பல் கணமுடையாள்,
கடாவெருமை ஏறுங் கருநிறத்துக் காலனார்
இடாது பணிசெய்ய இலங்குமஹா ராணி,
மங்களம் செல்வம் வளர்வாழ்நாள் நற்கீர்த்தி
துங்கமுறு கல்வியெனச் சூழும் பலகணத்தாள்,
ஆக்கந் தானாவாள், அழிவுநிலை யாவாள்,
போக்கு வரவெய்தும் புதுமையெலாந் தானாவாள்,
மாறிமாறிப் பின்னும் மாறிமாறிப் பின்னும்
மாறிமா றிப்போம் வழக்கமே தானாவாள்,
ஆதி பராசக்தி — அவள்நெஞ்சம் வன்மையுற
சோதிக் கதிர்விடுக்கும் சூரியனாந் தெய்வத்தின்
முகத்தே இருள் படர—

## 56. துரியோதனன் விதுரனை நோக்கி உரைப்பது

மூடப் புலைமையினோன்,
அகத்தே இருளுடையான், ஆரியரின் வேறானோன்,
துரியோ தனனும் சுறுக்கெனவே தான்திரும்பி
அரியோன் விதுர னவனுக் குரைசெய்வான்:—
'செல்வாய், விதுரா!நீ சிந்தித் திருப்பதேன்?
வில்வா ணுதலினாள், மிக்க எழிலுடையாள்,
முன்னே பாஞ்சாலர் முடிவேந்தன் ஆவிமகள்,
இன்னேநாம் சூதில் எடுத்த விலைமகள்பால்
சென்றுவிளை வெல்லாஞ் செவ்வனே தானுணர்த்தி,
"மன்றினிடை யுள்ளான்நின் மைத்துனன்நின் ஓர்தலைவன்
நின்னை அழைக்கிறான் நீள்மனையில் ஏவலுக்கே"
என்ன உரைத்தவளை இங்குக் கொணர் வாய்'என்றான்.

## 57. விதுரன் சொல்வது

துரியோ தனன்இச் சுடுசொற்கள் கூறிடவும்
பெரியோன் விதுரன் பெரிதுஞ் சினங்கொண்டு,
'மூட மகனே! மொழியொணா வார்த்தையினைக்
கேடுவரல் அறியாய், கீழ்மையினாற் சொல்லிவிட்டாய்;
புள்ளிச் சிறுமான் புலியைப்போய்ப் பாய்வதுபோல்
பிள்ளைத் தவளை பெரும்பாம்பை மோதுதல்போல்,
ஐவர் சினத்தின் அழலை வளர்க்கின்றாய்;
தெய்வத் தவத்தியைச் சீர்குலையப் பேசுகிறாய்;
நின்னுடைய நன்மைக்கிந் நீதியெலாஞ் சொல்லுகிறேன்;
என்னுடைய சொல், வேறு எவர் பொருட்டும் இல்லையடா!
பாண்டவர்தாம் நாளைப் பழியிதனைத் தீர்த்திடுவார்,
மாண்டு தரைமேல், மகனே! கிடப்பாய்நீ,
தன்னழிவு நாடுந் தறுகண்மை என்னேடா?
முன்னமொரு வேனன் முடிந்தகதை கேட்டிலையோ?
நல்லோர் தமதுள்ளம் நையச் செயல்செய்தான்
பொல்லாத வேனன், புழுவைப்போல் மாய்ந்திட்டான்.
நெஞ்சஞ் சுடவுரைத்தல் நேர்மையெனக் கொண்டாயோ?
மஞ்சனே, அச்சொல் மருமத்தே பாய்வதன்றோ?
கெட்டார்தம் வாயில் எளிதே கிளைத்து விடும்;
பட்டார்தம் நெஞ்சிற் பலநாள் அகலாது;
வெந்நரகு சேர்த்துவிடும், வித்தை தடுத்துவிடும்,
மன்னவனே, நொந்தார் மனஞ்சுடவே சொல்லுஞ்சொல்
சொல்லிவிட்டேன்; பின்னொருகாற் சொல்லேன், கவுரவர்காள்!
புல்லியர்கட் கின்பம் புவித்தலத்தில் வாராது;
பேராசை கொண்டு பிழைச்செயல்கள் செய்கின்றீர்!
வாராத வன்கொடுமை மாவிபத்து வந்துவிடும்.
பாண்டவர்தம் பாதம் பணிந்தவர்பாற் கொண்டதெலாம்
மீண்டவர்க்கே ஈந்து விட்டு, விநயமுடன்
"ஆண்டவரே! யாங்கள் அறியாமை யாற்செய்த
நீண்ட பழியிதனை நீர்பொறுப்பீர்" என்றுரைத்து,
மற்றவரைத் தங்கள் வளநகர்க்கே செல்லவிடீர்.
குற்றந் தவிர்க்கும் நெறியிதனைக் கொள்ளீரேல்,
மாபா ரதப்போர் வரும்,நீர் அழிந்திடுவீர்.
பூபால ரே' என்றப் புண்ணியனும் கூறினான்.
சொல்லிதனைக் கேட்டுத் துரியோதன மூடன்,
வல்லிடிபோல் 'சீச்சீ! மடையா, கெடுக நீ
எப்போதும் எம்மைச் சபித்தல் இயல்புனக்கே.

இப்போதுன் சொல்லை எவருஞ் செவிக்கொள்ளார்
யாரடா, தேர்ப்பாகன்! நீபோய்க் கணமிரண்டில்
''பாரதர்க்கு வேந்தன் பணித்தான்'' எனக்கூறிப்
பாண்டவர்தந் தேவிதனைப் பார்வேந்தர் மன்றினிலே
ஈண்டழைத்து' வாஎன் றியம்பினான். ஆங்கே தேர்ப்
பாகன் விரைந்துபோய்ப் பாஞ்சாலி வாழ்மனையில்
சோகம் ததும்பித் துடித்த குரலுடனே,
'அம்மனே போற்றி! அறங்காப்பாய், தாள்போற்றி!
வெம்மை யுடைய விதியால் யுதிட்டிரனார்
மாமன் சகுனியொடு மாயச்சூ தாடியதில்,
பூமி யிழந்து பொருளிழந்து தம்பியரைத்
தோற்றுத் தமது சுதந்திரமும் வைத்திழந்தார்;
சாற்றிப் பணயமெனத் தாயேஉனை வைத்தார்;
சொல்லவுமே நாவு துணியவில்லை; தோற்றிட்டார்.
எல்லாருங் கூடி யிருக்கும் சபைதனிலே,
நின்னை அழைத்துவர நேமித்தான் எம்மரசன்'
என்ன உரைத்திடலும், ''யார்சொன்ன வார்த்தையடா!
சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா? யார் பணியால்
என்னை அழைக்கின்றாய்? என்றாள் அதற்கவனும்,
'மன்னன் சுயோதனன்றன் வார்த்தையினால்' என்றிட்டான்.
'நல்லது;நீ சென்று நடந்தகதை கேட்டுவா.
வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்
என்னைமுன் னேகூறி இழந்தாரா? தம்மையே
முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?
சென்று சபையில்இச் செய்தி தெரிந்து வா'
என்றவளும் கூறி, இவன்போ கியபின்னர்,
தன்னந் தனியே தவிக்கும் மனத்தாளாய்,
வன்னங் குலைந்து மலர்விழிகள் நீர்சொரிய,
உள்ளத்தை அச்சம் உலைவுறுத்தப் பேய்கண்ட
பிள்ளையென வீற்றிருந்தாள். பின்னந்தத் தேர்ப்பாகன்
மன்னன் சபைசென்று, 'வாள் வேந்தே! ஆங்கந்தப்
பொன்னரசி தாள்பணிந்து, ''போதருவீர்'' என்றிட்டேன்.
''என்னை முதல்வைத் திழந்தபின்பு தன்னைஎன்
மன்னர் இழந்தாரா? மாறித் தமைத்தோற்ற

பின்னரெனைத் தோற்ருரா?" என்றேனும் பேரவையை
மின்னற் கொடியார் வினவிவரத் தாம் பணித்தார்
வந்துவிட்டேன்' என்றுரைத்தான். மாண்புயர்ந்த பாண்டவர்தாம்,
நொந்துபோ யொன்றும் நுவலா திருந்துவிட்டார்.
மற்றும் சபைதனிலே வந்திருந்த மன்ன ரெலாம்
முற்றும் உரையிழந்து மூங்கையர்போல் வீற்றிருந்தார்.

அ - உ: (6) நாதம் – மூல ஒலி, (7) கந்தருவர் - தேவபாடகர்; கலை - உயிர்ச்சோலை (8) பித்து - பைத்தியம் (9) நான்முகன் - பிரமன்; நாமகள் - சரஸ்வதி (11) அறிதுயில் - துயின்றபோதிலும் வெளியில் நடப்பனவற்றை எல்லாம் அறிந்து கொள்ளக்கூடியதாகச் செய்யும் துயில் (14) மாதேவன் - சிவன்; (15 – 30) வாலை முதலியனவெல்லாம் பராசக்தியின் பல்வேறு கோலங்களாம் (16) மூலமாசக்தி - ஆதிசக்தி; மூவிலைவேல் - திரிசூலம் (17) மாயை ஆன்மாவை மூடி மறைக்கும் இருள்; (20) நுவலொணு - சொல்லிலடங்காத; பீடைகள் - நோய்கள்; (21) சலிப்பு - கவலை; கணம் - கூட்டம்; (22) காலன் - இயமன்; (23) இடாது - கட்டளை இடாமலே; (25) துங்கமுறு - உயர்வு பொருந்திய; (26) ஆக்கம் - படைப்பு அனைத்தும், (28, 29) ஆக்கம், அழிவு, போக்கு; வரவு முதலியனவாகப் பலமுறை மாறிமாறிப் புதுப்புதுத் தோற்றங்களோடு காட்சி தருபவள் ஆதி பராசக்தி (31) செங்கதிர்ச் செல்வனுன சூரியனும் பாஞ்சாலியைச் சூதில் தோற்ற கொடுமைகண்டு இருள் படர்ந்த முகத்தினன் ஆனுன். (39) இன்னே - இப்பொழுதே (40) விளைவெல்லாம் - நடந்தவற்றை எல்லாம் (41) நின் மைத்துனனுகிய சுயோதனனே இனி உன் தலைவன்; (42) மனையிலேவல் - வீட்டுவேலை, அடிமைவேலை; (51) தெய்வத்தவத்தி - தெய்வத் தன்மை வாய்ந்த தவப்பேறுடையவளாகிய பாஞ்சாலி. (56) தறுகண்மை - வலிமை (57 – 59) நல்லோர் தமதுள்ளம் நலியும் செயல்செய்து முன்னம் ஒருபோது ஏனன் என்பான் புழுவைப்போல் துடிதுடித்து மாய்ந்தான்; (61) மஞ்சன் - மைந்தன், மருமம் - நெஞ்சு (62) எளிதே கிளைத்துவிடும் - இலகுவாகத் தோன்றிவிடும், (63) நெஞ்சில் - நெஞ்சிலிருந்து (64) வித்தை - கல்வியை (67) புல்லியர் - கீழ்மக்கள் (69) மாவிபத்து - பேரிடுக்கண் (71) விநயமுடன் - பயபக்தியோடு (79) வல்லிடி - பேரிடி (80) சபித்தல் – தீங்கானவற்றை ஆணையோடு கூறுதல் (85) ஈண்டு - இங்கே, உடனே; (96) நேமித்தான் - நியமித்தான். (98) சூதர் - சூதாடுவோர், (104) தன்னைத் தோற்குமுன் என்னைப் பணயமாகக்கூறித் தோற்ருரா? (105) தன்னைத் தோற்றபின்பு என்னைத் தோற்ருரா? (107) போகிய பின்னர் - போனபின்னர் (109) வன்னம் - அழகு (110) உலைவுறுத்த - வருத்த, பேய்கண்ட - பேயாற் பிடிக்கப்பட்ட (113) போதருவீர் - வருவீர் (119) நொந்து போய் - மனம் வருந்தி, நுவலாது - சொல்லாது (121) மூங்கையர் - ஊமையர்.

## 58. துரியோதனன் சொல்வது

வேறு

253. உள்ளந் துடித்துச் சுயோ தனன் — சினம்
ஓங்கி வெறிகொண்டு சொல்லு வான்; — 'அட!
பிள்ளைக் கதைகள் விரிக்கி ருய்; — என்றன்
பெற்றி யறிந்திலை போலும், நீ! — அந்தக்
கள்ளக் கரிய விழியி னுள் — அவள்
கல்லிகள் கொண்டிங்கு வந்த னை! — அவள்
கிள்ளை மொழியின் நலத்தை யே — இங்குக்
கேட்க விரும்புமென் னுள்ள மே.

அ - உ: *பிள்ளைக்கதைகள் - குழந்தைகள் சொல்வது போன்ற பொருளற்ற கதைகள்; பெற்றி - தன்மை; கல்லிகள் - கேலிப் பேச்சுக்கள்; கிள்ளைமொழி - கிளியினது மொழிபோன்ற மழலைமொழி.*

254. 'வேண்டிய கேள்விகள் கேட்க லாம், — சொல்ல
வேண்டிய வார்த்தைகள் சொல்ல லாம், — மன்னர்
நீண்ட பெருஞ்சபை தன்னி லே — அவள்
நேரிடவே வந்த பின்பு தான், — சிறு
கூண்டிற் பறவையு மல்ல ளே? — ஐவர்
கூட்டு மனைவிக்கு நாண மேன்! — சினம்
மூண்டு கடுஞ்செயல் செய்யு முன் — அந்த
மொய்குழ லாளையிங் கிட்டு வா.

அ - உ: *'கூண்டிற் பறவை' கட்டுப்பாட்டுட் சிறைப்பட்டுக் கிடப்பது; ஐவர் கூட்டு மனைவி - ஐவருக்கு ஒருத்தியான மனைவி, துரியோதனனது ஏளனவார்த்தை இது. இட்டுவா - அழைத்துவா.*

255. 'மன்னன் அழைத்தனன் என்று நீ — சொல்ல
மாறி யவளொன்று சொல்வ தோ? — உன்னைச்
சின்ன முறச்செய்து வேனடா! — கணஞ்
சென்றவ ளைக்கொணர் வாய்'என்றான் — அவன்
சொன்ன மொழியினைப் பாகன் போய் — அந்தத்
தோகைமுன் கூறி வணங்கி னன், — அவள்
இன்னல் விளைந்திவை கூறு வாள்: — தம்பி,
என்றனை வீணில் அழைப்பதேன்?

அ - உ: *சின்னமுற - பங்கம் உற.*

## 59. திரௌபதி சொல்லுதல்

256. 'நாயகர் தாந்தம்மைத் தோற்ற பின் — என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை. — புலைத்
தாயத்தி லேவிலைப் பட்ட பின், — என்ன
சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்? — அவர்
தாயத்தி லேவிலைப் பட்டவர், — புவி
தாங்குந் துருபதன் கன்னி நான்; — நிலை
சாயப் புலைத்தொண்டு சார்ந்திட் டால், — பின்பு
தார முடைமை அவர்க்குண் டோ?

அ - உ: *நல்கும் உரிமை - (சூதில் பணயமாகக்) கொடுக்கும் உரிமை; 'புல்லியதாயத்திலே (தான்) விலைப்பட்டபின்' என்று பொருள் கொள்ளுக; சாத்திரம் - நூன்முறை; நிலைசாய - தம் நிலைமை அழிவுபட.*

257. 'கௌரவ வேந்தர் சபைதன்னில் — அறங்
கண்டவர் யாவரும் இல்லை யோ? — மன்னர்
சௌரியம் வீழ்ந்திடும் முன்ன ரே — அங்கு
சாத்திரஞ் செத்துக் கிடக்கு மோ? — புகழ்
ஒவ்வுற வாய்ந்த குருக்க ளும் — கல்வி
ஓங்கிய மன்னருஞ் சூதிலே — செல்வம்
வவ்வுறத் தாங்கண் டிருந்தனர்? — (என்றன்)
மான மழிவதும் காண்ப ரோ?

அ - உ: *சௌரியம் - வீரம்; ஒவ்வுற - பொருந்த; குருக்களும் - ஆசாரியரும்; இச்சொல் துரோணாச்சாரியார் கிருபாச்சாரியார் வீட்டுமாச்சாரியார் மூவரையும் குறிப்பிட்டது; வவ்வுற - கவருதலை.*

258. 'இன்பமுந் துன்பமும் பூமியின் — மிசை
யார்க்கும் வருவது கண்டனம்; — எனில்
மன்பதை காக்கும் அரசர் தாம் — அற
மாட்சியைக் கொன்று களிப்ப ரோ? — அதை
அன்புந் தவமுஞ் சிறந்து ளார் — தலை
யந்தணர் கண்டு களிப்ப ரோ? — அவர்
முன்பென் வினுவினை மீட்டும் போய்ச் — சொல்லி
முற்றுந் தெளிவுறக் கேட்டு வா'

அ - உ: *மன்பதை - உயிர்க்குலம்; தலையந்தணர் - தலையாய அந்தணர், துரோணர் கிருபர் இருவரும்.*

259. என்றந்தப் பாண்டவர் தேவி யும் — சொல்ல
என்செய்வன் ஏழையப் பாக னே? — என்னைக்
கொன்றுவிட் டாலும் பெரிதில் லை — இவள்
கூறும் வினாவிற் கவர் விடை — தரி
னன்றி இவளை மறுமுறை — வந்
தழைத்திட நானங் கிசைந்தி டேன்' — (என)
நன்று மனத்திடைக் கொண்டவன் — சபை
நண்ணி நிகழ்ந்தது கூறினான்.

அ - உ: *தரினன்றி - தந்தாலல்லது; நல்லெண்ணங்களை மனத்திற் கொண்டவனான பாகன்; நண்ணி - சேர்ந்து.*

260. 'மாத விடாயி லிருக்கி ருள் — அந்த
மாதர சென்பதுங் கூறினான்; — கெட்ட
பாதகன் நெஞ்சம் இளகி டான் — நின்ற
பாண்டவர் தம்முகம் நோக்கி னான் — அவர்
பேதுற்று நிற்பது கண்ட னன் — மற்றும்
பேரவை தன்னில் ஒருவ ரும் — இவன்
தீதுற்ற சிந்தை தடுக்க வே — உள்ளத்
திண்மையி லாதங் கிருந்த னர்.

அ - உ: *பேதுற்று - செய்வதறியாது.*

261. பாகனை மீட்டுஞ் சினத்துடன் — அவன்
பார்த்திடி போலுரை செய்கிறான்; — 'பின்னும்
ஏகி நமதுளங் கூற டா — அவள்
ஏழு கணத்தில் வரச்செய்வாய்! — உன்னைச்
சாக மிதித்திடு வேன டா!' — என்று
தார்மன்னன் சொல்லிடப் பாக னும் — மன்னன்
வேகந் தனைப்பொருள் செய்திடான் — அங்கு
வீற்றிருந் தோர்தமை நோக்கியே,

அ - உ: *வேகம் - சீற்றம். பொருள் செய்திடான் - கவனியாமல்.*

262. 'சீறும் அரசனுக் கேழை யேன் — பிழை
செய்த துண்டோ? அங்குத் தேவி யார் — தமை
நூறு தரஞ்சென் றழைப்பி னும், — அவர்
நுங்களைக் கேட்கத் திருப்பு வார்; — அவர்
ஆறுதல் கொள்ள ஒருமொழி — சொல்லில்,
அக்கண மேசென் றழைக்கி றேன்; — மன்னன்
கூறும் பணிசெய வல்லன் யான்; — அந்தக்
கோதை வராவிடில் என்செய் வேன்?'

அ - உ: *திருப்புவார் - திருப்பிவிடுவார்; செயவல்லன் - செய்ய வேண்டியவன்.*

## 60. துரியோதனன் சொல்வது

263. பாகன் உரைத்தது கேட்ட னன் — பெரும்
பாம்புக் கொடியவன் சொல்கின்றான்; — 'அவள்
பாகன் அழைக்க வருகிலள்; — இந்தப்
பையலும் வீமனை அஞ்சியே — பல
வாகத் திகைப் புற்று நின்றனன்; — இவன்
அச்சத்தைப் பின்பு குறைக்கி றேன் — தம்பி!
போகக் கடவைஇப் போதங்கே, — இங்கப்
பொற்றொடி யோடும் வருக நீ!'

அ. உ: இந்தப் பையல் - சிறியவனாகிய இந்தப் பாகன்; பலவாக - பலவாறு.

நான்காவது
துகிலுரிதற் சருக்கம்
முற்றிற்று.

## ஐந்தாவது
## சபதச் சருக்கம்

### 61. துச்சாதனன் திரௌபதியைச் சபைக்குக் கொணர்தல்

264. இவ்வுரை கேட்டதுச் சாத னன் — அண்ணன்
இச்சையை மெச்சி எழுந்த னன். — இவன்
செவ்வி சிறிது புகலு வோம்: — இவன்
தீமையில் அண்ணனை வென்ற வன்; — கல்வி
எள்ளள வேனு மிலாத வன், — கள்ளும்
ஈரற் கறியும் விரும்பு வோன்; — பிற
தெவ்வர் இவன்றனை அஞ்சு வார்; — தன்னைச்
சேர்ந்தவர் பேயென் றெதுங்கு வார்;

அ - உ: இச்சை - விருப்பம்; செவ்வி - தன்மை; தெவ்வர்-மாற்றார்

265. புத்தி விவேகமில் லாத வன்; — புலி
போல உடல்வலி கொண்ட வன்; — கரை
தத்தி வழியுஞ் செருக்கி னால் — கள்ளின்
சார்பின் றியேவெறி சான்ற வன்; — அவ
சக்தி வழிபற்றி நின்றவன்; — சிவ
சக்தி நெறியுண ராத வன் — இன்பம்
நத்தி மறங்கள் இழைப்ப வன்; — என்றும்
நல்லவர் கேண்மை விலக்கி னோன்;

அ - உ: கரைதத்தி - கரைகடந்து; கள்ளருந்தாத போதும் வெறி பிடித்தவனையே ஒத்திருப்பவன்; அவசக்திவழி - தீயவழி; சிவசக்தி - தெய்வவல்லமை; நத்தி - விரும்பி; கேண்மை - நட்பு.

266. அண்ண னொருவனை யன்றி யே — புவி
அத்தனைக் குந்தலை யாயி னோம் — என்னும்
எண்ணந் தனதிடைக் கொண்ட வன்; — அண்ணன்
ஏது சொன்னாலும் மறுத்தி டான்; — அருட்
கண்ணழி வெய்திய பாத கன்; — 'அந்தக்
காரிகை தன்னை அழைத்து வா' — என்றவ்
அண்ண னுரைத்திடல் கேட்ட னன்; — நல்ல
தாமென் றுறுமிஎ ழுந்த னன்.

அ - உ: தலையாயினோம் - தலைவரானோம்; தனதிடை - தன்னுள்; அருட்கண்ணழிவெய்திய - இரக்கமாகிய கண்கெட்ட.

267. பாண்டவர் தேவி யிருந்த தோர் — மணிப்
பைங்கதிர் மாளிகை சார்ந்த னன்; — அங்கு
நீண்ட துயரில் குலைந்து போய் — நின்ற
நேரிழை மாதினைக் கண்ட னன்; — அவள்
தீண்டலை யெண்ணி ஒதுங்கி னுள்; — 'அடி!
செல்வ தெங்கே,யென் றிரைந்திட் டான்; — 'இவன்
ஆண்டகை யற்ற புலைய' னென் — றவள்
அச்ச மிலா தெதிர் நோக்கி யே.

அ - உ: இரத்தினங்களின் பசிய ஒளி விளங்குகின்ற மாளிகை; குலைந்து போய் - கலங்கி; நேரிழைமாது - செவ்விய ஆபரணங்களை அணிந்த பெண்; தீண்டலை எண்ணி - தான் தீண்டக்கூடாத நிலையிலிருப்பதை நினைந்து; ஆண்டகையற்ற புலையன் - ஆண்மைக் குணங்களில்லாத கீழ் மகன்.

## 62. திரௌபதிக்கும் துச்சாதனனுக்கும் சம்வாதம்

268. 'தேவர் புவிமிசைப் பாண்ட வர்; — அவர்
தேவி, துருபதன் கன்னி நான்; — இதை
யாவரும் இற்றை வரையி னும், — தம்பி,
என்முன் மறந்தவ ரில்லை காண்; — தம்பி
காவ லிழந்த மதி கொண் டாய்; — இங்குக்
கட்டுத் தவறி மொழி கிருய்; — தம்பி
நீவந்த செய்தி விரைவி லே — சொல்லி
நீங்குக' என்றனள் பெண்கொடி.

அ - உ: காவலிழந்தமதி - கட்டுக்கு அடங்காத துன்மதி; கட்டுத் தவறி - ஒழுங்கு கடந்து; நீங்குக - போய்விடு.

269. 'பாண்டவர் தேவியு மல்லை நீ; — புகழ்ப்
பாஞ்சாலத் தான்மக ளல்லை நீ; — புவி
ஆண்டருள் வேந்தர் தலைவ னும் — எங்கள்
அண்ணனுக் கேயடி மைச்சி நீ — மன்னர்
நீண்ட சபைதனிற் சூதி லே — எங்கள்
நேசச் சகுனியோ டாடியங் — குன்னைத்
தூண்டும் பணய மெனவைத் தான் — இன்று
தோற்றுவிட் டான்தரு மேந்தி ரன்.

அ - உ: தூண்டும் - சூதாட்டத்தினைத் தொடரும்படியான;

270. 'ஆடி விலைப்பட்ட தாதி நீ, — உன்னை
ஆள்பவன் அண்ணன் சுயோத னன்; — "மன்னர்
கூடி யிருக்குஞ் சபையி லே — உன்னைக்
கூட்டி வரு"கென்று மன்ன வன் — சொல்ல
ஓடி வந்தேனிது செய்தி காண்; — இனி
ஒன்றுஞ் சொலாதென்னோ டேகு வாய் — அந்தப்
பேடி மகனொரு பாகன் பாற் — சொன்ன
பேச்சுக்கள் வேண்டிலன் கேட்க வே.'

***அ - உ: ஆடி - சூதாடி; தாதி - வேலைக்காரி; இது செய்தி காண் - வந்த சேதி இதுவே அறிவாயாக; பேடிமகன் - கோழை; கேட்கவேண்டிலன் - கேட்கமாட்டேன்.***

வேறு

271. துச்சா தனனிதனைச் சொல்லினன்; பாஞ்சாலி:—
'அச்சா, கேள்; மாதவிலக் காதலா லோராடை
தன்னி லிருக்கின்றேன்; தார்வேந்தர் பொற்சபைமுன்
என்னை யழைத்தல் இயல்பில்லை; அன்றியுமே,
சோதரர்தந் தேவிதனைச் சூதில் வசமாக்கி,
ஆதரவு நீக்கி, அருமை குலைத்திடுதல்
மன்னர் குலத்து மரபோகாண்? அண்ணன் பால்
என்னிலைமை கூறிடுவாய், ஏகுகநீ', என்றிட்டாள்.
கக்கக் க வென்று கனைத்தே பெருமூடன்
பக்கத்தில் வந்தேயப் பாஞ்சாலி கூந்தலினைக்
கையினாற் பற்றிக் கரகரெனத் தானிழுத்தான்.
'ஐயகோ' வென்றே யலறி யுணர்வற்றுப்
பாண்டவர்தந் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றான் வழிநெடுக, மொய்த்தவராய்,
'என்ன கொடுமை யிது'வென்று பார்த்திருந்தார்.
ஊரவர்தங் கீழ்மை உரைக்குந் தரமாமோ?
வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,
பொன்னையவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?
பேரழகு கொண்ட பெருந்தவத்து நாயகியைச்
சீரழியக் கூந்தல் சிதையக் கவர்ந்துபோய்க்
கேடுற்ற மன்னரறங் கெட்ட சபைதனிலே
கூடுதலும் அங்கேபோய்க் 'கோ'வென் றலறினாள்.

### 63. சபையில் திரௌபதி நீதிகேட்டழுதல்

விம்மி யழுதாள்: — ‘விதியோ கணவரே!
அம்மி மிதித்தே அருந்ததியைக் காட்டியெனை
வேதச் சுடர்த்தீமுன் வேண்டி மணஞ்செய்து
பாதகர்முன் இந்நாள் பரிசழிதல் காண்பீரோ?’
என்றாள்; விஜயனுடன் ஏறுதிறல் வீமனுமே
குன்று மணித்தோள் குறிப்புடனே நோக்கினார்.
தருமனும் மற்றாங்கே தலைகுனிந்து நின்றிட்டான்;
பொருமி யவள்பின்னும் புலம்புவாள்: — ‘வான்சபையில்
கேள்விபல வுடையோர், கேடிலா நல்லிசையோர்,
வேள்வி தவங்கள் மிகப்புரிந்த வேதியர்கள்,
மேலோ ரிருக்கின்றார், வெஞ்சினமேன் கொள்கிலரோ?
வேலோ ரெனையுடைய வேந்தர் பிணிப் புண்டார்;
இங்கிவர்மேற் குற்றம் இயம்ப வழியில்லை.
மங்கியதோர் புன்மதியாய்! மன்னர் சபைதனிலே
என்னைப் பிடித்திழுத்தே ஏச்சுக்கள் சொல்லுகிறாய்.
நின்னை யெவரும் “நிறுத்தடா” என்பதிலர்.
என்செய்கேன்?’ என்றே இரைந்தழுதாள், பாண்டவரை
மின்செய் கதிர்விழியால் வெந்நோக்கு நோக்கினாள்.
மற்றவர்தாம் முன்போல் வாயிழந்து சீர்குன்றிப்
பற்றைகள்போல் நிற்பதனைப் பார்த்து, வெறிகொண்டு
‘தாதியடி தாதி!’யெனத் துச்சாதனன் அவளைத்
தீதுரைகள் கூறினான்; கர்ணன் சிரித்திட்டான்;
சகுனி புகழ்ந்தான்; சபையினோர் வீற்றிருந்தார்!
தகுதியுயர் வீட்டுமனுஞ் சொல்லுகிறான்: ‘தையலே,

### 64. வீட்டுமாசாரியன் சொல்வது

சூதாடி நின்னை யுதிட்டிரனே தோற்று விட்டான்;
வாதாடி நீயவன்றன் செய்கை மறுக்கின்றாய்.
சூதிலே வல்லான் சகுனி, தொழில்வலியால்,
மாதரசே, நின்னுடைய மன்னவனை வீழ்த்தி விட்டான்.
மற்றிதனி லுன்னையொரு பந்தயமா வைத்ததே
குற்றமென்று சொல்லுகிறாய் கோமகளே, பண்டையுக
வேத முனிவர் விதிப்படி,நீ சொல்லுவது
நீதமெனக் கூடும்; நெடுங்காலச் செய்தியது!
ஆணொடுபெண் முற்றும் நிகரெனவே அந்நாளில்
பேணிவந்தார்; பின்னாளில் இஃது பெயர்ந்துபோய்

இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்கால், ஆடவருக்
கொப்பில்லை மாதர்; ஒருவன்தன் தாரத்தை
விற்றிடலாம்; தானமென வேற்றுவர்க்குத் தந்திடலாம்
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை.
தன்னை யடிமையென விற்றபின் னுந்தருமன்
நின்னை யடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு.
செல்லு நெறியறியார் செய்கையிங்கு பார்த்திடிலோ
கல்லும் நடுங்கும்; விலங்குகளும் கண்புதைக்கும்.
செய்கை அநீதியென்று தேர்ந்தாலும், சாத்திரந்தான்
வைகு நெறியும் வழக்கமும் நீ கேட்பதனால்
ஆங்கவையு நின்சார்பி லாகா வகையுரைத்தேன்;
தீங்கு தடுக்குந் திறமில்லேன், என்றந்த
மேலோன் தலைகவிழ்ந்தான். மெல்லியளுஞ் சொல்லுகிறாள்:—

## 65. திரௌபதி சொல்வது

'சாலநன்கு கூறினீர்! ஐயா! தருமநெறி
பண்டோர் இராவணனும் சீதைதனைப் பாதகத்தால்
கொண்டோர் வனத்திடையே வைத்துப்பின், கூட்டமுற
மந்திரிகள் சாத்திரிமார் தம்மை வரவழைத்தே,
செந்திருவைப் பற்றிவந்த செய்தி யுரைத்திடுங்கால்
"தக்கதுநீர் செய்தீர்; தருமத்துக் கிச்செய்கை
ஒக்கும்"என்று, கூறி உகந்தனராம் சாத்திரிமார்!
பேயரசு செய்தால், பிணந்தின்னும் சாத்திரங்கள்,
மாய முணராத மன்னவனைச் சூதாட
வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ? நேர்மையோ?
முற்படவே சூழ்ந்து முடித்ததொரு செய்கையன்றோ?
மண்டபம்நீர் கட்டியது மாநிலத்தைக் கொள்ளவன்றோ?
பெண்டிர் தமையுடையீர் பெண்க ளுடன்பிறந்தீர்!
பெண்பாவ மன்றோ? பெரியவசை கொள்ளீரோ?
கண்பார்க்க வேண்டும்!'என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.
அம்புபட்ட மான்போல் அழுது துடிதுடித்தாள்.
வம்புமலர்க் கூந்தல் மண்மேற் புரண்டுவிழத்
தேவி கரைந்திடுதல் கண்டே, சிலமொழிகள்
பாவிதுச் சாதனனும் பாங்கிழந்து கூறினான்.

அ - உ: (2) அச்சா - மைத்துனு, ஒழுங்கு கெட்டவனே என்றது மாம் (அச்சி - வேசி) (3) பொற்சபை - பொலிவு நிறைந்த சபை. (6) ஆதரவு நீக்கி - அன்பு செய்தலைவிட்டு. அருமை - நண்பு (9) கக்கக்க என்றது கனைப்பு ஒலியை (13) பாதியுயிர் கொண்டுவர - பாதி உயிரு டன்வர (14) நீசன் - கொடியோன் (15) மொய்த்தவராய் - திரளாய்க் கூடிய மக்கள், (19) தராதலம் - அவனிருக்க வேண்டிய இடம்; (20) பொன்னை - இலக்குமியனைய பாஞ்சாலியை; (24) சீரழிய - பெருமை குன்ற (26) கூடுதலும் - சேர்தலும் (30) பரிசழித்தல் - சங்கை கெடுதல், (32) குன்று மணித்தோள் - மலைபோன்ற அழகிய தோள்களை (34) பொருமி - மனம் கலங்கியழுது கொண்டே (35) கேள்வி - அறிவு (36) புரிந்த - செய்த (37) மேலோர் - (முதலான) பெரியோர்கள் (38) பிணிப் புண்டார் - அடிமைத் தளையில் பட்டார் (40) புன்மதியாய் - கீழான அறிவை உடையவனே (44) வெந்நோக்கு - கடுமையான பார்வை (46) பற்றைகள் - அசைவற்று புதர்கள் போல (47) தாதி - அடிமைப் பெண்ணே, (50) தகுதியுயர் - தகுதியால் உயர்ந்த (53) தொழில் வலியால் - சூதாடும் தொழிலின் திறமையினுலே (55) மற்றிதனில் - தன்னைத் தோற்றபின்னர் தருமன் ஆடிய சூதில் (56) பண்டையுக - பழங்காலத்து (58) நீதம் - நீதி (60) பெயர்ந்து போய் - மாறி (64) விலங்கு முறைமை - விலங்கினங்களுக்கே உரிய முறைமை (67) செல்லு நெறி - வாழ்வுக்குரிய நன்னெறிகளை (68) கண் புதைக்கும் - இதனைப் பார்த்தற்கு அஞ்சித் தம் கண்களைப் பொத்திக் கொள்ளும் (69) தேர்ந்தாலும் - தெரிந்தாலும் (70) சாத்திரந் தான் வைகுநெறி - சாத்தி ரங்களில் கூறப்பட்ட நீதிவழியும் (72) தீங்கான இச்செயல்களைத் தடுக்கும்வலி எனக்கு இல்லை (73) மேலோன் - பெரியோனுகிய வீட்டு மன் (74) சால நன்கு - மிக நல்லதொன்றை (75) பாதகத்தால் கொண்டு- பாவவழியால் பிடித்துக் கொண்டு (76) கூட்டமுற - அவளைக் கூடு தற்கு (78) செந்திரு - இலக்குமியை ஒத்தவளான சீதாபிராட்டியை (80) உகந்தனராம் - ஏற்றுக்கொண்டார்கள்; சாத்திரிமார் - நூலறிவாளர் (82) மன்னவன் - தருமன் (84) முற்படவே - வினை தொடங்கு முன்பே (87) பெரியவசை - பெரும்பழி (88) கண்பார்க்க வேண்டும் - (அன்பு நீதி நேர்மை என்பன நிறைந்த) அருட்கண் கொண்டு எனக்கு நீதி வழங்கவேண்டும் (90) வம்பு மலர் - மணம் நிறைந்த மலர் (92) பாங் கிழந்து - மரபு கடந்து.

வேறு

**272.** ஆடை குலைவுற்று நிற்கிருள்; — அவள்
ஆவென் றழுது துடிக்கிருள் — வெறும்
மாடு நிகர்த்ததுச் சாதனன் — அவள்
மைக்குழல் பற்றி யிழுக்கிருன் — இந்தப்
பீடையை நோக்கினன் வீமனும் — கரை
மீறி எழுந்தது வெஞ்சினம்; — துயர்
கூடித் தருமனை நோக்கியே, — அவன்
கூறிய வார்த்தைகள் கேட்டிரோ?

அ - உ: பீடையை - பெருந்துன்பமான நிலைமையை; கேட்டிரோ - கேட்கின்றீர்களா?

## 66. வீமன் சொல்வது

வேறு

273. 'சூதர் மனைகளி லே — அண்ணே!
தொண்டு மகளிருண் டு;
சூதிற் பணயமென் றே — அங்கோர்
தொண்டச்சி போவதில் லை.

அ - உ: *தொண்டு மகளிர் - ஏவற்பெண்கள்; தொண்டச்சி - தொண்டன் என்றதன் பெண்பாற் சொல்.*

274. 'ஏது கருதிவைத் தாய்? — அண்ணே!
யாரைப் பணயம்வைத் தாய்?
மாதர் குலவிளக் கை — அன்பே
வாய்ந்த வடிவழ கை;

அ - உ: *ஏது கருதி - என்ன நினைந்து;*

275. 'பூமி யரசரெல் லாங் — கண்டே
போற்ற விளங்குகி றன்,
சாமி, புகழினுக் கே — வெம்போர்ச்
சண்டனப் பாஞ்சா லன்;

அ - உ: *புகழினுக்கேசாமி; சாமி - சிறந்தவன்; சண்டனப் பாஞ்சாலன் - பெருவலி படைத்த பாஞ்சாலன்.*

276. 'அவன் சுடர்மக ளை, — அண்ணே!
ஆடி யிழந்துவிட் டாய்;
தவறு செய்துவிட் டாய்; — அண்ணே!
தருமங் கொன்றுவிட் டாய்.

அ - உ: *சுடர் மகள் - விளக்குப் போன்ற மகள்;*

277. 'சோரத்திற் கொண்டதில் லை; — அண்ணே!
சூதிற் படைத்ததில் லை.
வீரத்தி னற்படைத் தோம்; — வெம்போர்
வெற்றியி னற்படைத் தோம்;

அ - உ: *சோரத்தில் - களவினால்.*

278. 'சக்கர வர்த்தியென் றே — மேலாந்
தன்மை படைத்திருந் தோம்;
பொக்கென ஓர்கணத் தே — எல்லாம்
போகத் தொலைத்துவிட் டாய்.

*அ - உ: பொக்கென - முழுவதையும்.*

279. 'நாட்டை யெல்லாந்தொலைத் தாய்; — அண்ணே!
நாங்கள் பொறுத்திருந் தோம்
மீட்டும் எமையடி மை — செய்தாய்,
மேலும் பொறுத்திருந் தோம்.

280. 'துருப தன்மக ளைத் — திட்டத்
துய்ம னுடற்பிறப் பை,
இரு பகடையென் றுய், — ஐயோ!
இவர்க் கடிமையென் றுய்!

*அ - உ: திட்டத்துய்மன் உடன்பிறப்பை - திட்டத்துய்மனது சகோதரியான பாஞ்சாலியை; இருபகடை - சூதாட்டத்தில் தருமன் கூறிய எண்.*

281. 'இது பொறுப்பதில் லை, — தம்பி!
எரி தழல்கொண்டு வா;
கதிரை வைத்திழந் தான் — அண்ணன்
கையை எரித்திடு வோம்.'

*அ - உ: எரிதழல் - எரிகின்ற நெருப்பு; கதிரை - பேரொளியை நிகர்த்தவளான பாஞ்சாலியை.*

## 67. அர்ஜுனன் சொல்வது

### வேறு

282. எனவீமன் ஸஹதேவ னிடத்தே சொன்னுன்.
இதைக் கேட்டு வில்விஜயன் எதிர்த்துச் சொல்வான்:
'மனமாரச் சொன்னுயோ? வீமா! என்ன
வார்த்தை சொன்னுய்? எங்குசொன்னுய்? யாவர்முன்னே?
கனமாருந் துருபதனுர் மகளைச் சூதுக்
களியிலே இழந்திடுதல் குற்ற மென்றுய்;
சினமான தீ அறிவைப் புகைத்த லாலே,
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னுய்.

*அ - உ: மனமார - மனம் பொருந்தி; கனமாரும் - புகழ், செல்வம், வீரம் என்பவற்ருற்கதித்த; திரிலோகநாயகனை - (பொறுமை முதலான நற்குணங்களால்) மூன்று உலகங்கட்கும் தலைவனுன தருமனை.*

283. "தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும்" எனு மியற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்;
கருமத்தை மேன்மேலுங் காண்போம், இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்;
தனுவுண்டு காண்டீவம் அதன்பேர்' என்றான்.

அ - உ: கவ்வும் - விழுங்கும்; இயற்கை மருமத்தை - இயற்கையின் இரகசியத்தை இந்த இரகசியத்தை உலகோர் கற்றுக் கொள்ளுதற்கு வழிதேடி இருந்தபோது, நம்மால் அது ஆகட்டும் என்றுவிதி இவ்வாறு செய்தது. மேன் மேலும் - வருங்காலத்தில்; கட்டுண்டோம்- அடிமையானோம்; தருமத்தை அப்போது வெல்ல - தருமம் அப்போது வெல்ல; தனு - வில், அரிச்சுனனுடைய வில்லுக்குக் "காண்டீபம்" என்று பெயர்.

## 68. விகர்ணன் சொல்வது

284. அண்ணனுக்குத் திறல்வீமன் வணங்கி நின்றான்.
அப்போது விகர்ணனெழுந் தவைமுன் சொல்வான்:
'பெண்ணரசி கேள்விக்குப் பாட்டன் சொன்ன
பேச்சதனை நான்கொள்ளேன்; பெண்டிர் தம்மை
எண்ணமதில் விலங்கெனவே கணவ ரெண்ணி
ஏதெனிலுஞ் செய்திடலாம் என்றான் பாட்டன்.
வண்ணமுயர் வேதநெறி மாறிப் பின்னாள்
வழங்குவதிந் நெறிஎன்றான்; வழுவே சொன்னான்.

அ - உ: விகர்ணன் - துரியோதனனது தம்பியருள் ஒருவன்; நீதி வழி நிற்பவன், நீதியே பேசுபவன்; பாட்டன் – வீட்டுமன், கொள்ளேன் - ஏற்றுக்கொள்ளமாட்டேன். 'கணவர் பெண்டிர்தமை விலங்கனவே எண்ணமதில் எண்ணி' எனமாற்றிப் பொருள் கொள்க. ஏதெனிலும் - விரும்பியது எதுவாயினும். வழுவே சொன்னான் - பிழைபடவே கூறினான்.

285. 'எந்தையர்தம் மனைவியரை விற்ற துண்டோ?
இதுகாறும் அரசியரைச் சூதிற் தோற்ற
விந்தையைநீர் கேட்டதுண்டோ? விலைமா தர்க்கு
விதித்ததையே பிற்கால நீதிக் காரர்
சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்தி விட்டார்!
சொல்லளவே தானாலும், வழக்கந் தன்னில்
இந்தவிதஞ் செய்வதில்லை; சூதர் வீட்டில்
ஏவற்பெண் பணயமில்லை என்றுங் கேட்டோம்.

அ - உ: அரசியர் - அரசர் பெண்டிர்; விந்தை - வியப்பான செய்தியை; "சொல்லளவு ஏதானாலும்" என்று பிரித்துப் பொருள் கொள்க; என்றுங் கேட்டோம் - எப்போதும் நாம் கேள்வியுற்றது இதுவே.

286. "தன்னையிவன் இழந்தடிமை யான பின்னர்த்
தாரமெது? வீடேது? தாத ஞன
பின்னையுமோர் உடைமை உண்டோ?" என்று நம்மைப்
பெண்ணரசு கேட்கின்றூர் பெண்மை வாயால்.
மன்னர்களே! களிப்பதுதான் சூதென் றுலும்
மனுநீதி துறந்திங்கே வலிய பாவந்
தன்னைஇரு விழிபார்க்க வாய்பே சீரோ?
தாத்தனே, நீதிஇது தகுமோ?' என்றுன்.

அ - உ: *தாதன் - அடியவன்; உடைமை - சொந்தமான சொத்து; பெண்ணரசு - பெண்களுக்கெல்லாம் அரசியான பாஞ்சாலி; பெண்மைவாயால் - பெண்களுக்குரிய முறைப்படி பெண்மைக் குரலில்; களிப்பது - பொழுது போக்கின்பமாவது. மனுநீதி - அரசநீதி, உயிர்க் குலத்துக்கு அரசன் வழங்க வேண்டிய நீதி; துறந்து - நீங்கி, தவறி; தாத்தனே- தந்தையே பாட்டனே என்று வீட்டுமனைக் குறிப்பிட்டதுமாம்.*

287. இவ்வாறு விகர்ணனும் உரைத்தல் கேட்டார்;
எழுந்திட்டார் சிலவேந்தர்; இரைச்ச லிட்டார்;
'ஒவ்வாது சகுனிசெயுங் கொடுமை' என்பார்;
'ஒருநாளும் உலகிதனை மறக்கா' தென்பார்;
'எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர்;
ஏந்திழையை அவைக்களத்தே இகழ்தல் வேண்டா.
செவ்வானம் படர்ந்தாற்போல் இரத்தம் பாயச்
செருக்களத்தே தீருமடா பழியிஃ' தென்பார்.

அ- உ: *புகைந்தாலும் - பொறுமையால் (பாண்டவரை) எரித்து நின்றுலும்; புகைந்து போவீர் - (நீங்கள்) எரிந்து போவீர்; பழி இஃது - இப் பெண்பழி.*

## 69. கர்ணன் பதில்

*வேறு*

288. விகருணன் சொல்லைக் கேட்டு
வில்லிசைக் கர்ணன் சொல்வான்:—
'தகுமடா, சிறியாய், நின்சொல்;
தாரணி வேந்தர் யாரும்
புகுவது நன்றென் றெண்ணி
வாய்புதைத் திருந்தார், நீதான்
மிகுமுறை சொல்லி விட்டாய்.
விரகிலாய்! புலனு மில்லாய்!

அ - உ: *வில்லிசை – வில்வலியில் புகழ்பெற்ற; வாய்புதைத்து – வாய்பேசாது. மிகுமுறை - பெரிய நீதி; விரகிலாய் - ஒரு தந்திரமும் இல்லாதவனே; புலனுமில்லாய் – நல்லறிவும் இல்லாதவனே.*

289. ‘பெண்ணிவள் தூண்ட லெண்ணிப்
பசுமையால் பிதற்று கின்றாய்;
எண்ணிலா துரைக்க லுற்றாய்;
அவனைநாம் வென்ற தாலே
நண்ணிடும் பாவ மென்றாய்;
நாணிலாய்! பொறையு மில்லாய்!
கண்ணிய நிலைமை யோராய்;
நீதிநீ காண்ப துண்டோ?

அ - உ: இப்பெண்ணினால் தூண்டப் பெற்று; பசுமையால் - இளையபுத்தியால்; பிதற்றுகின்றாய் – பொருந்தாதவற்றைச் சொல்லுகின்றாய்; எண்ணிலாது - ஆராயாது; நாண் - நாணம்; பொறை - பொறுமை; கண்ணிய - பொருத்தமான.

290. ‘மார்பிலே துணியைத் தாங்கும்
வழக்கங்கீ ழடியார்க் கில்லை;
சீரிய மகளு மல்லள்
ஐவரைக் கலந்த தேவி.
யாரடா பணியாள்! வாராய்;
பாண்டவர் மார்பி லேந்தும்
சீரையுங் களைவாய்; தையல்
சேலையுங் களைவாய்’ என்றான்.

அ – உ: சீரியமகள் - குலமகள்; சீரை - சீலை; களைவாய் - நீக்குவாய்.

291. இவ்வுரை கேட்டா ரைவர்;
பணிமக்க ளேவா முன்னர்
தெவ்வர்கண் டஞ்சு மார்பைத்
திறந்தனர், துணியைப் போட்டார்.
நவ்வியைப் போன்ற கண்ணாள்,
ஞானசுந் தரி,பாஞ் சாலி
‘எவ்வழி உய்வோ’ மென்றே
தியங்கினாள், இணைக்கை கோத்தாள்.

அ- உ: பணிமக்கள் - வேலையாட்கள்; ஏவாமுன்னர் - கட்டளையிடுதற்குமுன்பு; தெவ்வர் - பகைவர்; போட்டார் - கீழே போட்டனர்; நவ்வி-பெண்மான், எவ்வழி உய்வோம் - எந்தவாறு இதிலிருந்து பிழைப்போம், தியங்கினாள் - கலங்கினாள்; இணைக்கை - இருகைகளையும்; கோத்தாள் - ஒன்று சேர்த்தாள்.

## 70. திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் பிரார்த்தனை

வேறு

292. துச்சா தனன்எழுந் தே — அன்னை
துகிலினை மன்றிடை உரித லுற்றான்.
'அச்சோ, தேவர்க ளே!' — என்று
அலறியவ் விதுரனுந் தரைசாய்ந் தான்.
பிச்சே றியவனைப் போல் — அந்தப்
பேயனுந் துகிலினை உரிகையி லே,
உட்சோ தியிற் கலந்தாள், — அன்னை
உலகத்தை மறந்தாள், ஒருமை யுற்றாள்.

*அ - உ: அச்சோ - ஐயகோ; தரை சாய்ந்தான் - பூமியில் விழுந் தான்; பிச்சு - பித்து, பைத்தியம்; உட்சோதி - தன்னுள்ளடங்கிக்கிடக் கும் ஆண்டவனது அருள் ஒளி; ஒருமையுற்றாள் - ஆண்டவனும் தானும் என்ற இரண்டான நிலைமைகெட்டு, அவனுடனே ஒன்றுபட்டுத் தானே அவன் ஆகிய ஒருமை நிலையை அடைந்தாள்; ஞானியர்க்கும் இலகு விற் கிட்டாத பெருநிலை இது.*

293. ஹரி, ஹரி, ஹரி என்றாள்; — கண்ணா!
அபய மபயமுனக் கபய மென் றாள்.
கரியினுக் கருள்புரிந் தே — அன்று
கயத்திடை முதலையின் உயிர்மடித் தாய்!
கரிய நன்னிற முடையாய்! — அன்று
காளிங்கன் தலைமிசை நடம்புரிந் தாய்!
பெரியதொர் பொருளா வாய்! — கண்ணா!
பேசரும் பழமறைப் பொருளா வாய்!

*அ - உ: ஹரி - கண்ணனின் திருநாமங்களுள் ஒன்று; அபயம்- அடைக்கலம்; கரி - யானை; முதலையாற் பிடிக்கப்பட்ட யானையானது கலங்கி ஆதிமூலமே எனக் கண்ணபிரானை அழைத்தகாலை. அவனங் குத் தோன்றி முதலையிலிருந்து அந்த யானையை விடுத்தவரலாறு பாகவத புராணத்தில், கஜேந்திர அத்தியாயத்தில் விரிக்கப்பட்டுள்ளது. கயம் - குளம், காளிங்கன் என்னும் ஐந்தலை நாகத்தின் படங்களில் பால கிருஷ்ணன் நடனம் புரிந்த செய்தியையும் எடுத்துக்கூறுகின் றாள். பழமறைப் பொருளாவாய் - பழமையான வேதங்களின் உட் பொருளாயுள்ளவனே.*

294. 'சக்கர மேந்திநின் றாய்! — கண்ணா!
சார்ங்கமென் றொருவில்லைக் கரத்துடை யாய்!
அக்ஷரப் பொருளா வாய்! — கண்ணா!
அக்கார அமுதுண்ணும் பசுங்குழந் தாய்!
துக்கங்கள் அழித்திடு வாய்! — கண்ணா!
தொண்டர்கண் ணீர்களைத் துடைத்திடு வாய்!
தக்கவர் தமைக்காப் பாய், — அந்தச்
சதுர்முக வேதனைப் படைத்துவிட் டாய்

*அ - உ: சக்கரம் - சக்கராயுதம், சார்ங்கம் என்பது திருமால் ஏந்திய வில்லின் பெயர்; அட்சரப் பொருள் - எழுத்துக்களின் பொருள்; அக்கார அமுது - சர்க்கரைப் பொங்கல்; தக்கவர் - சான்றோர்; சதுர்முக வேதன் - நான்கு முகங்களையுடைய பிரமதேவன்.*

295. 'வானத்துள் வானா வாய், — தீ
மண்,நீர், காற்றினில் அவையா வாய்;
மோனத்துள் வீழ்ந்திருப் பார் — தவ
முனிவர்தம் அகத்தினி லொளிர்தரு வாய்;
கானத்துப் பொய்கையி லே — தனிக்
கமலமென் பூமிசை வீற்றிருப் பாள்.
தானத்து ஶ்ரீ தேவி, — அவள்
தாளிணை கைக்கொண்டு மகிழ்ந்திருப் பாய்!

*அ - உ: அவையாவாய் - அந்தத்தீ, மண், நீர், காற்று என்பவையே ஆவாய்; மோனம் - மௌனநிலை; ஒளிர்தருவாய் - விளங்குவாய்; கமலமென் பூமிசைவீற்றிருப்பாள் - கமலமாகிய மெல்லிய பூவின்கண்ணிருப்பவள்; தானத்து -(பூவினை) இடமாகக் கொண்ட, தானம் - உயிர்நிலை என்னலுமாம்; ஶ்ரீதேவி - இலக்குமிதேவி; கண்ணன் அவளது தாளிணை கைக் கொள்ளுதல் கண்ணனுக்கு ஶ்ரீதேவியின் மீதுள்ள காதலைக் காட்டிற்று.*

296. 'ஆதியி லாதியப் பா! — கண்ணா!
அறிவினைக் கடந்தவிண் ணகப்பொரு ளே!
சோதிக்குஞ் சோதியப் பா! — என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய்திடுவாய்!
மாதிக்கு வெளியினி லே — நடு
வானத்திற் பறந்திடும் கருடன் மிசை
சோதிக்குள் ஊர்ந்திடு வாய், — கண்ணா!
சுடர்ப்பொரு ளே,பே ரடற்பொரு ளே!

*அ - உ: ஆதியில் ஆதி - தொடக்கத்துக்கும் முந்தியவன்; "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி" எனும் இறைவனது தன்மையை இது குறித்தது. விண்ணகப் பொருள் - எட்டமுடியாத உயர்ந்த பொருள்; மாதிக்கு - பெரியதிசை; வெளி - வான்வெளி; சோதிக்குள் ஊர்ந்திடுவாய் - ஒளி மயமாக ஊர்ந்து செல்லுவாய்; பேரடற்பொருளே - அளவிடற்கரிய வலிமை சான்றவனே.*

297. 'கம்பத்தி லுள்ளா னோ? — அடா!
காட்டுன்றன் கடவுளைத் தூணிடத் தே!
வம்புரை செயு மூடா' — என்று
மகன்மிசை யுறுமியத் தூணுதைத் தான்
செம்பவிர் குழலுடை யான்; — அந்தத்
தீயவல் லிரணிய னுடல்பிளந் தாய்!
நம்பிநின் னடிதொழு தேன்; — என்னை
நாணழி யாதிங்கு காத்தருள் வாய்.

அ - உ: கம்பம் - தூண்; வம்புரை - வீண்பேச்சு; செம்பவிர் குழல் - செம்மை ஒத்துச் சிவந்த தலைமயிர்; நாராயணன் தூணிலுமிருப் பான் துரும்பிலுமிருப்பான் என்று கூறிய பிரகலாதனை அவன் தந்தை இரணியன் "கம்பத்திலுள்ளானோ" என்பது முதலாகக் கேட்டு அத்தூணைக் கோபத்தால் உதைத்தனன்; உடனே அத்தூணிலிருந்து பிரகலாதனது அன்புக் கூற்றைமெய்ப்பிக்கத் தோன்றிய நாராயணன், இரணியனுடலைப் பிளந்து கொன்றான் என்பது கதை. நாண்அழி யாது - மானம் கெடாமல்.

298. 'வாக்கினுக் கீசனை யும் — நின்றன்
வாக்கினி லசைத்திடும் வலிமையி னாய்,
ஆக்கினை கரத்துடை யாய், — என்றன்
அன்புடை எந்தை!என் னருட்கட லே!
நோக்கினிற் கதிருடை யாய்! — இங்கு
நூற்றுவர் கொடுமையைத் தவிர்த்தருள் வாய்!
தேக்குநல் வானமு தே! — இங்கு
சிற்றிடை யாய்ச்சியில் வெண்ணெயுண் டாய்!

அ - உ: வாக்கினுக்கீசன் - சொல்தவறாதவன். நின்றன் வாக்கி னில் அசைத்திடும் வலிமையினாய் - நினதுவார்த்தையினால் அத்தகை யோனையும் தன் வார்த்தையிலிருந்து நிலைதளரச் செய்திடும் வல்ல மையுடையாய்; ஆக்கினை - ஆணை; இச் சொல் இங்குத்திருமாலின் கையில் உள்ள சக்கரப்படையினைக் குறிப்பிட்டது; நோக்கினில் - பார்வையில்; கதிர் - (அருளாகிய) ஒளி; தேக்கு - நிறைந்த; ஆய்ச்சி இல் - இடைச்சியின் வீடு.

299. 'வையகம் காத்திடு வாய்! — கண்ணா!
மணி வண்ணா, என்றன், மனச் சுடரே!
ஐய,நின் பதமல ரே — சரண்,
ஹரி,ஹரி, ஹரி,ஹரி, ஹரி!'என் றாள்.
பொய்யர்தந் துயரினைப் போல், — நல்ல
புண்ணிய வாளர்தம் புகழினைப் போல்,
தையலர் கருணையைப் போல் — கடல்
சலசலத் தெறிந்திடும் அலைகளைப் போல்.

அ - உ: பொய்யரதுதுயர், புண்ணியவாளரது புகழ், தையலரது கருணை, கடலது அலை என்பன குறையாதுவளர்ந்து கொண்டே போவன; அவற்றின்வளர்ச்சி திரௌபதி துகிலின்வளர்ச்சிக்கு உவமை யாக வந்தது.

300. பெண்ணொளி வாழ்த்திடு வார் — அந்தப்
பெருமக்கள் செல்வத்தின் பெருகுதல் போல்,
கண்ணபி ரானரு ளால், — தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதி தாய்
வண்ணப்பொற் சேலைக ளாம் — அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தன வே!
எண்ணத்தி லடங்கா வே; — அவை
எத்தனை எத்தனை நிறத்தன வோ!

அ - உ: *பெண்ணொளி - பெண்ணின் பெருமை; எண்ணத்தில் - எண்ணிக்கையில்.*

301. பொன்னிழை பட்டிழை யும் — பல
புதுப்புதுப் புதுப்புதுப் புதுமைக ளாய்,
சென்னியிற் கைகுவித் தாள் — அவள்
செவ்விய மேனியைச் சார்ந்துநின் றே,
முன்னிய ஹரிநா மம் — தன்னில்
மூளுநற் பயனுல கறிந்திட வே,
துன்னிய துகிற்கூட் டம் — கண்டு
தொழும்பத்துச் சாதனன் வீழ்ந்துவிட் டான்.

அ - உ: *இழை - இழைக்கப்பட்டவை, இழைத்தல் - நெசவு செய்தல்; மூளுநற்பயன் - உண்டாகும் நல்லபலன்; துன்னிய துகில் - பெருகிவந்த சேலை; தொழும்பன் - இழிஞன்.*

302. தேவர்கள் பூச்சொரிந் தார் — 'ஓம்
ஜெயஜெய பாரத சக்தி'என் றே,
ஆவலோ டெழுந்துநின் று — முன்னை
ஆரிய வீட்டுமன் கைதொழு தான்.
சாவடி மறவரெல் லாம் — 'ஓம்
சக்திசக்தி சக்தி'என்று கரங்குவித் தார்.
காவலின் நெறிபிழைத் தான், — கொடி
கடியர வுடையவன் தலைகவிழ்ந் தான்.

அ - உ: *ஓம் ஜெயஜெயபாரத சக்தி - பாரத அன்னையின் அருள் ஆணை யானது வெல்வதாக. பாரதியார், தன் வாழ்த்துச் சொல்லான இதனை வீட்டுமன் பேரில் ஏற்றி இங்குச் சொல்வதை ஊன்றி நோக்கி அறிக. சாவடி மறவர் - கூட்டமாக அங்கிருந்த மறவர். (சாவடி - பெருங் கூட்டம்). கொடி கடியரவுடையவன் - கொடியில் விடப்பாம்பையுடைய வன்.*

## 71. வீமன் செய்த சபதம்

வேறு

303. வீமனெ ழுந்துரை செய்வான்: — 'இங்கு
விண்ணவ ராணை, பராசக்தி யாணை;
தாமரைப் பூவினில் வந்தான் — மறை
சாற்றிய தேவன் திருக்கழ லாணை;
மாமக ளைக்கொண்ட தேவன் — எங்கள்
மரபுக்குத் தேவன்கண் ணன்பதத் தாணை
காமனைக் கண்ணழ லாலே — சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடி மீதில்

*அ - உ: விண்ணவர், பராசக்தி, பிரமதேவன், கண்ணன், சிவன் ஆதியோர் மீது ஆணையிட்டு வீமன் சபதம் செய்கின்றான். மறைசாற்றிய தேவன் - வேதத்தினை மொழிந்தவனாகிய பிரமதேவன்; மாமகள் - இலக்குமி; காமன் - மன்மதன்; காலன் - யமன்.*

304. 'ஆணையிட் டிஃதுரை செய்வேன்: — இந்த
ஆண்மையி லாத்துரி யோதனன் றன்னை,
பேணும்பெ ருங்கன லொத்தாள் — எங்கள்
பெண்டுதி ரௌபதி யைத்தொடை மீதில்
நாணின்றி "வந்திரு" என்றான் — இந்த
நாய்மக னாந்துரி யோதனன் றன்னை,
மாணற்ற மன்னர்கண் முன்னே, — என்றன்
வன்மையி னால்யுத்த ரங்கத்தின் கண்ணே,

*அ - உ: மாணற்ற - மாட்சிமையற்ற; யுத்தரங்கம் - போர்க்களம்.*

305. 'தொடையைப்பி ளந்துயிர் மாய்ப்பேன் — தம்பி
சூரத்துச் சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன்; — அங்கு
கள்ளென ஊறுமி ரத்தங் குடிப்பேன்;
நடைபெறுங் காண்பி ருலகீர்! — இது
நான்சொல்லும் வார்த்தையென் றெண்ணிடல் வேண்டா!
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை, — இது
சாதனை செய்க,ப ராசக்தி!' என்றான்.

*அ - உ: கடைபட்ட - கீழ்மைப்பட்ட; இது சாதனை செய்க பராசக்தி - பராசக்தி இது செயற்படத் திருவருள் செய்வாளாக.*

## 72. அர்ஜுனன் சபதம்

306. பார்த்த னெழுந்துரை செய்வான்: — 'இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்.
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு — எங்கள்
சீரிய நண்பன்கண் ணன்கழ லாணை;
கார்த்தடங் கண்ணிளந் தேவி — அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினும் ஆணை;
போர்த்தொழில் விந்தைகள் காண்பாய், — ஹே!
பூதலமே! அந்தப் போதினில்' என்றான்.

அ - உ: தீர்த்தன் - புண்ணியன், மேலோன்; கார்த்தடங் கண்ணி - கரிய விசாலமான கண்களை உடையவள்; எந்தேவி - எமது மனைவியாகிய பாஞ்சாலி. பூதலமே, அந்தப் போதினில் போர்த்தொழில் விந்தைகள் காண்பாய்.

## 73. பாஞ்சாலி சபதம்

307. தேவி திரௌபதி சொல்வாள் — 'ஓம்,
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்;
பாவி துச்சாதனன் செந்நீர், — அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்,
மேவி இரண்டுங் கலந்து — குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான்; — இது
செய்யுமுன் னேமுடி யே'னென் றுரைத்தாள்.

அ - உ: 'குழல் மீதினில் நறு நெய் பூசிக்குளித்தே' என மாற்றுக; 'இரத்தக்கலவையை நறு நெய்யாகப் பூசியே குளிப்பேன்' என்றாள்.

308. ஓமென் றுரைத்தனர் தேவர்; — ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்.
பூமி யதிர்ச்சியுண் டாச்சு: — விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழல் காற்று.
சாமி தருமன் புவிக்கே — என்று
ஸாக்ஷி யுரைத்தன பூதங்க ளைந்தும்;
நாமுங் கதையை முடித்தோம் — இந்த
நானில முற்றும்நல் லின்பத்தில் வாழ்க!

அ - உ: பாஞ்சாலியிட்ட சபதத்தினை ஆமோதித்துத் தேவர் 'ஓம்' என்றனர்; வானமும் கூட "ஓம்" "ஓம்" என்று உறுமிற்று. சுழல் காற்று எழும்பி வானவெளி முழுவதையும் புழுதியால் நிறைத்தது. பூழி – புழுதி. 'தருமன் புவிக்கே சாமி' (தருமன் பொறுமையினால் இப்புவியில் மற்றையோரினும் உயர்ந்தவனாய் விட்டான்) என்று ஐம்பெரும் பூதங்களும் சாட்சி கூறின.

ஐந்தாவது சபதச் சருக்கம் முற்றிற்று.

பாஞ்சாலி சபதம் முற்றிற்று.

## ஆ: பொருள் விளக்கமும் குறிப்புக்களும்

[1912-ம் ஆண்டு வெளியிடப்பெற்ற தமது முதற்பதிப்பில் பாரதியார் எழுதியன]

### முதற் பாகம்

முதற் பாட்டிலிருந்து 18 ஆம் பாட்டுவரையில் நொண்டிச்சிந்து.

லாலல லாலல லா—லல
லாலல லாலல லாலல லா

என்ற மெட்டில் நடப்பது.

**பாட்டு 1: வரி 7.**

ஆமெனும் பொருளனைத்தாய்—'உள்ள வஸ்துக்கள் யாவுமாகி' என்பது பொருள். 'ஆம்' எனுஞ் சொல் சம்மதியைக் குறிப்பது மட்டுமேயன்றி உண்மையையும் குறிக்கும். வடமொழியில் 'ஓம்' எனும் சொல்லுக்கு 'ஆம்' என்றே பொருள். எவ்விடத்தும் 'இல்லை' யாதலின்றி 'ஆம்' என இருத்தல் பற்றியே, வேதத்தில் பிரம்மத்துக்கு 'ஓம்' எனும் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதறிக.

**பாட்டு 4: வரி 2.**

மிக்கபல் லுரையெனுங் கருமையிட்டாள்—வேதமாகிய கண்ணில் (ஞான நூல்களாகிய கண்ணில்) பலவித 'வியாக்கியானங்கள், பாஷ்யங்கள்' எனும் கரிய மையைப் பூசியவள். மை கண்ணுக்கு நல்லது. அழகுங்கூட. ஆனால், அளவுக்கு மிஞ்சிப் பூசினால் விகாரமாகத் தோன்றுவதுடன் கண்ணே போனாலும் போய்விடும். நமது தேசத்தில் ஒருவேளை இப்படி நடந்திருக்குமோ? ஸரஸ்வதி அறிவுத் தெய்வமாதலால், அவளுக்கு ஆத்ம ஞானமே (வேதமே) விழி எனப்பட்டது.

**பாட்டு 4: வரி 3, 4**

சீதக் கதிர் மதியா (ம்) நுதல்—குளிர்ந்த ஒளியுடைய மதியே ஸரஸ்வதி தேவிக்கு நெற்றியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. 'ஊகம்' [1] என்பது அவளுடைய கூந்தல்.

---

1 முதற் பதிப்பிலுள்ள பாடம்:

**பாட்டு 8: வரி 7, 8.**

சிந்தையி லறமு முண்டாம்—எனிற்
சேர்ந்திடுங் கலிசெயு மறமு முண்டாம்.

ஒரு சங்கத்தின்—ஒரு ஜாதியின், ஒரு தேசத்தின்—அறிவு மழுங்காதிருக்கும்வரை அதற்கு நாசம் ஏற்படாது. பாரத தேசத்தில் முற்காலத்திலே பாரத ஜாதி முழுமையின் அறிவுக்குப் பொறுப்பாளியாகப் பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாகப் பழைய நூல்களிலே காணப்படுகிறது. அந்தப் பிராமணர் தமது கடமைகளைத் தவருது நடத்தியிருப்பார்களானுல் மற்றக் குலத்தவரும் நெறி தவறியிருக்கமாட்டார்கள்; மஹா பாரதப் போர் நடந்திராது; பாரத தேசத்தில் பெரியதோர் க்ஷத்தீரிய நாசமும் கலியும் வந்திருக்கமாட்டா. ஒரு தேசத்திற்கு ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு அத்தேசத்திலுள்ள பிராமணர்களே பொறுப்பாளிகளென மேலே குறித்திருப்பதை விளக்கும்பொருட்டு மஹா பாரதப் போர் நடக்குமுன்பாகவே முதற்படப் பாவம் பிராமணருக்குள் புகுந்ததென்பதை நூல் தெரிவிக்கின்றது.

**பாட்டு 11: வரி 1.**

ஆரிய வேன்மறவர் — 'மறம்' என்பது வீரம்; மறவர், க்ஷத்திரியர்.

பொதுப்படையாக இக்குலத்தாரைக் குறிப்பிடுவதற்குத் தமிழில் அரசர், மன்னர் என்னும் சொற்களை வழங்குவதுமுண்டு. அதாவது, க்ஷத்திரியர்களுடைய தலைவனொருவனுக்கு மாத்திரமன்றி, அக்குல முழுமைக்குமே தமிழில் மன்னர் முதலிய பெயர்களுண்டு. நமது நாட்டில் இப்போது 'மறவர்' என வழங்கும் கூட்டத்தார் க்ஷத்திரிய வமிசத்தவராதல் உணர்க.

**பாட்டு 13: வரி 4.**

மலர் விழிக் காந்தங்கள்—காந்தத்திற்குரிய கவர்ச்சித்தொழில் செய்துகொண்டிருக்கும் (மாதர்) விழிகள்.

**பாட்டு 14: வரி 5, 6.**

பல தரனுடைத் தொழில் செயுமாசனமும்—மாசனம், மஹா ஜனங்கள்; பொதுப்படையான குடிகள், இவர்களே தேசத்திற்கு உயிராவர். இவர்களைச் 'சூத்திரர்' என்பது தற்கால வழக்கு, சூத்திரர் என்னும் பெயரைச் சில மூடர் இழிவான பொருள்பட வழங்குவதுபற்றி, நூலில் அப்பெயர் தரவில்லை.

**பாட்டு 16: வரி 7.**

உரியோர்—பந்துக்கள்.

**பாட்டு 17: வரி 8.**

மறைக்குல மறவர்களிருவர்—வேதமோதும் குலத்திலே பிறந்தவராயினும் மறவர் தொழிலைக் கைக்கொண்ட துரோணன் கிருபன் என்னும் மஹான்கள்.

**பாட்டு 19**

இஃது எண் சீர்; ஈற்றது மா.

**பாட்டு 20 முதல் பாட்டு 37 முடிய.**

மறுபடியும் நொண்டிச்சிந்து.

**பாட்டு 24: வரி 7.**

பால் வளர் மன்னவர்—பால் என்பது பகுதி. பல பகுதிகளாக வகுக்கப்பட்ட அரசர் (க்ஷத்திரியர்) கூட்டங்கள்.

**பாட்டு 25: வரி 5.**

வழவழத் தருமன்—இது உலகவழக்கு; உக்கிரத்தன்மை முதலிய மறவர் குணங்கள் இல்லாத தருமன்.

**பாட்டு 27: வரி 2.**

வளமைகள் — இது உலக வழக்கு; பெருமைகளென்பது பொருள்.

**பாட்டு 29: வரி 2.**

கதலியின் தோல்—கதலியென்பது ஒருவகை மான்.

**பாட்டு 33: வரி 8.**

அரபிய ரொட்டைகள்—வியாசமுனிவர் அரபி தேசமென்று பெயர் குறிப்பிடாவிடினும், அவரது வர்ணனைகளைப் பார்க்குமிடத்துத் தருமபுத்திரன் யாகத்துக்குக் காணிக்கையாக வந்த ஒட்டைகள் அரபி தேசத்தன என்று தெளிவாகத் தோன்றுகிறது. இன்று அரபி தேசத்திலேதான் ஒட்டைகள் அதிகமாக வழங்குதலறிக.

**பாட்டு 34: வரி 3.**

நின்றிடும் புகழ்ச் சீனம்—மிகப் புராதனமான காலந்தொட்டுக் கீர்த்தியழியாது நிற்குஞ் சீனதேசம். இஃது சீன தேசத்திற் குடி

யரசு நாட்டிப் புகழ் மிகுதியடையு முன்னதாகவே எழுதப்பட்டது. சில தேசங்களின் பெருமை காலத்திலே மாறியும் சிதைந்தும் அழிந்தும் போகிறது. காலச் செய்கையை எதிர்த்துச் சில தேசங் கள் எப்போதும் அழிவற்ற பெருமையுடன் விளங்குகின்றன. பிந் தியவற்றுள் சீனதேசமொன்று.

**பாட்டு 38 முதல் 41 முடிய**

எண்சீர்ப் பாட்டு.

**பாட்டு 42 முதல் 49 முடிய**

லாலல லாலல லாலல லாலல
லாலலா — லல
லாலல லாலல லாலல லாலல
லாலலா — லல

என்று படிக்கவும்.

**பாட்டு 45: வரி 5, 6.**

வீரர்தம் போரினரிய நற்சாத்திர வாதங்கள்—ஆயுதங்களுடன் செய்யப்படும் உடற்போரைக் காட்டிலும் பண்டிதர் செய்யும் சாத் திர வாதங்கள் அருமையுடையன என்பது கருத்து: அதாவது உண்மையுடன் இவ்வாதங்கள் நடைபெறுமிடத்து என்க. உண்மை யறியாதார், உண்மை வேண்டாதார் செய்யும் வாதங்கள் சந்தை யில் மீன்விற்கும் ஸ்திரீகளின் போராட்டத்திற்கு நேராகும்.

**பாட்டு 53 முதல் 83 முடிய**

நாலடி, எண்சீர்ச் சிந்து.

லாலல லாலல லாலலா—லல
லாலல லாலல லாலலா

என்ற மெட்டு.

சம்பாஷணைகள் முதலியவற்றைத் திறனுடனும் உண்மையுட னும் காட்டுவதற்கு இப்பாட்டின் நடை மிகவும் ஸௌகர்யமாதலைப் பாடிப்பார்த்து உணர்ந்துகொள்க.

**பாட்டு 69, 70.**

இப்பாட்டுக்களின் கருத்து:—

சகுனி சொல்லுகிறான்: 'நமக்கு' ஏற்கெனவே அளவிறந்த செல்வம் இருக்கும்போது, இன்னும் அதிகச் செல்வத்தை ஏன்

விரும்பவேண்டும்? இருப்பதை வைத்துப் பாதுகாத்தால் போதாதா?' என்று ஒருவேளை நீ நினைக்கின்றாய் போலும். ஆனால், இவ்வித நினைப்பு நின்போன்ற ஆரிய மன்னர்களுக்குத் தகாது. ஏனென்றால், நித்தம் ஏராளமான செல்வத்தைத் தான முதலியவற்றால் ஒரு பக்கத்திலே செலவிட்டு, மற்றொரு பக்கத்திலே போர் முதலியவற்றால் மிக்க பொருள் சேகரித்துக்கொண்டிருப்பதாகிய இரட்டைத் தொழில் ஆரிய மன்னர்களால் அனுசரிக்கப்படுவது. இருப்பதை மூடிவைக்க விரும்புவோன் அரசனல்லன், கிழச்செட்டி. எதுபோலெனில், கங்கைநதி நாள்தோறும் அளவில்லாத ஜலத்தைக் கடலிலே கொண்டு கொட்டுகிறது. என்ன வீண் செலவு! இந்த 'வீண்செலவு' செய்யாவிட்டால் ஜீவனின்றி அழுகிப்போய்விடும். மலைமீதிருந்து அதற்கு ஓயாத ஊற்றுவரவு இருக்கின்றது. அதனை உலகிற்கெல்லாம் வழங்குவதுமன்றிக் கடலிலும் கொண்டு பொழிகிறது. ஆம். 'மேலே' செல்வரிடமுள்ள பொருளைக் கவர்ந்து 'கீழே' ஸாமான்ய ஜனங்களுக்குப் பலவகைகளிலே பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் ராஜா, கங்கை நதியைப்போல், 'ஜீவ நதி'யாக இருக்கலாம். கங்கை நதியைப்போல் ஆரியர்களும்

செல்வம் வளர்தற்கே—தொழில்
ஆயிர நித்தம் புதியன—கண்டு
வாரிப் பழம்பொரு ளெற்றுவர்.

இங்ஙனமில்லாது, சத்தமற்ற நெடுங்காட்டில், மலையடிக்கீழ்ப் பட்ட இருட்குகையில் நீரைவைத்துப் பாசியால் மூடிக்காக்கும் சுனைகளைப் போன்ற ஒழுக்கம் ஆரியர்களால் வெறுத்தற்குரியது'.

**பாட்டு 81, 82, 83.**

ஒருவனைப் பரமாத்மாவின் அவதாரம் என்று கூறுவதன் பொருள் இம் மூன்று பாட்டுக்களிலும் விளக்கப்பட்டிருக்கிறது.

**பாட்டு 104: வரி 8**

நீதித் தர்மனுஞ் சூதிலன்புள்ளோன்—தர்மன் சூதாட்டத்திலே பிரியமுடையவனென்றும், அழைத்தால் எளிதில் இணங்கி விடுவானென்றும் சகுனி கருதுவதாக முதனூலிலேயே காணப்படுகிறது.

**பாட்டு 109 முதல் 114 வரை**

லாலல லாலல லாலல லாலா
லாலல லாலல லாலல லாலா

என்று பாடுக.

### பாட்டு 124: வரி 7.

கேள்விக்கொரு மிதிலாதிப னொத்தோன்—கேள்வியில் மிதிலை யரசனாகிய ஜனகனுக்கு நிகரானவன்.

இப்பாட்டின் மொத்தக் கருத்து: 'நாங்கள் உமது யாகத்திற்கு வந்து திரும்பிச் சென்றபிறகு, உங்களைப் பாஞ்சாலி ஸஹிதமாக அழைத்து அஸ்தினாபுரத்தில் மறுவிருந்து கொண்டாட வேண்டியது மரபு. ஆனால் இதுவரை சோதிடர்கள் நல்ல நாளில்லை என்று சொன்னார்கள். இந்த மாதந்தான் அவர்கள் நல்ல மாதமென்றனர்' என்பது.

### பாட்டு 138: வரி 7, 8.

செப்பிடு வித்தையைப் போலவே—புவிச்
செய்திகள் தோன்றிடு மாயினும்

இவ்வுலகத்துச் செய்திகள், மேலளவாகப் பார்க்கும்போது, முன்பின் தொடர்பு இல்லாதனவாகித் திடும் திடுமென்று புறப்படுவனபோலத் தோன்றுகின்றன. ஆனால், ஆழ்ந்து நோக்குமிடத்து, இவை 'காரண காரியத் தொடர்', என்பதோர் தவிர்க்க முடியாத விதியால் கட்டுண்டிருக்கின்றன.

### பாட்டு 148: வரி 7, 8.

சீரடியாற் பழவேத முனிவர் போற்றுஞ் செழுஞ்சோதி—சீர்களும் அடிகளும் இயைந்த மந்திரங்களால் முன்னைய வேதரிஷிகள் போற்றிய ஞாயிறு.

இங்கு, சூரியாஸ்தமன வர்ணனை கூறப்படுகிறது. இப்பாடல்களின் கருத்து நன்கு விளங்கும்பொருட்டு, நமது "கர்மயோகி"ப் பத்திரிகையிலே இவ் விஷயத்தைப் பற்றி எழுதியுள்ள வியாஸமொன்றை இங்குத் தருகின்றோம்.

#### ஸூர்யாஸ்தமனம்

உலகத்தில் எங்குப் பார்த்தாலும் நிறைந்து கிடக்கும் லாவண்யங்களைத் தமிழர்கள் கவனிப்பது கிடையாது. சனிக்கிழமை சாயங்காலந்தோறும் குளக்கரைகளிற் போய்க் கருடன் பார்ப்பதற்கென்றால் நம்மவர்கள் கூட்டங் கூட்டமாக ஓடுகிறார்கள். சூரியாஸ்தமன காலத்தில் வானத்திலே தோன்றும் அதிசயங்களைப் பார்க்க ஒருவன்கூடப் போகிறதில்லை. அப்போது வானத்திலே இந்திர ஜால மஹேந்திர ஜாலங்களெல்லாம் நடக்கின்றன. இந்த க்ஷண

மிருந்த தோற்றம் அடுத்த க்ஷணம் இருப்பதில்லை. உலகத்திலுள்ள திரவிய முழுவதையும் செலவிட்டு வர்ணக் காட்சிகள் ஏற்படுத்திப் பார்ப்போமாஞலும், அது ஸூர்யாஸ்தமன காலத்தில் வானத்திலே நாம் பொருட்செலவில்லாமல் பார்க்கக்கூடிய காட்சிகளிலே கோடியிலொரு பங்குகூடக் காணுது. வாண வேடிக்கைகள் பார்க்க ஒரு செல்வன் பதினுயிரக் கணக்கான திரவியம் செலவிடுகிருன். அவனது செல்வத்தினுலன்ரே இந்தக் காட்சி சுலபமாகிறதென்று அதைப் பார்த்து ஆயிரம் ஏழைகள் பெருமூச்செறிகிருர்கள். ஸஹோதரா, ஸூர்யாஸ்தமனத்தின் விநோதங்களைச் சென்றுபார். ஸூர்யனைப் பார்த்தால் கண்ணுக்குக் கெடுதி என்று குருடர் நம் பிக்கையைப் பொருட்டாக்காதே. ஸூர்யனைப் பார்ப்பது பாவமென்று சொல்லும் மூடர் சாஸ்திரத்தைக் கண்கொண்டு பார்க்காதே.

நமது நாட்டில் வேதகாலத்து ரிஷிகள் பிரகிருதியின் சௌந்தர்யங்களைக் கண்டு மோஹித்துப் பரமானந்த மெய்தியவர்களாய்ப் பல அதிசயமான பாடல்கள் பாடியிருக்கிருர்கள். பிரகிருதியின் அழகைக் கண்டு பரவசமெய்திக் காளிதாசன் முதலிய பெருங் கவிகள் அற்புதக் கவிதைகள் செய்திருக்கின்றனர். இக்காலத்திலேதான் இந்தத் துரதிர்ஷ்ட நிலைகொண்ட நாட்டில் வானம் பார்த்தறியாத குருடர்க ளெல்லோரும் கவிகளென்று சொல்லி வெளிவருகிருர்கள்.

ஸூர்யாஸ்தமனத்தின் அற்புத ஸௌந்தர்யங்களை எழுதிப் பிறர் மனதில் படும்படி செய்வது சாத்தியமில்லை. நேரிலே கொண்டு காட்டிஞலும் பலருக்கு ஆரம்பத்திலே கண் கூசுவதுதான் அர்த்தமாகுமேயல்லாமல், விஷயம் தெரியாது. ஸஹோதரா, நீயாகவே போய்ப் பல தினம் அடுத்துப் பார்க்க வேண்டும். பிறகுதான் உனக்கு அந்தத் தெய்வக்காட்சி சிறிது சிறிதாக விளங்கும். ஸூர்யோதயத்திலேயும் ஸூர்யாஸ்தமனத்திலும் வானத்தில் நடக்கும் இந்திரஜாலக் காட்சியில் க்ஷணந்தோறும் புதிய புதிய விநோதங்கள் மாத்திரமேயன்றி இன்னுமொரு விசேஷமுண்டு. நேற்று இருந்ததுபோல இன்றைக்கு இராது. இன்று இருப்பது போல நாளை இராது. தினந்தோறும் வெவ்வேறு வியப்புக்கள், வெவ்வேறு உலகங்கள், வெவ்வேறு மஹிமைகள், வெவ்வேறு கனவுகள், வெவ்வேறு ஆனந்தங்கள், வெவ்வேறு அநிர்வசனீயங்கள்.

சில தினங்களின் முன்பு ஓர் மாலைப்பொழுதில் நான் கண்ட அதிசயங்களை ஒருவாறு இங்குக் குறிப்பிடுகிறேன். அடிவானத்தில் ஸூர்யகோளம் தகதகவென்று சுழன்றுகொண்டிருந்தது. இருபது

கோடி மின்னல்களை எடுத்து ஒரு சக்கரமாக வார்த்துச் சுழற்று வது போலிருந்தது. ஆரம்பத்திலேதான் கண்கூசும். சிறிதுநேரம் உற்று நோக்கிக்கொண்டிருந்தால், பிறகு கண்கூச்சம் தீர்ந்துபோய் விடும். இரண்டு வட்டத் தகடுகள் ஒன்றின்மேலொன்று சுழலும், கீழே இருப்பது சுத்தமான மின்வட்டம், மேலே மரகத வட்டம், பச்சை வர்ணம்! அற்புதமான பசுமை!

பச்சைத்தகடு பின்புறத்திலிருக்கும் மின்தகட்டை முழுதும் மறைத்துக்கொண்டிருக்கும். ஆயினும் இடையிடையே பின்னுள்ள வட்டத்தின் வயிரக்கிரணங்கள் கண்மீது பாயும்.

பார்! ஸூர்யனைச் சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவது போலத் தோன்றுகிறது! ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனைவித வடிவங்கள்! எத்தனை ஆயிரவிதமான கலப்புகள்! அக்கினிக்குழம்பு! தங்கம் காய்ச்சிவிட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்!

நீல ஏரிகள்! கரும் பூதங்கள்! எத்தனைவகை நீலம்! எத்தனை விதச் செம்மை! எத்தனைவகைப் பசுமை! எத்தனைவகைக் கருமை! நீல ஏரியின்மீது மிதக்கும் தங்கத் தோணிகள்; எரிகின்ற தங்க ஜரிகைக் கரைபோட்ட கரிய சிகரங்கள்! தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கு பார்த்தாலும் ஒளித்திரள், வர்ணக் களஞ்சியம். போ, போ, என்னால் அதை வர்ணிக்கமுடியாது.

### பாட்டு 153: வரி 1, 2.

செங்கதிர்த்தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்
அவன் எங்களறிவினைத் தூண்டி நடத்துக.

இது "தத் ஸவிதுர் வரேண்யம்" என்று தொடங்கும் காயத்ரி மந்திரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.

### பாட்டு 155: வரி 6, 7.

இத்தனை மக்களு மெங்க ணிருந்தனர் இத் தினமட்டுமென வியப்புற—'இந்நாள்வரை இத்தனை ஜனங்களும் எங்கே இருந்த னர்' என்று (காண்போர்) வியப்பெய்தும் வண்ணமாக.

### பாட்டு 157: வரி 7, 8.

தோரணங் கொஞ்ச—தோரணங்கள் அழகுடன் குழைந்திருப்ப

### பாட்டு 158: வரி 3, 4.

பொன்னரங்கினி லிருந்தான் — கண்ணில் புலவனை — ராஜ மண்டபத்திலே வீற்றிருந்தவன் ஆகிய திருதராஷ்டிரனை.

### பாட்டு 158: வரி 7.

வின்னயம்—வில்வித்தை, யுத்த சாஸ்திரம்.

### பாட்டு 159: வரி 3, 4.

பணிக் கொடியோன்—பாம்பைக் கொடிச் சின்னமாகவுடைய துரியோதனன்.

### பாட்டு 160: வரி 1.

இளங்கொடி—பாஞ்சாலி.

### பாட்டு 160: வரி 6.

உடல் வலித்தொழில்—கஸ்ரத், சரீர பலத்துக்காகச் செய்யப் படும் அப்பியாசங்கள். இதனை வடமொழியில் 'வ்யாயாமம்' என்பர்.

### பாட்டு 161: வரி 5—8.

வந்ததொர் துன்பத்தினை...—

துன்பம் நேரிடுங்கால், அதனை அவ்விடத்தே அப்பொழுதே மாய்த்துவிட வழி செய்வார்கள். அவ்வாறன்றிப் பின் வரப்போகும் துன்பங்களை நினைத்து நெஞ்சமுடைந்துபோய் யாதொரு செய்கையும் ஓடாமல் சலிப்படைந்திருத்தல் ஆரியர்களுடைய மரபன்று.

### பாட்டு 162: வரி 3.

தோணலம்—தோள்வலி, வலிமை.

### பாட்டு 164: வரி 5.

வென்றிகொள் பெருஞ்சூதர்—துரியோதனன் சபையில் வந்திருந்த சூதர்களின் பெயர், விமிம்சதி, சித்ரஸேனன், புருமித்ரன், ஜயன்; சகுனி இருக்கவே செய்கிறன்.

### பாட்டு 165: வரி 7.

ஆலமுற்றிடத் தழுவி—(ஆலம்—மார்பு); மார்புறத்தழுவி.

### பாட்டு 166: வரி 1.

அறத்தோன்றல்—'தருமபுத்திரனே' என்னும் விளி.

### பாட்டு 168: வரி 1, 2.

பழிக் கவற்றை யொர்சாத்திரமெனப் பயின்றேன்—பிறர் ஸங்கீதம், கணிதம், வியாகரணம், யுத்த தந்திரம் முதலிய சாஸ்திரங்கள் படிப்பதுபோலச் சூதாட்டத்தை ஒரு சாஸ்திரமாகப் பயிற்சி செய்து எதிர்க்க முடியாத நிபுணத்தன்மை வாய்ந்திருந்த சகுனி.

## பாட்டு 168: வரி 7, 8.

செலுஞ் செலவினுக் கழிகலை—செலவுக்கு நெஞ்சழியமாட்டாய். (விளையாட்டில் கொஞ்சம் திரவியம்) செலவிடுவதற்கு அஞ்ச மாட்டாய்.

## பாட்டு 169: வரி 2.

பிசுனன்—உலோபி.

## பாட்டு 171: வரி 1.

தோல் விலைக்குப் பசுவினைக் கொல்லும்—தோல் விலையாகக் கிடைக்கும் பொருளை விரும்பிப் பசுவைக் கொல்லுதல் போலப் பொருளாசையால் யுதிஷ்டிரனைக் கெடுத்துத் தரும நாசஞ் செய்யத் துணிந்தவனாகிய (சகுனி).

## பாட்டு 171: வரி 3.

நூல்விலக்கிய செய்கைக ளஞ்சும் நோன்பினேன்—தரும ராஜன்; அறநூல் விதிகளைத் தவறுதவன்.

## பாட்டு 171: வரி 8.

கவறை நஞ்செனக் கூறினர்—சூதாட்டத்தை விஷமாகக் கருத வேண்டும் என்றார்கள். 'கவற்றை' என்று இருத்தல் நேர்.

## பாட்டு 175: வரி 6, 7.

நம்மவர் காத்திடும் பழவழக்கை மாத்திர மறந்துவிட்டாய்—க்ஷத்திரியர்களுக்குள்ளே இருக்கும் புராதன சம்பிரதாய மொன்றை மாத்திரம் நீ மறந்துவிட்டாய் என்று சகுனி சொல்லுகிறான். வழக்கு—வழக்கம். பூர்வாசாரம். 'மாமூல்'. அந்தப் பூர்வாசாரம், இன்னதென்பது பின்னே எட்டாம் வரியிற் கூறப்படுகிறது. 'மன்னர் வல்லினுக் கழைத்திடில் மறுப்பதுண்டோ?' என. ஒரு அரசனை மற்றொருவன் 'என்னுடன் சூதாட வா' என வலிந்தழைக்கும் போது மாட்டேனென்று சொல்லலாகாதென்பது கருத்து. க்ஷத்திரியன் நஷ்டங்களுக்குத் துணிந்திருக்க வேண்டுமென்ற நல்ல கொள்கையால் விளைந்த கெட்ட வழக்கங்களில் இது ஒன்று. அறிவுடையவர்கள் கூடப் 'பூர்வாசார' மென்ற காரணத்தால் தீய வழக்கங்களை அனுசரித்தல் பாரத தேசத்திற்கு ஏற்பட்ட சாபம். இப்போதுதான் நீங்கி வருகிறது.

## பாட்டு 175: வரி 8.

வல்—சூது.

### பாட்டு 177: வரி 5.

வல்லமர்—சூதுப்போர்

### பாட்டு 178, 179, 180, 181.

இப் பாட்டுக்களிலே இப் 'பூர்வாசாரங்களில்' ஆராய்ச்சி யில்லாது பக்தி செலுத்துவோரின் மடமை காட்டப்படுகின்றது. பழமையிலே பெரும் பகுதி உயர்வு சான்றது தான். அதிலும், பாரத தேசத்தினராகிய நம்மவரின் நடைகள் அறிவும் அறனும் பொதிந்தனவாகும். ஆயினும், இழிந்த அமானுஷிக நடைகள் சில இவற்றோடு கலந்துள்ளன.

'எனது தந்தை க்ஷய நோயால் இறந்து போனான். எனக்கும் க்ஷய நோய் வந்திருக்கிறது. எங்கள் பாட்டனுக்கும் இந்த நோயுண்டு. ஆதலால் இந்த நோய் தீர்ப்பதற்கு நான் மருந்து தின்னமாட்டேன்' என்று ஒரு மனிதன் சொல்லுவானானால் அவன் எவ்வளவு பெரிய மூடன்? லோகக்ஷேமத்துக்கும் லோகாபிவிருத்திக்கும் இந்த 'மாமூல்' பக்தி எத்தனை பெரிய இடையூறு என்பதை நம்மவர் இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லை.

### பாட்டு 182: வரி 4—8.

மேலை நாஞ்செயுங் கர்ம மல்லாதே...—

நமது செய்கையின் விளைவுகளுக்கு மாத்திரமே யன்றி நம்மைச் சேர்ந்தவர்களின் கர்மப் பயன்களுக்கும் நாம் ஆளாகிறோமென்பதை இச் செய்யுள் விளக்குகின்றது.

### பாட்டு 183: முதல் 195 முடிய

லால லாலலா லா லாலா
லால லாலலா லா

என்ற மெட்டுள்ள சிந்துகள். தெருவில் ஊசிகளும் பாசி மணிகளும் விற்பதோடு பிச்சை யெடுக்கவும் செய்கிற பெண்கள் 'மாயக்காரனம்மா—கிருஷ்ணன்—மகுடிக்காரனம்மா' என்று பாடும் நடை, சூதாட்ட வருணனைக்கும் அதில் ஏற்படும் பரபரத்த வார்த்தைகளையும் செய்கைகளையும் விளக்குதற்கும் இந் நடை மிகவும் பொருந்திய தென்பது எளிதிலே காணப்படும்.

### பாட்டு 185: வரி 8.

பின் னடக்குக—மேலே விளையாட்டு நடக்குக.

### பாட்டு 186: வரி 1—4

ஒருவ னுடைப் பணயம்,...—தருமன் சொல்லுவது.

**பாட்டு 186: வரி 5—8.**

வருமமில்லையையா...—துரியோதனன் சொல்வது.

**பாட்டு 187: வரி 1—3.**

பொழுது போக்குதற்கே...—இஃது கர்ணன் வசனம். அங்கர்கோன்—கர்ணன்.

**பாட்டு 187: வரி 5—8.**

பழுதிருப்ப தெல்லாம்—தருமன் வசனம்.

**பாட்டு 189: வரி 6**

பாரமான பொற்றேர்—இங்கு, தேர் பணயமாக வைக்கப்பட்டது என்பது கொள்ளக் கிடக்கின்றது.

**பாட்டு 191: வரி 2.**

அடிமை செய்து வாழ்வோர்—மாதர்கள் பணயமாக வைக்கப் பட்டன ரென்பது தொக்கு நிற்கின்றது.

**பாட்டு 196: வரி 6.**

பழி மக்காள்—பழிப் பிள்ளைகளே, பழிக்கு இடமாகிய பிள்ளை களே.

**பாட்டு 199: வரி 1.**

கெலித்திடல்—வெல்லுதல். இது திசைச்சொல், கிராமியம்.

**பாட்டு 201: வரி 8.**

கேட்குங் காது மிழந்து விட்டாயோ?—கோப மிகுதியால் தன்னை மறந்து அரசனுக்குக் கண்ணில்லாமையைக் குறிக்க நேரிட்டது.

**பாட்டு 203: வரி 6.**

மந்திரம்—சூழ்ச்சி.

**பாட்டு 203: வரி 8.**

வெற்பிடைப் போக்குதி—காந்தாரத்து மலை நாட்டிலிருந்து வந்தவனாதலால், சகுனியை மீட்டும் அவனது மலை நாட்டுக்கு அனுப்பி விடுக என்று சொல்லியது.

பொருள் விளக்கமும் குறிப்புக்களும் முற்றிற்று.

# இ: விளக்கக் கட்டுரைகள்

## 1. பாரதி தோன்றிய சூழ்நிலை

"வீரசுதந்திர சக்தியே—இவன்
வேடம் புனைந்திங்கு வந்தது"

தமிழும், தமிழகமும், தமிழ்ப்பண்பாடும் வளமுற்றோங்கிச் செழித்து விளங்கியிருந்ததாகக் கருதப்படுகின்ற சங்க காலத்திற்குப் பின்பு, பல நூற்றாண்டுகளாகத் தமிழ்நாடு தாழ்நிலை அடைந்து கொண்டே வந்திருக்கின்றது. பிறநாட்டார்—நமது மொழி, பண்பாடு முதலானவற்றுக்குப் புறம்பான வேற்றவர்—வரவாலும் அத்தகையோரது படையெடுப்புகளாலும் தமிழகம் பிற்காலங்களிலே அடிமைப்பட்டு நின்றது. காலத்துக்குக்காலம் பல்லவர், தெலுங்கர், முகம்மதியர், ஆங்கிலேயர் என்ற பலருடைய நிழலில் தமிழ்நாடு தலைமை இழந்து நிற்கும் நிலை ஏற்பட்டிருந்தது. சுதந்திரம் இல்லாத நாட்டிலே கலை, சமயம், பொருளாதாரம் ஆகிய யாவுமே சீரழிந்து நிற்றல் இயற்கை. இந்த உண்மையைச் சென்ற நூற்றாண்டு தொடங்கி, ஆங்கில ஆட்சியின் பயனாக இந்திய நாடு முழுவதுமே அடிமைச் சூழலில் துன்புற்றபோது, நாம் நன்கு உணரக் கூடியதாயிற்று.

அரசியல் அடிமையானது பொருளாதாரச் சீர்கேட்டை நாட்டில் வளர்த்தது. அதற்கு முன் வரலாற்று ஏடுகள் ஒருபோதும் கண்டிராத அளவிற்கு வறுமைநிலை கலைத்துறையிலே ஏற்பட்டது. ஆளும் மொழியாக அமைந்த ஆங்கிலத்தில் நாட்டு மக்களுக்கு அளவுகடந்த மோகம் வளர்ந்தது. 'புலமையின் பயன் ஒழுக்கம்' என்ற பழைய மரபுமாறி, ஆற்றலுக்கும் புலமைக்கும் முடிச்சுப் போடப்பட்ட இடைக்காலத்தின் இறுதிவாடை அப்போது வீசிக் கொண்டிருந்தது. மக்களுடைய சுகவாழ்வையும் நாட்டு நிலையையும் சீர்திருத்தி வளம்படுத்துதற்கு உதவக்கூடிய உண்மையிலக்கியங்களை இயற்றுகின்ற ஆவலும், ஆர்வமும் புலவர்களிடமிருந்து மறைந்திருந்த காலம் அது. கலம்பகம், உலா, அந்தாதி, ஏகபாதம், முற்றுமடக்கு, யமகம், திரிபு என்ற பலவகைப்பட்ட பிரபந்தங்களே கணக்கிறந்தவையாக அக்காலை எழலாயின. அவற்றைப் படைத்த புலவர் பெருமக்களைச் சிற்றரசர்களும் பிரபுக்களும் ஆதரித்து நின்றனர். பொதுமக்களுக்கு எட்டாத வகையில்

புலவர்களும் அவர்களது படைப்புகளும் ஒதுங்கி நிற்கவேண்டிய நிலை திகழ்ந்தது.

இவை ஒரு பாலாக, அச்சந்தரும் இன்னொரு சூழ்நிலையும் தமிழுக்கு இருந்து வந்தது. பொதுமக்களது பேச்சுத்தமிழ் வேறு, புலவர்கள் எடுத்தாண்ட இலக்கியத் தமிழ் வேறு எனத் தமிழ் வழக்கே இருவேறு வகைப்பட்டு நடந்து வரலாயிற்று. தமிழ்க் கல்வி செல்வாக்கிழந்திருந்தது. அதனுல் பொதுமக்களும் தமிழறி வற்றுப் பண்டிதத்தமிழைப் படித்துப் போற்றி வளர்க்கும் வாய்ப்பு இல்லாராயினர். தமிழ் நடையை எளிமைப்படுத்திப் பொதுமக் களோடு தொடர்புடையதாக இலக்கியத் தமிழை ஆக்கி நெகிழ்த்து விடவேண்டும் என்ற எண்ணத்துடன் பணியாற்றப் புலவர்கள் தாமும் முற்பட்டார்களில்லை. தங்களுக்கும் பொதுமக்களுக்கும் எந் தத் தொடர்பும் இருப்பதாகக்கூட அவர்கள் உணர்தல் வேண் டாத வகையில் சிற்றரசர்களோடும், பிரபுக்களோடும் மட்டுமே அன்னுர் தொடர்புகொண்டிருந்தமை இதற்கோர் காரணமாயிற் றெனலாம். இதனுல் தமிழையும் தமிழ் கற்ருேரையும் புறக்கணித்த பொதுமக்கள் ஆங்கில மோகத்தில் திளைக்கும் நிலை வளர்ந்து வந்தது. எல்லாவகையாலும் பேச்சுத்தமிழும், இலக்கியத்தமிழும் பொதுக்கல்வி முறையால் இயைந்து நின்று, மக்களது பொது வாழ்விற் கலந்து சீரிய நன்மை பயக்கக்கூடிய தகுதி தமிழுக்கு அப்போது இல்லாது போயிற்று. அந்நிலை தொடர்ந்து வளர்ந்திருப் பின், ஏட்டளவிலே சிறந்து விளங்கினுலும், பேச்சுலகில் வழக் கொழிந்துவிட்ட வடமொழியின் நிலையே தமிழுக்கும் ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு பேரிருள் சூழ்ந்து சீர்கெட்ட ஒரு சூழ்நிலை தான் பாரதி பிறக்கும்போது தமிழ் நாட்டில் நிலவியிருந்தது.

இதனுல் தமிழிலக்கிய உலகமானது, அன்று ஒரு பெரிய மாறுதலை, ஆக்கம் நோக்கிய முன்னேற்றத்தை, கிளர்ச்சிமிக்க மறுமலர்ச்சியை, மொழி அடிமைத்தனத்தை நீக்கித் தாய்மொழிப் பற்றினை ஊட்டும் பேருணர்ச்சிப் பேற்றை எதிர்நோக்கிக்கொண் டிருந்ததென்பதை நாம் தெளிவாக உணரமுடிகின்றது. இந்தத் தாழ்வுநிலை தமிழ்மொழி ஒன்றுக்கு மட்டுமன்றி அரசியல் அடிமை யால் அல்லலுற்று வலியிழந்து கிடந்த இந்தியப் பழம்பெரும் மொழிகள் எல்லாவற்றுக்குமே பொதுவாயிருந்தது எனலாம். அந் நியர் ஆதிக்க காலத்தில் வளர்ந்துவந்த இத்தகைய சூழ்நிலை யானது, காலநிலையிலே பண்பட்டு வளர்ந்து செயற்கரிய செயல் புரியும் பேராற்றல் வாய்ந்த தெய்வீகப் புலவர்களாலன்றிச் சாதா

ரணமான ஓரிரு புலவர்களாற் செப்பனிடக்கூடியதன்று என்ற பேருண்மையைப் பல நாட்டு வரலாறுகளிலிருந்தும் நாம் அறிகின்றோம்.

அவ்வாறான பேராற்றல் கொண்டு பிறக்கும் புலவர்பெருமக்களையே 'வரகவி' என்று உலகு கொண்டாடுகின்றது. இந்திய நாடு முழுவதும் மொழிநலம் கெட்டு, மக்களது நாகரீக வாழ்வு சீரழிந்து, நாட்டினைப் பொலிவுசெய்து விளக்கவல்ல கலையானது கொலையுண்டு குற்றுயிராய்க் கிடக்கும் நேரத்திலே பல்வேறு வரகவிகள் தோன்றலாயினர். வடநாட்டிலே வரகவி ரவீந்திரநாதர் தோன்றி வங்கமொழி இலக்கியத்திலே ஒரு பொற்காலத்தைப் படைத்தார். உருதுமொழி, கவி இக்பாலின் வரவால் மறுமலர்ச்சி கண்டது. கவி வள்ளத்தோல் பிறந்து மலையாள மொழியை அணிசெய்தார். இவர்களையொப்பத் தமிழகம் தோற்றுவித்த வரகவிதான் நமது சுப்பிரமணியபாரதியார். இங்ஙனம் தோன்றிய பாரதியார் 'தாழ்வுற்று நின்றதாமோர்' தமிழின் சீர்கேட்டைச் சரிவர உணர்ந்தார். எளிய, இனிய சொற் புணர்ப்புகளால், புதிய புதிய சந்தங்களையும், மெட்டுகளையும் அமைத்துப், பொதுமக்களுக்கும் விளங்கும் மொழிநடையிலே, உயர்ந்த புலவர்களின் தரத்திற் சற்றும் குறையாதபடி சுவை நிறைந்த தமிழ்க் கவிதைகளைப் புனைந்து அளிக்கலாயினர். பொதுமக்களுக்கு அன்று தேவைப்பட்டிருந்ததான தேசீயக்கருத்தை மிகுதியும் சிறப்பித்து அவர் பாடினமையால் மக்களின் சுதந்திர உணர்ச்சி தூண்டப்பட்டது. தமிழ்க் கவிதையால் சுதந்திரப் போர்ப்பறை முழக்கிய பாரதியாரும், அதனால் இந்தியாவின் தேசீயக் கவியென்றே புகழப்படலானார். அவர் இயற்றிய தோத்திரப் பாடல்களிலும், கண்ணன் பாட்டு, குயிற் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய காவியங்களிலும்கூடத் தேசீயக் கருத்து நுழைந்து சென்றுகொண்டிருந்தது. சங்ககாலத் தமிழையும், பிற்காலத் தமிழையும் இடைநின்று இணைக்கும் பாலம் போன்று விளங்கினர் பாரதியார். அவரது தோற்றத்தால் "மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்ற வசை நீங்கி "என்றுமுள தென்றமிழ்" என்று தமிழும் சாகாவரம் பெற்றுவிட்டதென்று சொல்லக்கூடியதாயிற்று. பண்டைய காலநிலை ஒன்றிலே வேற்றவர் வரவாலும், பண்பாட்டுக் கலப்பாலும், தமிழும், தமிழினமும் கெட்டழிந்துவிடாதபடி தமிழிலே பொதுமறை பாடித்தந்த தெய்வப் புலவனான வள்ளுவனது பரம்பரையில் இவ்வாறு தோன்றித் தமிழை அணிசெய்த தெய்வப் புலவன் நமது வரகவி சி. சுப்பிரமணிய பாரதி.

'தேசியகவி' என்று காலம் அப்போது அவரைப் போற்றினு லும் சிறந்த காவியங்களையும் படைத்தளித்த மகாகவி என்று உலகம் இன்று அவரைக் கொண்டாடுகின்றது. கண்ணன்பாட்டு, குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பன அவரது தனிச்சிறப் புடைய காவியப் படைப்புகள். அவற்றுள் இலக்கிய நலமும், பத்தி நயமும் கனிந்த கண்ணன்பாட்டு தனித்தனி செய்யுட்களானமைந் தது. மற்றைய இரண்டும் தொடர் நிகழ்ச்சிகள். வேதாந்தக் கருத்துகளை உட்பொருளாகக் கொண்டு எழுந்த கற்பனைச் சித்தி ரம் குயிற்பாட்டு. பாரதக் கதைப்பகுதி ஒன்றனைப் பொருளாகக் கொண்டு, பெண்களை அடிமைகளாக மதித்தல், அடிமை ஆட்சி மோகம் முதலான அக்காலச் சமூகச் சீர்கேடுகளை விளக்கி, விடு தலை வேட்கையை மக்களுள்ளத்திற் பிறப்பித்து, இறுதிவரை அத னைக் கைவிடாது காத்தற்கான சபதங்களைச் செய்வித்துத், திரு வருட் பெருமையினையும், விதியின் வலிமையையும், நிலையான வெற்றியை இறுதியில் பெறுவது தருமமே என்ற உண்மையையும் வலியுறுத்திச், சத்திய மார்க்கத்திலே மக்களை வழிநடத்தத் தூண்டு தற் பொருட்டாக எழுந்தது 'பாஞ்சாலி சபதம்'. இந்நூலைப்பாடிய பெருஞ்சிறப்பால் மகாகவிகளின் வரிசையில் வைத்துப் போற்றப் படுகின்ருர் பாரதியார். வேதகால முனிவர்களாகிய புலவர் பெரு மக்களுக்குப் பிறகு, பெண்ணினத்தைத் திருவருட்சத்தியின் வடிவ மாகக் கண்டு கவிதைபாடிய ஒரே ஒரு சத்திதாசன் கவிஞர் பாரதியார்தான். அவரது தோற்றமானது, இவ்வாறு தமிழ்க் கவி தைக்கடலின் பல்வேறு துறைகளிலும் நல்லதோர் மறுமலர்ச்சியை உண்டாக்குவதாயிற்று.

## 2. பாஞ்சாலி சபதத்தின் காவியப் பண்பு.

காவியம் என்ருல் பேரிலக்கியம் என்று பொருள்படும். தமிழிலும், வடமொழியிலும் காவியங்கள் பல உள்ளன. எனினும் காவியத்துக்குரிய இலக்கணங்களனைத்தையும் வரையறுத்துக் காட்டும் நூல்கள் இங்குக் காணப்படவில்லை. காவியம் எப்படி அமைதல் வேண்டும் என்பதைத் தண்டியாசிரியர்தான் தமது அணியிலக்கணத்தில் ஒருவாறு குறிப்பிட்டுள்ளார். தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களும் புலன்கொளக் கூறுவது காவிய அமைப்புக்குச் சிறப்பாக வேண்டப்படுவதாகும் என்பது அவர் கருத்து பழைய தமிழ் இலக்கணகாரர் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைவு என்பனவாகப் பேரிலக்கியங்களை வகைப்படுத்தி வைத்திருக்கின்ருர்கள். ஜேர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மேற்புல மொழிகளிலே காவியங்கள் பல உள்ளன. காவியத்தின் கதைப்போக்கு, வருணனை, இடைக்கதைகள் என்பன எல்லாம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை விளக்கும் தனி நூல்களும் பல அம்மொழிகளில் எழுந்துள்ளன. கீழைத் தேயப் பேரிலக்கியங்களில் நூலமைப்பு முறைபற்றிய கொள்கையிலும் பார்க்க, உயர்ந்த இலட்சியங்கள் நாற்பொருளாக அமைதலே, காவியத்துக்கு வேண்டும் பொதுவான சிறப்பாக எங்கும் போற்றப்பட்டிருக்கின்றது. இது, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளில் ஒன்று குறைவுறக்கூறும் நூலையும், பெருங் காப்பிய வரிசையினின்றும் இறக்கிச் சிறுகாப்பியம் என்று வகைப் படுத்தியிருத்தலிலிருந்து நன்கு தெளிவாகின்றது.

உலகம் என்ற சோதனைச்சாலையில் மனித உள்ளம் என்ற கருப்பொருளைச் சோதனையிடும் விஞ்ஞானிகளே கவிஞர்கள். அவர்கள் செய்யும் ஆராய்ச்சி முடிபுகளே பேரிலக்கியங்களின் பல்வேறு இடங்களிலும் வந்து படியும் உண்மைகள். கடலை நோக்கி வற்ருது ஓடிக்கொண்டிருக்கும் கங்கையாற்றைப் போன்று சிறந்த இலட்சியம் ஒன்றை நோக்கி ஓடிக்கொண்டிருப்பது மகாகாவியம். அந்த இலட்சியத்தின் கிளையிலட்சியங்களாக, பலநூறு உண்மைகள் கதைப்போக்கிலே வரும் நிகழ்ச்சிகளாலும் கதாபாத்திரங்களாலும் விளக்கப்படுகின்றன. உலகமாகிய இந்தச் சோதனைச்சாலையிலே ஒரு பேரிலட்சியத்தைத் தேடிப் பாரதியார் செய்த ஆராய்ச்சியின் பயன்களையே பாஞ்சாலி சபதத்தின் படிப்பினைகளாக நாம் காண்

கிறேம். தன்னிலேயிலிருந்து சிறிதும் தளராத நன்மை, அந் நன்மையினை எரித்து அழித்துவிடச் சூழ்ந்துவரும் பாவம், இரண்டும் மோதிப் போரிடக்கண்டு தலைமை வீற்றிருக்கும் தர்மநீதி, இம் மூன்றின் கலப்பாலும் உண்டாகின்ற பல்வேறு சிக்கல்கள் என்பவற்றை நாம் பாஞ்சாலி சபதத்திற் காண்கின்றேம். பாவத்தின் வழியில் துரியோதனனேடு தொடர்ந்து சென்று முடிவில் பாவத்தையும் அதனை இழைக்கும் துரியோதனனையும் வெறுக்கக் கற்பிக்கின்றது பாஞ்சாலி சபதம். தருமனேடு சேர்ந்து இலட்சிய வாழ்வில் நம்மை அது பங்குகொள்ளச் செய்கின்றது. நமது உள்ளத்திலே பதுங்கிக் கிடக்கும் துரியோதனனையும் சகுனியையும் கண்டு வெட்கமடைகின்றேம். தருமனுக்கும், தம்பியருக்கும் கிடைத்த புகழ்மொழி, இறுதியில் பாஞ்சாலி கண்ட வெற்றிப் பெருமை ஆகிய அனைத்தையும் நாமே பெற்றுவிட்டதுபோல் நமது மனம் நிறைவுகொள்ளுகின்றது. தீமையைத் தொட்டுவிடாமலே தீமையோடு நட்புக்கொள்ளும் உரிமையை நாம் இக்காவியத்திலே அடைகின்றேம். உலகமாகிய சிறு கூண்டிலிருந்துகொண்டே வானத்தைப்பற்றிய கேள்விகளுக்கு விடைகள் தெளியச்செய்வது மகாகாவியம். பாஞ்சாலி சபதம் அப்பணியிலும் தவறவில்லை. மகாபாரதம் என்ற பேராற்றில் பாஞ்சாலி சபதம் என்பது சிறிய ஒரு பகுதியேயாயினும் மிக அழகிய ஒரு படித்துறைபோன்று அது விளங்குவது. வைரக்கல்லின் ஒளியும் சிறப்பும் அக்கல்லைத் தூய்மை செய்பவன் தீட்டுகின்ற ஒவ்வொரு சிறு வெட்டிலும் புலப்படுவதுபோன்று, மகாபாரத காவியத்தின் பெரிய காவியப்பண்பே பாஞ்சாலி சபதத்தில் ஊடுருவி நின்று புலப்படுகின்றது எனலாம்.

நமது காவியங்களில் தன்னிகரில்லாத் தலைவன் ஒருவனே காவிய நாயகனுக அமைகின்றுன் என்று கண்டோம். அவனது வாழ்க்கை ஒரு சமுதாயத்தையே தொடக்கூடியதாக அமைவது சிறந்த ஒரு பண்பு. அவனைச்சுற்றியே காவியக்கொடி படரும். இராமன் என்ற காவிய நாயகன் வனம் செல்கின்றுன் என்றுல் உலகம் முழுவதுமே அதற்காக வருந்துகின்றது. தருமனுக்கும் தம்பிமாருக்கும் ஏற்பட்ட தோல்வி, பாஞ்சாலிக்கு இழைக்கப்பட்ட அநீதி என்பவற்றைக் கண்டு அனைவருமே கண்ணீர் விடுகின்றுர்கள். வீமனும், பாஞ்சாலியும் சபதம் செய்யும்போது நாமும் கூடவே சேர்ந்து ஒவ்வொரு சபதம் எடுக்கும் மனப்பாங்கினைப் பெற்றுவிடுகின்றேம். இவ்வாறு சமுதாயத்தைத் தொட்டு நிற்கும் சிறப்புவாய்ந்த காவிய நாயகனது வாழ்க்கையோடுதான் காவிய

மாளிகையும் அழகுற வளர்ந்து அமைகிறது. கலைவல்லானொருவன் அமைக்கும் மாளிகை போன்றது காவியம் என்பதைப் பாரதியாரே ஒப்புக்கொள்ளுகின்றார். அவருடைய கற்பனையிலே துரியோதனன் கட்டிய மாளிகையானது "சுந்தரமாம் ஒரு காப்பிய"மாக உரு வெடுக்கின்றதிலிருந்து இதனை நாம் அறியலாகும்.

பாரதக்கதையில் தருமமே காவிய நாயகனாக ஆட்சிபுரிகின்றது. திருவருட்டுணை அதற்கு என்றும் இருக்கக் காண்கின்றோம். வடிவிலும் வாழ்க்கையிலும் தருமம் வெளிப்பட்டு நிற்கின்றது; பாஞ்சாலி சபதத்திலும் அதே தருமம்தான் காவிய நாயகனாக விளங்குகின்றது. ஆனால் பாஞ்சாலியின் வடிவத்தில் அதனை நன்கு புலப்படச் செய்கின்றார் பெண்மைக்கு முதன்மை அளிக்கும் பெருங் கவிஞரான பாரதியார். ஆண்குலம் பெண்ணினத்தை விலங்கு களைப்போல் நடத்துகின்ற கொடுமையை வெறுக்கும் அவருடைய உள்ளக்கொதிப்பும் வெளிப்படுதற்கேற்ற கதாநாயக பாத்திரமாகத் தோற்றமளிக்கிறாள் பாஞ்சாலி. தாய்க்குலத்துக்குத் தீங்கிழைத்தால், அக்குலம் சீற்றம் கொண்டால் உலகமே அழிந்தொழியும் என்றும், திருவருள் எப்போதும் அவர்களுக்கே துணை நிற்குமாதலால் அவர்களிடும் சாபமானது தீங்கிழைப்போர் குலத்தை வேருடன் அறுத்தொழிக்கும் என்றும் வலியுறுத்துதற் கெழுந்த பாஞ்சாலி சபதமாகிய காவியத்துக்கு ஏற்ற பாத்திரமாகப் பாஞ்சாலியைப் படைக்கின்றார் பாரதியார். மனித குலத்துக்கே பெருமைதர வந்த வீரர்களும், தருமநெறியினை நன்கு பயின்றோருமாகிய பாண்டவர் தருமத்தின் பிரதிநிதிகளாக விளங்குகின்றனர். கௌரவர்களோ அதர்மத்தின் கட்சியில் அங்கம் வகிப்போர்; பொறாமையின் சின்னங் களானவர். பாண்டவர்களுக்குக் கேடுசூழ்வதன்மூலம் தருமத்தையே குழிதோண்டிப் புதைக்கத் திட்டமிடுகின்றனர். 'தருமத்தின் வாழ் வதனைச் சூது கவ்வு' கின்றது. நாடு, நகர், செல்வம் அனைத்தினும் மேலான சுதந்திரம் என்பவற்றையெல்லாம் இழந்துவிடுகின்றார்கள் பாண்டவர்கள். 'பாஞ்சாலன் குலவிளக்கு'க்குத் தீங்கு இழைக்கப் படுகின்றது.

தரும புத்திரர்களாகிய பாண்டவர்களுக்கு ஏன் இந்தக் கொடுமை? கற்பின் செல்வியாகிய பாஞ்சாலிக்குற்ற கொடிய சோத னைக்குக் காரணமென்ன? இந்தக் கேள்விகள் நூற்போக்கிலே நம் முள்ளத்தில் எழுப்பப்படுகின்றன. 'விதியின் கொடுமை' என்கின் றது விடைக்குரல் ஒன்று. 'கடவுளே இல்லை; தருமம், அதருமம் என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதை' என்கிறது இன்னொரு குரல்.

'நீதியும், சாத்திரமும் என்று இருக்குமானுல் இப்படி நிகழுமா?' என்று அவற்றில் நம்பிக்கை இழந்து கூறுகிறது வேருெரு குரல். இவற்றின் நடுவிலே நம்மைத் திக்குமுக்காடச் செய்கின்ருர் பாரதியார். உண்மையை நாம் தேடுகின்ரேம். தருமத்துக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதானு? அதருமத்தின் கொடிய நெரிப்பிலிருந்து தருமத்தின் குரல்வளைக்கு விடுதலை கிடைக்குமா? கிடைக்குமென்ருல் அது எப்போது? சாகும்வரை அதற்காகக் காத்திருக்க வேண்டுமா? இங்கே இக்கேள்விகள் அனைத்துக்கும் தமது 'பாஞ்சாலி சபதம்' என்ற காவியத்தில் விடை கூறுகிருர் பாரதியார். அவர் கூறும் விடைகளின் வலிமையே, இக்காவியமாகிய தூண்டாவிளக்கு அணையாது நின்று எரிவதற்கு வலிவூட்டும் வற்ருத நெய்யாகிப் 'பாஞ்சாலி சபத'த்துக்கு மங்காப் புகழ் ஊட்டுகின்றது.

இறை வணக்கத்தோடு தொடங்கும் நூலில் எல்லாக் காவியங்களையும் போலவே நாடு நகர வருணனைகள் இடம்பெறுகின்றன. பாரதப்போரின் வித்துக்கள் தூவப்பெற்ற, அத்தினபுர நகரம் நிச்சயமாகப் பாவத்துக்கு இடமளித்திருக்க வேண்டும் என்று கண்ட பாரதியார், அழகிய நகர வருணனையின் முடிவில் அங்குக் "கலிசெய்யு மறமும் உண்டாம்" என்று கூறிவிடுகின்ருர். பாரதப் போரின் அடிப்படைக் காரணமான, பொருமையும், அது தளிர்விடும் நிலைக்களனுக அமைந்த யாகச் சிறப்பும் நீண்ட விளக்கம் பெறுகின்றன. மாலை வருணனைப் பகுதி பாரதியார் தாம் இயற்கையின்பத்தில் திளைக்குமாறு நம்மையும் திளைத்து இன்புறச் செய்கின்ற ஒன்று. இப்பாடல்கள் காவிய நலத்துக்கு இன்றியமையாதனவாய், நெடுங் கதைப்போக்கினின்று நம்மைத் தனிமைப்படுத்தி, இளைப்பாறச் செய்து, 'பாஞ்சாலி சபதம்' என்ற காவியத்திலே கிளைக் கதைகள் இல்லாத குறையை நீக்கி நிறைவுசெய்து நிற்கின்றன.

இதுவன்றி, 'பாஞ்சாலி சபதத்தில்' வரும் கதாபாத்திரங்கள் எல்லாம் உயர்ந்த முறையில் வடித்தமைக்கப்பட்டிருத்தலையும் காண்கின்ரேம். "விதி, விதி, விதி, விதி, விதி மகனே" என்று அழுது கொண்டே சூதாட்டத்துக்கு அனுமதி தரும் திருதராட்டிரன், "போச்சுது; போச்சுது, பாரத நாடு; போச்சுது, போச்சுது நல்லறம்" என்று புழுங்கித் துடிக்கும் விதுரன்; "எரி தழல் கொண்டுவா கதிரைவைத் திழந்தான் கையை எரித்திடுவோம்" என்று உளம் கொதித்துக் கூறும் வீமன், "கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்" "தனுவுண்டு காண்டீபம் அதன் பேர்" என்று காலத்திலும், வீரத்திலும் நம்பிக்கை தெரிவிக்கும் அர்ச்சுனன் முதலிய யாவருமே அற்

புதமான வடிவம் பெறுகின்றனர். பாரதியாருடைய கற்பனை உள்ளமான்து இவர் ஒவ்வொருவரது குணநலத்திலும் தோய்ந்து துள்ளிக் குதிக்கின்றது. பாண்டவர் துயரமும் அவர்க்கிழைக்கப்பட்ட தீங்கும் உலகத்தையே பாதித்துவிடும் என்று அவர் பாடியிருக்கும் கவிதைப் பகுதி 'பாஞ்சாலி சபத'த்தின் காவிய இலக்கினை அழுத்திக் காட்டுகின்றது.

இவ்வாறு காவியப் பண்பனைத்தும் கனிந்து விளங்கும் பாஞ்சாலி சபதமானது அற்புதமான ஓரங்க நாடகம் போன்று நடந்து உணர்ச்சிகளின் உச்சத்தில் நம்மைச் சேர்த்து முடிவடைகின்றது. உரிந்திட, உரிந்திட வளர்ந்து கொண்டேவரும் வன்னத் துகிலுக்கு உவமை கூறும் முகத்தால் நூலின் உயர்ந்த படிப்பினையையும் இறுதியில் நமக்கு ஊட்ட முயல்கின்றார் பாரதியார். 'பொய்யர் தம் துய'ரும் 'புண்ணியவாளர் தம் புக'ழும் குறையாது வளர்ந்துகொண்டே செல்வனவாம். அதர்மத்தின் கட்சியைச் சேர்ந்த கௌரவர் பொய்யராகவும், தருமத்தின் உறுப்பினரான பாண்டவர் நல்ல புண்ணியவாளராகவும் படைத்துக் காட்டப்படுகின்றனர். துகில் வளர்ந்து செல்லும் வியப்பில் நாம் மூழ்கிக்கிடக்கும்போது, வீமனும், அர்ச்சுனனும் செய்யும் சபதக்குரலின் வீரகர்ச்சனை ஒலி கேட்கின்றது. மறக் கற்பினளான துருபதன் செல்வம், திட்டத்துய்மன் உடன்பிறப்பு, பெண்குலத் துரோகிகள் அழிவுறச் சபதம் செய்கின்றாள். உண்மையில் பாரதியாருடைய உள்ளச் சபதமும் அதுவேதான். இயற்கையனைத்தும் அவளது சபதம் நிறைவேறுவதற்குத் தம் உடன்பாட்டைத் தெரிவிக்கின்றன. ''ஓம், ஓம்'' என்று உறுமுகின்றது வானம்! பூமி அதிருகின்றது! பெரிய சுழல் காற்று எழுந்து விண்ணைப் பூழிப் படுத்துகின்றது! அவ்வளவில் பாரதியாரும் கதையை முடித்துக் கொண்டு நம்மைவிட்டு மெல்ல நழுவுகிறார்.

'பாஞ்சாலி சபதம்' இருபதாம் நூற்றாண்டின் ஈடிணையற்ற ஒரு காவியப்படைப்பு. அளவிலே சிறியதாயினும் பண்புகளால் உயர்ந்த ஒரு காவியம்.' வருங் காலத்திலே தமிழில் எழவிருக்கும் காவியங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்திருக்கும் பாஞ்சாலி சபதம், பாரதியாரின் உள்ளத் தெழுந்த சபதங்களின் எதிரொலியாய்ப் பழைய கதையொன்றின் மூலம் புதிய கருத்துக்களை ஆசிரியர் வெளிப்படுத்தியிருக்கும் பெருஞ் சிறப்பைக் காட்டுவதாய் விளங்குகின்றது.

## 3. கதைப்போக்கும் நூலமைப்பும்.

பாரதக் கதையுள் ஒரு சிறு பகுதி பாஞ்சாலி சபதம். ஆயினும் அக்கதை முழுவதற்கும் உயிர்நாடியாக இருப்பது அப்பகுதியேதான். பாரதக் கதையின் மூல ஆசிரியர் வியாச முனிவரென்றும், அவர் அக் கதையை வடமொழியில் எழுதினரென்றும் கூறுவர். அதனை யொட்டியே பாரதம் தமிழில் எழுதப்படலாயிற்று. தமிழ் மொழியில் முதன் முதலில் உரையும் பாட்டுங் கலந்த சம்புநடையில் பாரதத்தை ஒரு புலவர் யாத்திருக்க வேண்டுமென்று தொல்காப்பிய உரையால் தெரிகின்றது. பின்னர் பாரதக் கதையைப் பெருந்தேவனர் வெண் பாவிற் பாடினரென்பர். இன்று பாரதவெண்பாவிலே 13-ம் போர்ச் சருக்கம் முடிய உள்ள பகுதி மட்டுமே கிடைத்திருக்கின்றது. மற் றைய பகுதி அழிந்துபோயிருக்கலாம்; அன்றி அவரால் எழுதப்படா மல் விடப்பட்டிருக்கலாம். பின்னர் விருத்தயாப்பிலே வில்லி புத்தூ ராழ்வாரும், நல்லாப்பிள்ளை என்பாரும் பாரதக் கதையைத் தமிழில் பாடியிருக்கின்றனர். பின்னவரது நூல் மிக்க விரிவான ஒன்று. மொழிநடையாலும் செய்யுட் சிறப்பாலும் உயர்ந்ததாய்ப் பொது மக்களிடையே நன்மதிப்பினைப் பெற்றுள்ளது, வில்லிபுத்தூரார் செய்த பாரதமேயாகும். அச்சிறப்பினால் வில்லிபுத்தூராரது பாரதம் மகாபாரதம் என்று தமிழ் மக்களிடை வழக்கேறி விட்டது.

அம் மகாபாரதத்தின் முதற் பகுதியுள்ளே சூது போர்ச் சருக்கம் என ஒரு பகுதி உள்ளது. சூதாட்டமும் அங்கு ஒரு போரேயாகின் றது. தருமர் சகுனியிடம் ஆடிய அப்போரில் தனது நாடு, நகர், அரசுரிமை யாவற்றையும், இறுதியில் தம்மையும் தோற்றுவிடுகிறார். அதனைத் தொடர்ந்து பாண்டவரும் பாஞ்சாலியும் கூறும் சபதம் அங்கு விளக்கம் பெறுகின்றது. அக்கதையினைத்தான் பாரதியார் பாஞ்சாலி சபதம் என்ற காவியமாகப் படைத்திருக்கின்றார். ஆயி னும் சூதுபோர்ச் சருக்கத்துள் இல்லாத சில செய்திகளும் பாரதி யாரது படைப்பினுள் இடம் பெற்றுள்ளன. பாரதத்துச் சூதுபோர்ச் சருக்கத்துக்கு முன்பு இராசசூயச் சருக்கம் என்றும் ஒரு பகுதி உள் ளது. அக்கதைப் பகுதி பாஞ்சாலி சபதத்தை நாம் நன்கு அறிந்து கொள்ளற்கு வேண்டியதாதலின் பாரதியார் அந்த யாகச் சிறப் பினைத் துரியோதனன், தனது மாமனை சகுனிக்குக் கூறுவதாகத் தமது காவியத்துள் நயமுறச் சேர்த்திருக்கின்றார். மாலை வருணனை முதலாகப் பாஞ்சாலி சபதத்துள் வருவன பாரதியாரது சொந்தச் சேர்க்கைகள். பாரதியார் பாஞ்சாலி சபதத்தைத் தமது நூற்பொரு

ளாகத் தேர்ந்தெடுத்தமைக்குரிய காரணத்தை ஒருவாறு முன்னர்க் கண்டிருக்கிறோம். அவர் தாம் புனையும் இக் காவியத்திற்கு வேண்டியதான நாடு நகர வர்ணனைகளை முறையே கூறிக் கதையை நடத்துகின்றார்.

மேலான பிரம்மத்தினையும், கலைமகளையும் துதித்து நூல் தொடங்கப்படுகின்றது. பின்னர் தொடருகின்றது அத்தினாபுர வர்ணனை. மாடமாளிகைகளும், தேரோடும் வீதிகளும், ஆவணச் சிறப்புகளும் பல்வகை மக்கட்கூட்டங்களும் நிறைந்தது அத்தினாபுரம். அத்தகைய நகரின் நடுவணமைந்தது துரியோதனனது ஆட்சி மன்றம். மந்திரி பிரதானிகளும் சுற்றத்தார் பலரும் விளங்கும் அம் மன்றத்தில் துரியோதனன் கொலுவிருந்து நாட்டை ஆண்டு வருகின்றான். அந்நாளில் தருமபுத்திரர் நடத்திய இராசசூய யாகத்திற்குத் துரியோதனனும் சென்றிருந்தனன். தருமனுக்கு அந்த யாகத்தின்போது மற்றைய அரசர்களால் கிடைக்கப்பெற்ற சிறப்புக்களைக் கண்ட துரியோதனனது மனம் பொறாமைத் தீயினால் வெதுப்புறுகின்றது. இப்பொறாமைதான் பாரதக்கதையின் வளர்ச்சிக்கே வித்தாயமைகின்ற ஒன்று. பொறாமை மேலும் மேலும் பொங்கி வளரவே துரியோதனன் மூர்ச்சித்து விழுகின்றான். இதனைக் கண்ட பாஞ்சாலி கலீரெனச் சிரிக்கின்றனள். அதுகண்ட துரியோதனனது பொறாமை கோபமாக மாறுகின்றது. அரவக்கொடியோன், பாண்டவரை எப்படியும் வெற்றிகொண்டு தன்னை நகைசெய்த திரௌபதியை மானபங்கப்படுத்துதலும் வேண்டும் என்று மனத்துள் சபதமெடுத்துக் கொண்டனன். யாதும் நிறைவேறிய பின் தன் வீடுசென்ற துரியோதனன், சகுனியிடம் இராசசூயத்தின்போது தருமன் பெற்ற சிறப்புக்களையெல்லாம் பொறாமைக்குரலினால் வெளிப்படுத்துகின்றான். தான் மூர்ச்சையாகி விழுந்த நிகழ்ச்சியையும் அக்கொடிய மாமனிடம் கூறுகின்றான். தனது மனமுடிபையுங் கூறி, எப்படியாவது பாண்டவர்களைக் கீழ்மைப்படுத்த வழியும் கேட்கின்றான்.

> "முச்சையடைத்ததடா! சபைதன்னில் விழுந்து நான்—அங்கு
> மூர்ச்சையடைந்தது கண்டனையே! என்றன் மாமனே! [அந்த
> ஏச்சையும் அங்கவர் கொண்ட நகைப்பையும் எண்ணுவாய்; —
> ஏந்திழையாளும் எனைச் சிரித்தாளிதை எண்ணுவாய்;
> பேச்சை வளர்த்துப் பயனொன்று மில்லை, என் மாமனே —அவர்
> பேற்றை அழிக்க உபாயம் சொல்வாய், என்றன் மாமனே
> தீச்செயல் நற்செயல் ஏதெனினும் ஒன்று செய்து, நாம்—அவர்
> செல்வங் கவர்ந்தவ ரைவிடவேண்டும் தெருவிலே"

என்று பாரதியார் அப்பகுதியை அழகுறச் சித்திரித்துள்ளார்.

கேட்டுக்கொண்டிருந்த சகுனி அதற்கோர் உபாயங் கூறுகின்ருன். புதிதாக ஒரு மண்டபம் அமைத்து அதிற் குடிபுகும் விழாவிற்கு வருமாறு பாண்டவரை அழைத்து, அவரைத் தன்னேடு சூதாடவும் இணங்குவித்தால், தான் துரியோதனன் கருதியதை முடித்துக் கொடுப்பதாகக் கூறுகிருன். மகிழ்ந்த துரியோதனன் சகுனியின் யோசனையை மெச்சி,

''எங்கும் புவிமிசை உன்னைப்போல், இல்லை இனியது சொல்லுவோர்''

என்று அவனை மார்புறத் தழுவிக் கொண்டாடுகின்ருன்.

இந்தச் சதி நிறைவேற்றப்படுதற்கு, திருதராட்டிரனுடைய உடன்பாட்டைப் பெறுதல் அவசியமாகும். அதையும் பெற்றுவிடலாமென்று சகுனி மருமகனையும் அழைத்துக்கொண்டு செல்கின்ருன். ஆனுல் திருதராட்டிரன் இலகுவில் அதற்கு இணங்கிவிடவில்லை. மென்மொழியாலும் வன்மொழியாலும் மைந்தன், தந்தையை மோதுகின்ருன். திருதராட்டிரனது நற்குணங்கள் பல அங்கு நடந்த உரையாடலிலிருந்து புலப்படுகின்றன. மனம் சற்றும் இணங்காத திருதராட்டிரனை நோக்கித் துரியோதனன் ''அஃதியற்ருயேல்...... ஐய நின் முனர் என்சிரங்கொய்தே நானிங் காவி இறுத்திடுவேனுல், செய்யலாவது செய்குதி'' என்ருன். அதைக் கேட்டதும் திருதராட்டிரனது நெஞ்சம் உடைந்தது. விதியின்வலி இதுவென்று கண்ட திருதராட்டிரன் மனவருத்தத்தோடு ''விதி! விதி! விதி! மகனே — இனி வேறெது சொல்லுவன் அடமகனே'' என்று வழியும் கண்ணீரோடு அவர்களது திட்டத்துக்கு அனுமதியளித்தான்.

மண்டபம் எழும்புகின்றது. பாண்டவர் செய்த இராசசூய யாகத்து மண்டபத்தையும் விஞ்சும் சிறப்போடு அது அமைதல் வேண்டுமென்பது துரியோதனனது திட்டம். அப்படியே அமைந்த மண்டபத்தினை எல்லா வனப்புகளும் நிறைந்த பேரிலக்கியம் ஒன்றனுக்கு உவமையாக்கி ''சுந்தரமாம் ஒரு காப்பியம் செய்தார்'' என்று வர்ணிக்கிருர் பாரதியார்.

பாண்டவருக்குரிய அழைப்பைக் கொண்டுசெல்ல வேண்டிய பொறுப்பு விதுரன்பால் வருகிறது. நடக்கப்போகிற கொடுமையைக் கேட்ட விதுரன் ''போச்சுது! போச்சுது பாரத நாடு! போச்சுது நல்லறம்! போச்சுது வேதம்!, என்று கதறுகிருன். இருந்தும் என்ன! இறுதியில் அவனே தூதுசென்று யாவற்றையும் பாண்டவர்க்கு உரைக்கவேண்டியதாயிற்று. அத்தினபுரத்திற்குச் செல்வது கூடாது என்று மறுத்துக்கூறிய தம்பியரைக் கையமர்த்தி, ''தந்தையும் வரப்

பணித்தான்; சிறுதந்தையும் தூதுவந்ததை யுரைத்தான்; சிந்தை ஒன்றினியில்லை. எது சேரினும் நலம் எனத் தெளிந்து விட்டேன்.'' என்று முடிவுகட்டுகிறன் தருமன். பாண்டவர் பரிசனங்களும் படைகளும் சூழ அத்தினபுரம் செல்லலாயினர். இடைவழியிலே பொழுது மறைகின்றது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கவிஞர் அழகிய மாலை வருணனைப் பகுதியொன்றை நம்முன்னே படைத்துவிடுகின்றார். அருச்சுனன் என்ற கலைஞன், தன் காதலியாகிய பாஞ்சாலிக்கு சூரியன் அத்தமனமாகும் எழிலைக் காட்டி வருணிப்பதாக உள்ளது அப்பகுதி. மறுநாள் மன்னவன் சபையில் பாண்டவர் நன்கு வரவேற்கப்படுகின்றனர்.

இராச சபையில் யாவரும் இனிதமர்ந்திருக்கும்போது சகுனி தருமனைத் தன்னுடன் சூதாடவருமாறு அழைக்கின்றான். சூதின் தீமைகளைக் கூறி அதற்கு மறுத்துரைத்த தருமனைப் பழிக்கின்றான் சகுனி. இறுதியில் தருமன் இணங்கவேண்டிய நிலை வருகின்றது. பாரதியார் உள்ளம், தருமனது இந்த மாற்றத்துக்கும் விதியேதான் காரணமாகும் என்கின்றது. ''மெய்யறிந்தவர் தம்முளுயர்ந்தோன் விதியாலுல் அத்தருமனும் வீழ்ந்தான்'' என்று உள்ளம் விம்ம இக் காட்சியை அவர் சித்திரித்து வைத்திருக்கின்றார். தருமனது கூற்றுக்களின் மூலம் சூதின் தீமை இப்பகுதியுள் நன்கு எடுத்துக் காட்டப் பட்டிருக்கக் காணலாம்.

புது மண்டபத்தின் நடுவிலே சகுனிக்கும் தருமனுக்கும் சூதுப் போர் தொடங்குகின்றது. துரியோதனன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. முறையே தருமன் தனது செல்வங்களனைத்தையும், நாடு, நகர், அரசுரிமையாவற்றையும் பணயம் வைத்துத் தோற்கின்றான். இனி மிஞ்சியிருப்பது தாங்கள் மட்டுந்தான். சகுனி இதனையும் நினைவூட்டவே தம்பியரையும் ஒவ்வொருவராகத் தோற்று இறுதியில் தன்னையும் வைத்தாடி இழந்துபோகின்றனன். சகுனி அவ்வளவோடு நின்றுவிடவில்லை. திரௌபதி மிஞ்சியிருப்பதை நினைவூட்டி அதிட்டசாலியான அவளை வைத்தாடுமாறு தூண்டுகின்றான். விதியினால் மதிமயங்கிய தருமனும் ஒருப்பட்டு அவ்வாறே பாஞ்சாலியைப் பகடையில் வைத்து ஆடுகின்றனன். அதிலும் தருமனுக்குத் தோல்வியே கிட்டுகின்றது.

திரௌபதியையும், சகுனி சூதிலே வென்றது பற்றித் துரியோதனன் கொண்ட மகிழ்ச்சிக்கோர் அளவேயில்லை. உடனே பாஞ்சாலியைச் சபைக்கு அழைத்துவருமாறு விதுரனுக்குக் கட்டளையிடு

கின்ருன். அதுகேட்டு இயற்கையனைத்துமே கலங்குகின்றது. விது ரன் அக் கொடுஞ் செயற்கு மறுத்ததோடு பாண்டவரை விடுதலை செய்யுமாறும் புத்தி புகட்டுகின்ருன். வெகுண்ட துரியோதன னுடைய கட்டளை ஒரு தேர்ப்பாகனிடம் மாறுகின்றது. அந்த ஏவலா ளன் சென்று நடந்ததைத் துரோபதைக்குக் கூறிச், சபைக்கு வரு மாறு அவளை அழைக்கின்றனன். சூதிலே தருமர் தாமும் தோற்ற பின்னர், தன்னை (பாஞ்சாலியை) வைத்து ஆட அவருக்கு உரிமை யில்லை என்பது பாஞ்சாலியின் மறுப்புரை. இதற்குத் துரியோதனனிட மிருந்து நல்விடைபெருத பாகன் மீண்டும் பாஞ்சாலியிடம் போக மறுக்கவே, துரியோதனனுடைய தம்பியாகிய துச்சாதனன் பாஞ்சாலியைச் சபைக்கிழுத்துவரும் பணியை மேற்கொள்கின்றனன்.

பாஞ்சாலி மறுத்துக்கூறிய நீதி வார்த்தை எதுவும் துச்சாதனன் செவிகளில் ஏறவில்லை. "அப்பெரு மூடன், பக்கத்தில் வந்தே அப் பாஞ்சாலி கூந்தலினைக் கையினுற் பற்றிக் கரகரெனத் தானிழுத் தான்." சபையில்வந்து விழுந்த பாஞ்சாலி நீதி கேட்டு அழுகின் ருள். தன்னைத் தோற்றபின்னும் தன் மனைவியைப் பணயம் வைக் கும் உரிமை தருமனுக்கு வழக்கப்படி உண்டு என்று வீட்டுமாச்சாரி யரும் சான்று பகருகின்றனர். பாஞ்சாலி துணையின்றிக் கதறு கின்ருள்.

வீமனுக்குக் கோபம் பொங்குகின்றது, தருமன் பாஞ்சாலியைச் சூதில் பணயம் வைத்தது பிழை என்று அவன் முழங்குகின்ருன். கோபவெறிகொண்ட அவனது வாயினுல், பாரதியார் பெண்மையை அடிமைசெய்த தருமனது கைகளை எரித்துவிட நெருப்புத் தேடு கின்ருர்.

"துருபதன் மகளைத்—திட்டத் துய்ந னுடன்பிறப்பை,
இருபகடை யென்ருய்,—ஐயோ! இவர்க்கடிமை யென்ருய்!
இது பொறுப்பதில்லை,—தம்பி! எரிதழல் கொண்டு வா
கதிரை வைத்திழந்தான்—அண்ணன், கையை எரித்திடுவோம்."

என்கின்றது அவரது ஆவேச உள்ளம். இவ்வாறு கூறிய வீமனை அருச்சுனன் திருத்தி, "தனுவுண்டு காண்டீபம் அதன் பேர்; கட் டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்" என்று கையமர்த் தினன். துரியோதனன் கட்சியிலிருந்துங்கூட அவ்வேளையில் நீதிக் குரல் ஒன்று கேட்கின்றது. துரியோதனனது இன்னெரு தம்பியான விகர்ணன் திரௌபதியை இராச சபைக்கு இழுத்தது பிழையென் கின்ருன், கர்ணன் அவனையடக்கிவிட்டு மேலாடையணியும் வழக்

கம் அடிமைகட்கு இல்லையாதலால் "பாண்டவர் மார்பிலேந்தும் சீரை யும் களைவாய்; தையல் சேலையுங்களைவாய்" என்றான். பாண்டவர் தாமே தம் மார்பைத் திறந்து துணியைக் கீழே போட்டனர். திரௌ பதியின் துகிலினைத் துச்சாதனன் உரியத் தொடங்கினான். ஆரு மற்றவளான பாஞ்சாலி அப்போது கண்ணனைப் பிரார்த்தனை செய்ய லானாள். "கண்ணா, மணிவண்ணா என்றன் மனச் சுடரே, ஐய, நின் பதமலரே — சரண்; ஹரி, ஹரி, ஹரி, ஹரி, ஹரி" என்றாள். அவ ளது வேண்டுதல் வீண்போகவில்லை. "பொய்யர் தம் துயரினைப் போல், நல்ல புண்ணியவாளர் தம் புகழினைப்போல், கண்ணபிரான் அருளால் தம்பி, கழற்றிடக் கழற்றிடத் துணி புதிதாய் வண்ணப் பொற் சேலைகளாம் அவை வளர்ந்தன வளர்ந்தன, வளர்ந்தனவே." கை சோர்ந்து துச்சாதனனும் விழுந்துவிட்டனன். இறுதியில் பெண்மை வெல்லுகின்றது. தருமத்தின் ஆட்சி தலை தூக்குகின்றது. தெய்வ அருள் நிலைநாட்டப்பெறுகின்றது. கட்டுண்டுகிடந்த ஆண்மை அவ்வேளை ஆவேசக்குரல் கொடுக்கின்றது.

கொதித்தெழுந்த வீமன், பாஞ்சாலியைத் தன் தொடைமீதிருத் தக் கேட்ட துரியோதனனின் தொடைகளையும், பாஞ்சாலியைத் துகி லுரிந்த துச்சாதனனின் கடைகெட்ட தோள்களையும் பிளந்து அவற்றி லூறும் இரத்தத்தைக் குடிக்கப்போவதாகச் சபதம் கூறுகின்றான். துகிலுரிதற்குக் காரணமாயிருந்த பாதகக் கர்ணனைப் போரில் மடிக் கச் சூளுரைக்கின்றான் பார்த்தன். முடிவில் பாஞ்சாலியும் ஒரு சபதம் எடுக்கின்றாள்.

"பாவி துச்சாதனன் செந்நீர் — அந்தப்  
பாழ்த்துரி யோதனன் ஆக்கை யிரத்தம்  
மேவி இரண்டுங் கலந்து — குழல்  
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே  
சீவிக் குழல் முடிப்பேன் யான் — இது  
செய்யுமுன்னே முடியே னென்றுரைத்தாள்."

அவளது ஆவேசக் கூற்றினை இயற்கையனைத்துமே ஆமோதித்ததாம்.

"ஓமென்றுரைத்தனர் தேவர் — ஓம்  
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்"

கதை நிறைவுறுகின்றது இவ்வளவில்.

கதைப்போக்கு, நிறுத்தத்திற்கு இடங்கொடாது நம்மைத் தூண் டிக்கொண்டே செல்லவல்ல விறுவிறுப்புடன் அமைந்திருக்கின்றது. அரிய உண்மைகள் பல இனிமை ததும்ப எடுத்துக் கூறப்பட்டுள்

ளன. கவிஞரின் ஆவேச உணர்ச்சி நூல் முழுவதும் நுழைந்து பரந்து கவிதைக்கு உயிர்த்துடிப்பைக் கொடுத்து நிற்கின்றது.

மகாபாரத ஆசிரியர் ஒரு சருக்கத்திற் கூறிய கதைப்பகுதி, பாரதியாருடைய கவிதைப் படைப்பிலே ஒரு காவியமாக விளங்குகின்றது. பாரதியார் இக் காவியத்தை இரு பாகங்களாகப் பிரித்துள்ளனர். முதலது தருமர் நாட்டை வைத்தாடித் தோல்வி பெறுவதோடு நிறைவுறும் அப்பாகம் அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம் என இரு சருக்கங்களைக் கொண்டிருக்கின்றது. நூலின் இரண்டாம் பாகமும் பராசக்தி, சரஸ்வதி வணக்கங்களோடு தொடங்கப்பெறுவது. அப்பாகத்தில் முறையே அடிமைச் சருக்கம், துகிலுரிதற் சருக்கம், சபதச் சருக்கம் என்ற மூன்று உட்பகுதிகள் உள்ளன. இரு பாகங்களையும், ஐந்து சருக்கங்களையும் கொண்ட இக் காவியமானது விருத்தப்பா, ஆசிரியப்பா, பலவகைச் சிந்துகள் என்பன கொண்டு முன்னூற்றெட்டுப் பாக்களால் நிறைவுறுவது, நான்காவதான துகிலுரிதற் சருக்கம் துகிலுரிதலைக் கூறுது திரௌபதியைத் தருமர் சூதில் இழத்தலையும், சபைக்கழைத்தபோது வருதற்கு அவள் மறுத்தலையுமே கூறுகின்றது. துச்சாதனன் பாஞ்சாலியைப் பிடித்து இழுத்துவருதல் முதலிய மிகுதிப் பகுதியாவும் சபதச் சருக்கத்துள்ளேயே காணப்படுகின்றன. பாஞ்சாலியைத் தொட்டிழுப்பதிலிருந்தே பாரதியாரது உள்ளத்திலிருந்த சபதங்கள் வெளிவரத் தொடங்குவதை நாம் காணலாகும். அதனுல் துகிலுரிதற்கு அவளை அழைக்கத் திட்டமிட்டதும் துகிலுரிதற்குச் சமமாகிவிட, சபதம் நிறைந்த துகிலுரிதற் பகுதி சபதச் சருக்கத்துள் இடம் பெற்றிருப்பதும் நூலமைப்பில் பொருத்தமாகவே தோன்றுகின்றது.

## 4. அத்தினபுரச் சிறப்புகள்

பாஞ்சாலி சபதத்திலே உள்ள வருணனைப் பகுதிகளுள் துரியோதனனது ஆட்சிமன்றம் அமைந்துள்ள அத்தினபுரச் சிறப்புகள் கூறப்படுவதும் ஒன்றாகும். தமிழ்க்காவியங்களின் மரபினை யொட்டிக், கடவுள் வாழ்த்தினை அடுத்து அத்தினபுர வருணனையைப் பாரதியார் அமைத்துள்ளனர். தன்னிகரில்லாத் தலைவனே காப்பியம் ஒன்றின் நாயகனாதல் மரபு; எனவே அவனது வாழ்வின் நிலைக்களமான நாடும் நகரும் வருணிக்கப்படுவது மிக்க அவசியமானதாகும். அதுபோன்று பாஞ்சாலிசபதக் கதை வளர்ச்சியின் அடித்தளமான சூதாட்டம் நடைபெற்ற இடமும் அத்தினபுரமே யாதலால், அதனைப்பற்றிக் குறிப்பிடவேண்டிய இடத்தில், பாரதியார் தமது காவியத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகிய நகர வருணனையையும் ஆக்கிக் கொண்டார். அன்றியும், 'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்விய' கதைக்குக் காரணமான துரியோதனன் இருந்து ஆட்சி செலுத்திய தலைநகரமும் அது அல்லவா! இடைக்காலப் புலவர்கள் எந்த வருணனையிலும் உவமைகளைக் கையாளும்போது இந்திரலோகம், தேவாமிருதம், கற்பக தரு என்பனவாக மக்கள் வாழ்வுக்கு எட்டாதவற்றையே எடுத்துக்கொள்ள முயன்றிருக்கின்றனர். கவிதை உலகிலே புதியதொரு சகாப்தத்தை உண்டுபண்ணிய பாரதியாரோ எனில் இயற்கையோடொட்டியே தமது வருணனைகளைப் படைத்தார். தமிழ் நாட்டு நகரம் ஒன்றை வருணிப்பது போலவே இருக்கின்றது, அவரது அத்தினபுரவருணனைகள். எவ்வளவு சிறப்பும் வளமும் நிறைந்திருந்தாலும் நன்மையோடு தீமையும், இன்பத்தினிடையே துன்பமும், தருமத்தினுடன் அதர்மமும் பின்னிக் கிடக்கின்ற ஒரு அழகிய நகரம் தான் பாரதியார் காட்டுகின்ற அத்தினபுரி.

இனியதும், ஆழத்தினால் இருண்டதுமான நீர்ப்பரப்பினையுடையதாய் அகன்று பரந்து செல்வது யமுனையாறு. அழகிய அவ்வாற்றங்கரையில் அமைந்து விளங்குவது அத்தினபுரம். தன் சிறப்புக்கு நிகரான நகரம் வேறொன்றும் இவ்வுலகில் இல்லையென்று சொல்லத்தக்கதான அந்த அத்தினபுரத்திலே பரந்த பூஞ்சோலைகளுக்கு மத்தியில் அழகிய மகளிர் வாழும் உயர்ந்த மாளிகைகள் வானுற ஓங்கி நிற்கின்றன. சோலைகளின் இடையே சங்குகள் ஊருகின்ற வாவிகள் உள்ளன. நிரை நிரையான வீதிகள் எங்கும் செல்லுவ. அவற்றோடு அந்தணர் வீதி, மறவர் வீதி, மன்னவர்

வீதி, வாணிகர் வீதி, ஆவண வீதி என்ற பல குடியிருப்புகளையு முடையது அந்நகரம். அந்தணர் வீதி எங்கும் வேத வேள்விகள் நடக்கின்றன; வேத முழக்கம் கேட்கப்படுகின்றது; சாத்திரக் கலைகளின் ஆராய்ச்சியும் தர்க்கவாதங்களின் ஈடுபாடும் நிறைந்து கிடக்கின்றன. தவமாகிய நீதி கடைப்பிடிக்கப்படுவதால் அறம் வளரும் சிந்தையுடையாராய் இருந்தனர் அந்நகர மக்கள். எனினும் அங்கங்கே, மறம் வளரும் சிந்தையுடையோரும் இல்லாமற் போகவில்லை என்று கவிஞர் உண்மையையும் கூறித் தமது காவிய வளர்ச்சிக்கு வித்திட்டு வைக்கின்றார். உண்மைத் தவசியரும், அவர் நடுவே போலி வேடதாரிகளும், சிவஞானம் பழுத்த மேலோருடன் வெளிமயக்குக்காக மட்டும் சிவபூசை முதலியவற்றினைக் கைக்கொண்டு, உள்ளத்தே கீழ்த்தரமான வழிகளில் ஈடுபடுகின்ற புலை மக்களும் பலர் அங்கு வாழ்ந்தனர்.

உயர்ந்த போர்வீரர் ("ஆரிய வேன்மறவர்") வாழுகின்ற வீதிகளோ போர்ப்படை முழக்கங்கள் அருது விளங்கின. மலைபோன்ற தம் தோள்களிலே மாலைகள் புரண்டசைய, அவ்வீரர்கள் வில், வேல், வாள் முதலிய படைக்கலங்களைக் காலையும், மாலையும் பழகுவர். போர் இலக்கணம் அனைத்தையும் நன்கு கற்ற அவ்வீரர் ஒவ்வொருவரும் தனித்துநின்று நூறுயானைகளை முறையே நொறுக்கவல்ல ஆண்மை யுடையோராய் விளங்கினர். அரச வீதிகளெங்கணும் நல்லிசை ஒலி, நாட்டியப் பேரொலி, காவிய முழக்கம் என்பன இடையறுது கேட்கப் பெற்றன. பூலோக இந்திரர்களைப் போன்று அரசிளங்குமரர் களித்துத் திரிந்தனர். காவியச் சாலை, ஓவியச் சாலை, சிற்பகூடங்கள் நகரெங்கும் விளங்கின. மற்போர்ப்பயிற்சிகளும், அவற்றைப் பார்ப்போர் கூட்டங்களும் நிறைந்திருந்தன அவ்வீதிகளெங்கணும்.

ஆவண வீதிக்குச் சென்றாலோ கண்கொள்ளாக் காட்சி: விதம் விதமான கனிகள் ஒருபக்கம்; சந்தனம், அகில் முதலிய வாசனைப் பொருட்கள் மறுபக்கம்; பூமாலைகளும், மகளிரை அழகுறுத்தும் பல வித அணிகள், சுண்ணம் என்பனவும் இன்னோர்புறம்; குவியல் குவியலாக அங்குக்கிடக்கும் உணவுப் பொருட்கள் தேவலோகத்தார்க்கும் இன்சுவை தரவல்லன. குபேரனிடத்திருந்த செல்வம் அனைத்தும் அத்தினபுரக் கடைவீதியில் கொண்டு வந்து குவிக்கப்பட்டு விட்டனவோ என்று ஐயுறத்தக்க வகையில், வளம் நிறைந்துள்ள அப்பகுதிமக்கள் களியிலும், கேளிக்கையிலும் நிறைந்து காணப்பட்டனர்.

இத்தகைய அழகிய நகரத்திலே வணிகர், மற்றைய தொழில் புரிவோர், பொதுமக்கள், ஆகிய யாவரும் எவ்விதப் பயமுமின்றி இனிதே வாழ்ந்துவரலாயினர்.

**குருநாடு.**

நலமும் புகழும் வாய்ந்த அந்த அத்தினபுரம் விளங்கும் குரு நாட்டினைப் பற்றிய வருணனையும் நூலுள் அமைய வேண்டுவது அவசியம். எனினும் நூலுக்கேற்ற அளவிலேயே வருணனைகளும் இருத்தல் மிக முக்கியமான ஒன்று. ஆதலால், குருநாட்டுச் சிறப்பு சிறிதே இந் நூலுட் கூறப்பட்டுள்ளது. கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் பொதுவானதாகக் கிடக்குங் குருநாட்டினைப்பற்றி நூல் முதலிலேயே வருணிக்கத் தொடங்கினல் அது அத்தினபுர வருணனையோடு சேர்ந்து துரியோதனனுக்கே சொந்தமானதுபோல் ஆகிவிடும் என்று பாரதியார் நினைத்தாரோ என்னவோ, அவ்வாறு செய்து விடாது வேறுதருணத்தை நோக்கி யிருந்திருக்கிறார். அதற்காகப் பாண்டவர்களை அழைத்து வருமாறு விதுரன் அத்தினபுரியிலிருந்து இந்திரப் பிரஸ்தம் நோக்கிச் செல்லும்போது அவர் குருநாட்டின் அழகில் ஈடுபட்டதாக ஒரு காட்சியைச் சிருட்டித்து, அவ்விதுரன் வாயிலாக நாட்டு வருணனையினைத் தம் நூலுள் அமைத்து விடுகின்றார். விதுரன் குருநாட்டைப்பற்றிக் கூறுவதாக அது அமைந்த போதிலும், பாரதியாரது உள்ளத்திற் கிடந்த பாரதநாடு முழுவதின் சிறப்புமே அங்கு வெளிப்படுகின்றது எனலாம். பாரதியாரது தேசப் பற்றினையும் அதன் தொடர்பான உணர்ச்சியையும் வெளிப்படுத்திக் காட்டும் சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்றுயிருத்தலை நாம் ஊன்றி நோக்கி அறிதல் வேண்டும்.

விதுரனுடைய கண்களைக் கொண்டு பாரதியார் கண்ட தாய் நாட்டின் அழகை நாம் 116—118 பாடல்களில் காணலாம். உயர்ந்த பல மலைகள், நீலநிறமான அழகிய கொடுமுடிகளைக் கொண்டு விளங்குகின்றன. அவற்றிலிருந்து பல ஆறுகள் உற்பத்தியாகி அமுதம் போன்ற நீர்ப் பெருக்கோடு ஓடுகின்றன. நதிக் கரைகளிலெல்லாம் உயர்ந்த பழ மரங்களும், மற்றும் பயன் மரங்களும் நெருக்கமாக உள்ளன. அவற்றின் புறத்தெல்லாம் குளிர்ச்சி குடிவாழும் பூஞ்சோலைகள்; பக்கம் எங்கும் பரந்த வளவயல்கள்; உயர்ந்த மேட்டுநிலமெல்லாம் புன்செய்பயிர்கள். பசி என்பதே காணுத திருநாடு ஒன்றை இவற்றுல் பாரதியார் படைத்து வைத்திருக்கின்றுர். தனக்கு மட்டுமன்றி அயல் நாடுகளுக்கும், ஏன்! ஞாலம் முழுவதற்குமே உணவளித்துப் பசியைப் பறக்கடிக்கவல்ல வளமும், விளைவும் நிறைந்த

நாடு நம் பாரதநாடு என்கிறது அவரது கற்பனை. சோலைகள் எங்கும் தேன் கூடுகள்; பரந்துபட்ட மந்தைச் செல்வம் நிறைந்திருப்பதால் பால், தயிர், நெய் ஒன்றுக்குமே குறைவில்லை. 'தேவர் தேவர் என்கிறார்களே! தேவர்கள் என்பார் வேறு யாரும் இல்லை. ஒரு நாடு இவ்வாறு வளம் கொழிக்குமானால் அந்நாட்டுமக்களேதான் அந்தத் தேவர்களாவர்' என்று கூறும்போது பாரதியாரின் உணர்ச்சி உச்ச நிலைக்குச் சென்றுவிடுவதை நாம் காணுகின்றோம்.

சோலைகள் எங்கும், மக்கள் வாழும் மனைதோறும் பூஞ்சோலைகள்; அங்கங்கே நீர்ச்சுனைகள்; சுனைதோறும் நிறைந்த பொன்மயமான தாமரை மலர்கள்; அவற்றின் நடுவே அன்னங்கள் விளையாடுகின்றன. பூஞ்சோலைகளில் வண்டுகளின் முரற்சியும், கிளிப்பிள்ளைகளின் மழலைக் குரலும் அவற்றினிடையே, கேட்போரது உள்ளம் குளிர்ந்து கன்னம் எல்லாம் இன்பத்தினால் சிவப்புறத்தக்க இனிய குயில்களின் இசைக் கச்சேரி. இவ்வளவும் நிறைந்த சோலைகளினூடு மலர்களைத் தடவிவரும் தென்றற்காற்று மணம் நிறைந்து பரந்து வீசுகின்றது. இந்த இன்பத்தில் ஊறியவராய் மாடந்தோறும் மகிழ்ந்து நிற்கும் தங்கச் சிலைகளைப்போன்ற இளம் பெண்கள் தம் காதலரோடு ஊடி நிற்கின்றனர். அவர்களது ஊடலும் மகிழ்வையே ஊட்டுகின்றது மலைபோன்ற தோள்கொண்ட காளையர்க்கு. அதனால் மகளிரும் புலவி நீங்கித் தம் அழகிய கண்ணோட்டத்தினால் மகிழ்வினைப் பெருக்கி நிற்கும் இன்பலோகமாக விளங்குகின்றது, விதுரன்மூலம் பாரதியார் காணுகின்ற திருநாடு.

இவ்வாறு அழகும் திருவும் குலுங்குகிற குருநாட்டிலே அறமும் தவமும் தவழுகின்றன. மக்களில் எவரும் சோம்பிக்கிடப்பதையறியாது தொழில் பெருக்கும் திருநாடு அது. தேவரம்பையர்தாம் மூவுலகுக்கு வந்துள்ளனரோ என்று கண்டோர் மயங்கத்தக்க வகையில் மகளிர் பேரழகுடன் திகழ்ந்தனர். வீரம், ஞானம், தவம், கல்வி, வேள்வி எல்லாம் மக்களிடை விளங்கின. இத்தகைய நாட்டிலே மறந்தும் யாரேனும் களவு முதலான புன்தொழில்களைப் புரியார். மிகப் பழமையான இவ்வுலகிலே, சிறப்புகளெல்லாம் நிறைந்த காரணத்தினால் அதற்கு மணிமுடிபோலச் சிறந்து விளங்குகின்றது இந் நாடு என்றெல்லாம் வருணித்த புலவர், பாண்டவர்களைச் சூதுக்கழைப்பதினால், அது பேரழிவுறப் போகின்றதே என்றும், அத்தகைய சூழ்நிலை தன்னாலேயா ஏற்படுதல் வேண்டுமென்றும் விதுரன் இரங்குவதாகக் கூறுவதனால், பொங்கிவந்த தமது உணர்ச்சிப் பெருக்கிலிருந்து ஒருவாறு வெளியேறுகிறார்.

இந்த வருணனைகளால் கவிஞரது தேசாபிமானமே மிகுதியும் வெளிப்படுகின்றது. நாட்டு வருணனைகள் தமிழ் நூல்களிலெல்லாம இருந்தாலும் பாரதியாரது தேசப்பற்றிலே ஊறி உணர்ச்சி பரந்து நிற்கும். இத்தகைய வருணனைகளை நாம் வேறெங்கும் காண்டல் முடியாது. அடிமையுற்றுக்கிடக்கும் பாரதநாடு, மீண்டும் இத்தகைய வளமும் நலமுமெல்லாம் கொழித்துநிற்க வேண்டும் என்ற அவரது ஆசையின் புறப்பாடே இவ் வருணனைகள் எனலாம். பாரத நாட்டின்மீது புலவருக்கிருந்த பெருமதிப்பும், பேரன்பும் எத்தகையன என்பதை இப்பாடல்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாகும்.

## 5. தருமர் செய்த இராசசூய யாகம்

பாஞ்சாலி சபதம் என்ற காவிய நிகழ்ச்சிக்கான வித்து, தரும புத்திரர் செய்து புகழீட்டிய இராசசூய யாகத்திலேயே அமைக்கப் பட்டுவிட்டது என்பதை நாம் நூலின் கதைப்போக்கிடைக் காணலா கும். மகாபாரதத்தினுள்ளே அந்த யாக நிகழ்ச்சிகள் தனியாகக் கூறப்பெற்றபின்னரே சூதாட்டச் சருக்கம் வைக்கப்பட்டுள்ளது. இராசசூய யாகத்துச் சம்பவங்களை ஓரளவாவது அறிந்துகொள்ளுதல் பின்பு தருமர் சூதாடுதலையும் பாஞ்சாலி துகிலுரியப்படுதல் முதலான வற்றையும் பற்றி நன்கு அறிந்துகொள்ளுதற்கு வழிசெய்யும். எனினும், பாஞ்சாலி சபதம் என்னும் பெயருடன் தாம் அமைக்கும் நூலுள்ளே அந்த இராசசூய யாகத்தைப் பற்றிய செய்திகளையெல் லாம் பழைய பெருநூல்களுள் உள்ளவாறு விவரித்தலும் பொருத்த மாகாது என்பதைப் பாரதியார் அறிவார். அதனாலேதான் துரியோ தனன் பாண்டவர்மீது பொறாமை கொள்ளுதற்குக் காலாக இருந்த அந்த யாகத்தினுள் சந்தர்ப்பத்துக்குவேண்டிய பகுதிகளை மட்டும் துரியோதனன் கூற்றாகப் பாரதியார் பாஞ்சாலி சபதத்துள் அமைக்க லானார். இராசசூயயாகம்பற்றிய செய்திகளுள் துரியோதனன் மூலம் தெரிவிக்கப்படுவனவற்றுக்கு மேலும் உள்ள சில குறிப்புகளை நாம் தெரிந்துகொள்ளுதல் கூடிய விளக்கத்துக்குப் பயன்படலா மாதலால் அவற்றுள் அவசியமான சிலவற்றை இங்குக் குறிப்பிட்டு மேற்செல்லலாம் என்று நினைக்கின்றேன்.

இந்திரப் பிரஸ்தத்தைத் தலைநகராகக் கொண்டு பாண்டவர் தலைவனான தருமபுத்திரன் அறநெறி தவறாது ஆண்டுவந்தான். தரு மத்தையே முதன்மையாகக்கொண்டு செலுத்திய அவனது ஆட்சி குடிமக்களைமட்டுமன்றி அக்கால அரசர்கள் பலரையும் கவர்ந்து நின்றது. அதனால் பலரும் மதிக்கும் பேரரசனாக விளங்கிய தருமனை இராசசூய யாகம் ஒன்று நடாத்திப் பெரும்புகழ்கொள்ளுமாறு அவ னது நண்பர் பலரும் கேட்டுக்கொண்டனர். தனது காலத்து அரசர் கள் அனைவரும் மதிக்கத்தக்க பெரும்புகழ் படைத்த மன்னனொரு வனே இராசசூய யாகம் நடத்தும் தகுதியுடையவனாதல் கூடும். அந்த யாகத்தின்போது மன்னர் பேரவை ஒன்றை அவன் முறைப்படி கூட்டி அவர்களுக்குரிய வரிசைகளைச் செய்தலும், அப்பேரவை அவனுக்கு 'மன்னாதிமன்னன்' (சம்ராட்) என்று பட்டமளித்துக் கௌரவித்தலும் அக்கால வழக்காறு. தருமர் அவ்வாறான இராசசூய யாகம் ஒன்று நடத்துதலைப்பற்றிக் கண்ணனை ஆலோசனை கேட்டார். பெருவீரனான சராசந்தன் என்னும் பேரரசன் உயிரோடிருக்கும்வரை,

தருமபுத்திரன் மன்னுதிமன்னனுதல் ஒருபோதும் முடியாதென்பதை எடுத்துக் காட்டியதோடு, அவனை வெல்லற்குரிய ஆலோசனையையும் கண்ணன் விளக்கமாகக் கூறினுன். அப்பால் சராசந்தன்வதம் கண்ணனது சூழ்ச்சிப்படி நடந்தபின்னர், இராசசூய யாகத்துக்கான முயற்சிகள் தொடர்ந்தன.

அக்காலத்திலே பாரத நாட்டின் பல பகுதிகளையும் பல்வேறு அரசர்கள் மற்றையோரது தலையீடின்றி ஆண்டிருக்கின்றனர். சிறந்த வீரனுன மன்னன் ஒருவன் இருப்பானுனல் நாடு முழுவதும் தூதுவிடுத்துத் தான் மன்னுதிமன்னன் என்ற பட்டத்தைக் கொள்ளுதற்கு மற்றைய அரசர்களிடம் அவன் அனுமதி வேண்டுவதுண்டு. அனுமதி மறுப்போர் அவ்வீரனுடன் போர் செய்தாக வேண்டும். எதிர்ப்போரையெல்லாம் வென்று, மற்றையோரின் அனுமதியையும் பெற்றபின்புதான் இராசசூய யாகத்தை அம்மன்னன் தொடங்குதல் கூடும். அரசர்களனைவரும் அந்த யாகத்திற் குழுமி அவனை மன்னுதி மன்னனென்று வாழ்த்திச் செல்வது மரபு. யாகத்தின்போது தனது அழைப்பினை ஏற்றுவந்த அரசர் பலருள்ளும் சிறந்த ஒருவனை அதிதிகளின் முதற் பிரதிநிதியாக ஏற்று, அந்த முதல் அதிதிக்குப் பூசனை செய்து போற்றுதல் யாகம் நடத்தும் மன்னவன் செய்ய வேண்டிய ஒரு முக்கிய கடமையாகும்.

இந்த மரபுகளை ஒட்டியே தருமபுத்திரரும் இராசசூய யாகம் செய்யலானுர். மன்னவர்களது அனுமதியை வேண்டி அருச்சுனன், வீமன், சகாதேவன், நகுலன் என்னும் தம்பியர் நால்வரையும் முறையே வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திசைகளுக்குத் தருமர் அனுப்பினுர். மற்றைய அரசர்களிடம் அவ்வாறு செல்வதைத் 'திக்கு விஜயம்' செய்தல் என்று கூறுவார்கள். தம்பியர் நால்வரும் திக்குவிஜயத்தினை வெற்றியுற முடித்துப் பெரும் பொருளும் புகழும் கொண்டு மீண்டனர். யாகத்துக்கான அழைப்பிதழ்கள் அரசர் அனைவர்க்கும் பறந்தன. வேதவியாசர் வந்து தாமே பிரம்மாவின் இடத்தை ஏற்றுக்கொண்டு வேள்வி முறைகளை எல்லாம் நன்கு கவனித்தார். மன்னரும் மற்ருேரும் கொண்டுவந்து தருமன்பால் குவித்த செல்வங்கள் கணக்கிலடங்காவாயின. அதிதி பூசனைக்குரியவர் யாவர் என்ற யோசனை எழுந்ததும், தமது குலத்தில் முதிர்ந்தோராயுள்ள வீட்டுமாச்சாரியாரிடம் அதுபற்றித் தருமர் ஆலோசனை கேட்கலானுர். துவாரகை மன்னனுன கண்ணபிரானே அதற்குரிய தகைமை பூண்டவர் என்ருர் வீட்டுமர். அதன்படி சகாதேவனைக் கொண்டு கண்ணனுக்கே முதல் அதிதி பூசனையினை ஆற்றுவித்தனர்.

சிறப்புற நடந்த இராசசூய யாகம் 'மன்னுதிமன்னன்' என்று தருமனை அனைவரும் ஒப்புக்கொள்ளுமாறு செய்தது. அப்பேரவையில் கண்ணனைப் பலவாறு இழித்துக் கூறியபோதுதான் சிசுபாலன் கண்ணனால் கொலைசெய்யப்பட்டான்.

தன் சகோதரர்களாயினும் இளமை தொட்டே துரியோதனன் பாண்டவர்களைத் தன் எதிரிகளாகக் கருதியவன். அதனால் பாண்டவர்க்கேற்பட்ட இந்தப் பெருஞ் சிறப்பினை அவனாலே பொறுக்க முடியவில்லை. இராசசூய யாகத்தின்போது தருமபுத்திரனுக்கு மற்றைய மன்னர் செய்த பேருபசாரங்களைக் காணக் காண அவன் மனம் மிகுதியும் வேதனைப்பட்டது. யாகம் முடிந்து மன்னர்களெல்லோரும் விடைபெற்றுச் சென்றபின்னர்த் துரியோதனன் சகுனியுடன் இராசசூயம் நடந்த அந்தப் புதிய மாளிகையினைச் சுற்றிப் பார்க்கலானான். பொறாமையால் புகைந்துகிடந்த அவன் மனம் போன்று கண்களும் ஒளிமங்கி மயங்கினான்போலும்! தான் இன்ன இடத்திலிருக்கின்றான் என்பதே தெரியாமல் சுற்றித்திரிந்தான். படிகத் தளவரிசையைப் பார்த்துத் தண்ணீரென்று மயங்கி ஆடையை நனையாதிருக்க உயர்த்திப்பிடித்தான்; மேடுபள்ளம் தெரியாது வேறோரிடத்தில் இடறி விழுந்தான்; பளிங்குபோல் நிறைந்திருந்த தடாகத்தினைப் படிகத்தளவரிசையென நினைந்து சென்று அதில் விழுந்து நனைந்தான். இதுகண்ட வீமனும் வேலைக்காரரும் கொல்லென்று சிரித்தனர். நனைந்த ஆடைகளை அவன் மாற்றுதற்காக வேறு ஆடைகள் கொண்டுவருமாறு தருமர் வேலையாட்களிடம் கூறினார். இவையெல்லாம் பொறுக்கமுடியாத துக்கத்தைத் துரியோதனனுக்கு ஊட்டின. வேகமாக நடந்தான். கதவில்லா இடமொன்றினைக் கதவென்று நினைந்து கையினால் தள்ளி ஏமாந்தான். இவற்றால் துன்பம் மீதூர்ந்து அது மயக்கமாய் அவனை மூடவே சோர்ந்து விழுந்தான். அதுகண்டு திரௌபதி உட்பட யாவரும் கொல்லென்று சிரித்தார்கள். துரியோதனன் இவைகளை எல்லாம் தனக்கு நேர்ந்த பெருத்த அவமானமாகவே கருதலானான். அவனது சிந்தனையானது அவமானம் என்ற தீயால் வாட்டப்பட்டது. விரைந்து அங்கிருந்து வெளியேறி அத்தினபுரத்துக்குப் பயணமானான். அவனது நெஞ்சு பாண்டவருக்கேற்பட்ட பெருமித வாழ்வை எண்ணி எண்ணிப் புழுங்கலாயிற்று.

துரியோதனனது பொறாமைப் புழுக்கத்தினைக் காட்டுவதன் மூலமே பாரதியார், இராசசூயயாகத்தின்போது பாண்டவர் பெற்ற பெருஞ் சிறப்புக்களைத் தம் நூலுள் கூறுகின்றார். பொறாமையால்

வெதும்பிய தனது மனப்புழுக்கத்தோடு துரியோதனன் தன்னுள் கூறுகின்றான்: "இந்தப் பாண்டவர் உயிர்வாழும்வரை எனது அரசாட்சி மற்றவர்பால் ஒருபோதும் மதிப்புடையதாக மாட்டாது. வீமன் அருச்சுனன் ஆகிய இருவரது வீரமுமே எனது தாழ்வினுக்கு விளம்பரம் போன்றுள்ளன. பாரதநாட்டு வேந்தர் அனைவரும் வந்து தமக்கெல்லாம் பேரரசன் தருமனே என்று போற்றத்தக்க வகையில் யாகத்தினை முடித்தானே தருமன்! இவற்றுக்கெல்லாம் காரணமாகி வீரமற்ற தருமனை மன்னுதி மன்னனுக்கியவை இடையர்குலக் கள்வனை கண்ணனது சூழ்ச்சியும், தருமனுடைய தம்பியரது புயவலியு மன்றோ! ஆயிரமாயிரம் முடிவேந்தரும் தருமனது யாகத்துக்கு வந்த தோடல்லாமல் மதிப்பிடற்கரிய திறைப் பொருட்களையும் மலை மலை யாகக் குவித்தனரே! இதனை என்னென்று மறப்பேன்? பட்டினாலும், பருத்தியினாலும், மயிரினாலும், நாரினாலும் இயன்ற விதம் விதமான ஆடைகள், பலவித மணிக் குவியல்கள், பொற்குடங்கள், வயிர முடிகள், பொற்குவைகள், வில் வாள் முதலான படைக்கலங்கள் என்பவற்றையெல்லாம் அந்தக் கோழையாகிய 'வழவழத் தரும னுக்கு' இந்த மன்னரெல்லாரும் கொண்டுவந்து கொடுத்து அவனை இப்புவிக்கும் முதல்வனுக்கினர். இப்படிச் சிறப்புச் செய்ததோடு நில்லாது மன்னர்களெல்லோரும் அவனது ஆணையைக் கேட்டு முடி பணிந்தும் நின்றார்களே! அவன் முன்னர்த் திறையாகக் குவிக்கப் பட்ட முத்து, சிப்பி, பவளம், வெண்சங்கம், வைடூரியம் என்பவற் றுக்குக் கணக்குண்டா! மலைநாட்டு மன்னர் மலைபடு திரவியமனைத் தையும் கொணர்ந்து குவித்தார்கள். அவ்வாறே கடல் வளமும், காட்டு வளமும், வயல் வளமும் எல்லாம் கணக்கிறந்த மலைகளாகத் தருமனுக்கு முன்னர் அவ்வப்பகுதி மன்னர்களாற் கொண்டுவந்து குவிக்கப் பெற்றன!"

28 முதல் 37 முடிய உள்ள செய்யுள்களில் அத்தகைய காணிக் கைப் பொருட்களின் விரிவான விளக்கத்தினை எல்லாம் காணலாம்.

இந்நிலையிலே துட்டனை சகுனியையன்றித் துரியோதனனுக் குத் தஞ்சம் அளிக்கவல்லார் யாவர்? தருமனது இராசசூய யாகச் சிறப்புக்களைப் பற்றிய தன்னுள்ளத்தினை அப்படியே மாமனுக்கு மரு மகன் திறந்து காட்டுகின்றான். தான் முன்னர் மனத்தினுள் கூறிய வற்றைச் சகுனிக்கும் துரியோதனன் சொல்லுவதாக ஒரு சந்தர்ப் பத்தை ஆக்கிக்கொண்டு, பாஞ்சாலி துகிலுரியப்படுவதற்கான அடிப் படை அந்த யாகத்தின்போதே அமைக்கப்பட்டு விட்டதை நமக்குக் காட்டுகின்றார் பாரதியார். வேள்வியை மேலும் மேலும் புகழ்ந்த

துரியோதனன் தன்னுள்ளத்திற் பதிந்துவிட்ட முதன்மையான நிகழ்ச்சிகள் சிலவற்றைத் தொகுத்துரைக்கலாயினன். தனது சிந்தனைக்கும் எட்டாத பெருஞ் செல்வத்தையும் சிறப்பினையும் பாண்டவர் பெற்றுத் தன்னையும் புகழில் மிஞ்சிவிட்டமை; அதனால் தன்னைப் புல்லென மதித்ததோடு தன்னிலும் எவ்வளவோ தாழ்ந்தவனும், அரசர் குலத்தையே சேராத இடையனுமான கண்ணனுக்கு மன்னரவையிலே பெரும் மதிப்புக்கொடுத்து அவனுக்கே முதலுபசாரங்கள் காட்டினமை; வாலிகன், சேதியர்கோன், பாண்டிய மன்னன், மகத மன்னன், ஏகலவியன், அவந்திவேந்தன் முதலான பெரும் மன்னர்களும் தருமனுக்குத் திறைகொடுத்து அவன் முன்னர்த் தாழ்ந்து நின்றமை; பாண்டவர்களுக்குக் கிடைத்த இத்தகைய சிறப்புகளைப் பொறுக்கலாற்றாது தான் மூர்ச்சித்து விழுந்தபோது அங்கிருந்த பல்லோரும்—அந்தப் பாஞ்சாலியுங்கூட—தன்னைப்பார்த்து நகை செய்தமை ஆகியவற்றையெல்லாம எப்படி மறக்கலாகும் என்று ஆவேசத்தோடு துரியோதனன் கூறும் வாயிலாகத் தருமர் செய்த இராசசூய யாகச்சிறப்பு பாஞ்சாலி சபதத்துள் கூறப்படுகின்றது.

"தீச்செயல் நற்செய லேதெனினும் செய்து நாம், அவர் செல்வங் கவர்ந்தவரை வீடவேண்டும் தெருவினிலே" என்று துரியோதனனுக்கு மனமுடிவை ஏற்படுத்துகின்றது, தருமர் செய்த இராசசூய யாகச் சிறப்பு. பின்னால் வரப்போகும் கொடிய சூதாட்டத்துக்கு இந்த யாக நிகழ்ச்சிகளே அடிப்படை. துரியோதனனைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்த பாஞ்சாலியை, வேத்தவையிலே சிரிக்க வைக்குமாறு துரியோதனனைத் தூண்டுகின்ற இந்த யாகமே பாஞ்சாலி சபதத்துக்கு அடித்தளமானது என்பதையும் நாம் இவற்றால் நன்கு உணரலாகும்.

# 6. மாலை வருணனை

பாரதியாருடைய கவிதைகளின் முதன்மைப் பொருளாக இழை யோடியிருப்பது மனித உணர்ச்சியே. அவருக்கு மனித இனத்தின் மீதிருந்த அளவுகடந்த அன்புதான் இதற்கு முக்கிய காரணமாயிருந் தது எனலாம். மற்றைய புலவர்களைப்போல் என்றும் இயற்கைக் கற்பனையில் ஈடுபடாமல் மனித இனத்துக்குரிய முக்கிய அலங்கார மாகவே இயற்கையைக் கருதியிருக்கின்றார் பாரதியார். இதனாலே தான் மனித உணர்ச்சியின் வெளிப்பாட்டைக் காணும்போதெல்லாம், எங்கும் சூழ்ந்திருக்கும் இயற்கையினூடு அந்த உணர்ச்சியின் பிரதி பலிப்பையே காண முயன்றிருக்கிறார். பாஞ்சாலி செய்த சபதத்தி னுக்குத் தம் உடன் பாட்டைத் தெரிவிப்பதாக ஐம்பெரும் பூதங் களும் ''ஓம் ஓம்'' என்று உரைத்தன என்று பாரதியார் பாடியிருப் பவை எல்லாம் இதற்கு உதாரணமாகக் கொள்ளத்தக்கவையே. ஒரு போதும் மனித உணர்ச்சியை விட இயற்கையழகு சிறந்ததென்று அவர் கருதியதே இல்லை. சிறந்த கவிஞன் ஒருவனுடைய உள்ளத் தில் மனித உணர்ச்சியே முதன்மையாக இடம்பெறுவதென்றாலும், இயற்கைக் காட்சிகளிலேதான் அவ்வுணர்வு பிரதிபலிப்பதை ஒவ் வொரு கவியும் காண்கின்றான். இதனாலேயே உலகில் எந்த மொழி யிலென்றாலும் சரி, பெரிய பெரிய கவிஞர்களெல்லாரும் பெரும் பொருள்களைப்பற்றிப் பாடும்போதெல்லாம் இயற்கையின் உதவியை நாடி அதனைச் சரண்புகுந்து நிற்கின்றார்கள்.

ஆனால், இயற்கையை வருணிக்கும் முறைதான் புலவனுக்குப் புலவன் வேறுபட்டு நிற்கின்றது. இயற்கையே உலகமாய்த் தோன்று கின்றது ஒரு புலவனுக்கு. அவன் அதன் அழகில் மூழ்கித் தன்னை யே மறந்துவிடுகின்றான். இன்னொருவகைப் புலவன், இயற்கை யைத் தன் கற்பனை மூலம் வேறொரு படைப்பாக மாற்றிவிடுகின்றான். இயற்கையின் அம்சம் ஒவ்வொன்றும் அவனது உள்ளக் கருத்தையே பிரதிபலிக்க அப்புலவனும் அம்மயக்கில் தன்னை மறந்து ஆநந்திக் கின்றான். இவ்விருவருள் பாரதியார் முதல் வகுப்பைச் சேர்ந்தவ ராவர். அவர் இயற்கை அழகினைக் காணும்போதெல்லாம் முழு உலகினையும் அதனுட்கண்டு மகிழ்வதோடு மட்டுமன்றி அவ்வுலகுக் குக் காரணமாகிய தேவி பராசக்தியின் திருவடிவினையும் அவளது அருட்செயல்களையும் காட்சி தோறும் கண்டு களிப்பெய்துபவர். இத்தகைய தெய்வீகக் காட்சிகளுக்கு இடமானவற்றுள் அவருள் ளத்தை மிகுதியும் தொட்டுநின்ற ஒன்று மாலைக்காட்சி,

மாலைநேரத்தில் சூரியன் மலைவாயில் விழும் பேரழகைக் காண்ப தென்றால் அவருக்கு மிக்க ஆநந்தம். சென்னையிலே 'சுதேச மித்திரன்' பத்திரிகாலயத்தில், பாரதியார் உதவிப்பத்திராசிரியராக வேலைபார்த்த காலத்தில், மாலைச் சூரியனைக் காணும் இன்பத்தில் திளைக்கும் வாய்ப்பினைத் தினம்பெறுவார் என்பர். அந்த அலுவல கத்தின் வெளிப்புறத் தாழ்வாரத்திலே நின்றுகொண்டு சூரியன் மாலை நேரத்தில் அடிவானத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் காட்சியினைத் தன்னை மறந்து கவனித்துக் கொண்டிருப்பார். யார் என்ன அவசரத்திற்காக அவரைக் கூப்பிட்டாலும் அவர் காதில் விழாது என்றும், எந்தப் பேரொலியாலும் அவரது சிந்தனையை அவ்வேளைகளில் கலைக்கமுடியாதென்றும், பத்திரிகை வேலைகளுக் குக்கூடச் சிலவேளைகளில் அதனால் தடங்கல் ஏற்பட்டிருக்கின்ற தென்றும் பாரதியாரின் நண்பர்கள் கூறுவர்.

பாரதியாருடைய உள்ளத்தினைப் பெரிதும் கவர்ந்த அத்தகைய மாலைச் சூரியனது பேரெழிலை வருணிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை, வேண்டுமென்றே பாரதியார் இச்சிறு காவியத்தினுள் ஆக்கிக் கொண்டார் என்று கூறலாம். திருதராட்டிரனது விருப்பிற்கிணங்கிய பாண்டவர் அத்தினபுரத்தை நோக்கிச் செல்கையில் மாலைநேரம் ஒன்று பாரதியாரால் ஆக்கப்படுவதோடு நூலின் 147-ம் பாட லுள்ளே மாலைவருணனைக்கு அடியும் போடப்படுகின்றது. 148-ம் பாடலிலிருந்து வருணனை மூலம் படிப்படியாக உணர்ச்சியினை வளர்த்துச்சென்ற பாரதியார் 152-ம் பாடலோடு திடீரென்று அதனை முடித்துத் தம் உணர்ச்சியனுபவத்திலிருந்து வெளியேறு கின்றார். 148 முதல் 151 வரை உள்ள விருத்தப் பாடல்களால் பரிதியின் தோற்றம் வருணிக்கப்படுகின்றது. அடுத்துள்ள 17 அகவ லடிகளாலமைந்த 152-ம் பாட்டிலே பரிதியினைச் சுற்றியுள்ள முகிற் கூட்டமும் வான்வெளியும் அவை அளிக்கும் வேறு வேறான தோற் றங்களும், அவற்றைக்கண்ட இன்பத்தினால் உண்டாகும் பேராநந்த நிலையும் வெளிப்படுத்தப்படுகின்றன. பாரதியாரது மாலைவருணனை தமிழிலக்கியத்துக்கே புதுமையான ஒன்றாக விளங்குவது. தமிழ் மொழியில் எந்தப் புலவனும் பரிதியின் காலைத் தோற்றத்தையோ, அன்றி மாலைத் தோற்றத்தையோ உள்ளபடி நேரடியாக வருணித்த தில்லை. காவியங்களிலே அந்த வருணனைகள் வரும்போது, ஒன்றில் கவிஞன் தான் எடுத்துக்கொண்ட கதைப் போக்கிற்கேற்பத் துன் பத்தை அல்லது இன்பத்தை அக்காட்சி பிரதிபலிப்பதாகக் கூறு வான்; அல்லது அவ்வேளையில் இயற்கைப் படைப்புகள் - மலர்,

பறவை, விலங்கு, மரஞ் செடி கொடிகள் முதலாயின - பெறும் அழகிய தோற்றத்தை வருணித்து இன்புறுவான். எழுந்து வந்து கொண்டிருக்கும் அல்லது மறைந்து சென்றுகொண்டிருக்கும் பரிதி மண்டலத்தை மட்டும் தனியாக விளக்கும் வருணனைக் கவிதைகள் செய்து காப்பியத்துள் வேறு யாரும் படைத்திலர். இதனல் தாம் வாழ்ந்த காலத்துக் கவிதைப்போக்கினை மாற்றியமைத்துச் சென்ற காரைக்காலம்மையாருக்கு, இலக்கிய வரலாற்றுசிரியர்கள் கொடுக் கும் பெருஞ்சிறப்பினைப் போலவே பாரதியாரும் இத்துறையில் ஒரு தனிமரபைக் கையாண்டு பிற்காலத்தவர்களுக்கு வழிவகுத்துச் சென்றிருக்கின்ருர் என்ற சிறப்பினையும் நாம் அவருக்குக் கொடுத் தல் வேண்டும். பாரதியார் சூரியன் மறையுங் காட்சியைக் கண்ணு ரப் பலதடவைகள் கண்டு அனுபவித்திருக்கின்ருர். மாலைச்சூரியனது தோற்ற வேறுபாடுகள் அனைத்தும் அவருள்ளத்தைக் கொள்ளை கொண்டவை. அச்சிறப்புக்களையே அருச்சுனன் பாஞ்சாலிக்குக் காட்டுவதுபோல் பாரதியார் நமக்குக் கூறுகின்ருர். நாம் முன்னர்க் கூறியவாறு, நீண்டகதைப்போக்கிலிருந்து, சற்று விலகி இளைப் பாறுதற்காக வாசகர்களை வேறிடத்துக்கு இழுத்துச்செல்லும் கிளைக் கதைபோன்று மிளிரும் இம்மாலை வருணனைத் தொடக்கத்தில், பார்த்தனும் பாஞ்சாலியைத் தனியிடத்துக்கு அழைத்துச் செல்வதாகத் தம் வருணனையைத் தொடங்குகின்ருர் பாரதியார்.

அத்தினபுரம் நோக்கிய வழியிடை மாலை வருதலும், பாண்ட வர்கள் ஒரு சோலையுள் தங்குகின்றனர். இயற்கை யெழில்களை இரசிப்பதிற் பேர்போனவனுன பார்த்தனும் பாஞ்சாலியும் தனித்து ஓரிடத்தே இருக்கின்றனர். அப்போது மாலைப் பரிதியின் எழிலை நல்விளக்கத்தோடு பார்த்தன் அவளுக்குக் காட்டுகின்ருன். 'கனிந்த மொழியினை உடையவளே! அதோபார் வானத்தில் தோன்றும் புதுமைகளை. பரிதியின் செலவால் - மாறிமாறித் தோன்றும் வேறு வேருன புதுப்புதுக் காட்சிகளைப் பார். எவ்வளவு பொருள் கொடுத் தாலும் இதற்கீடான வேருெரு காட்சியினைச் செய்துதர வல்லான் யாவன் உளன்? வேதநூற்பொருளை நன்குணர்ந்த முனிவர்கள் போற்றும் செழுஞ்சோதியாகிய சூரியதேவனது பேரெழிலை எல்லாம் ஒன்றும் விடாது நன்கு கவனித்துப்பார். நமது சொல்லுக்கும், கருத்துக்கும் எட்டாத புதுப்புதுக் காட்சிகள் கணத்துக்குக்கணம் மாறி மாறித் தோன்றுகின்றன. காளி பராசக்தி கணந்தோறும் மாறி மாறித் தன் விதம்விதமான புத்தெழிலெல்லாம் விளங்கத் தோன்றுகின்ற தன்மையினையே இந்த மாலைச் சூரியனது தோற்

றத்தில் உண்டாகின்ற மாற்றங்கள் எடுத்துக் காட்டுகின்றன.' இந்த இடத்திலே, ''மாறிமாறிப் பின்னும் மாறிமாறிப் பின்னும் மாறிமாறிப் போகும் பழக்கமே தானுவாள், ஆதி பராசக்தி.........' (செய். 252 வரி 28 - 30) என்று பாரதியார். காளிதேவியைப்பற்றிக் கூறியுள்ள அடிகளை நாம் நினைவு கூர்தல் நன்று. மாலைச் சூரியனது வருணனையைப் பாரதியாரே தமது உரைநடையிலும் எழுதி வைத்துள்ளார். இந்நூலில் உள்ள பொருள் விளக்கமும் குறிப்புகளும் என்னும் பகுதியில் காணப்படும் அதேபகுதியைப் பொருத்தம் நோக்கி இங்கும் எடுத்துக் காட்டுகின்றோம்.

''அடிவானத்தே சூரிய கோளம் தகதகவென்று சுழன்று கொண்டிருந்தது; இருபது கோடி மின்னல்களை எடுத்து ஒரு சக்கரமாக வார்த்துச் சுழற்றுவது போலிருந்தது. ஆரம்பத்திலேதான் கண்கூசும். சிறிது நேரம் உற்றுநோக்கிக் கொண்டிருந்தால் பிறகு கண்கூச்சம் தீர்ந்துபோய்விடும். இரண்டு வட்டத் தகடுகள் ஒன்றின்மேலொன்று சுழலும். கீழேயிருப்பது சுத்தமான மின்வட்டம்; மேலே மரகதவட்டம் பச்சை வர்ணம்! அற்புதமான பசுமை!

பச்சைத்தகடு பின்புறத்திலிருக்கும் மின்தகட்டை முழுதும் மறைத்துக்கொண்டிருக்கும். ஆயினும் இடையிடையே பின்னுள்ள வட்டத்தின் வயிரக்கிரகணங்கள் கண்மீது பாயும்.

பார்! சூரியனைச் சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவதுபோலத் தோன்றுகின்றது. ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனைவித வடிவங்கள்! எத்தனையாயிர விதமான கலப்புகள்! அக்கினிக் குழம்பு! தங்கம் காய்ச்சிவிட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்!

நீல ஏரிகள்! கரும்பூதங்கள்! எத்தனைவகை நீலம்! எத்தனை விதச் செம்மை! எத்தனைவகைப் பசுமை! எத்தனை வகைக் கருமை! நீல ஏரியின்மீது மிதக்கும் தங்கத் தோணிகள்! எரிகின்ற தங்க ஜரிகைக் கரைபோட்ட கரிய சிகரங்கள்! தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கே பார்த்தாலும் ஒளித்திரள், வர்ணக்களஞ்சியம். போ, போ, என்னுல் அதை வருணிக்க முடியாது!'' (பக். 113)

மாலைச் சூரியனது அந்தக்காட்சியைக் கண்டானந்தித்தபின்னர்ப் பார்த்தனும் பாஞ்சாலியும் பரிதியைத் தொழுது தம் உறவினரிருந்த பொழிலிடைச் சென்றனர். 'செங்கதிர்த் தேவனது

முடிவில்லாத பேரொளி இன்பத்தினை இங்குக் கண்டனுபவித்தோம்; அவன் தனது பேரொளிபோல் எங்கள்பால் நல்ல அறிவொளியை வளர்த்து நிற்பானாக' என்பது அவரது வேண்டுதற் பொருள்.

மாலை வருணனை ஒரு அற்புதமானவருணனை. இயற்கையின்பால் தாம் கண்டனுபவித்ததை உள்ளபடியே பாரதியார் கூறும் நல்லதொரு வருணனை. மாலைச்சூரியனது வியத்தகு தோற்றங்களைக் கண்டு அனுபவித்து அவ்வின்பத்திலே மெய்ம்மறந்து மனத்தைப் பறிகொடுத்துநின்ற பாரதியாரது பழுத்த அனுபவம், கவிதை உருவில் இங்குக் காட்சியளிக்கின்றது. இயற்கைத் தோற்றங்களை உள்ளபடியே கண்டு ஆநந்திக்கவும், அப்படியே வருணிக்கவும் பாரதியார் நமக்குக் காட்டும் முன்மாதிரிகூட இப்பகுதியில் விளங்குகின்றதெனலாம்.

# 7. கண்ணன் புகழ்

பாரதியாருக்குக் கண்ணனிடத்திலே ஒரு தனி ஈடுபாடு உண்டு என்பதை நாம் அவரது கண்ணன் பாட்டுகளிலே பரக்கக் காணலாம். பராசக்தியின்மீது அவருக்கு இருந்த பேரன்பைப் போலவே இருந்தது கண்ணன்மீது அவர்கொண்ட அந்த ஈடுபாடு. கண்ணன் பாட்டுகள் பலவற்றைப் பாடியவர் பாரதியார். அதனுலே திரௌபதி துகிலுரியப்படுங் கதைப்பகுதியினுள் மேலும் கண்ணன் புகழைப் பாடுதற்குத் தனக்கு ஒரு சந்தர்ப்பம் வருவதை எண்ணியெண்ணி மகிழ்ந்தார். தமது நூலுள்ளே இரண்டு இடங்களைத் தேர்ந்து, அங்கு அந்த மணிவண்ணனது பெரும்புகழை நெஞ்சுருக அவர் பாடிவைத்திருப்பதை நாம் காண்கின்ருேம். திரௌபதியின் மானங் காக்கப்பட வேண்டிய நிலையிலே கண்ணனை நினைந்து அவர் பாடியிருப்பவை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களில் ஆழ்வார்கள் நெஞ்சுருகிப் பாடிவைத்திருக்கும் பாடல்களைப் போன்று பக்தி வெள்ளத்துள் நம்மை மூழ்கவைக்கத்தக்க பெருஞ் சிறப்புவாய்ந்தன. கண்ணன் பாடல்களிலே பலவர்ணங்களும் தீட்டப்பெற்ற அழிவில்லாச் சிலையொன்றைக் கண்ணனுக்கு எழுப்பிவிட்ட பாரதியார், பாஞ்சாலி சபதத்திலே அந்தக் கற்பனைச் சிலையூடு தவழ்ந்துநிற்கும் அருட்பிழம்பினுக்குக் கோடி கோடியான துதிகளைச் செலுத்துகின்ருர் எனலாம்.

இல்லையென்பார்க்கு இல்லாதவனுய் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் இறைவன். கடவுள் இலன் என்று வாதிடுங் கட்சியாரின்முன்னர் அந்த ஆண்டவனே வந்துநின்ருலுங்கூட அவர்கள் அவன் பெருமையினை உணர மறுப்பார்கள். தமது காலத்தில் கடவுட் கொள்கையை மறுத்துப் பேசிக் காலங்கழித்த அத்தகைய இளைஞர்பலருக்குக் கடவுளது பேருண்மையை அவனருள்மூலம் விளக்கிக் காட்டுதற்குக் கண்ணனது வரவு, தன் காவியத்தில் பாரதியாருக்கு வசதிசெய்து கொடுத்தது. சகுனியும் திருதராட்டிரனும் கண்ணனைப்பற்றிப் பேசும் சந்தர்ப்பத்திலேயே அவனை நூலுள் முதன்முதற் காணுகின்ருேம். பாண்டவர் செய்த இராசசூய யாகத்தின்போது கண்ணனை அதிதியர் தம்முள் முதல்வனுகத் தேர்ந்து அவனுக்குத் தருமர் முதற் பூசனையாற்றியதைத் துரியோதனனுற் பொறுக்கமுடியவில்லை. அவன் 'தந்திரங்களில் வல்லவனுய் இருத்தலை' மட்டுமே உணருஞ் சிற்றரசனுகக் கண்ணனைக் காட்டுகிருன் சகுனிக்கு. திருதராட்டிரனுக்குக் கூறும்போது சகுனியும்

அப்பொருளினையே "நொய்யதோர் கண்ணன்" என்றும், 'வேயிருந் தூதுமோர் கண்ணன்" என்றும் குறிப்பிடுகின்றான். ஆயினும், பேரறிஞனுன திருதராட்டிரன் அந்த அற்பர்களது வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. திருதராட்டிரன் அவர்களுக்குப் பதில் கூறுவதாக வைத்துக்கொண்டு கண்ணன் புகழைப் பாடுகின்றார் பாரதியார், இச்சந்தர்ப்பத்தில்.

'கண்ணனே இராசசூயத்திற்கு வந்திருந்த மன்னருள் உயர்ந் தவனுகக் கொள்ளப்படத்தக்கவன் என்று வீட்டுமாச்சாரியார் தரும னுக்குக் கூறி அதிதி பூசையை அக் கண்ணனுக்குச் செய்வித் தார். இந்நிலவுலகமன்னருள்ளே கண்ணனது காலிலுள்ள சிறு தூசுக் குத்தானும் நிகரானவர் யாரும் இலர் என்பதை அறியுங்கள். உலகின் முதற் பொருள் நாராயணனேயாவான். பாற்கடலிலே, ஆதிசேடன் மீது அவன் துயில் கொள்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. நமது உள்ளத்தெளிவுதான் அந்தப் பாற்கடல்; பல துறைகளிலும் சிறந்து விளங்குவதாகிய பேரறிவே ஆயிரந்தலை கொண்ட ஆதி சேடன் என்னும் பாம்பு; போதத் துயில் என்பது ஞான அமைதி விளங்கும் மோனநிலையாகும், அதுவே அறிதுயில் எனப்படுவது. இத்தகைய உண்மைப் பொருளான நாராயணன், நாம் உய்தி பெறும் பொருட்டாக இந்த உலகிடைத் தோன்றி யிருக்கின்றான். அவன் அருளின் சிறப்பினை உணர்ந்து அந்த அருட்பேற்றைப் பெறு தல் என்பது இலகுவான தொன்றல்ல. நான் என்னும் ஆணவச் செருக்கினை விடுதலும், உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் அவனே நிறைந்திருக்கக் காண்டலும், உயர்ந்ததாகிய ஞான ஒடுக்கம் நம்மிடைத் திகழ்தலும் கைவரப் பெறல் வேண்டும். காலநியதியைக் கடந்து அனைத்துயிர்க்கும் நீதி பிறழாது அருள் பொழிந்து நம்மைத் துன்புறுத்துவோர் மாட்டும் பொறுமையை மேற்கொள்ளும் ஆற்றலை எல்லாம் நாம் பெறுதல்வேண்டும். இவை யாவற்றையும் "ஆயிரங் கால முயற்சியால் பெறலாவர் இப்பேறுகள் ஞானியர்". சிலருக்கு இந்த அருங் குணங்கள் கருவிலிருக்கும் போதே அமையப் பெறு கின்றன. அப்படிப்பட்டோரையே 'மனிதருள் தெய்வ'மென்பர். இத்தகைய அருஞ்சிறப்புகளைக் கொண்டு மனிதகுலத்தினை உய்விக்க என்று அவதாரமெடுத்த பரம்பொருளே 'கண்ணபிரான்' என்று கண்ணனது புகழைப் பேசிவந்த திருதராட்டிரன், சகுனியையும் துரியோதனனையும் 'பேய்கள்' என்று நிந்திப்பதோடு கண்ணனது எல்லையில்லாத பெருமையினை உணரும் ஆற்றல் அவருக்கு உண் டாகாதென்றுங் கூறுகின்றனன். "ஒரு பேயினை வேதம் உணர்த்தல்

போல் கண்ணன் பெற்றி உமக்கு எவர் பேசுவார்'' எனக் கூறி அவர்களுக்குக் கண்ணனது பெருமைகளை எடுத்துக் காட்ட வந்ததற் காகத் தன்னையும் நொந்து கொள்கின்றான், அந்த மெய்ஞ்ஞானி. பாண்டவரோடு துரியோதனனைப் பகைவளர்க்கத் தூண்டிய சகுனிக் குத் திருதராட்டிரன் கூறும் மறுமொழியிலிருந்து, கண்ணன் அருளிலே அவனுக்கு இருந்த பெரிய நம்பிக்கையை நாம் அறிய லாகும். துரியோதனன் செய்த ஆயிரக் கணக்கான சூழ்ச்சிகளும், அந்தச் ''சீதரன் தண்ணருளால்'' பயனற்றுப் போனமையை, அந்தக் கீழ்மக்கள் இருவருக்கும் கூறித்தெருட்ட முனைகின்றான். ஆனால், கண்ணனருளை உணர்ந்துய்யும் பெரும் பேறு உண்டாகவே இல்லை.

பாஞ்சாலி சூதிடைத் தோற்கப்படுகின்றாள். பின்னர்த், துச்சா தனன் அவளை மன்னரவைக்கு இழுத்து வருகின்றான். 'ஒருவன் தானே சூதிற் தோற்று அடிமையான பின்னர்த், தன் மனைவியைப் பணயமாக வைத்து ஆடும் உரிமையை இழந்துவிடுகின்ற னுதலால், தன்னைத் தருமன் சூதில் பணயம் வைக்கும் உரிமை அவனுக்கில்லை' என்ற அவளுடைய மறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. அவளுக்குத் துரியோதனனும், துச்சாதனனும் இழைக் கின்ற தீங்குகளுக்கு எதிர்ப்புக்காட்டுவார் யாரும் அங்கிலர். 'துருபதன் பெற்ற செல்வம், மாதர்குல விளக்கு, அன்னை பாஞ்சாலி' அனுதையாக நின்றாள் மன்னர் அவையிலே. 'அடிமைகள் மேலாடை அணிதல் வழக்கமன்று' என்பதனைக் குறிப்பிட்ட கன்னன், அடிமை களாகிய பாண்டவரும் திரௌபதியும் அணிந்திருக்கும் மேலாடை களைக் களைந்துவிடுமாறு ஏவலாளருக்குக் கட்டளையிட்டான். ''இவ் வுரை கேட்டாரைவர் பணிமக்கள் ஏவா முன்னர்த், தெவ்வர் கண்டஞ் சும் மார்பைத் திறந்தனர் துணியைப் போட்டார்.'' கணவரும் இவ் வாறு ஊமைகளாய், அடிமைகளானபோது பாஞ்சாலிக்குத் துணை யாக வேறு யாவர் இருத்தல் கூடும். மானிடர் யாருமே தனக்குத் துணையிலர் என்பதை யுணர்ந்த பாஞ்சாலி, இறைவன் ஒருவனே தனக்குப் புகலிடமாவான் என்று உணர்கின்றாள். ''நவ்வியைப் போன்ற கண்ணாள், ஞானசுந்தரி பாஞ்சாலி எவ்வழி உய்வோம் என்றே தயங்கினாள் இணைக்கை கோத்தாள்.'' துச்சாதனன் எழுந்து பாஞ்சாலி தேவியின் துகிலினைக் களையத் தொடங்கினான். கதியற்ற பாஞ்சாலி ''உட்சோதியிற் கலந்தாள் - அன்னை, உலகத்தை மறந் தாள், ஒருமையுற்றாள்.''

"ஹரி, ஹரி, ஹரி என்ருள்—கண்ணு!
அபயம், அபயம், உனக் கபயம் என்ருள்"

பாஞ்சாலியின் வாயால் பாரதியார் இங்கு கண்ணன் புகழினைப் பாடுகின்ருர். 'கண்ணு கஜேந்திரன் என்னும் யானை ஒன்றிற்காக நீ தோன்றி, அந்த யானையைப் பிடித்த முதலையைக் கொன்ருய். காளிங்கன் என்னுங் கொடிய விடநாகத்தின் முடித்தலையில் நீ நடனம் புரிந்தனை உன் அன்பர்களுக்காக. மறைப்பொருளாய் மிளிரும் பெரும் பொருளே! நீ, உன் கைகளிலே சங்கு சக்கரங் களையும் சாரங்கம் என்ற வில்லினையும் அடியாரைக் காக்க வென்று தானே ஏந்தியிருக்கின்ருய். வேதனுக்குத் தந்தையான நீ உன் தொண்டர்களுடைய துன்பக் குரல் கேட்டு விரைந்துசென்று அவர்களுடைய கண்ணீரைத் துடைத்துக் காக்கும் அருட்கடல் போன்று விளங்குகின்ருய். நீ இல்லாத இடமேயில்லை! வானம், நெருப்பு, மண், நீர், காற்று ஆகிய ஐம்பெரும் பூதங்களுள் எல்லாம் நிறைந்து நிற்கும் நீ சிறப்பாகச் சதுர்மறை முனிவர் தம் உள்ளத் துள் குடிகொண்டுள்ளாய் என்பர். இலக்குமியை விட்டுநீங்காத இன்பச் செல்வன் நீ'

"ஆதியில் ஆதியப்பா—கண்ணு
அறிவினைக் கடந்தவிண் ணகப்பொருளே
சோதிக்குச் சோதியப்பா — என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய்திடுவாய்!
மாதிக்கு வெளியினிலே — நடு
வானத்திற் பறந்திடும் கருடன் மிசை
சோதிக்குள் ஊர்ந்திடுவாய்—கண்ணு
சுடர்ப் பொருளே பேர் அடற்பொருளே!" (296)

'உனது நாமத்தை மறவாது உச்சரித்து வந்ததற்காக, இரணிய ஞல் கொடுமைப்படுத்தப்பட்ட பிரகலாதனுடைய உறுதிப்பாட்டின் உண்மையை வெளிப்படுத்துவதற்காக, கற்றூணிலிருந்து தோன்றி அந்தத் தீய இரணியனது உடலைப் பிளந்து கொன்று பிரகலாத னைக் காப்பாற்றினுய்.' இந்த வேளையில் வேறு துணையின்றி

"நம்பிநின் அடிதொழுதேன்—என்னை
நாணழியாதிங்கு காத்தருள்வாய்"

என்று கண்ணனை வேண்டலானுள். 'வானமுதப் பெருங் கடலே! ஆய்ச்சியரது தயிரை விரும்பியுண்ட கள்வா! நீ நினைத்தால் முடியாத தொன்று இவ்வுலகில் உண்டோ' என்று அவன் புகழையே நினைந்து நினைந்து "நூற்றுவர் கொடுமையைத் தவிர்த்தருள்வாய்" என்று கண்ணீர் வடித்தாள்.

"வையகங் காத்திடுவாய்! — கண்ணா!
மணிவண்ணா! என்றன் மனச்சுடரே
ஐய! நின் பதமலரே — சரண்
ஹரி, ஹரி, ஹரி, ஹரி, ஹரி," (299)

என்று அவளது வாய் கண்ணன் புகழை உச்சரித்துக் கொண்டேயிருந்தது. சபையோர் வியப்புற 'அந்தத் தொழும்பத் துச்சாதனன்' உரியலாற்ருது சோர்ந்து விழத்தக்கதாக அன்னை பாஞ்சாலியின் துகிலானது வளர்ந்து கொண்டேசென்றது. தொடர்ந்து பாரதியாரின் வெற்றியும் மகிழ்ச்சியும் கலந்த குரலைக் கேட்கின்ருேம்.

"கண்ண பிரான் அருளால் — தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணி புதிதாய்
வண்ணப்பொற் சேலைகளாம் — அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே." (300)

கண்ணன் புகழால் வளர்ந்த துகிற்கூட்டத்திற்குப், பாரதியார் காட்டும் உவமானங்களும், எல்லையில்லாத கண்ணன் புகழையே மேலும் நினைவுறுத்துவன. பொய்யர்களது துயர், புண்ணியவாளர் தம் புகழ், தையலர் கருணை, ஒழியாத கடலலை இவைகளின் அளவுக்கு எல்லையே இல்லை! கண்ணபிரான் அருளால் துகிலும் இவைபோல முடிவில்லாது வளர்ந்து கொண்டே சென்றதாம்!

கண்ணனது திருவருள் பெண்மையின் புகழை உலகறிய எடுத்து நிறுத்திற்று. எந்த இடர் வரினும், கண்ணன் கழலிணை கைதந்து காக்கும் என்ற நம்பிக்கையிற் சிறிதும் குறையாதவள் பாஞ்சாலி. தருமர் முதலாய ஐவரும் அந் நம்பிக்கையிற் குன்ருதவர்களே. முடிவில் கோபக்கனல் தெறிக்க அவர்கள் சபதஞ் செய்கின்றனர். அவர்கள் கூறும் ஆணைவார்த்தைகளிலே, கண்ணனைத் தெய்வமாக அன்னுர் மதித்துப் போற்றிய பெருஞ்சிறப்பைக் காண்கின்ருேம். வீமன் கூறும் ஆணைவார்த்தையில், கண்ணன் புகழ் இடம் பெறுகின்றது.

" மாமகளைக் கொண்ட தேவன் — எங்கள்
மரபுக்குத் தேவன் கண்ணன் பதத்தாணை "

தமக்குமட்டுமன்றித் தமது மரபு முழுவதற்குமே கண்ணன் தெய்வமானவன் என்கிறது அவனது ஆணைக்குரல். அருச்சுனன் கன்னனை மடிக்கச் சபதஞ்செய்கையில்,

"தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு — எங்கள்,
சீரிய நண்பன் கண்ணன் கழல் ஆணை "

என்று கண்ணன் கழலிணையே பெரிதாக மதித்துத் தன் சபதத்துக்கு ஆணையாகக் கூறுகின்றான். இவ்வாறு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் பாஞ்சாலி சபதம் கண்ணன் புகழைக் காட்டி நிற்கிறது.

கண்ணன்மேற்கொண்ட அளவற்ற காதலினால் அவனைத் தனது தோழன், தாய், தந்தை, காதலன், காதலி, ஆண்டான், அடிமை, குரு, சீடன், அரசன், குலதெய்வம் என்னும் பல்வேறு கோணங்களிலுமிருந்து கண்டு ஆனந்தித்துப் பாடித்துதித்தவர் பாரதியார். 'தொழுவார் துன்பம் துடைப்பவன் கண்ணன்' என்ற நம்பிக்கை அவருக்குண்டு. பாஞ்சாலி வேத்தவையிலே துகிலுரியப் படும்போது அறமறிந்தோர் பலரும் அசையாது பார்த்திருக்க, கொண்ட கொழுநர் செயலற்று வாடிநிற்க, அவளது பக்தியினால் இழுப்புண்டு, அருள் சுரந்து அவளது மானத்தைக் காத்த கண்ணன் கழலிணைகளை மேலுங் கண்டுதொழவும் இக் காவியம் அவருக்கு இடம் அளித்ததோடு, நாத்திக உலகிலே வாழும் நமக்கும் ஆண்டவன்பால் அசையாத நம்பிக்கை வளர்தற்கும் வழி செய்து வைக்கின்றது.

## 8. விதி! விதி! விதி!

தமிழ்நாட்டு மக்கள் எடுத்ததற்கெல்லாம் 'விதிப்படி நடக்கும்', 'இது என் தலைவிதி' என்று கூறிக்கொண்டு முயற்சி குன்றிச் சோம்பிக் கிடக்கும் நிலையைப் பார்த்துப் பாரதியார் பெருமூச்சு விட்டார். சோம்பேறிகளின் புகலிடந்தானு இந்த விதி என்று யோசிக்கலானுர். தமது வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிலவற்றிலே விதி குறுக்கிட்ட சந்தர்ப்பங்களையும் எண்ணிப் பார்த்தார். எல்லாவற்றிலும் விதி வலிதுதானு, அல்லது அவ்விதியை நமது மதியால் வெல்லுதல் கூடுமா என்று ஆழ்ந்து சிந்திக்கலானுர். அச் சிந்தனையின் முடிவுதான் "மங்கியதோர் நிலவினிலே கனவில் இது கண்டேன்" என்ற பாடலாக அவரது கற்பனையிலிருந்து புறப்பட்டது. இக் கனவுக் கவிதையிலே வரும் அழகுத் தெய்வத்திடம் பாரதியார் தமது சந்தேகத்தைப்பற்றி வினுவி, விடையும் பெறுகின்ருர். 'காலத்தின் விதி மதியைக் கடந்திடுமோ என்றேன்; காலமே மதியினுக்கோர் கருவியாம் என்ருள்" என்பது அவர் பாடல். கால தேவனுல் அறுதியிடப்படுவதாகிய விதியானது மதியையும் வெல்லும் ஆற்றல் உடையதா? என்ற பாரதியாரது வினுவுக்கு 'நல்ல மதியும் விதியின் பயனுலேதான் நமக்குக் கிட்டுவதாகும்' என்று அழகுத் தெய்வம் விடையளித்திருக்கின்றது. அனைத்திலும் விதியே வலியது என்பது பாரதியார் இதனுற் பெற்ற முடிபாகும். அம் முடிவைத் தெளிவுறக் கூறுவதற்கு ஏற்ற களமாக அமைந்துள்ளது அவரது பாஞ்சாலி சபதம் என்னும் காவியம்.

திருதராட்டிரன் அறப்பண்பு நிறைந்தவன்; அறிவொளி சிறந்தவன்; அருமந்திரக் கேள்விகளில் புகழ்பெற்ற பெருஞானி. அவனது பேரறிவு முதலானவற்றைப்பற்றி விளக்குவதற்கு, விதுரன் கூறும் ஒரு வார்த்தையே சான்றுபகரப் போதுமானதாகும். "கேள்விக்கொரு மிதிலாதிபனெத்தோன்" (124) என்று ஜனகமகாராசனுக்கு உவமையாக்கி விதுரனுல் புகழப்படுகின்ற இத்தகைய திருதராட்டிரனிடம் சகுனியும் துரியோதனனும் சென்று பாண்டவருடன் சூதாடுவதற்கு அநுமதி கேட்கின்றனர். அதற்கு மறுத்துவிடுவதோடு திருதராட்டிரன் பல அறவுரைகளையும் எடுத்துக்கூறி அவர்களுக்கு அறிவுபுகட்டுகிருன். அவற்றையெல்லாம் ஏற்க மறுத்த துரியோதனன் தந்தையை எதிர்த்து எவ்வளவோ கூறியபோதும் அசையாது நின்ற திருதராட்டிரன் ஈற்றில் மனம் நொந்து "விதி, விதி, விதி மகனே, இனி வேறெது செய்குவன் அட மகனே" என்று வழியும்

கண்ணீரொடு விடை கொடுக்கின்ருன். துரியோதனனது துன்மதிக்குத் தான் இணங்குவதும், அவனது சதியால் பாண்டவர் துயருறப் போவதும், அதனுல் பாரதநாடு அழிவெய்தக் காத்துக்கிடப்பதும் எல்லாம் விதியின் பயனுற்ருன் ஆகின்றன என்பதைத் திருதராட்டிரனது மனமாற்றத்தின் மூலம் பாரதியார் இங்குக் காட்டுகின்ருர். பாரதியாரது கனவுக் கவிதையின் முடிவான ''மதியினும் விதிதான் பெரிது'' (182) என்பதும் பாஞ்சாலி சபதத்துள் அவரால் மறுபடியும் அழுத்திக் கூறப்படுகின்றது.

தன் மகனது விடாப்பிடியில் சிக்குண்டு திருதராட்டிரன் நெஞ்சமுடைந்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு பாரதியார் விதிக்கு விளக்கம் கொடுக்கின்ருர். 'விதி செய்யும் விளைவினை மாற்றி அமைக்க வல்லவர் யாரும் இங்கில்லை' என்பது அவர் கூற்று. (107) புத்திமானுன விதுரன் இதனை நன்கறிந்து முன்பே கூறினுனன்ருே? 'குருகுலத்தின் அழிவுக்குக் காரணமான விபரீதங்கள் தோன்றி நாடு அழியப் போகின்றது' என்று அவன் கூறிய விபரீதம் எதுவும் நடந்துவிடாமல் தன்னுல் தடுக்கமுடியவில்லையேயென்று திருதராட்டிரன் இரங்கியதோடு அவ்விளைவுக்குக் கால்போன்றமைந்த துரியோதனனை ''சதிசெயத் தொடங்கிவிட்டாய் நின்றன் சதியினிற் தானது விளையும்'' (107) என்று திட்டிக் கண்ணீர் விடுகின்ருன். இந்த நிலையில் எதனுலும் வெல்லமுடியாத விதியின் வலிமையை 'விதி விதி விதி மகனே' என்று அழுத்திக்கூறி அலறுகின்றனன். அதே விதிதான் தனது கொடிய விளைவுக்குத் தூண்டுகோலாகக் கீழ் மகனுன சகுனியையும் படைத்ததென்பது அவன் முடிவு. சூதாட்டத்தில் தருமர் முதலாயினேரை மடிக்கத் திட்டமிட்ட துரியோதனனுக்கு அநுமதி வழங்கியதற்காகத் திருதராட்டிரனை விதுரன் கண்டித்த போது, திருதராட்டிரன் மிக்க மனவருத்தத்துடன்

''வென்று படுத்தனன் வெவ்விதி என்னை;
மேலை விளைவுகள் நீயறி யாயோ?
அன்று விதித்ததை இன்று தடுத்தல்
யார்க்கு எளிது?............ (114)

என்று தவிர்க்கமுடியாத வலிய விதியினுல் தான் மேற்கொள்ளப்பட்டு விட்டதை மிக்க உருக்கமாகக் கூறி அவ்விதியின் விளைவால் மேல்நடக்கவிருப்பது விதுரனுக்கும் தெரிந்ததுதானே யென்று கூறுவதன் மூலம் தன் கருத்தில் விதுரனுக்குள்ள உடன்பாட்டையும் தெளிவாக்குகின்றனன்.

தருமபுத்திரன் பாஞ்சாலி சபதத்துள்ளே படைக்கப்பட்ட பெருந் தலைவர்களுள் சிறந்த ஒருவன். அறிவுத்தெளிவு சான்ற அவனது

மனமுடிவு, செயல் முதலியன பாரதியாரது விதிபற்றிய கருத்தை வலியுறுத்த மிகுதியும் இடம் தருவனவாய் உள்ளன. துரியோதன னது விருப்புக் கிணங்கிய திருதராட்டிரனுடைய அழைப்பினைக் கொண்டு தூதுவந்த விதுரன் அனைத்தையும் பாண்டவரிடம் தெளி வுறக் கூறுகின்றான். கௌரவரது தீய சூழ்ச்சிகளை அறிந்தும் அங்குச் செல்லுதற்குத் தருமன் ஒருப்படுதலைக் கண்டு, வீமன் முதலிய தம்பியர் நால்வரும் உள்ளம் கொதிக்கின்றனர். அவர் களிடம் விதியினால் நடக்கவிருப்பவைகளை எடுத்துக் கூறித் தருமன் தம்பிமாரைக் கையமர்த்துகின்றனன். விதியின் வலிமையினை அழகிய உவமையினால் விளக்குதற்குப் பாரதியாருக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துவிடுகிறது. (138—140). விதியின் வழியிலே நிற்றலன்றி விலகிச் செல்லுதற்கு மக்கள் முடியாதவர்களென்பதைச் சக்கரம் சுழற்றுவோனது கையை உவமையாகக் காட்டுதலால் நன்கு தெளி வாக்குகின்றார். கைப்பிடியைத் தன்னிடம் கொண்டு சுழற்றுவோன் விரும்புகிற அளவின்படியே சக்கரம் சுழன்றிடும்; சற்றேனும் கூடியோ குறைந்தோ அது சுழலுதல் முடியாது. அதுபோலவே, இவ்வுலகில் வாழ்வோரும் விதியின் ஆணைப்படியன்றி விலகிச்செல்ல முடியாதவராகின்றனர். செப்படிவித்தையைப்போல் இவ்வுலகில் மாறி மாறி நடக்கும் செய்திகளெல்லாம் விதியின் விளையாட்டன்றி வேறில்லை. விதியானது முடிவில்லாததாய் ஒன்றோடொன்று பின்னி நீண்டுகிடக்கும் சங்கிலித் தொடர்போன்று பிறவிதோறும் தொடர்ந்து செல்வது. விதியின் வலிமைக்கு விதிவிலக்கேயில்லை. இது வெறும் கற்பனை அன்றி, நிலையான உண்மையேயாகும் எனக் கூறிய தரு மன், நிலையற்ற தங்கள் வாழ்வு இதனை எவ்வாறு கடத்தல் கூடும் என்று தம்பியரைக் கேட்கின்றான். தோற்றம், மறைவு, துன்பம், இன்பம், சமநிலை ஆகிய யாவும் விதிப்பயனாலேயே நமக்கு வருவன; அவற்றில் எது வரினும் நாம் சமமாக நோக்குதலன்றி மகிழ்ச்சியோ, துக்கமோ கொள்ளுதல் கூடாது. துன்பம் வருமென்ற அச்சத் தினால் நாம் நமது திடமான கொள்கைகளை விட்டுப் பிறழலாமா என்று தருமபுத்திரன் கேட்டல் எவ்வளவு அழகாக இருக்கின்றது! இவ்வாறு நீதிபுகன்று விதிப்படியே யாவும் நடப்பன என மன அமைதி பெற்றபின்பு பாண்டவர்கள் 'தீயோன் ஊருக்கு' வழிக் கொண்டனர்.

மாற்ற முடியாத இம்முடிபு கண்டு,

"நெடுங்கரத்து விதிகாட்டும் நெறியினின்றே,
நீங்கி யகன் றிடலாகுந் தன்மையுண்டோ" (145)

என்று பாரதியார் பெருமூச்சுவிட்டுக் கூறுகின்ருர். விதிவலியால் நடக்கக்கூடிய சில நிகழ்ச்சிகள் கவிகூற்ருக 146-ம் பாடலுள் காட்டப்படுகின்றன. விதியின் திட்டமிருப்பின் சிறிய நரிவிரித்த வலையிலே, மிருகேந்திரனுன சிங்கமும் தவறிவிழும்; யானை சிற்றெறும்பின் கடியினுல் இறந்துபடும்; சிறிய புழுவானது வேங்கைப் புலியினையும் கொல்லவல்லதாகும்; முற்றறிவோரும் தமக்கு வருவன வற்றை உணராது மதிமயங்கிப் போவர்; ஓடையிலே மலைக்குன்றுகள் மிதந்து செல்லுவ; மேலோர் கீழோராகவும் கீழோர் மேலோராகவும் மாறுவர்; கிழக்குத்திசை மேற்குத்திசை ஆதலும் கூடும்; வேதியர் புலையரைச் சேவித்து நிற்கவும் பெறுவர்; ஆ! விதி எவ்வளவு வலியதாயிருக்கின்றது என்கிருர் பாரதியார் இச் சந்தர்ப்பத்தில்.

துரியோதனனது சபையிலே பாண்டவர் எல்லாவித மரியாதைகளுடனும் வரவேற்கப்பட்டு அவரவர் இடங்களில் அமர்ந்துகொண்டனர். தமது திட்டப்படி, சகுனி அவ்வேளையில் தருமனைச் சூதாட வரும்படி அழைக்கின்ருன். சூது தீயது என்றும் நல்லோர் அதனை விரும்பார் என்றும் தருமன் காட்டிய மறுப்புரைகள் எல்லாம் வீண் போகின்றன. நீண்டநேர வாக்குப் போரில் சகுனி தருமனது உள்ளத்தைப் புண்படுத்தக்கூடிய சொற்களை யெல்லாம் பயன்படுத்துகின்ருன். தருமனது மனமும் வேறுவழியின்றிச் சூதாட்டத்திற்கு ஒருப்படுகின்றது. அறத்தினை யார் வெல்ல நினைந்தாலும் இறுதி வெற்றி அந்த அறத்திற்கேயாகும் என்பதையும், வலிய விதியே தன்னை இத்தகைய சூழ்நிலையில் கொண்டுவந்து விட்டிருக்கிறது என்பதையும் தருமன் அப்போது நினைக்கின்ருன். 'நூல்வகை முழுதுமறிந்தவன்; அவ்வாருன அறிஞர் குழுவினுள்ளும் உயர்ந்தவன்; எனவே அறநூல்களால் விலக்கப்பட்ட சூது முதலான தீச் செயல்களுக்கு அஞ்சியவனுன தருமன்', அதே சூதினுக்கு ஒருப்படுவதென்ருல் அதற்கு வேறு யாதுதான் காரணமாக இருக்க முடியும்! உலகிலுள்ள எந்தப் பொருளிலும் மிக்க வலியுடைய விதியை வெல்லத் தருமனுக்கு மட்டும் எங்கிருந்து ஆற்றல் வரப்போகின்றது! ஆதலால் 'மதியினும் பெரிதான' 'விதியினுல் அத்தருமனும் வீழ்ந்தான்' என்று பாரதியார் மனமுடைந்து அதனை நமக்குக் கூறுகின்ருர்.

இவ்விடத்திலே கவிஞர் விதி என்பது யாது என்ற வினுவுக்கும் விடையளிக்கின்ருர். 'மேலை நாம் செய்த கர்மமே விதி' என்ற முடிபு உறுத்திக் காட்டப்படுகின்றது. ஒருவன் துன்பநிலையை நோக்கிச் செல்லுதற்குத், தான் முற்பிறவியிற் செய்த தீவினைப்பயனே

காரணமாகும் என்ற கவிஞர்பிரான், நம்மைச் சேர்ந்தோர் செய்த வினைப்பயன்களும் சிலவேளை நம்மைச் சேருகின்றன என்பதையும் நல்லதோர் உவமையால் இங்குக் காட்டிவிடுகின்றார். துரியோதனன் செய்த பாவம் அவனழிவுக்குக் காரணமாக நிற்கின்றது; வீமன் முதலியோர் காட்டிலே சில ஆண்டு காலம் கழிக்கவேண்டிய கருமப் பயனை உடையவராயிருக்கின்றனர்; திரௌபதியும் மன்னரவையில் மானபங்கமுறுதல் வேண்டும்; இவர்களது விதிப்பயன் நிறைவேறுவதென்றால், இவர்களுடைய கருமப் பயனாலும் தருமன் சூதாட்டத்துக்கு இணங்கித்தானேயாக வேண்டும்! விரைந்து செல்கின்ற நதிப் படுக்கையிலே, அங்கங்குள்ள குழிகளில், பலதிசைகளிலுமிருந்து வரும் அழுக்குகள் தங்கிவிடுவது போன்று, தருமனையும் அவனைச் சேர்ந்து நிற்கின்ற பல்லோரது தீவினைப் பயனும் ஒருங்கே தாக்கச் சூதுக்கு ஒருப்படும் எண்ணத்தினால் தருமனும் வீழ்ந்து விடுகின்றான் என்னும் சிறந்த கருத்தினை:

"நதியிலுள்ள சிறுகுழி தன்னில்
நாலு திக்கி லிருந்தும் பன்மாசு
பதியுமாறு பிறர்செயுங் கன்மப்
பயனும் நம்மை யடைவதுண் டன்றே" (182)

என்று அழகாக விளக்குகின்றார் பாரதியார். தருமனது இந்த முடிபுக்குக் காரணம் விதியன்றி வேறில்லை என்பதையே தேர்ப்பாகன் வாயினால் பாஞ்சாலிக்கும் பின்னர் அறிவிக்கின்றார். மன்றிடை மன்னன் பாஞ்சாலியை அழைத்துவருமாறு விடுத்த அந்த ஏவலாளன் 'அம்மனே போற்றி அறங்காப்பாய் தாள் போற்றி' என்று வணங்கும்போது, பாஞ்சாலியை 'அறங்காப்பாய்' என்று விளிப்பதிலிருந்து, தருமச் செயல்களையே வளர்க்கும் அவளது பெருமைநிலை பேசப் படுகின்றதல்லவா! அத்தகைய அறமுதல்வியும் சூதாட்டத்திலே தருமனால் தோற்கப்பட்டுள்ள துன்பச் சூழலை எடுத்துக்கூற வேண்டிய நிலையையும் பாரதியார் தன் கொள்கையை நிலைநாட்டுதற்கு மேலும் பயன்படுத்திக்கொண்டு:

"வெம்மை யுடைய விதியால் யுதிட்டிரனார்
மாமன் சகுனியொடு மாயச்சூ தாடியதில்
பூமி யிழந்து, பொருளிழந்து, தம்பியரைத்
தோற்றுத் தமது சுதந்திரமும் வைத்திழந்தார்
சாற்றிப் பணயமெனத் தாயே உனைவைத்தார்" (252)

என்று விதியின் வலியால் தருமனுக்கு நேர்ந்த கொடுமைகளை யெல்லாம் முறையே சொல்லிமுடிக்கின்றார்.

இவ்வாறு விதியின் வலிமையை நிலைநாட்டுதற்கே பாரதியார் பாஞ்சாலிசபதமாகிய காவியத்தைப் படைத்தாரோ என்று நாம் எண்ணக்கூடிய அளவுக்கு, இக்காவியத்துள் விதியின் வலி பேசப் பட்டிருக்கின்றது. கவிஞர் இந் நூலுள் தமக்குக் கிடைத்த சந்தர்ப் பம் ஒன்றனையும் விடாது, விதியின் வலியை விளக்குதற்கு அதனை நன்கு பயன்படுத்தியிருக்கின்ருர். முற்பிறப்பில் செய்த வினைகளின் பயனுயமையும் விதியின் வலிமை படர்ந்து, ஒருவனது அறக் கொள்கையினேடும் முட்டிமோதி வெற்றிகொள்ளும் சூழ்நிலையை நமக்குக் காட்டுதலால், நாம் இப்பிறப்பிற் செய்யும் கருமங்களாலே மற்றைப் பிறவியிலமைய வேண்டிய விதியையும் நமக்கு நாமே வகுத்து வைக்கின்ரேம் என்ற தத்துவமுடிபை "மேலை நாம் செயும் கர்மமல்லாதே" என்பதனல் விளக்கி, நல்வினை செய்தற்கு நம்மைத் தூண்டும் கருவியாகவும் இந்நூலை ஆக்கிவைத்த கவிஞரின் பெரு மையை நாம் போற்றுதல் வேண்டும்.

# 9. பெண்ணடிமை

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்று பாடியவர் பாரதியார். பெண்கள் அடிமையாக்கப்பட்ட அநீதியை நினைக்கும் பொழுதெல்லாம் அவர் நெஞ்சம் படாத பாடு பட்டது. பெண்கள் பொதுவாழ்விலே ஈடுபட்டால் அவர்களது கற்பு நிலைக்குப் பங்கம் வருதல் கூடுமென்பது சிலரது எண்ணம். நாணம் என்ற பெயரால் பெண்களை அவர்கள் கோழைகளாக்குகின்றனர். 'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்று அன்னருக்குச் சாட்டையடி கொடுத்த பாரதியார், பெண்கள் பொதுவாழ்விலே ஈடுபடுதற்கு மட்டுமன்றி, அரசனது நீதிநெறி பிழைக்கும்போது பொதுமன்றுகளிலும், அவசியமேற்படின் மன்னரவைக்களத்திலுங் கூட அதனை எடுத்துக்காட்டி நீதிக்காகப் போராடுதற்கும் வேண்டிய உரிமையும் ஆற்றலும் படைத்தவராவர் என்ற தம் கருத்தினைக் காட்டுதற்கென்றே பாஞ்சாலி சபதம் என்னும் காவியத்தைப் படைத்திருக்கின்ருர் எனலாம்.

கற்புக்கரசியான திரௌபதியைத் தெய்வமாக மக்கள் வழிபடுதல் உண்டு. அத்தகைய ஒரு பாத்திரத்தினைத் தெரிந்து தன் உணர்ச்சியனுபவங்களைப் புலப்படுத்துதற்கு வழியாக்கிக்கொண்டதிலிருந்து பாரதியாரது இரசிகத்தன்மை, நுட்பமான ஆராய்ச்சித்திறன், மிருதுவான உளப்பண்பு ஆகிய சிறப்புக்களை உணர்ந்து நாம் வியப்பில் ஆழ்கின்றேம். பாரதநாடு அடிமைத்தளை நீங்கி விடுதலை பெற வேண்டும் என்பதும், தமிழகத்திலே பெண்ணடிமை நீங்கி 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக' வாழவேண்டுமென்பதும் அவரது நிறைந்த ஆசை. இத்தகைய கருத்துக்களை வெளிப்படுத்துதற்குக் களனுகப் பாரதக்கதையினைத் தெரிவுசெய்துகொண்டதோடு அதனை யெப்படித் தன் கருத்துக்கும் இசைவிக்கின்ருர் பாரதியார் என்பதனையும் நாம் நுணுகியாராய்தல் வேண்டும். அதனுள்ளும் பாரதக்கதை வளர்ச்சிக்கே அடிப்படையாயமைந்ததான திரௌபதியின் துகிலுரிதற் பகுதியை மட்டும் அவர் தேர்ந்துகொள்ளுதற்கும் காரணங்கள் நிறையவுள்ளன. தம் காலத்திலே வலுப்பெற்றிருந்த வழக்கமான ஆணுக்குப் பெண் அடிமையென்ற கொடுமை அறவே ஒழிக்கப்படல் வேண்டுமென்னும் அவரது கருத்துக்கும், பாரதமாதா அடிமைத்தளையிலிருந்து நீக்கம்பெறல் வேண்டுமென்ற அவரது பெரிய ஆசைக்கும் அதிகம் பேதம் இல்லை. ஒன்றுபட்ட அந்த உள்ளக்கருத்துக்களை வெளியிடுவதற்கு இந்தக் கதைப்பகுதி மிகுதி

யும் பொருத்தமானது என்பதைக் கவிஞர் நன்கு தெரிந்துகொண்டார். அவரது அத்தகைய் உள்ளக்கருத்து நூலினுள் எவ்வாறு ஊடுருவிச் செல்கின்றதென்பதை நாம் அறிந்து அனுபவிக்கும் அளவினைப் பொறுத்தே, பாரதியாரது பாஞ்சாலி சபதத்தினைப் படிப்பதில் நாம் பெறும் இன்பத்தின் அளவும் மதிப்பிடப்படலாகும். ஆணுக்குப் பெண் அடிமை என்ற கொள்கை வலுப்பெற்றதனுல் பாரத சமுதாயம் வீழ்ச்சியுற்றது. அதனுல் முன்னையது நீங்கில், மற்றைய யாவுமே சரிவரும் என்பது அவர் உள்ளக்கிடக்கை. பாஞ்சாலியின் சபதம் பெண் அடிமை நீங்குவதற்கு வழிசெய்கிறது; அதனுல் அதர்மம் ஒழிந்து தருமம் தலைகாட்டவும் நாடு சுதந்திரம் பெறவும் வழி பிறக்கின்றது. இவ்வாறு கவிஞனுடைய நோக்கம் இறுதியில் நிறைவேறக்கூடிய வகையிலே காவியம் வளர்ந்து கொண்டே போய் நிறைவெய்தும் பெருஞ் சிறப்பினையும் பாரதியாரது காவியத்தில் நாம் கண்டு மகிழலாம்.

மாதர் பலர், அந்தப்புரத்திலே மன்னர்களது போகப் பொருட்களாகக் கிடந்தனர் என்பதை திருதராட்டிரன் துரியோதனனுக்குக் கூறும் 'இளம் பொற்கொடி மாதைக் களிப்பதினும் உளம் இசைய விட்டே இதைமறந்திடடா.' என்பது முதலாகக்கூறும் சந்தர்ப்பங்களிலிருந்து நமக்குத் தெரிகின்றது. அக்கால மன்னர்கள் தமது நாட்டு மக்களையும் சொத்து, சுதந்திரம் என்பவற்றையும் எக்கேள்வியும் இன்றித் தாம் விரும்பியபடி எதுவும் செய்திடலாம் என்று கருதியிருந்தது போலவே, பெண்களையும் கருதி நடத்தினுர்கள். திரௌபதியையும் சூதில் பணயமாக வைக்கலாம் என்று சகுனி கூறியபோது, அதனை மறுக்காது ஏற்றுக்கொண்ட தருமபுத்திரனது செயலும் இதற்குச் சான்ருகின்றது. திரௌபதியைச் சூதில் பணயமாக வைத்தற்குத் தருமன் இசைந்து கொண்ட சந்தர்ப்பத்தைக் குறிப்பிடும்போது, பாரதியாரது ஆவேசம் பொங்கிப் பெருகுவதைக் காண்கின்ருேம். பாஞ்சாலியின் பேரெழிலையும் சிறப்புக்களையும் "புகழ்ப்பாஞ்சால நாட்டினர் தவப்பயனை ஆவியிலினியவளை", என்பது முதலாக (243), "இன்ப வளத்தினைச் சூதினிற் பணயமென்றே அறக்கோமகன் வைத்திடல் குறித்து விட்டான்" (244) என்பது வரை உளமுருகக் கூறுகின்ருர். தருமனது இந்தக் கொடிய செயல் உண்மையிலேயே பாரதியாருக்கு அவன்மீது அடங்காத கோபத்தை ஆக்கியிருத்தல் வேண்டும். தருமன்பேரில் உண்டான தமது சொந்த ஆத்திரத்தையே பாரதியார் பின்னேரிடத்திலே வீமன் வாயால் கக்குகின்ருர் எனலாம்.

"துருபதன் மகளைத் — திட்டத்
துய்மன் உடன்பிறப்பை
இருபகடை என்றாய் — ஐயோ
இவர்க்கடிமை என்றாய்" (280)

"இது பொறுப்பதில்லை; — தம்பி
எரிதழல் கொண்டுவா
கதிரைவைத் திழந்தான் — அண்ணன்
கையை எரித்திடுவோம்" (281)

என்பது அவர் வாக்கு. உயிரனைய தம் தேவியை அடிமைப் பொருள் போன்று கருதிச், சூதில் பணயப்பொருளாக்கி இன்னொருவருக்கு அவளை அடிமையாக்கியும் விட்ட தருமனது கைகளைப் பொசுக்கிவிட வேண்டுமென்று வீமனது வாயால் தமது குமுறலை வெளிப்படுத்து கிறார், உணர்ச்சிக் கவிஞராகிய பாரதியார் அவ்விடத்தில்.

சூதிலே பெற்ற பொருளாதலால் தனது அடிமைப் பொரு ளாகிறாள் பாஞ்சாலி, துரியோதனனுக்கு. அதனையே,

"முன்னே பாஞ்சாலர் முடிவேந்தன் ஆவிமகள்
இன்னே நாம் சூதிலெடுத்த விலைமகள்"

என்று அவன் வருணிக்கின்றான். அவளைத் தன் கொலுமண்டபத் திற்குக் கூட்டிவரும்படியும் ஆள்விடுக்கின்றான்.

"நாயகர் தாம் தம்மைத் தோற்றபின் — என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை — அவர்
தாயத்திலே விலைப்பட்டவர் — புவி
தாங்கும் துருபதன் கன்னி நான்" (256)

என்று அவள் சபைக்குச் செல்ல மறுத்துவிட்ட காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பெண்ணடிமை அவ்வளவு வலிவுடன் தலை விரித்தாடிற்று. பெண்கள் கூறும் நீதி சரிதானா என்பதைக்கூட ஆண்கள் சிந்திக்க — கேட்கக்கூட மறுத்த அல்லற் காலத்திலே பாரதியார் வாழ்ந்தார். அந்தச் சூழ்நிலையினையே பாரதகாலத்திற்குக் கொண்டுபோய் நமக்குக் காட்டலானார். பாஞ்சாலியை மன்றிடை அழைத்துச் செல்வதற்காகத் துச்சாதனன் அவள் இருந்த அந்தப் புரத்திற்கு வருகிறான். மரியாதையாக ஒருபுறம் ஒதுங்கிய பாஞ் சாலியின் பெருஞ் சிறப்பினை உணராத அக் கொடியவன் 'அடி, செல்வதெங்கே? என்று இரைந்திட்டான்", அதனால் "இவன் ஆண் டகையற்ற புலையன்" என்று பாஞ்சாலியும் அச்சமில்லாது எதிர் நோக்கிநின்று, அவனுடன் நீதிமுறைகளைப் பேசலானாள்.

> "பாதகஞ் செய்பவரைக் கண்டால் — நீ
> பயங்கொள்ள லாகாது பாப்பா
> மோதி மிதித்துவிடு பாப்பா — அவர்
> முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா"

என்று பாடல் செய்த பாரதியாருக்கு, தமது அதே பாடற் பொருளினைச் செயல்முறையிலும் காட்டுதற்கேற்ற ஒரு சந்தர்ப்பமாக இந் நிகழ்ச்சி அமையலாயிற்று. பாஞ்சாலி, பாரதியாரது புதுமைப் பெண்ணாக இங்கே சித்திரிக்கப்படுகின்றாள். மூர்க்கரோடு வாதிடுதல் பயன் தருமா? துச்சாதனன் நெருங்கிவந்து பாஞ்சாலியின் கூந்தலைப் பற்றிக் கரகரவென்று இழுத்துச் செல்லலானான். அதனைப் பார்த்துக்கொண்டு ஒன்றும் பேசாது சும்மாநின்ற பொதுமக்களையும் மற்றையோரையும்,

> "வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்
> தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே
> பொன்னை அவள்அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
> நெட்டை மரங்களென நின்று புலம்பினார்" (271 : 18—21)

என்று பாரதியார் ஆவேசம் தோன்றத் திட்டுவது, அவரது உள்ளத் துணர்ச்சியின் பெருக்கையும், பெண்ணினத்திற்கு இழைக்குங் கொடுமையினைச் சகிக்கமுடியாத அவரது பெருந்துயரத்தையும் அப்படியே எதிரொலித்துக் காட்டுவதாகும்.

மன்னரவையிலே பாஞ்சாலி நீதி கேட்கும்போது பாரதியாரின் காலப் பெண்ணடிமைச் சூழ்நிலையினையும், அந்த அடிமைநிலையினின்றும் நீங்கியவராக அவர்களைக்காண விரும்பும் பாரதியாரது புதுமைப்பெண் சமுதாயத்தினையும் நாம் நன்கு காண்கின்றோம். மன்னனிழைத்த கொடுமையை அம்மாற்றார் அவையிலே பாஞ்சாலி ஆட்சேபிக்கின்றபோதும், துச்சாதனன் தனக்குச்செய்யும் கொடுமையைக் கண்டும் அவனை 'நிறுத்தடா' என்பதிலராய் அசைவற்றுச் சும்மா சபையிலிருந்த பெரியோர்களென்று சொல்லப்பட்டவர்களைக் கடிந்துகொள்ளும்போதும், பாஞ்சாலியின்பால் வீரக்கனலை ஏற்றித் தாம் கற்பனையில் காணுகின்ற புதுமைப்பெண்ணாகப் பாரதியார் அவளைக் கண்டின்புறுகின்றார். 'சூதிலே முதலில் தம்மைத்தாமே தோற்று மாற்றாருக்கு அடிமையாகிவிட்ட மன்னவராகிய தருமருக்குத், திரௌபதியைப் பணயம் வைத்தாட எப்படியுரிமையுண்டாகும்' என்பது பாஞ்சாலி மன்னரவையில் எழுப்பிய நீதிக்கூப்பாடு. வீட்டுமர் வாயால் அதற்குத் தீர்ப்பு வழங்கப்படுவதான ஒரு சந்தர்ப்

பத்தை அந்த இடத்திலே ஆக்கிக்கொண்டு பண்டைக்காலப் பெண் களின் சுதந்திரநிலையினையும் பிற்காலச் சமூகத்தில் அவருக்கேற்பட்ட அடிமை நிலையினையும் படம்பிடித்துக் காட்டியிருக்கின்றார் பாரதி யார். 'வேதகாலத்திலே ஆணும் பெண்ணும் நிகர் எனக் கொண்ட னர். அது தற்போது பழையகதை என்று சொல்லத்தக்க அளவிற்கு நிலைமை மாறிவிட்டது. இன்றைய நிலையில் பெண் ஒருபோதும் ஆணுக்கு நிகராகமாட்டாள். பெண்டிர் என்போர் ஆடவரின் உடை மைகள். தனது உடைமையான பெண்ணை ஒருவன் இன்னொரு வனுக்கு விற்கலாம் அல்லது தானமும் பண்ணிவிடலாம், அந்தக் கொள்கையில் விலங்குகளுக்கும் பெண்களுக்கும் வித்தியாசமே இல்லை. ஆதலால் தன்னை அடிமையென்று விற்றபின்னும் தருமன் உன்னை விற்பதற்கு உரிமை உடையவனே' என்று கூறுகின்றான் வீட்டுமன். அவன் நீதிநெறிவல்ல நல்லோனென்று போற்றப்பட்ட வனாதலால் அந்த இடத்தில் அப்பெரியோனுக்குச் சிறிது உயர்வினைத் தாமும் கொடுக்கவேண்டுமென்பதற்காகத் திரௌபதிக்கு நடந்த கொடுஞ் செயல்களைக் கண்டு "கல்லும் நடுங்கும்" என்று கூறிக் கொண்டே அவள் தலை கவிழ்ந்ததாகப் பாரதியார் குறிப்பிடுகின்றா ரெனினும், வீட்டுமனது தீர்ப்புச் 'சரியன்று' என்று பின்னேரிடத் தில் உணர்ச்சி தோன்றக் கூறிவிடுகின்றார். 'பாட்டன் பெண்ணரசி யின் கேள்விக்குக் கூறியவிடை பொருத்தமாகவேயில்லை. வேத கால நெறி மாறிவிட்டதால் விலங்குமுறைபோல் பெண்களைத் தற் காலம் நடத்தலாம் என்று அவன் வழுவே சொன்னான். விலை மாதர் என்ற வகுப்பார்தம்மை அவ்வாறு விற்ற செய்தியைப் பிற்காலத்தார் நீதியென்று எல்லா மகளிர்க்கும் கொள்ளல் பொருந் தாது; நடைமுறையிலே இதுவரை யாரும் குலமகளிரை இவ்வாறு சூதில் பணயம் வைத்ததேயில்லை', என்று விகர்ணன் என்னும் பாத் திரம் பாரதியாரது அந்த உள்ளத்து முடிபை வெளியிட உதவி செய்கின்றது. நீதி கேட்கும் புதுமைப் பெண்ணான பாஞ்சாலி யைப் பாரதியார் தம் வாயால், 'பெண்ணரசு கேட்கின்றார் பெண்மை வாயால்' (286) என்று அந்த இடத்தில் அழகுறப் படைத்து மகிழ் கின்றார்.

வீறுகொண்ட புதுமைப் பெண்ணான பாஞ்சாலி, வீட்டுமாச் சாரியாரையும் மற்றையோரையும் இடித்துச் சாத்திரங்களிலுள்ள நீதி முறைகளைப் புகட்டுவது பெண்களுக்கிருக்கும் பேரறிவுச் சிறப் பையே மேலும் உயர்த்துவதாயுள்ளது. இராவணன் சீதையைத் தன் பெண்டாய்க் கொள்ள நினைத்தது சரியென்று அவனது ஆலோச

கர்கள் கூறியதை மேற்கோளாகப் பாஞ்சாலி எடுத்துக்காட்டி அதனைச் சரியென்று ஒப்புக்கொண்டோர் உளரோ என்று சபையோரைக் கேட்கின்றாள். 'பேய் அரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்' (271 : 81) என்று அவள் எடுத்துக்கூறுகின்ற நீதி சாத்திரமொழி சந்தர்ப்பத்துக்கு மிகுதியும் பொருந்துவதாகின்றது. இறுதியில் உலக வழக்கினுக்கு வந்து, 'பெண்ணோடு பிறந்தவர்கள் இங்கு யாருமில்லையோ' என்று விம்முகின்றாள். இறுதியில்,

> "பெண்பாவமன்றோ? பெரியவசை கொள்வீரோ?
> கண்பார்க்க வேண்டுமென்று கையெடுத்துக் கும்பிட்டாள்"
> (271 : 87—88)

என்ன பயன்! பெண்களின் ஓலக்குரல் பிற்காலத்தே யார் காதில் வீழ்ந்தது? எங்கும் ஒரே மௌனம், அடிமைப்படுத்தப்பட்ட ஆடவரன்றி மகளிருங்கூட மேலாடை அணியக்கூடாத காலம் அது.

> "வல்லியிடையினையும் ஓங்கி முன்னிற்கும்
> மார்பினையும் மூடுவது சாத்திரம் கண்டாய்"

என்று பெண்கள் ஆடையணியவேண்டிய ஒழுங்குபற்றிக் குறிப்பிட்ட பாரதிக்குப், பெண்கள் தம் மார்பை மூடும் மேலாடையை அணியவும் உரிமை மறுக்கப்பட்டிருந்த நிலை எவ்வளவு ஆத்திரத்தைக் கொடுத்திருக்கும்! அடிமையுற்ற பாஞ்சாலியின் மேலாடைகளையப்படல் வேண்டுமென்று கன்னன் துச்சாதனனுக்குக் கூறுகிறான். கன்னனை மறுத்துப் பெண்ணுக்காகப் பரிந்து பேசுவார் யாருமே இலராயினர்.

> " நவ்வியைப் போன்ற கண்ணாள்
> ஞானசுந்தரி பாஞ்சாலி
> எவ்வழி உய்வோமென்றே
> தியங்கினாள் இணைக்கை கோத்தாள்" (291)

கண்ணன் கழலிணைகளைச் சரண்புகுந்தாள். அவனது அருட்சோதியுட் கலந்து ஒருமையுற்ற பாஞ்சாலியின் துகிலானது வளர்ந்து கொண்டே சென்று துச்சாதனனுரது துகிலுரியுமாற்றலைப் புறங் கண்டுவிட்டது.

பொறுமையின் சின்னந்தான் பெண்; ஆயினும், அப்பொறுமை குமுறுமானால், பெண்மையின் ஆற்றலானது பயங்கரமான கனலைக் கக்கும் பெரும்புயலாக மாறிவிடும் என்பதைக் கதைமுடிவு காட்டுகின்றது. அறத்தையழித்தவர்கள், பெண்மையை இழித்தவர்கள்

யாவருமே அழிந்தொழிவார்கள் என்ற உறுதி நமக்கும் ஏற்படத் தக்க வகையில் கதை முடிகின்றது. பெண்மைக்கு வெற்றியீட்டிக் கொடுத்தபிறகு தமது காவியத்தை வளர்த்துச் செல்ல வேண்டிய அவசியம் பாரதியாருக்கு எப்படியிருக்கமுடியும்! நூலையும் அவ்வள வில் முடிக்கத் தோன்றுகிறது அவருக்கு. கொடியோர்கள் அழியப் பாஞ்சாலி சபதம் எடுக்கின்ருள்; ஐம்பெரும் பூதங்களும் அவள் செய்த சபதத்தை ஆமோதிக்கின்றன. பாஞ்சாலிக்கு வெற்றி; பாரதியாருக்கும் வெற்றியாகக் காவியம் பெண்ணடிமை நீக்கத்திற்கு வழிகோலி முடிவுறுகின்றது.

# 10. பாஞ்சாலி சபதத்தினூடு அடிமையுற்ற பாரதமும், அக்கால அரசியல் நிலையும்

பாரதியார் வாழ்ந்த இந்த இருபதாம் நூற்றுண்டு அரசியல் நிலை வேறு; பாரதக் கதை நிகழ்ந்த காலத்து அரசியல் நிலை வேறு. இரண்டுக்குமுள்ள வேறுபாடுகளும் பல. இவற்றைவிடப் பாரதியார் தமது எதிர்காலத் தாய்நாட்டிலே விளங்குதல் வேண்டும் என விரும்பிய அரசியல் அமைப்பும் வேருக ஒன்றிருந்தது. இம்மூன்றையும் பிணைத்து ஒருங்கே விளக்கத்தக்க முறையில் ஒரு காவியத்தினைப் படைக்க அவர் விழைந்தார். பாரதக் கதையின் பாஞ்சாலி சபதப் பகுதி அதற்கு மிகுதியும் பொருந்துவதை அவர் கண்டிருக்க வேண்டும். அடிமைத் தளையில் நாடு பிணிப்புண்டிருந்ததால் பாரதநாட்டிலே சுதந்திர உணர்ச்சியும், தேசபக்தியும் சுடர்விடத் தொடங்கியகாலம் பாரதியார் வாழ்ந்த காலம். அடிமைகொண்ட மக்கள் வீறு பெற்றெழுதற்காகச் சுதந்திர வெறியூட்டும் பாடல்களையெல்லாம் பாரதியார் உணர்ச்சிபொங்கப் பாடித்தள்ளினுர். அடிமைசேர்ந்த தொண்டு நிலையை தூவென்று தள்ளியதோடு பாரத நாட்டினது பழம் பண்பாட்டின் பெருமைகளையும் கலைவளத்தையும் போற்றி, வருங்கால நல்லெழுச்சியை வேண்டிப் பாடினுர். பொதுமக்களை, சிறப்பாகப் பெண் சமுதாயத்தை அடிமைப்படுத்தும் கொடிய விலங்குகளை அறுத்தெறிய வேண்டுமென்ற ஆவல் அவரை ஆட்கொண்டு நின்றது. அந்த ஆவலையெல்லாம் தணிக்கக்கூடிய சந்தர்ப்பத்தைப், பாரதக் கதையிலுள்ள பாஞ்சாலி சபதப்பகுதி அவருக்களித்தது.

தமது கருத்து எப்படியிருந்தாலும், அதற்காகப் பழைய கதைப் போக்கிலே மாற்றம் எதையும் செய்தல் கூடாது என்பதைப் பாரதியார் அறிவார். ஆகையால் கதையை மாற்ருமலே தன்னுடைய நோக்கத்துக் கிணங்கிய பகுதிகளை எல்லாம் விரித்து அழகுற அமைத்துச் சென்ருர். பாரத நாடு தன் பழம் பெருமையை இழந்து அடிமையுற்றதற்குக் காரணமாயிருந்த சில ஊழல்கள் சமுதாயத்திலிருந்து அகற்றப்படும்போதுதான், நாடு உய்ய வழியுண்டாகும் என்பது அவர் துணிபாகும். நாட்டு மக்களை, ஆட்சிப்பீடத்திலிருந்தோர் விலங்கினங்களைப்போல் மதித்திருந்த கொள்கை அவருக்குப் பிடித்திலது. மன்னருக்கொரு நீதி மக்களுக்கொரு நீதி என்பதை அறவே வெறுத்தார். 'நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற சமரச உளப்பாங்கு கொண்ட பாரதியார், ஒன்றுபட்ட பாரத சமுதாயத்தைக் காண விழைவு கொண்டார். தருமர் சூதாடுவதைக்

கூறுமிடத்திலும், மற்றைய இடங்களிலும் பாரதநாடு பெற்றுள்ள அடிமை நிலையினையே விளக்கிச் செல்லலானுர். அந்த நிலைமாறி, பழம்பெரும் பண்பாடுகளெல்லாம் விளங்குகின்ற பாரத சமுதாயத்தை, எதிர்காலத்தே தான் காண விரும்பிய இனிய ஆட்சி வளத்தை சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் தமது கதாபாத்திரங்கள் வாயிலாகவோ அல்லது கவிகூற்ருகவோ கூறித் திருப்திகொண்டார். மக்களை அடிமைசெய்த அரசியலின்போது பாரதநாடு பெற்றிருந்த இழிவுகளையெல்லாம் விளக்கிக் கூறுவதனுல் அத்தளை நீங்கப் பெறுவதை அனைவரும் விரும்புதலும், அதற்காக அனைவரும் ஒன்றுபட்டு உழைத்தலும் இயல்பாகவே மக்களிடை எதிர்பார்க்கத்தக்கதாகும். அதன் பயனுகப் பெறக்கூடிய பாரதத்தின் பெருஞ் சிறப்புகளையெல்லாம் எடுத்துக்காட்டுவதன் மூலம் சுதந்திர விழிப்புணர்ச்சி மக்களிடையே ஓங்கி வளரலாகும் என்பதை நன்குணர்ந்த கவிஞர், மக்களிடையே தமது கருத்துக்களை விதைத்துப் பயனூட்டுதற்கு இக் காவியத்தைப் பெரிதும் பயன்படுத்தியிருப்பதை நாம் காணலாகும்.

அந்நியர் வரவால், அல்லது நமக்குப் பொருந்தாத அந்நியக் கொள்கைகள் நம்மிடையே புகுந்ததனுல் பாரதநாடு அடிமையுறலாயிற்று. பிறர் பொருளை வெஃகுதல் என்னுங் குணம் மன்னருக்கோ அன்றி மக்களுக்கோ சிறிதும் பொருந்தாத ஒன்று. இது துரியோதனன் மனத்திடைப் பதிந்ததனுலேயே தருமராச்சியம் இழக்கப்படலாயிற்று. தருமர் இராசசூய யாகச் சிறப்புகளைக் கண்டு துரியோதனன் பொருமையுற்றுச் சதிசெய்ததுபோலவே இருந்தது, நமது பெருஞ் செல்வச் சிறப்புகளையெல்லாம் கண்டு பொருது அச்செல்வங்கள் அனைத்தையும் தாம் பெறக்கருதி அதற்கான சதிகளை அந்நியர் செய்தமை. அந்நிய ஆட்சியிலே பெறக்கூடிய உத்தியோக மோகத்தினுலும் அவர்கள் காட்டிய ஆசை மயக்கினுலும் பாரதத்தார் பெரிதும் ஏமாற்றப்பட்டார்கள். போலிமானம் அனைவரையும் கவர்ந்தது. அதனுல், நாம் சுதந்திரத்தை இழந்துகொண்டு போகும் நிலையினை அறிந்தபோதும் 'தொட்டதை விடுதல் சரியாகாதே' என்ற போலி மானத்தினுல் நாம் நம்மை ஏமாற்றிக்கொண்டே வாழ்ந்தோம். சூது தீது என்று அவ்வாடலுக்கு உடன்பட மறுத்துக்கூறிய தருமர், சகுனியின் 'கிண்டல்' வார்த்தைகளால் உரோசம் ஊட்டப்படுகிருர்.

"பலபல மொழிகுவதேன் — நினைப்
பார்த்திபன் என்றெண்ணி அழைத்துவிட்டேன்"

என்பது முதலாகச் சகுனி கூறிய வார்த்தைகளால் ஒருவிதமான உணர்ச்சி தருமனுக் குண்டாகின்றது. அதனுல் சூதாட ஒருப்படு கின்றுன். ஆட்டத்தில் தோற்றுக்கொண்டே போனுலும் சூதின் சுவையும், மேலும் ஒன்றை வைத்து ஆடினுல் இழந்தவைகளை வென்று விடக் கூடுமென்ற எதிர்பார்ப்பும் தருமனை மேலும் மேலும் சூதா டத் தூண்டுகின்றன. பாரதநாடு அடிமைத்தளையில் சிக்கும்போதும் இதே நிலையில்தான் நாட்டு மக்கள் இருந்தனர். தம் கைப்பொருள் சுதந்திரம் என்பவற்றை, அந்நியரிடமிருந்து பெறும் சிறிய உப காரங்களை எதிர்நோக்கி விட்டுக்கொடுத்துக்கொண்டே சென்று அடி மைத் தளையில் விழலாயினர். விழுந்தவர்களால் அதிலிருந்து தப்பி வெளியேறுதற்கும் தம் மனத்தை ஒருப்படுத்த முடியவில்லை. 'நாம் சென்ற வழியிலிருந்து விலக நினைத்தால் மற்றையோர் நம்மைப் பழிப்பார்களே' என்ற கோழைத்தனம் வேறு நம்மவரை ஆட்கொண் டிருந்தது. இந்த நிலை சூதிலே நகுலன் தோற்கப்பட்ட பின்னர் சிறிது காட்டப்படுகின்றது. நகுலனைத் தோற்றபின்னர்

''நள்ளிருட் கண்ணொரு சிற்றொளி — வந்து
புகுவது போலவன் புந்தியில் — 'என்ன
புன்மை செய்தோம்' என எண்ணினுன்''

தருமன். தான் சூதாட ஒருப்பட்டதே தவறு என்பதை அவன் அவ்வேளை உணரலானுன். ஆனுலும், சகுனியின் பழிப்புமொழி தொடர்ந்து அவனைச் சூதாட்டத்தில் நிலைத்து நிற்கச் செய்தது. நாடு நகர், வீடு வாசல், பொருள் பண்டம், மனைவி சுற்றம் யாவற்றையுமே இம்மயக்கால் தோற்ற தருமனைப் போலவே பாரத நாட்டார் ஒவ்வொருவரும் தம்மையும் தம் நாட்டையும் அந்நியருக்கு அடிமையாக்கிக் கொண்டனர்.

தருமன் சூதாட்டத்திலே தன்னுட்டு மகளிரை, மைந்தரை, பொது மக்களை எல்லாமே முறையாகப் பணயம் வைத்திருக்கின்றுன். பாரதி யாரால் அதனைச் சகிக்கவே முடியவில்லை. பொதுமக்களது உணர்ச் சிப்பிழம்பையே தனது உருவாகக்கொண்ட பாரதியார், இந்தச் சந்தர்ப்பத்தில் ஆவேச மேலீட்டினுல் தருமனை ''சிறியர் செய்கை செய்தான்'' என்று கண்டிக்கின்றுர். சூதின் தீமைகளைக் கண்டும் மேலும் மேலும் அதிலே ஊக்கம் கொண்டுநின்ற தருமன் பணயப் பொருளாகத் தன் அரிய நாட்டை வைக்க முற்பட்ட செயலானது, 'கோயிற் பூசகன் மூல விக்கிரகத்தையே பெயர்த்துக்கொண்டுபோய் விற்றுவிடல் போலவும், ஒரு வீட்டுவாயிற் காவலன் அவ்வீட்டையே களவாடி அழித்துவிடல் போலவும்' தோன்றுகிறது அவருக்கு.

"ஆயி ரங்க ளான — நீதி
யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத் திழந்தான்; — சீச்சீ!
சிறியர் செய்கை செய்தான்" (219)

என்று பாரதியாரது அந்த மனவருத்தம் வெளிப்படுகின்றது.

அடிமை நாட்டிலே மக்கள் மிகவும் கீழான பொருட்களாகவே கணிக்கப்பட்டனர். அவர்கள் மனிதர்களாகக்கூடக் கருதப்பட்டாரில்லை. நாட்டில் மனித உணர்ச்சிக்கு மதிப்பே கொடுக்கப்படவில்லை. அடிமையுற்ற பாரதத்திலே அந்நியரது ஆட்சியின்போது, ஆட்டு மந்தைகள் போன்ற வாய்பேசாத மிருகக் கூட்டங்கள் பொது மக்கள் என்பது ஆட்சியாளர் கருத்து. பல அரிய உண்மை நீதிநூல்களையெல்லாம் சொல்லளவில் மட்டும் காட்டினுர்கள். அக்காலத்திலே தருமநெறியினைக் கடவாது, உயிர்க் குலத்துக்குத் துன்பம் விளைக்காது நாட்டையாளும் முறைமையை எந்த அரசரும் கடைப்பிடித்தாரில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்ருர் பாரதியார் இந்தச் சந்தர்ப்பத்தில்.

"நாட்டு மாந்த ரெல்லாம் — தம்போல்
நரர்க ளென்று கருதார்
ஆட்டு மந்தை யாமென் — றுலகை
அரச ரெண்ணி விட்டார்
காட்டு முண்மை நூல்கள் — பலதாங்
காட்டி னுர்க ளேனும்
நாட்டு ராஜநீதி — மனிதர்
நன்கு செய்ய வில்லை" (220)

"ஓரஞ் செய்தி டாமே — தருமத்
துறுதி கொன்றி டாமே
சோரஞ் செய்தி டாமே — பிறரைத்
துயரில் வீழ்த்தி டாமே
ஊரை யாளு முறைமை — உலகில்
ஓர் புறத்து மில்லை
சார மற்ற வார்த்தை! — மேலே
சரிதை சொல்லு கின்ருேம்" (221)

என்ற அடிகளாகப் புறப்படுகின்றது கவிஞரது உணர்ச்சிப் பெருக்கு.

பாஞ்சாலி, சூதாட்டத்தில் பணயப்பொருளாக்கப்பட்டபின்னர், அடிமையுற்ற பாரதநாட்டின் நிலையினை எடுத்துக் காட்ட மேலும் பல சந்தர்ப்பங்களைப் பாரதியார் பெறுகின்ருர். சூதுப்

பொருளாகத் தன் மனைவியை ஒருவன் வைப்பது ஒருபுறமிருக்க, சூதுக் களரிக்கு ஒரு குலப்பெண் செல்வதென்பதே தருமத்துக்கடாத செயல் என்பது அவர் கருத்து. பாஞ்சாலி தேர்ப்பாகனைக் கேட்பதாக அமைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தில்,

"சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா?"

எனப் பாரதியார் கேட்கின்றார். அடிமையுற்ற பாரதத்திலே சுதந்திரத்தினதும் தன்மானத்தினதும் அருமை பெருமைகளை யறியாது சுயநலமிகளாய்த் தம் மனைவி மக்களையெல்லாம் அந்நியர்பால் அடகுவைத்த பதடிகளை இத்தருணத்திலே தம் மனத்தில் அவர் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்! அந்நியர் ஆட்சியின்போது நீதி நெறி பிறழ்ந்து மன்னரவையிலே எது நடந்தபோதிலும் அதைப் பார்த்துக்கொண்டு, சபையில் இருந்த கற்றோர் என்பார் யாருமே எதிர்த்துப்பேசத் துணியாதிருந்தனர். மன்னரவையிடைத் திரௌபதி தேர்ப்பாகன்மூலம் முறைவேண்டி விடுத்தபோது, அவள் கட்சியிலிருந்த நீதியை எடுத்துத் துரியோதனனுக்குக் காட்டாது அனைவரும் பேசாதிருந்த நிலை இதனையே ஒப்பதாயிருந்தது கவிஞரது கருத்தில்.

"மற்றும் சபைதனிலே வந்திருந்த மன்னரெல்லாம்
முற்றும் உரையிழந்து மூங்கையர் போல் வீற்றிருந்தார்"

"பேரவை தன்னில் ஒருவரும் — இவன்
தீதுற்ற சிந்தை தடுக்கவே — உள்ளத்
திண்மை யிலாதங் கிருந்தனர்"

என்றெல்லாம் அத்தகைய நிலைகளைப் பாரதியார் அருவருத்துக் கூறுகின்றனர். நீதியேயாயினும் சரி, அநீதியாயினும் சரி, மன்னன் எதைக் கூறினாலும் அதற்கு எதிர்ப்பு யாரும் காட்டக்கூடாது அடிமை நாட்டிலே!

"மன்னன் அழைத்தனன் என்று நீ — சொல்ல
மாறி யவளொன்று சொல்வதோ?"

என்று துரியோதனனது பேச்சில் ஒரு அடிமை நாட்டு மக்களின் பேச்சுச்சுதந்திரம் அடக்கி ஒடுக்கப்பட்ட இந்த நிலையினையே பாரதியார் படம்பிடித்துக் காட்டுகின்றார். பாஞ்சாலியின் வாயால் மன்னர் செய்யும் இத்தகைய அறக்கொலை யாவும் கண்டிக்கப்படுகின்றன.

"இன்பமுந் துன்பமும் பூமியின் — மிசை
யார்க்கும் வருவது கண்டனம்; எனில்
மன்பதை காக்கும் அரசர் தாம் — அற
மாட்சியைக் கொன்று களிப்பரோ — அதை
அன்புந் தவமும் சிறந்துளார் — தலை
அந்தணர் கண்டு களிப்பரோ?"

என்ற பாடற்பகுதி இதனையே கூறுகின்றது.

ஆங்கில ஆட்சியின் போது, மேலுத்தியோகத்தர் சிலர், தாம் பாரத நாட்டிலே பிறந்தோராயினும் தம்மவருக்கு அந்நியரால் இழைக்கப்பட்ட அநீதிகளையும் பொறுத்துக்கொண்டு அக் கொடுங் கோல் ஆட்சியாளரோடு சேர்ந்திருந்தனர். பாண்டவருக்கும் உற வினராக இருந்துகொண்டே கௌரவரது தீய செயல்களையும் ஏற் றுக்கொண்டவர் போல் துரியனது அவைக்களத்தே சும்மா வீற் றிருந்த 'மௌனச் சாமிகளே' பாரத நாட்டாரின் இழிநிலைபற்றி பாரதியார் கொண்ட அந்த உணர்ச்சிக்குப் பொருத்தமான பாத் திரங்களாக அமைந்தனர். நல்லோரெனப்பட்டோராய் அவ்வாறு தீமை தடுக்கும் திறனில்லாராய் இருந்தவர்கள் மட்டுமன்றி, "தீமையி லண்ணனை வென்றவனும்", "அருட் கண்ணழி பாதகனு"மாகிய துச்சாதனனைப் போன்று, பாரத அன்னையாகிய ஒரே தாயின் வயிற் றில் தம்முடன் பிறந்த சகோதரருக்குத் தீங்கிழைப்பதிலும், தாம் பிறந்த நாட்டு மானம் சிதைந்தொழிந்து போகத்தக்க இழி செயல் களைச் செய்யவும் வல்ல துட்டர்களும் அந்நியராட்சியில் நிறைந் திருந்த கொடுமையைக் கண்டு பாரதியார் விட்ட கண்ணீரே துச் சாதனனைப்பற்றிய அவரது வருணனையூடு (264 — 267) பெருக் கெடுத்துச் செல்கின்றது. தம்மைப் பயந்த பாரத மாதாவானவள் உல கப் பொது அரங்கிலே அவமானப்படத்தக்கதாக அவர்கள் செய்த செயல்கள் எல்லாம், துச்சாதனன் பாஞ்சாலி அன்னையை மன்றிடை நிறுத்தித் துகிலுரிந்ததற்குக் குறைந்தனவாகா. பாரத அன்னை யானவள் அந்நிலையிலே துணை வேண்டித் தனது அழிவற்றதும், தொன்றுதொட்டு நிலையாக ஊறி வளர்ந்துள்ளதுமான கடவுள் நம் பிக்கை, ஆன்மநெறி, அறப்பண்பாடு, சத்தியப் பேரொளி என்ப வற்றை நினைந்து அவை தனது மானத்தை எப்படியும் காக்குமென உணர்வழிந்து நின்று அதனால் இறுதியில் பாரதத்தின் தருமமே வெல்லக் காண்பதைப் போன்றதே, திரௌபதி துகிலுரியப்படும் போது கண்ணன் கழலிணையில் ஒன்றி உலகத்தை மறந்து அவனது

அருட் பேரொளியால் மானம் சிதையாது காக்கப்பட்ட நிலைமை என்பதைப் பாரதியார் தம் காவியத்துள் உய்த்துணர வைத்துள்ளார்.

சமூகத்திலே பெண்களை அடிமைப் பொருளாக அக்காலத்தில் அனைவரும் கருதினர்; அது பாரதநாடு அடிமைத்தளையிலே இறுகப் பிணிக்கப்படற்குக் காரணமான ஒரு சாபக்கேடாய் அமைந்தது. நாடு அடிமைப்பட்ட பின்னர் பெண்களின் அடிமை நிலைமை மேலும் வளர்ந்து செல்லலாயிற்று. இவைகளைப் 'பெண்ணடிமை' என்ற தலைப்பில் முன்னுல் அமைந்துள்ள கட்டுரையினுள் விரிவாகக் காண்டல் கூடும். பெண்ணினத்தை அடிமை செய்தற்கு உடந்தையாய் விளங்கிய கொடுங்கோலாட்சி ஒழிதல் வேண்டுமென்ற பாரதியாரது உள்ளக் கருத்து இறுதியில் வெற்றி பெற்று விளங்குவதையும் அங்குக் கண்டோம். பெண்மையின் உணர்ச்சியைக் காட்டுதற்கெழுந்த இந்த நூல், அடிமை நாட்டின் இரு நிலைகளையும் எடுத்துக்கூறி, தருமத்தின் இறுதி வெற்றியையும் காட்டி நிற்கின்றது. பாஞ்சாலி ஒரு இலட்சியப் பெண். ஆண்மையை உயர் வழியில் இட்டுச் செல்லும் உயிரொளி. பெண் ஆணினத்துக்கு அடிமைப் பொருளல்லள்; சுதந்திரத்தோடு வாழ உரிமையுடையவள். தனக்காகமட்டுமன்றித் தன் தாய்நாட்டுக்காகவும் வாழப்பிறந்தவள். அத்தகைய உயர்ந்த படைப்பான பெண், பாரதநாட்டிலே அடிமையுற்றுக் கிடந்தமை பாரதியாரது நெஞ்சை உறுத்திற்று. அதற்காக ஆட்சியாளரையும், ஆண்குலத்தையுமே திட்டுகின்ருர். பெண் தனது விடுதலைக்குத் தானே சபதம் எடுக்க வேண்டிய நிலை வரினும் உறுதி குன்ருது அதில் ஊன்றி நிற்றல் வேண்டும் என்பது பாரதியாரது வீர வுரை. நேர்மையும், நீதியும், கற்பும் அவளிடம் ஒளிருமாயின் ஆண்டவன் அருளும் அவளுக்குத் துணையாக நின்று இறுதி வெற்றியினை அளித்துக் காப்பாற்றும் என்பது அவருட்டும் நம்பிக்கை. ஐம்பெரும் பூதங்களும் — அதாவது இயற்கைகூட — அத்தகைய பெண்ணின் இலட்சியம் வெல்லுதற் கேற்ப அமைந்து, துணைசெய்து நிற்கும் என்ற கற்பனையினையே பாஞ்சாலி சபதத்தின் இறுதிப் பகுதியில் துலக்கிக்காட்டி நூலையும் நிறைவுறுத்துகின்ருர்.

# 11. பாஞ்சாலி சபதத்தினூடு பாரதியாரது எதிர்கால இந்தியா

பாஞ்சாலி சபதமென்ற காவியம் பாரதியாரது மனக்கருத்துகள் பலவற்றை வெளிப்படுத்துதற்கு அவருக்கு வசதிசெய்து கொடுத்த ஒன்று. பாரத அன்னையின் மனித வடிவங்கள் போன்று நடமாடும் பெண்கள், சமூகத்திலே அடிமைகளாக நடத்தப்பட்ட கொடிய வழக்கத்தினைக் கண்டிக்கவும், அடிமை இந்தியாவின் அரசியல் இழிவை உணர்ச்சியோடு எடுத்துக்காட்டிச் சுதந்திர தாகத்தை நாட்டு மக்களிடையே ஊட்டி வளர்க்கவும், கண்ணன் கழலிணைகளைச் சரண் புகுந்து வாழ்வோர்களது துன்பம் பகலவன் முன்னர்ப் பனியெனப் பறந்தோடுதலை விளக்குதலின் மூலம் நாத்திகம் நம்மை விட்டுப் பறந்துவிடச் செய்யவும் இந்நூலிடை நல்ல வாய்ப்புகளை அவர் பெற்றிருக்கின்றார். அடிமைத்தளை நீங்கப்பெற்று உலக அரங்கிலே தலை நிமிர்ந்து நிற்கும் ஒரு வலிமையும் சிறப்பும் வாய்ந்த குடியரசு நாடாகப் பாரதத் தாய்நாட்டை எதிர்பார்த்தார். அந்த நாடு வருங் காலத்தில் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று விரும்பினரோ, இந்நூலினுள் வரும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தனது கருத்தினை அப்படி எல்லாம் நன்கு விளங்க வைத்துள்ளார். தாம் காண விரும்பிய எதிர்கால இந்தியாவைப் படைத்துக் காட்டுதற்கு இந் நூலின் பல இடங்களையும் கையாளலாம் என்பதை நன்கறிந்தே பாரதியார் இக் கதைப்பகுதியைத் தமது காவியத்துக்கு நிலைக்களமாக்கினர் என்று நாம் துணிந்து கூறக்கூடிய வகையில் எதிர்கால இந்தியாவின் படம் இந்நூலினுள் தெளிவாக அமைத்துக் காட்டப் பட்டிருக்கின்றது.

உலகின் பலபாகங்கட்கும் உணவுப் பொருட்களை அனுப்பத் தக்க வகையில் குன்றாத விளையுள் நிறைந்து வறுமைப் பிணியே தலைகாட்டாத திருநாடாகப் பாரதம் விளங்கவேண்டு மென்பதும் அவரது நிறைந்த ஆசை. விதுரன் பாண்டவரிடைத் தூது செல்லும்போது காணுகின்ற குருநாடு பாரதியாரது உள்ளத் திரையில் எழுதப்பெற்றுக்கிடந்த எதிர்கால இந்தியாவின் வெளிப்பாடுதான். அதன் வளங்களை இந்நூலிடையுள்ள குருநாட்டுச் சிறப்புப்பற்றிய பகுதியுள் கண்டு தெளியலாகும். வளமார்ந்த பாரத நாட்டின் நகரங்கள் சிறப்பாக அமைக்கப்படவேண்டுமென்று அவர் எண்ணினர். அதற்கான நகர நிர்மாணத் திட்டந்தான் அத்தினபுரச் சிறப்புக்களாக உருவெடுத்துள்ளது பாஞ்சாலி சபதத்துள். அழகுற அமைந்த

வீதிகள், பகுதிபகுதியான குடியிருப்புகள், காட்சிச் சாலைகள் போன்று விளங்கும் கடைத்தெருக்கள் முதலானவை எல்லாம் வருணனைப் பகுதிகளாக அத்தினபுரத்தையே அழகு செய்வனவாய்க் காட்டப்பட்டிருப்பினும், பாரதியார் கண்ட எதிர்கால இந்திய நகரங்களின் பேரொளியினது புறப்பாடே அவ்வருணனைகள் எனலாகும். இப்படித் திருவும் பொலிவும் சிறந்த புதிய பாரதநாட்டின் குடிமக்கள் எவ்வித அச்சமுமின்றி வாழத்தக்க அரசிருப்பையும் அவர் வேண்டினர்.

''பல—தரனுடைத் தொழில் செயுமா சனமும்
எவனுடைப் பயமுமிலா — தினி
திருந்திடும் தன்மைய தெழில் நகரே''

என்று அவர் கூறுவதிலிருந்து பொதுமக்களின் இன்பமும் சுதந்திர வாழ்வுமே ஒரு நாட்டினில் இன்றியமையாது வேண்டப்படுவன என்பது நன்கு புலப்படுகின்றதல்லவா? தருமன் செய்த இராசசூய யாகத்தின் சிறப்புக்களைப்பற்றி வருணிக்கும்போதும், தரும மன்னவனுக்கு மற்றைய நாட்டார் பரிசுகளைக் கொணர்ந்து குவித்து வணங்கி நிற்கும்போதும், உலக நாடுகள் எங்கணும் பாரதத்தின் பெரும் புகழ் ஓங்கி நிற்பதையும், எல்லா நாட்டினரும் பாரதத்தின் தரும ராச்சியத்தை மதித்து அதன் நட்பைப் பெறுவதற்காகப் போட்டி போட்டுக்கொண்டு நிற்கின்ற பெருஞ்சிறப்பையுமே பாரதியாரது உள்ளம் மகிழ்ச்சியோடு பார்க்கின்றது.

''பேசுகவோ
சத்தியமே, செய்க தருமமே என்றொலி செய்,
முத்திதரும் வேத முர''சினைப் பாரத அன்னைக்கு

முரசமாகப் 'பாரதமாதா திருத் தசாங்கத்'துள் அமைத்துக் கொடுத்தவர் பாரதியார். அந்த முரசத்தைக் கொடியில் உயர்த்திய புகழாளன் தருமன். உலக மன்னர்களது கொடிகளெல்லாம் அந்த வேத ஒலியைத் தரும் முரசக் கொடிக்குத் தாழ்ந்து பறக்கும் பெருஞ் சிறப்பினை எண்ணியெண்ணிப் பாரதியார் உள்ளம் பூரிப்பதில் வியப்பு என்ன இருக்கின்றது! பாரதியார் கண்ட புதிய பாரதம் பெற்றிருக்க வேண்டிய நாட்டு வளம், நகர் வளம் செல்வச் சிறப்பு என்பவற்றை அத்தினபுரச் சிறப்புகள், குருநாட்டு வளம், இராசசூய யாகச்சிறப்பு என்பனபற்றிய எமது கட்டுரைகளூடு இந்நூலிலே தெளிவாகக் காணலாம்.

எதிர்கால இந்தியாவிலே கொடைப்பண்பு பண்டுபோல் திகழ வேண்டுமென்று பாரதியார் எதிர்பார்க்கின்றார். செல்வம் வளர்

தற்கு மன்னரும், மக்களும் புதுப்புது வழிகளை, தொழிற்றுறைகளை ஆக்கிக்கொண்டு இரவலர்க்கு 'வாரிப் பழம் பொருளை எற்றுதல்' வேண்டும் என்று பொருளீட்டவும் பொருளீயவும் வழிசொல்கின்றார். செல்வத்திரு, வீரனையே சென்றடைவாள் என்றும், இப்புவியைப் புகழால் வென்று தனக்கே ஆக்கிக்கொள்வது தளராத உறுதி கொண்ட வீரனுக்கே சாலும் என்றும் காட்டி அத்தகைய வீர மக்களே எதிர்கால இந்தியாவின் குடிகளாக விளங்கவேண்டுமென்று கனவு காண்கின்றார். செல்வந்தராவார் தமது நாட்டிலே விடா முயற்சி, பிறர்பொருள் வெஃகாமை, தம்மைச் சேர்ந்தோரைப் பாது காத்தல், ஆதிய கொள்கைகளிற் சிறிதும் தவறுதல் கூடாது என அவர் வாழ்வுக்கு இலக்கணமும் வகுத்து வைத்துப் போந்தனர். (95). சூது முதலான அறம் பிறழ்ந்த செய்கைகளைப் பாரதியார் வெறுத்து அது புண்ணிய பாரதத்துள் கால்வைக்கவும் கூடாதென்கின்றார். தருமத்துக்குச் சூது முற்றிலும் நேர்மாறானது என்னும் அவரது கருத்தானது விதுரன் வாயால் வெளிப்படும் உணர்ச்சிக் கூற்றுக் களாற் புலப்படுகின்றது. பாண்டவரை அழைத்துவருமாறு திருத ராட்டிரன் விதுரனை அனுப்பும்போது துரியோதனனுக்குத் தரும னுடன் சூதாட இருக்கும் விருப்பத்தையும் அவர்க்குத் தெரிவிக்கு மாறு கூறுகின்றனன். அதனைக் கேட்டதும் விதுரன், உள்ளம் கொதித்து

> "போச்சுது போச்சுது பாரத நாடு
> போச்சுது நல்லறம் போச்சுது வேதம்"

என்று உணர்ச்சிப் பெருக்கோடு அலறக் காண்கின்றோம். அடிமை யுற்ற நாட்டுக்குச் சுதந்திரம் பெறுதற்காகப் படும் பாடுகளைப் பார்க் கிலும், பாடுபட்டுப்பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாத்தலே மிகுந்த பொறுப்பானது என ஆன்றோர் கூறுவர். சூதினை நாட்டினுள்ளே நாம் தலைகாட்ட விடுவோமானால் அறம் அழியும்; வேத நூல்களில் பேசப்படுகின்ற நீதிமுறை முதலான யாவுமே அழிந்து போகும்; நமது நாடு மறுபடியும் அடிமைப்பட்டு அழிந்தொழியும் என்ற உறு திப்பாட்டை 'போச்சுது போச்சுது பாரத நாடு' என்று இறந்த காலத்திலே அவர் கூறிமுடிப்பதிலிருந்து நாமறிந்து கொள்ளலாம். புதிய பாரதம் அழிந்துவிடாது நாம் பார்த்துக்கொள்ளுதற்கு அவர் கூறிய வழி அது.

இந்த அறப்பண்பு வளர்தற்கு மன்னவன் எவ்வாறு அமைந் திருப்பான் என்பதையும் பாரதியார் எங்கட்குக் கூறிவைத்துள்ளார். தருமனது புகழ் பேசப்படும்போதெல்லாம், அத்தருமனைக் குடிமக்

களின் பிரதிநிதியும், தனது நாட்டையும் தரும ஆட்சியையும் உயிரெனக்கொண்டவனும், மன்னவர்க்கு மன்னவனும், தருமத்தின் சொரூபியுமானவன் என்று பாரதியார் குறிப்பிட்டிருப்பதெல்லாம் இந்திய நாட்டின் அரசியற் றலைமைப் பீடத்தில் இருப்போர்க்கு அமைய வேண்டிய இலக்கணங்களைத் தெளிவுபடுத்துவதற்கேயாகும். சூதுக்கு அழைத்த சகுனியை நோக்கித் தருமன் மக்கள் தலைவனுடைய இலக்கணத்தைக் கூறுகின்றான். செல்வம், புகழ் என்பவற்றின் காதலன்றி, உண்மையான கலைகளும், அறப்பண்பும் நாட்டில் வளரவேண்டுமென்ற காதலே நாட்டைப் பரிபாலிப்பவர் உள்ளத்தில் ஒளிர்தல் வேண்டுவது என்கின்றான். அப்புகழால் பாரத நாட்டுத் தலைவர்கள் 'பாரதர்க்கு மணிமுடி அன்னாராகி' விளங்குவரென்பது பாரதியாரது முடிவு. சான்றோரைப்பற்றி எண்ணும் போதெல்லாம் மற்றையோர்

> "குன்றினிலேற்றி வைத்த விளக்கைப் போல
> குவலயத்துக் கறங்காட்டத் தோன்றினர் காண்"

என்று போற்றிநிற்பர் என அவர் கூறும் தீர்ப்பு எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றது! "மன்னனுயிர்த்தே மலர்தலை உலகம்" என்பது ஆன்றோர் வாக்கு. இதனையே பாரதியாரும் தருமன் சகுனிக்குக் கூறுவதாக 'என்னுயிர்ப் பாரத நாட்டில்' என எடுத்துக் காட்டி ஒரு தேசத்தலைவன் தன் நாட்டைத் தன் உயிர்போல் நேசிக்க வேண்டுமெனக் கூறுகிறார் பாரதியார். தருமத்தின் ஆணையும், சத்தியமுழக்கும் ஓங்குகின்ற பாரதநாட்டையே இவற்றினூடு நாமும் மனக்கண்முன் காணப்பெறுகின்றோம்.

ஒரு நாட்டின் அறப்பண்பு சிதைதற்கும் நாடு அடிமையாவதற்கும் உரிய மூலகாரணங்களுள் அந்நாடு பெண்களை அடிமையாக நடத்துதலும் ஒன்று எனப் பாரதியார் கொள்ளுவதை நன்கு கண்டிருக்கின்றோம். மக்கட் சமுகத்தில் மட்டுமன்றி, மன்னரவைக்களத்தும் புகுந்து நீதிக்காகப் போராடும் உரிமைகொண்ட புதுமைப் பெண்ணினத்தைப் பாரதியார் பாரதநாட்டில் எதிர்பார்த்தவர். அவ்வாறு பாரதிகண்ட புதுமைப்பெண்ணாகவே பாஞ்சாலி படைக்கப்பட்டிருக்கின்றாள். பாஞ்சாலிசபதத்தினுள் சுதந்திரம்பெற்ற பாரதநாட்டின் புதுமைப் பெண்ணினது குரல், துரியோதனனுடைய சபைக்கு அவள் அழைக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து கேட்கப்படுகின்றது.

> "சூதர் மனைக்குத் தொல்சீர் மறக்குலத்து
> மாதர் வருதல் மரபோடா?"

என்று அந்தப் பெண்ணரசி முதன்முதல் தன் பெண்மை வாயால் கேட்கின்ருள். ஆடவர் பெண்டிரை அடிமைகளைப்போல் நடத்தும் வழக்கினை எதிர்க்கும் புதுமைப்பெண், புதிய பாரத சமுதாயத்திலே பாஞ்சாலியாகத் தோன்றுகின்ருள். பாரதியாரின் உள்ளத்துடிப்பும், வீரமும், உறுதிப்பாடும் அவள்பால் ஒற்றப்படுகின்றன.

"நாயகர் தாம் தன்னைத் தோற்றபின் — என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை — புலைத்
தாயத்தி லேவிலைப் பட்டபின் — என்ன
சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார் — அவர்
தாயத்திலே விலைப்பட்டவர் — புவி
தாங்குந் துருபதன் கன்னிநான்" (256)

என்று பெண்ணினத்தைக் கொடுமைசெய்த சமூக ஊழல் ஒன்றை முதன் முதலிற் கண்டித்து எதிர்த்துப் பேசிநின்ற பாரதப் பெண் மணி, பாரதியார் கண்ட புதியபாரதத்திலே பாஞ்சாலியினூடு தோற்றம் செய்கின்ருள். சபைக்கு இழுத்துவரப்பட்ட பாஞ்சாலி மன்னரவையில் நீதி கேட்பதுபோன்ற நிலை, அரசநீதி பிழைக்கும் போதெல்லாம் பாரத நாட்டிலே தோன்ற வேண்டுமென்று பாரதி யார் கனவு கண்டார். நீதிநெறியில் தவருத மன்னனும், அவன் தவறுகிறபோது தடுத்து நிறுத்தவல்ல ஆன்ருேர் நிறைந்த அவைக் களமும், பாரதியார் காணவிரும்பிய புதிய பாரதத்துப் பாராளுமன்றத் தின் அணிகலன்கள். அதனுலேதான் பாஞ்சாலியைச் சபைக்கிழுத் துக் கொடுமைப்படுத்துவதிலிருந்து துரியோதனனைத் தடுத்து நிறுத் தாது பார்த்திருந்த பெரியோர் எனப்பட்டோர் சமுதாயத்திற்கு வேண் டப்படாதவர்களென்று வெறுக்கின்ருர். அவர்களைப் போன்ருேர் புதிய பாரதத்தில் இடம்பெறக்கூடாதென்பது பாரதியார்கருத்து.

இவ்வாறு எந்தச் சூழ்நிலையைப் பற்றிக்கூறும்போதும் பாரதி யார் தமது உணர்ச்சிகளைப் புலப்படுத்தி, கற்பனையிற் கண்ட சத் தியம், அறப்பண்பு முதலியன வளரும் சமூகத்தைப் படைக்க முயன்றிருக்கின்ருர் என்பதைப் பாஞ்சாலி சபதத்துள் காணுகின் ருேம். பலவேறு கோணங்களிலிருந்தும் அவர் தீச்செயல்களைக் கண்டிப்பதன்மூலமும், நல்லவற்றைப் புகழ்ந்து ஏத்திநிற்பதன்மூல மும் தான் காணவிழைந்த எழிற்சமுதாயத்தைத் தெளிவுறக் காட்டு கின்ருர். அறநெறிகுன்ருது பலவளங்களும் தவழப்பெற்ற அச் சமுதாயம் வாழும் புதிய பாரதத்தை, "ஒளிபடைத்த கண்ணினுய் வாவா வா!" என்று அவர் வரவேற்ற திருநாட்டைத் தங்காப்பியத் துட் கண்டு நமக்கும் காட்டிவைத்துள்ளார் பாரதியார்.

## 12. பாரதியாரது உவமை உருவகச் சிறப்பு

இலக்கியப் புலவரனைவரும்—எம்மொழியிலாயினும் சரி—ஏற்ற அணிகளை இடந்தோறும் கையாண்டே தமது படைப்புக்களை அழகு செய்துள்ளனர். தமிழிலக்கணத்திலே, தண்டியலங்காரகாரர் அணிகள் 35 என்றும், மாறனலங்காரகாரர் அணிகள் சுமார் 100 என்றும் விளக்கியிருக்கின்றார்கள். நமது பழந்தமிழ் இலக்கண ஆசிரியரான தொல்காப்பியர் உவமம் ஒன்றே அணி என்றும், மற்றைய அணிகள் எல்லாம் 'வேறுபடவந்த உவமத்தோற்றம்' என்றும் கூறியுள்ளனர்.

"உவமம் என்னும் தவலருங்கூத்தி......
காப்பிய அரங்கிற் பூப்பெற நடிக்குமே"

என்று சூத்திரமும் செய்துவைத்திருக்கின்றார். உவமம் என்ற ஆடல் நங்கை நேரத்திற்கு நேரம் வேறுவேறு கோலங்களைப் புனைந்து காவியமாகிய மேடையிற்றோன்றி வேறுவேறு பெயர்களைப்பூண்டு திறம்பட நடித்துச் செல்லுவாள் என்பது அவர் கருத்தின் விளக்கம். அந்த உவமை அணியினையே பாரதியார் பெரும்பாலும் தமது நூலுள்ளே கையாண்டிருக்கின்றார். உவமையின் இயல்பு, நோக்கம், அதன் சிறப்பு என்பவற்றை நாம் ஓரளவு தெரிந்துகொண்டால், கவிதைகளில் அதனைக் காணும்போது கவிஞனது கருத்தினை அதனூடு நன்கு அறிந்து ஈடுபாடுகொள்ளல் இலகுவாகலாம். அறிந்த ஒரு பொருளின் வாயிலாக அறியாத ஒன்றை விளக்குதல், பொருளை உயர்வுபடுத்துதல், தெளிவுபடுத்தி விளக்குதல், கவிஞனது உணர்ச்சியை வெளிப்படுத்துதல் ஆகிய பல காரணங்களுக்காக இலக்கியங்களில் உவமை பயின்றுவரினும், உணர்ச்சி வெளிப்பாடுபற்றியதே அதன் ஆட்சிக்கு மிக முக்கியமான காரணமாக உள்ளது. உணர்ச்சியின் உயர்நிலையை விளக்குதற்குப் புலவன் அதே உவமையின் இன்னொரு தோற்றமான உருவகத்தைக் கையாள்வதுமுண்டு. உவமை உருவகம் ஆகிய எதுவுமின்றி உள்ளதை உள்ளவாறே கூறலாகிய 'தன்மை நவிற்சி'யால் ஒன்றை விளக்குதல் பொது வழக்கு எனினும், தன்மை நவிற்சியானது, வழக்கிடைப் பயிலாது, சொல்லிறுக்கம் வாய்ந்து, பல்வேறு அணிகளும் விரவிய செய்யுள்களே தோன்றிக்கொண்டிருந்த காலத்திலேதான் பாரதியார் தோன்றினார்.

ஆயினும், பாரதியார் தம் கால வழக்கினைக் கொள்ளாது இலகுவான உவமை உருவகங்களாலும், தன்மை நவிற்சியினாலுமே தமது

கவிதைகளை அழகுபடுத்தினர். பாஞ்சாலிசபதத்தைப் பொறுத்த மட்டில் இந்த மூன்று அணிகளுமே பயின்றுவர நூல் செய்யப் பட்டுள்ளது எனலாம். அவற்றுள்ளும் தன்மை நவிற்சியே பெரும் பான்மையான இடத்தைப் பிடித்திருக்கக் காணலாம். காவியங்களை இயற்றப் புகுந்த கவிஞர்களெல்லாரும் வருணனைப் பகுதிகள் வரும் போது பலவகைப்பட்ட அணிகளையும் கையாண்டு தமது உணர்ச்சி பேதங்களைப் பலவாறு வெளிப்படுத்தியிருக்கின்றனர். தன்மை நவிற்சியால் உணர்ச்சியைப் புலப்படுத்த முடியாது என்பது பலரும் செய்த தீர்ப்பு. பாரதியாரோ அந்த எண்ணத்தையெல்லாம் பொய் யாக்கித் தமது பாஞ்சாலிசபதத்துள் வரும் வருணனைப் பகுதி களில் பெரும்பாலான இடங்களிலெல்லாம் தன்மை நவிற்சியினு லேயே தனது உணர்ச்சி அனுபவங்களைக், கற்போரும் இலகுவில் உணர்ந்து இன்புறச்செய்திருக்கின்ருர். அத்தினபுர வருணனை, துரி யோதனன் வாயிலாக வெளிப்படுகின்ற இராசசூயயாக வருணனை, விதுரன் கூறும் குருநாட்டு வருணனை, மாலை வருணனை, சூதாட்ட வருணனை ஆகிய வருணனைப் பகுதிகளிலெல்லாம் அந்த அணியே விளையாடிநின்று பாரதியாரது கைபட்டதனுல், தனக்கில்லாததென்று மற்றையோர் கருதிவிட்டிருந்த அந்த வலிமையையும் பெற்றுத் தலை நிமிரலாயிற்று. "பொன்னிறப் பாஞ்சாலி", "பொறுமை என்றும் பழவினை முடிபென்றும் சொலிப்பதுங்கி நிற்போன், மறத்தன்மை யிலான், வழவழத்தருமன்" என்பன முதலிய கதாபாத்திர வருண னைப் பகுதிகளிலும் கூடத் தன்மைநவிற்சி அணி, பேரிடம் பெற் றுத் திகழ்கின்றது, பாஞ்சாலி சபதத்துள். இதனை நோக்கும்போது, தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஒரு புதிய திருப்பத்தை இத்துறை யிலும் ஏற்படுத்திப் பெரும்புகழ் கொண்டிருக்கிருர் பாரதியார் எனலாம்.

தன்மை நவிற்சிக்கு அடுத்தபடியாக நூலுட் பயின்றுவருவன உவமையும், உருவகமுமேயெனக் கூறினேம். பாஞ்சாலி சபதத் துட் புகுந்து அவற்றைக் காண முற்படுமுன் அந்த இரண்டையும் பற்றி இங்குச் சிறிது தெரிந்துகொள்ளுதல் நலமாகும். ஒன்றைப் போல இன்னென்றிருக்கிறது என்ற முறையால் காட்டுவது உவமை. 'மதிபோன்றமுகம்' என்ருல் அது உவமை. 'மதிமுகம்' என வரு மாயின் அதுவும் உவமைத்தொகையாய், உவமஅணி என்றே சொல் லப்பெறும். இங்கே எல்லாம் 'மதியை ஒத்தமுகம்' என மதியை யும் முகத்தையும் வேறு வேறு பொருட்களாகக் காண்கின்ருேம். இதேதொடர் "முகமதி" என்றிருக்குமானுல் அப்போது உருவகம் என்னும் பெயரை அது பெறும். முகமும், மதியும் என இரு பொருட்

களாகவேயன்றி முகமே மதியாக மாறி ஒரு பொருளாகுந் தன்மையினை இங்குக் காண்கின்றோம். இதுதான் இவ்விரண்டு அணிகளுக்குமிடையில் உள்ள சாதாரண வேறுபாடு. இவ்விரண்டு அணிகளுள்ளும் பொதுவழக்கான உவமையே பாரதியாரால் அதிகமாக இந்நூலுள் ஆளப்பட்டிருக்கின்றது. சுமார் நூற்றுக்குக் குறையாத இடங்களிலே உவமை கையாளப்பட்டு அங்கெல்லாம் செய்யுட் பொருளை உயர்த்திநின்று பாரதியாரது உணர்ச்சியோடு நம்மையும் ஒன்றுபடச் செய்கின்றது. ஒரே செய்யுளில் உவமையோடு கலந்து உருவகமும் பயின்றுவருதலால் உண்டாகும் ஒரு புதிய சிறப்பை ஆக்கிக்காட்டும் முறையையும் பாரதியார் சில இடங்களில் கையாண்டிருக்கின்றார்.

பாரதியாரது நோக்கம் பாஞ்சாலிசபதக் கதையை நமக்குக் கூறுவதன்று. கதையினூடாகத் தம் உள்ளத்தில் அடைபட்டுக் கிடந்த கருத்துகளெல்லாம், தமது உணர்ச்சி அனுபவங்களோடு வெளிவர வேண்டுமென்று விரும்பினார். ஒருவனது உணர்ச்சி அனுபவங்களைக் கவிதைமூலமே நன்கு புலப்படுத்திக் கற்போருள்ளத்திலும் இன்பத்தையூட்டிவிடலாமாதலால்தான் காவியங்களை யெல்லாம் செய்யுளாகப் படைத்து விடுகின்றனர் பெரும்புலவர்கள். கவிஞனது அந்த உணர்ச்சிகளைக் கண்டு அனுபவிப்பதே கவிதை இலக்கியம் கற்பதன் நோக்கங்களுள் முக்கியமாகக் கருதப்படுகின்றது. உணர்ச்சி அனுபவங்களைப் புலப்படுத்துதற்கு உவமையும் உருவகமும் பயன்படுவதுபோலக் கவிதைக்கு வேண்டுவதான கற்பனைச் சிறப்பினையும் அவை தந்துநிற்பன என்னலாம்.

பாஞ்சாலிசபத நூற்றொடக்கத்திலே கலைமகளை வாழ்த்தும் போது அத்தேவிக்கு ஒரு கற்பனை வடிவத்தை ஆக்கிக்காட்டுகிறார் பாரதியார். உருவகப் புணர்ப்பு அவரது கற்பனையை அழகு செய்து நிற்கக் காண்கின்றோம்.

"வேதத் திருவிழி யாள் — அதில்
மிக்கபல் உரைஎனும் கருமைஇட் டாள்;
சீதக் கதிர்மதி யே — நுதல்
சிந்தனை யேகுழல் என்றுடை யாள்
வாதத் தருக்கமெ னுஞ் — செவி
வாய்ந்தநற் றுணிவெனும் தோடணிந் தாள்
போதமென் னாசியி னாள் — நலம்
பொங்குபல் சாத்திர வாயுடை யாள் (4)

"கற்பனைத் தேனித ழாள் — சுவைக்
காவிய மெனுமணிக் கொங்கையி னுள்,
சிற்பமு தற்கலை கள் — பல
தேமலர்க் கரமெனத் திகழ்ந்திருப் பாள்
சொற்படு நயமறி வார் — இசை
தோய்ந்திடத் தொகுப்பதின் சுவைஅறி வார்
விற்பனத் தமிழ்ப்புல வோர் — அந்த
மேலவர் நாவெனும் மலர்ப்பதத் தாள்" (5)

அவளே கலைவாணி; அவளைப் பாரதியார் முதலிற் சரண் புகுகின்றார். அவளது திருவிழி, மை, நுதல், குழல், செவி, தோடு, நாசி, வாய், இதழ், கொங்கை, கரம், பதம் என்னும் உறுப்புகள் முறையே வேதம், உரை, மதி, சிந்தனை, வாதத்தருக்கங்கள், துணிவு, போதம், சாத்திரம், தேன், காவியம், சிற்பமுதற்கலைகள், புலவர்நா என்பனவாகவும் அல்லது அவற்றைப்போலவும் விளங்கப்பெறுகின்றன பாரதியாரது அகக்கண்களில். உவமையும் உருவகமும் கலந்துவந்த ஈடுஇணையற்ற ஒரு கற்பனை. இவ்வாறான கற்பனைச் சித்திரங்களே நாரணனைப்பற்றிய "ஆதிப்பரம்பொருள் நாரணன்" (81) என்னும் பாடலிலும், பாஞ்சாலியின் உயர்வினைப்பற்றிய 'பாவியர் சபை தனிலே' என்பது முதலாகத் தொடங்கும் பாடல்களிலும் (243—244) படைக்கப்பட்டுள்ளன. பாரதியாரது கற்பனைவளம், மிகுதியும் இன்பம் பயக்கத்தக்கதாய் அமைந்துள்ளது இப்பாடல்களில்.

மிகச் சிறியனவான, ஆனால் பலருக்குப் பழக்கமான உவமைத் தொடர்களையே பாரதியார் பெரும்பாலும் கையாள்பவர். கன்னன் வரையாது கொடுப்பவன்; துரியோதனன் செய்வது தப்பான காரியமாய் இருந்தாலும், அவனுக்கு உறுதுணையாக நிற்பவன். இக் கருத்துக்களை முறையே 'மைந்நிகர் வான்கொடையான்' என்றும் 'இறைக்கு உயிர்நிகர் கன்னன்' என்றும் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் சிறப்பு பாரதியாருக்குரியது.

பாண்டவர் செய்த இராசசூய யாகச் சிறப்பைக்கண்டு பொறாத துரியோதனனுடைய உள்ளம் பொறாமையால் தகிக்கப்படுகின்றது. வானம் வீழினும் அஞ்சாத திண்ணிய மனத்தனான துரியோதனனது மனம் கலங்குகின்றது. மலைபோன்ற துரியோதனனது நெஞ்சக் குமுறலை, ஒரு எரிமலை தீக்குழம்பைக் கக்குவதற்கு உவமானமாகக் காட்டுகின்றார் பாரதியார்.

"வன்றி றத்தொரு கல்லெனும் நெஞ்சன்
...........................................
குன்ற மொன்று குழைவுற் றிழகிக்
குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்
கன்று பூதலத் துள்ளுறை வெம்மை
காய்ந்தெ ழுந்து வெளிப்படல் போல" (38)

"நெஞ்சத் துள்ளொர் பொறுமை எனுந்தீ
நீள்வ தாலுளம் நெக்குரு கிப்போய்
...........................................
பஞ்சை யாமொரு பெண்மகள் போலும்
பாலர் போலும் பரிதவிப் பான்" (39)

கல்லை ஒத்த நெஞ்சன்; வானம் கலங்கினும் தான் கலங்காத மறவன். ஆதலால் பேராற்றல் படைத்த இயற்கையையே குழைவித்து அவனது பொறுமையின் புலப்பாட்டுக்கு உவமை காட்டுகின்றார் பாரதியார். பூமியின் உட்பாகத்திலுள்ள கல், மண், பொன் எல்லாமே உருகி நெருப்புக்குழம்பாகிவிட அதனால் வெளிப்புறக் குன்றுகளும் உருகிப் பிளந்து வழிவிடும். பொறுமை எனுந் தீ நீள்வதால் கல் நெஞ்சனான துரியோதனனுடைய உள்ளத்திலுங்கூட இதே நிகழ்ச்சியும் அதன் வெளிப்பாடுந்தான் காணப்படுகின்றன. அற்புதமான கற்பனை இது. உவமையின் பொருத்தத்தை நினைத்து நினைத்துச் சுவைக்கலாம்.

குளம் ஒன்று பின்னோரிடத்திலே நம் கண்முன்னர்ப் படைக்கப்பட்டிருக்கிறது. உயிரினமே இல்லாத நடுக்காட்டிலே, மற்றையோர் நீரை அள்ளாதவாறு பாசியால் மறைத்து மூடப்பட்ட மேற்பரப்பை உடையதாய் வெயில்படாத மரச்சோலையுள், ஒரு மலையடிவாரத்திலே அக்குளம் இருக்கிறது. அக்குளத்தினால் யாருக்கு என்ன பிரயோசனம்! அதிலுள்ள நீரும் நாளாகஆக முடைநாற்றம் எடுக்கத் தொடங்கிவிடும். தம் கைப்பட்ட பழமையான செல்வத்தை மேலும் வளர்க்காது, அக்குளத்தைப்போல் மற்றையோர்க்கேனும் கொடுக்காது காப்பாற்றிநிற்கும் உலோபிகள் உலகில் இருக்கின்றார்கள். 69-ம் 70-ம் செய்யுள்களில் இந்த அழகிய உவமை காணப்படுகின்றது. உவமிக்கப்படும் பொருளையன்றி உவமானத்தின் சிறப்புகளையே விவரித்துக் கூறுவதாற் பொருள் தெளிவுறப் புலப்படுகின்றதாகிய பெரும்பயனைக் கொண்டுள்ளது இந்த 'வருணனை உவமை'.

இதேபோன்ற இன்னோர் உவமை, பாண்டவருடன் சூதாட விரும்பி அனுமதிகேட்ட துரியோதனனுக்கு அறிவுரை புகட்டி, நீதிவழிக்கு அவனைத் திருப்ப முயன்ற திருதராட்டிரனை அக் கொடியோன் கோபிக்கும் நிலையுடன் பொருத்திக் காட்டப்பட்டுள்ளது. ஒரு நோயாளி தனக்குச் சிகிச்சை செய்யும் வைத்தியன் ஒருவனை வெகுண்டு தாக்குதல் போன்றது, அங்கே துரியோதனன் தனக்கு அறிவுரை புகட்டுகிற தந்தையைச் சீறுதல்.

"கொல்லு நோய்க்கு மருந்துசெய் போழ்திற்
கூடும் வெம்மைய தாய்ப்பிணக் குற்றே
தொல்லு ணர்வின் மருத்துவன் றன்னைச்
சோர்வு றுத்துதல் போலொரு தந்தை
சொல்லும் வார்த்தையி லேதெரு ளாதான்
.............................. தந்தை விளக்கும்
கட்டு ரைக்குக் கடுஞ்சின முற்றான்" (85)

என்பது அதுபற்றிய பாரதியாரது சொற் சித்திரம்.

துரியோதனன் கட்டுகிற அழகிய மாளிகை ஒன்றைப் பாஞ் சாலி சபதத்துள்ளே பாரதியாரும் கட்டிக் காட்டுகின்றார். திறமை மிக்க ஓவியன் செய்த சித்திரம், நல்ல கவிஞரது உயர்ந்த கற் பனை என்பவற்றைப்போன்று கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய மண்டபமானது, மிக அழகிய காவியம் ஒன்றைப்போல் இருக்கிறது பாரதியாருக்கு. நாடு முழுவதும் அக்கவின்பெறு மண்டபத்தைப் புகழுகின்றார்கள். இனிய சொற்களை இசைத்துக் கவிஞர் காப்பியம் செய்வதுபோல, கம்மியர்கள் கல்லையும் மண்ணையும் பொன்னை யுங் கொண்டு, காமர்மணிகள் பலபல சேர்த்து அழகிய மாளிகையை அமைக்கின்றார்கள். சிறந்த தமிழ்க் கவிதையிலுள்ள இன்பத்தை ஓரிடத்திலே உவமைகாட்டி மகிழ்ந்த கம்பனைப்போல, கல், மண், பொன் என்பனபோன்று இடத்துக்கேற்ற பொருத்தமான பலவித சொற்களாலுமமைந்த, பல்வகைப்பட்ட கவிதைகளைக் கொண்ட காப்பியம், பாரதியார் கருத்திலே கட்டப்பட்ட மணிமண்டபம் ஒன் றுக்கு உவமையாகி நம்மை மிகுதியும் இன்புறுத்துகின்றது. இச் சிறப்பினை 'வல்லவனுக்கிய சித்திரம் போலும்' என்று தொடங்கும் (110-ம்) பாடலுட் கண்டு களிக்கலாம்.

சூதாட்டத்திற்குத் தருமனைச் சகுனி அழைக்கின்றான். எவ் வளவோ சொல்லி மறுத்தும் தருமனாலே சகுனியை எதிர்வாதத்தில் வெல்லமுடியவில்லை. 'விதியினாலத் தருமனும் வீழ்ந்தான்'. ஆனால்

இதற்குப் பாரதியார் வேறு ஒரு காரணமும், அக்காரணத்தை விளக்க ஒரு உவமானமும் தருகின்றார். நமது விதிப்பயனோடு நம்மைச் சேர்ந்த பிறர் செய்யும் கர்மப்பயனும் நம்மையடைந்து நமக்கு வீழ்ச்சியையோ, எழுச்சியையோ தருமாம். நதிப்படுக்கையிலுள்ள சிறு குழியில், நீரோட்டத்தினால் நாலு பக்கங்களிலிருந்தும் மாசுகள் வந்து படிதல்போல நம்மைச் சூழ்ந்தவர்களது கருமத்தாலும், விதிப்பயனாலும் நாம் தாக்கப்படுவோம் என்பது கவிஞரது தீர்ப்பு.

"நதியில் உள்ள சிறுகுழி தன்னில்
நான்கு திக்கி லிருந்தும்பன் மாசு
பதியு மாறு பிறர்செயுங் கர்மப்
பயனும் நம்மை யடைவதுண் டன்றோ" (182)

பாஞ்சாலியினது துகிலுரியப்பெறுதல், வீமன் முதலியோர் காட்டில் காலங்கழிக்க வேண்டிய நியதி, குருநாட்டார் சிலகாலம் துரியோதனன் ஆட்சியிற் கிடக்கவேண்டிய முடிவு என்பவற்றுக்கெல்லாம் முறையே அவரவர்கள் செய்த கர்மமே காரணமாவன. எனினும் தருமன் சூதாட்டத்துக்கு ஒருப்பட்டால்தானே அவை எல்லாம் நடத்தல் கூடும். ஆகையால் மற்றையோர் செய்த கருமப்பயனும் சேர்ந்து தருமனைச் சூதில் விழச்செய்தது என்று இலகுவில் விளங்க முடியாத ஒரு தத்துவப் பொருளை மிக எளிதாக விளக்கி வைக்கின்றார் பாரதியார், தாம் உவமையைக் கையாளும் திறத்தால்.

தருமன் பாண்டவர்க்கு உயிர்போன்றவன். அறத்தின் சொரூபி. அறத்தினது பெருஞ்சிறப்பை விளக்குதற்கென்றே அவதாரமெடுத்தாற்போன்றவன். அவனது அறக்கொள்கை உலகம் முற்றும் அறிந்த ஒன்று, அறியவேண்டிய ஒன்று. பாரதியார் இதனைப் பாடல் செய்கின்றார்.

"குன்றினிலே ஏற்றிவைத்த விளக்கைப்போலக்
குவலயத்திற்கு அறங்காட்டத் தோன்றினாய்நீ
.......................................................
ஐயனே பாண்டவர்தம் ஆவிநீயே" (143)

எனத் தம்பியர் தருமன் புகழ்பாடி அவனைத் தொழுகின்றனர். பாரதியாரது கருத்தெல்லாம் அறப்பண்பும் உலகெங்கும் பரவ வேண்டும் என்ற புதிய சமதர்மக் கொள்கையேதான். தருமன் மூலம் அந்த அறத்தின் பெருமையை உலகோருக்குக் காட்ட விழைகின்றார். 'குன்றில் வைத்த விளக்கு' என்ற ஒரு சாதாரணமான உவமைமூலம் அந்தப்பெரிய வேலையைச் சாதித்தும்விடுகின்றார். மலையில் ஏற்றிய விளக்கு எவர் கண்ணுக்கும் இலகுவிற் பட்டுவிடுகிற

தல்லவா! தருமனும் தன் அறக்கொள்கையால் அப்படிப்பட்டவன் தான். பாரதியாருடைய உவமைகள் அவரது உணர்ச்சிகளை விளக்கிக் காட்டுவதோடு, பொருள் விளக்கத்துக்கும் நல்ல கருவியாய் அமைந்து அவரது கவிதைகளைக் கற்பதிலே நீங்காத பெருவிருப்பையும் வளர்த்து நிற்பன.

"ஒளி, ஞாயிறு நிற்பவும் மின்மினி — தன்னை
நாடித் தொழுதிடும் தன்மைபோல் — அவர்
வேயிருந் தூதுமோர் கண்ணனை — அந்த
வேள்வியிற் சால உயர்த்தினர்" (66)

"மாமலையைச் சிறு மட்குடம் பகைகொள்ளல்" (74)

"தன்னைத் தின்னவருமோர் தவளையைச் சிங்கம் கண்டு சிரித்தல் போல் பாண்டவர், துரியன் செய்யும் தீமைகளை மன்னித்தல் (75), பேயினை வேதம் உணர்த்தல்போல் திருதராட்டிரன் சகுனிக்குக் கண்ணன் பெருமைபுகட்ட முற்படல் (83), "பதியுஞ்சாத்திரத்துள்ளுறை காணுதவர் பானைத்தேனில் அகப்பையைப் போல" இருத்தல் (98), குந்தி எனும் பெயர்த் தெய்வதம்; ஆசைக் கதிர்மதியன்ன முகம் (120), திருதராட்டிரன் கேள்விக்கொருமிதிலாதிபனுெத்தோன் ஆதல் (124), வேடன் மலைச்சரிவுத் தேனுக்காசைப்பட்டுக் குழியில் விழ நிற்றல் (199), நள்ளிருட்கண் ஒரு சிற்றொளிவருதல்போலச் சூதாடுகையில் தருமனுக்குச் சிறிது நல்லறிவு வந்துபோதல் (230), போரிலே யானை விழக்கண்ட நாய் நரிகள் மகிழ்தல் போல் வீமன் சூதில் விழக்கண்ட கௌரவர் மகிழ்தல் (237), சிறுநாய் ஒன்று தேன் கலசத்தை எண்ணி நாவினைச் சுவைத்தல்போலத் துரௌபதி சூதிற் கிட்டப் போகிறாள் என்பதை எண்ணித் துரியோதனன் மகிழ்தல் (242), பாஞ்சாலி மன்னரவையில் அம்புபட்ட மான்போல் அழுது துடித்தல் (271) பொய்யர்தந் துயரினைப்போல் பாஞ்சாலியின் துகில் வளர்தல் (299 - 300) ஆகிய உவமைகள் யாவும் பாரதியாரது கவிதையின்பத்தில் நம்மைத் திளைக்கவைக்கத்தக்க சிறப்புடன் விளங்குவன.

பாரதியார் உணர்ச்சிக்கவி. அதனால் உணர்ச்சியைக் காட்டுதற்குச் சிறந்த கருவியான உவமை அவரது சொற்கேட்டு நடந்திருக்கிறது. அச் சிறப்பு பாஞ்சாலிசபதநூல் முழுவதும் பரந்து கிடக்கக் காண்கின்றோம். தன்மைநவிற்சி, உவமை உருவகங்களாகிய இலகுவான அணிகளையே கையாண்டு பெரிய பெரிய பொருள்களையும், சிறந்த தத்துவ முடிபுகளையும் இலகுவாக விளங்கவைக்கும் ஆற்றலிலும் மேம்பட்ட மகாகவியாகப் பாரதியார் விளங்குகின்றார்.

# 13. கதாபாத்திரக்குணநலன்

கவிஞர்கள் தாம் கருத்திற்கொண்ட பொருளை நன்கு வெளிப்படுத்துவதற்குத் தமது படைப்பிலே நடமாடுகின்ற கதாபாத்திரங்களைத் துணைக்கொள்ளுகிறார்கள். கவிஞரது உணர்ச்சி வெளிப்பாடு கதாபாத்திரங்களின் குணங்கள் மூலமாக நன்கு வெளிப்பட்டு நிற்பதை நாம் காணக்கூடியதாக இருக்கும். பாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்குந் தன்மையைக் கொண்டு ஒரு காவியம் அல்லது நாடகத்தை ஆக்கியளித்த ஆசிரியரது நுண்ணறிவின் அளவைக் கூட நாம் கணித்துவிடலாகும்.

தாம் வாழ்ந்தகாலச் சூழ்நிலை, பாரதியாரது உள்ளத்திலே பெருங் கிளர்ச்சிகளையும் ஆவேசத்தையும் உண்டாக்கியது. கவிஞரின் சிந்தனை சென்ற இடமெல்லாம் சிக்கல்கள் தென்பட்டன. பாரத சமுதாயத்திலே பெண்கள் அடிமைகளைப்போல் அடக்கி ஒடுக்கப்பட்டுக்கிடந்தமையை அவராற் பொறுக்கமுடியவில்லை. நாடு சுதந்திரமிழந்து அந்நியர்க்கு அடிமைபூண்டுநின்ற நிலைகண்டு நெஞ்சந் துடித்தார். ஆட்சிபீடத்தில் இருந்த அந்நியர்களிடமிருந்து கிடைக்கக்கூடிய சிறிய இன்பங்களை எதிர்பார்த்துத் தமக்குச் சொந்தமான சொத்துச் சுதந்திரங்களை எல்லாம் மக்கள் விட்டுக்கொடுத்துக் கொண்டிருந்த நிலைமை, மேலும் பொருள்பெற விரும்பித் தம்கையிலிருந்த பொருட்களையெல்லாம் பணயம் வைத்திழக்கும் சூதர்களின் நிலைபோல் தோன்றி அவரைத் துன்புறுத்தியது. நல்லோர் பெரியோர் யாரும் இத்தகைய துன்பப் பிடிப்பினிற் சிக்கிக் கிடப்பதற்கு விதியின் வலிமையேயன்றி வேறுகாரணமெதுவுமிருப்பதாக அவருக்குப் புலப்படவில்லை. இவைகளை நினைந்து நினைந்து கண்ணீர் வடித்தார், உணர்ச்சிப் பெருக்கால் உள்ளம் குமுறியது. பாரத அன்னை அடிமையாய் அவமானப்படுத்தப்படுவதை எண்ணியெண்ணிக் கொதித்தெழுந்தார். அவரது கட்டுக்கடங்காத உணர்ச்சி, ஆவேசமாகப் பெருக்கெடுத்தது. அந்த ஆவேசப்பெருக்கே பாஞ்சாலி சபதத்துக் கதாபாத்திரங்களினூடும் கதைப் போக்கினிடையிலும் வருணனைகளிலுமெல்லாம் பரந்து செல்வதை நாம் காண்கின்றோம்.

தமது நோக்கத்திற்கேற்ற காவியமாகப் பாரதியார் எடுத்துக் கொண்ட பாரதக் கதைப்பகுதியினுள்ளே பலபாத்திரங்கள் நடமாடுகின்றனர். அவர்களுள் துரியோதனன், திருதராட்டிரன், விதுரன், தருமர், பாஞ்சாலி என்பாரை முதன்மையானவராகக் குறிப்பிடலாம்,

வீமன், அரிச்சுனன், கன்னன், சகுனி, துச்சாதனன், விகருணன் என்பாரை அடுத்தபடியாகக்கொள்ளல் கூடும். சிறிய அளவிலமைந்த காவியமாதலால் பாஞ்சாலிசபதத்துள்ளே பாத்திரங்களைப்பற்றிய வருணனை அதிகம் தரப்படவில்லை. சொல்லப்போனால் பாத்திரங்களின் குணநலன்களைப்பற்றிக் கூறுவதற்கு நீண்ட வருணனைகளே வேண்டுமென்பதில்லை. சிறந்த கவிஞர்கள் ஒருசில அடைமொழிகளைக் கொண்டே தமது கருத்தை நன்கு புலப்படுத்திவிடுவார்கள். பாரதியார் கைக்கொண்டு வெற்றிகண்ட முறையும் பாத்திர வருணனையினைப் பொறுத்தமட்டில் இதுவேதான். அத்தகைய பொருத்தமான அடைமொழிச் சொற்களால் பாஞ்சாலிசபதத்துள் வரும் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் நன்கு விளக்கம்பெற்று நிற்கக் காண்போம்.

**துரியோதனன்** பாஞ்சாலி சபதத்துக் காவியநாயகன் போன்றவன். பல நல்லகுணங்களும் பொருந்திய தலைவன் ஒருவனிடமுள்ள தீயகுணம் ஒன்றன் துணையோடு கதைப் போக்கினை வளர்த்துச் செல்லுதல் மேனாட்டு ஆசிரியர்களும் கையாண்ட ஒரு வழி. அவ்வாறே துரியோதனனாகிய இத்தலைவனுடைய **பொறாமை** என்ற தீய குணமும் பாஞ்சாலி சபதக்கதை வளர்ச்சிக்குக் காரணமாயமைகின்றது. பல குணநலன்களோடு, சிறந்த வலிமையும் சான்றவன் துரியோதனன். அவன் பிறந்த அன்றே தன்னால் விளையக்கூடிய கலகங்கள் அனைத்துக்கும் முன்னறிவிப்பாக நரிபோல் ஊளையிட்டுக் கொண்டு பிறந்தானென்று விதுரர் குறிப்பிடுகின்றார். அழகிய அத்தினபுர நகரத்திலே அறிஞரும், பழமறையவரும், வீரருமாகிய பல்லோர் நிறைந்த பேரவைக்களத்தே நடுநாயகமாக வீற்றிருக்கத் தக்க பெருமையினைப்பெற்ற துரியோதனனது வீரச்சிறப்பிலே பாரதியார் பெரிதும் ஈடுபட்டுக் கூறுகின்றார்.

“துரியோ தனப்பெயரான் — நெஞ்சத்
துணிவுடை யான்,முடி பணிவறியான்,
கரியோ ராயிரத்தின் — வலி
காட்டிடு வோன்என்றக் கவிஞர்பிரான்
பெரியோன் வேதமுனி — அன்று
பேசிடும் படிதிகழ் தோள்வலியோன்
உரியோர் தாமெனினும் — பகைக்
குரியோர் தமக்குவெந் தீயனையான். (16)

என்னும் பாடலினூடு துரியோதனனது பேராற்றல் புலப்படுகின்றது. எனினும், பாண்டவர்பால் மட்டும் தீராத பகைமைகொண்ட மன

முடையவன்; அவர்களது வளர்ச்சியிலும், புகழிலும் இளமை தொட்டே பொருமைகொண்டு அவர்க்குப் பற்பல தீங்குகள் இழைத்தவன் என்று திருதராட்டினனது வாயினுல் துரியோதனனை நமக்குக் காட்டு கின்ருர் பாரதியார். அரிச்சுனனது வீரக்கனல் விளங்கும் கண்களும், வீமனது பரந்துபட்ட பெருமார்பும் துரியனுக்கு அச்சத்தையும், அருவருப்பையும், பொருமையையும் ஊட்டின. அவற்றிலே தனது 'இகழ்'வரையப் பெற்றுள்ளதாகக் கூறிக் கருத்தழிகின்ருன். பாண் டவர் சிறப்பினை எண்ணும்போது அவனடையும் துன்பத்திற்கு அளவேயில்லை. இராசசூய யாகத்திலே தருமனுக்கும் தம்பிமாருக்கும் கிடைத்த பெருமைகளை அவன் மறக்கமுடியாது பெரிய துன்பப் படுகின்ருன். அவனது கல்நெஞ்சமும், வானம் வீழினும் அஞ்சாத திண்மை நிலையும் பாண்டவர்க்குற்ற சிறப்பின்மீதுகொண்ட பொரு மையால் இலகுவில் அழித்தொழிக்கப்படுகின்றன. அதனுல் "பஞ்சை யாமொரு பெண்மகள்போலும், பாலர்போலும் பரிதவிப்பான்" ஆகின்ருன். பாதகச் செயல்கள் அவனுக்குறவாகின்றன. "யாது நேரினும் எவ்வகையானும், யாது போயினும் பாண்டவர் வாழ்வைத் தீதுசெய்து மடித்திட" அவன் மனம் துணிவுகொள்கின்றது. அத் திட்டத்திற்குத் துணைநிற்கக்கூடிய துட்டனுன சகுனியைச் சரண் புகுந்து நிற்கின்ருன்.

சகுனியின் யோசனைப்படி திருதராட்டிரனிடம் இருவரும் செல் கின்றனர். சூதினிற் பாண்டவரை மடிக்கவேண்டும் என்ற அவர் களது எண்ணத்தைத் திருதராட்டிரன் மறுத்துக்கூறவே துரியோ தனனது உள்ளம் கோபத்தால் நஞ்சுகாலுகின்றது.

> "பாம்பைக் கொடியென் றுயர்த்தவன் — அந்தப்
> பாம்பெனச் சீறி மொழிகுவான்"

என்று பாரதியார் அவனது கொடிய சிந்தனையாற் பிறந்த சீற் றத்தை சுருங்கிய உவமைத்தொடர்மூலம் இங்கு விளங்கவைத்துள் ளார். கொடிய சீற்றத்தினுலே தந்தையென்றும் பாராது தகாத வார்த்தைகளைப் பேசுகின்றனன். பாண்டவர் புகழே தனக்கு இக ழென்றும், அவர்களது செல்வத்தைத் தனக்கு எப்படியும் பெற்றுத் தருதல் வேண்டுமென்றும் கூறுகின்ற அவன், தான் எவருடைய உதவியும் இன்றித் தனியனுய் நிற்கும் நிலையினையும் தந்தைக்கு எடுத்துக்காட்டுகின்ருன். "சொல்லின் நயங்கள் அறிந்திலேன்" என்றும், "வாது நின்னெடு தொடுக்கிலேன்" என்றும் அவன் கூறிக்கொண்டே, 'பெற்றபிள்ளை' என்ற வகையில் தன்மீது உண்

டாகக்கூடிய இயல்பான பாசம் திருதராட்டிரனை மேற்கொள்ளத் தக்கவாறு தந்தையுடன் வாதிடுகின்றான்.

"என்னைக் கொல்லினும் வேறெது செய்யினும் — நெஞ்சிற்
கொண்ட கருத்தை விடுகிலேன்"

என்ற தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்திய பின்னர், தந்தை விடாப்பிடியாக மறுத்துநிற்கும் உறுதிப்பாடு சிதையத்தக்கவகையில்,

"ஐய சூதுக் கவரை அழைத்தால்
ஆடி உய்குதும்; அஃதியற் றாயேல்
ஐய நின்முன ரென்சிரங் கொய்தே
நானிங் காவி இறுத்திடு வேனால்
செய்ய லாவது செய்குதி"

என்று கூறும் அவனது வாதத் திறமை பாராட்டத்தக்கதாகும். இதன் சிறப்புக்களையெல்லாம் துரியோதனனுக்கும் திருதராட்டிரனுக்கு மிடையில் நடந்த உரையாடற் பகுதியுள் விரிவுறக் காணலாகும். பொருள் வளர்க்கும் வழிகள் யாவை, பகை என்பது யாது, மன்னர்க் குரிய நீதிமுறைகள் எவை என்பவற்றுக்கெல்லாம் தக்க விடைகளை நீதிசாஸ்திர ஆதாரங்களோடு வகுத்து விளக்குவதனால் துரியோதனன் நன்கு கற்றான் என்பதையும் நாம் உணரலாகும்.

சூது தொடங்குகின்றது. சகுனிக்காகத் துரியோதனனே பண யம் வைக்கின்றான். எந்த இழிசெயலுக்கும் மனம் கூசாதவன்; பொறாமையின் தூண்டுதலால் தான் சாதிக்க நினைத்தவற்றிற்கு எதிரிடையாகவரும் பெரியோர் எவரையும் அவமதித்துத் தள்ளத் துணிந்தவன்; தனக்குப் புத்திபுகட்டவந்த விதுரனை

"நன்றி கெட்ட விதுரா — சிறிதும்
நாண மற்ற விதுரா
தின்ற உப்பி னுக்கே — நாசந்
தேடு கின்ற விதுரா".

நீ எனது வீட்டில் உன் வயிற்றை நிரப்பிக்கொண்டே என்னுடைய பரம வைரிகளாகிய அந்தப் பஞ்சவர்பால் இரங்குகின்ற நெஞ்சத் தைக் கொண்டிருக்கின்றாயே என்று பழித்துக்கூறுகின்றான். தனது கருத்துக் கெட்டதாயினும் அதற்கு மாறாக எதிர்த்துநிற்பார் எவரை யும், எத்தகைய கீழ்த்தரமான வழிகளைக் கையாண்டேனும் எதிர்த்து நிற்கின்ற கீழ்த்தரமான சிந்தைபடைத்தவன் துரியோதனன். பாஞ்

சாலி இராசசூய யாகத்தின்போது தன்னைப்பார்த்து நகைசெய்ததைக் கொடிய குற்றம் என்று கொள்ளுகின்றான். 'தவறி விழுபவர் தம்மையே, பெற்றதாயும் சிரித்தல் மரபு' ஆதலால், அதுகண்டு 'மைத்துனிதான் சிரித்திடில் தோஷம் இதில் மிகவந்ததோ' என்ற நீதியை உணர்ந்துகொள்ள அவனது பொறுமை இடம்கொடுக்க வில்லை. 'நகைசெய்தாரை நாமும் நகைசெய்வோம்' என்று தீர்ப் பிடுகின்றனன். சூதிலே பாஞ்சாலி தோற்கப்பட்டதுகண்டு அவ னடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. அப்பெருங்களியால் தம்பி யர் மனைவியான பாஞ்சாலியை, மன்னரவைக்களத்தே துகிலுரியச் செய்கின்றான். பாண்டவர்களுக்கு இழைத்த கொடுமைக்கும் தீர்வு கால எல்லை திட்டப்படுத்தப்படுகின்றது. எந்தக் கொடுமையும் இறுதி யில் தோற்று, அறம் நிரம்பிய சத்தியமார்க்கமே வெல்லும் பெருஞ்சிறப்பினைப் பாரதியார் இக்கொடியோனது குணநலன் கள் மூலம் நன்கு காட்டுகின்றனர். பாஞ்சாலியினது சபதத்திற்கும், அதனால் நேர இருக்கின்ற பாரதயுத்தத்திற்கும் காரணமான துரியோ தனனது குணநலன்கள் இவ்வாறு பாஞ்சாலிசபதநூல் எங்கணும் பரந்து விளங்கத்தக்கவகையில் படைத்துள்ளார் பாரதியார்.

**திருதராட்டிரன்** கௌரவர்களது ஆட்சிக்குத் தலைவன். அவ னது அனுமதியின்றி எதையும் செய்யமுடியாத அரசியற் சூழ்நிலை யிலே துரியோதனன் இருந்தனன். திருதராட்டிரன் மிக்க பேரறிவு வாய்ந்தவன். 'அருமந்திரக்கேள்வி' உடையவனான அவன் பெரிய அரசியல் ஞானி. புறக்கண்களிலாதவனெனினும் அறிவாகிய அகக் கண்படைத்தவன். திரிகால ஞானி என்று புகழத்தக்கவாறு நுண் ணறிவு படைத்தவனாகிய விதுரனது ஆலோசனையைப் பின்பற்றி நடப்பவன். 'விதுரனறிவைப் பின்னும் மற்றொரு கண்ணெனக் கொண்டோன்' என்று, அறிஞர் சொற்களைக் கேட்டு நடக்கும் இவ னது சிறந்த பண்பினைப் பாரதியார் புகழுகின்றார். எவ்வளவு சிறந்த நற்குணம் படைத்தவனாயினும் துரியோதனனுடைய தந்தையாதலால், அம்மைந்தனது துயரத்தைக்கண்டு இளகும் இவனது உள்ளம் அடையும் மாற்றத்திலே கதைவளர்ச்சி தங்கியிருப்பதை நாம் காண் கின்றோம். துரியோதனன் துன்பப்படுவதாகச் சகுனி கூறியபோது திருதராட்டிரனது உள்ளமானது உருகுகின்றது; மைந்தனுக்குற்ற துயர் எதுவென்று அவன் ஆராய்ந்து நிற்கின்றான். சகுனியின் சூழ்ச்சியினைக் கேட்டதும் அதனை வெறுத்ததோடு பாண்டவர்களது உயர்ந்த குணப்பண்புகளையும், அவர்களது ஆற்றல், படைத்துணை

முதலியவற்றையும் கள்ளங்கபடில்லாமற் புகழ்ந்து அவர்களைப் பகைக்க நினைந்த தன் மைந்தனையும் வன்மையாகக் கண்டிக்கின்ருன். போரிலே பாண்டவரை 'அரி' என்றும் அவரை எதிர்க்கும் துரியோதனனை 'நரி' என்றும் கூறுகின்ருன். மேலும் மலையை மோதி வெல்ல நினைக்கும் மட்குடம் போலவும் பாண்டவரை எதிர்க்க நினைக்கும் தன் மைந்தனது நிலை இருக்குமெனத் திருதராட்டிரன் கூறுவதெல்லாம் அவனது உண்மையான நடுவுநிலைமைச் சிறப்பினையே காட்டுகின்றன. எனினும், தன் விருப்பினை நிறைவேற்றி வைக்காவிடில், தான் இறந்துவிடுவதாக மைந்தன் கூறியபோது தந்தையாகிய திருதராட்டிரன் மனமுடைந்து மைந்தன் வழித்திரும்பி விடுகின்றனன். திருதராட்டிரனது உயர்ந்த பண்புகளும் அறம் திரும்பாக் கொள்கையும் அவ்வாறு இலகுவில் மனம்மாற விடுவன வல்ல என்பதை நன்குணர்ந்தே போலும் பாரதியாரும், இந்த மாற்றத்திற்குக் காரணம் வலிய விதியே என்றும், அம்மாற்றத்தைத் திருதராட்டிரன் விரும்பாது அழுது புலம்புகின்ருன் என்றும்,

"விதி விதி விதி மகனே — இனி
வேறெது சொல்லுவன் அட மகனே
...................................என்று
வழியுங்கண் ணீரொடு விடைகொடுத்தான்"

என்றுங் கூறுகின்ருர். முயற்சி உடைமை, பிறர்பொருள் வேஃகாமை, தம்மைச் சார்ந்தாரைக் காப்பாற்றுதல் என்பனவே செல்வம் வளர்க்கும் வழிகள் என்று கூறித் துரியோதனனுக்குப் பாண்டவர் செல்வம் கண்டு உண்டான பொருமையை மாற்ற முயலும் திருதராட்டிரனது சிறந்த குணங்கள் பாராட்டத்தக்கன.

திருதராட்டிரன் விருப்பப்படி விதுரன் பாண்டவரை அழைத்து வரச் செல்கின்ருன். பாண்டவர் சபையிடைச் சென்று தான் வந்த காரியத்தைக் கூறப்புகுந்த விதுரனது வாயால் திருதராட்டிரனது அருங்குணங்கள் சில வெளிப்படுகின்றன. 'பெருத்த தோள்வலியுடையவன், பரந்த புகழ் உடையவன், பொருட்செல்வமும், நிலச் செல்வமும் நிறைந்தவன், உண்மையறிவு மிக்கவன், வேந்தர் வேந்தன், தனது கலைஞானச்சிறப்பினுல் சனகமகாமுனிவரை ஒத்தவன்' என்று விதுரன் திருதராட்டிரனைப்பற்றிப் பாண்டவருக்குக் கூறுகின்ருன்.

"மைவரைத் தோளன், பெரும்புகழாளன்
மாமகள் பூமகட் கோர்மணவாளன்
மெய்வரு கேள்வி மிகுந்த புலவன்
வேந்தர் பிரான் திருதராட்டிரக்கோமான்" (122)

"கேள்விக்கொரு மிதிலாதீபன் ஒத்தோன்" (124)

என்னும் அடிகளில் அவன் புகழை நாம் காணலாகும். ஜானகியைப் பயந்த பேரரசரும், ஐம்புலன்களை அடக்கிய பெருஞானியுமாகிய சனகமகாமுனிவர் சகல கலைகளிலும் வல்லவரென்று புகழ் பெற்றவர். அத்தகைய பேரறிஞருக்குச் சமமானவன் என்று பாராட்டத் தக்க பெருஞ் சிறப்பினைத் திருதராட்டிரன் பெற்றிருந்தனன் என்பது தெரிகின்றது.

**விதுரன்** அந்தப் பெருமன்னனின் தம்பி. சிறந்த ஞானியாகிய தமையனுக்கும் ஆலோசனை கூறித் துணைபுரியும் பேரறிவாளன். இதனாலேதான் அவனைப்பற்றிக் குறிப்பிடவரும்போது "மெய்ந்நெறி உணர்விதுரன்" (18), "பெற்றி மிக்க **விதுரன்**" (84), "விதுரனறிவைப் பின்னும் மற்றொரு கண்ணெனக் கொண்டோன்" (84), "மதிசெறி விதுரனன்றே — இது, வருந்திறனறிந்து முன் எனக்குரைத்தான்" என்றெல்லாம் பாரதியார் கூறுகின்றார். அறிவொளி விளங்கும் விதுரனே கொடியவர் நடுவில் அறம் தேய்க்கப் படுதலை எதிர்த்துப் போராடும் பெரியோனாகப் படைக்கப்பட்டிருக்கின்றான். சூதாட்டத்தின்மூலம் நாட்டைப் பறித்தல் முறையன்று என்று திருதராட்டிரனுக்கும் துரியோதனனுக்கும் தைரியமாக எடுத்துக் கூறுபவன். சூதாட்டம் நடக்கப்போவதைத் தடுக்கமுடியாது என்பதைத் திருதராட்டிரன் சொல்லால் உணர்ந்தபோது பாரதியாரது ஆவேசத்தை வெளிப்படுத்திக்காட்டும் உயரிய பாத்திரம் விதுரன். "போச்சுது போச்சுது பாரதநாடு, போச்சுது நல்லறம் போச்சுது வேதம்" (113) என்று அவன் வாய்விட்டுக் கதறுவதைக் காண்கின்றோம். திருதராட்டிரனது சொல்லைத் தடுக்கமுடியாதநிலை ஏற்பட்டு, அதன்படி பாண்டவரை அழைக்கத் தான் செல்லும்போது, பாரதநாட்டுக்கு வரப்போகின்ற அழிவையெல்லாம் நினைந்து வருந்துகின்றான். "பாரதர்தந் நாட்டிலே நாசம் எய்தப் பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே" (118) என்று அவன் கலங்குவதைக் காண்கின்றோம். பாரதியாரது விருப்புக்குப் பாத்திரமான ஒரு கதாபாத்திரம் விதுரன். வீரம், நேர்மை, உறுதி, தியாகம், பொறுமை, அன்பு, நாட்டுப்பற்று ஆகிய உயர் குணங்களெல்லாம்

விதுரன்பால் விளங்கி நிற்கின்றன. சூதாட்டம் நடைபெறும்போது கூட இடையில் எழுந்து, அது தொடர்ந்து நடத்தலைத் தடுத்து அற நெறி கூறுகின்றான். கேளாது, அறம் வளரவேண்டிய பாரதர் சபையிலே கொடிய சூது நடப்பதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருந்த திருதராட்டிரனை, விதுரன் தைரியமாகக் கண்டிக்கின்றான். சபையில் இருந்த பெரியோர்கள் அனைவரும் அவமானப்படத்தக்கவாறு முதன்மை கொடுக்கப்பெற்று நிற்கும் பாதகச் சகுனியை அங்கிருந்து துரத்தி நாடுகடத்தவேண்டுமென்பது அவனது தீர்ப்பு. விதுரன் சூதாட்டத்திற்குத் தெரிவித்த எதிர்ப்புரைகளின் சிறப்புக்களை விவரிக்கும் (197 - 204 வரையுள்ள) பாடற்பகுதி விதுரனது பேரறிவை விளக்கமாகக் கூறுகின்றது.

விதுரனது வார்த்தைகளைக் கேட்ட துரியோதனன் அவனைச் சீறுகின்றான்; சிறிய தந்தை என்றும் பாராது கொடுஞ்சொற்கூறி விதுரனை இகழ்ந்துரைக்கின்றான். ஆயினும் விதுரன் அவைகளால் தன்னிலை தவறிச் சிறிதும் குழப்பமடைந்திலன். விதுரன் துரியோதனனது இழிவுரைகளுக்கு அமைதியாகக்கூறும் மறுமொழி, அவனது உயர்ந்த குணச்சிறப்பினை எடுத்துக் காட்டுவது:

''விதிவழிநன் குணர்ந்திடினும் பேதையேன் யான்
வெள்ளைமன முடைமையினால் மகனே நின்றன்
சதிவழியைத் தடுத்துரைகள் சொல்லப் போந்தேன்
சரிசரி இங் கேதுரைத்தும் பயனொன் றில்லை
மதிவழியே சொல்லுகென''

விதுரன் கூறுவது அவனது உயர்ந்த பொறுமையினாலென்றே கூறலாகும். பாஞ்சாலியைச் சபைக்கழைத்துவரும்படி துரியன் விதுரனைக் கேட்டபோதும் சினந்து மதிகேடான துரியோதனனை நல்வழிப்படுத்த முயல்கின்றான். பாண்டவரிடம் மன்னிப்புக்கோரி அவருரிமைகளைத் திருப்பிக் கொடுக்காவிடின் மாபாரத யுத்தம் வருமென்று விதுரன் துரியோதனனுக்குச் செய்த எச்சரிக்கை பயனற்றுப் போகின்றது. நல்ல அரசியல் அறிவும், கூர்த்த மதியும், மெய்ஞ்ஞானமும், அறக்கொள்கையும், யார் பழித்தாலும் நியாயத்துக்காகப் போராடும் வீரப்பண்பும் கொண்ட விதுரன் பாஞ்சாலி சபதத்துக் கதாபாத்திரங்களுள் சிறந்த ஒருவனாவன்.

**தருமன்** அத்தகைய விதுரரைப் பெரிதும் மதித்து நடப்பவன். துரியோதனனுக்கு எதிர்மாறாக, நற்குணங்களெல்லாம் படைத்தவன். தந்தையையே எதிர்த்துப் பழிக்கும் துரியோதனனைப் போலன்றி

தனது சிறிய தந்தையாகிய விதுரனது கூற்றையே மறுக்கத் துணியாதவன். அத்தினுபுரத்திற்கு வருமாறு திருதராட்டிரன் விடுத்த செய்தியைக் கூறிய பின்னர், கௌரவர் செய்ய இருக்கும் சூழ்ச்சிகளையும் விதுரன் தருமனுக்குக் குறிப்பிடுகின்றான். ஆனால் அதைக் கேட்டபின்னரும் பெரிய தந்தையாகிய திருதராட்டிரனது அழைப்பை மறுத்தல் தகாது என்று அத்தினுபுரிக்குச் செல்லத் துணிகின்றான் தருமன்.

"தந்தையும் வரப்பணித்தான் — சிறு
தந்தையும் தூதுவந் ததையுரைத்தான்
சிந்தை யொன் றினியில்லை — எது
சேரினும் நலமெனத் தெளிந்துவிட்டேன் (131)

என்று அவனது தந்தைசொற் கடவாத பெருஞ்சிறப்பைப் பாரதியார் மகிழ்வுடன் எடுத்துக் காட்டுகின்றார்.

தருமன் அறமே உருவமானவன்; சாந்தசொரூபி. தம்பியரது மட்டில்லாத வீரத்தினல் மானிலத்தவரெல்லோரும் போற்றத்தக்க வகையில் மன்னாதி மன்னனானவன். அவன் செய்த யாகத்தினை மதித்து மன்னர் யாவரும் நேரில் வந்து சேர்ந்து, விலைமதிப்பிட முடியாத பலவகையான திறைப்பொருள்களையும் கொடுத்தல் இவனது பெருமைக்குச் சான்றான ஒன்றாகும். எனினும் இவனது செல்வச் சிறப்புகளிலே பொறாமைகொண்டவனான துரியோதனனுக்குத் தருமன் கோழையாக, "வீரமில்லாத் தருமனாக"வே காட்சியளிக்கின்றான்.

"கிழவியர் தபசியர் போல் — பழங்
கிளிக்கதை படிப்பவன் — பொறுமை என்றும்
பழவினை முடிவென்றும் — சொலிப்
பதுங்கி நிற் போன், மறத் தன்மையிலான்
வழவழத் தருமன்" (25)

என்று இகழ்ந்து கூறுகின்றான். இக்கூற்று துரியோதனனது பொறாமையின் எல்லையினையே காட்டுவதன்றி வேறில்லை எனலாம். அத்துரியோதனனே "அம்புவிமன்னரெலாம், இவன் ஆணைதம் சிரத்தினில் அணிந்தனர்" (26) என்றும் "உலகுதொடங்கிய நாள் முதலாக நம்சாதியில் புகழ் ஓங்கிநின்றாரித் தருமனைப்போல் எவர்" (42) என்றும், "(வேத) சாரமறிந்த யுதிட்டிரன்" (45) என்றும் கூறிக்கொள்வதிலிருந்து எதிரிகளும் போற்றத்தக்க சிறப்புக்கள் தருமனிடத்திருந்தனவென்பது தெளிவாகின்றது. இவனது குணச்

சிறப்புக்களைப்பற்றித் திருதராட்டிரன் சகுனிக்கும், துரியோதன னுக்கும் எடுத்துக்கூறும் மொழிகளிலிருந்தும் தருமனது உயர் வினை அறியலாகும்.

அத்தினபுரிக்குச் செல்லற்கான அழைப்பை விதுரனிடமிருந்து ஏற்கும்போது தருமன் செய்த உறுதியான தீர்மானமும், அவ்வாறு ஏற்றுச் செல்லுதல் பொருந்தாது என்ற தம்பியரது கூற்றுக்களை மறுத்துநின்ற அவனது நிலைதளராச் சிந்தையின் உயர்வும் தருமனை நம்முள்ளத்தில் மேலும் ஒருபடி உயர்த்திவிடுகின்றன. கடமை எது என்பதை நன்கு சிந்தித்துத் தீர்மானித்தலும், தீர்மானம் செய்த பின், முன் வைத்த காலைப் பின் வையாமையுமாகிய மன உறுதி யைத் தருமன் நமக்கும் இங்குக் கற்பிக்கின்றான்.

''தருமனும் இவ்வளவில் — உளத்
தளர்ச்சியை நீக்கியோர் உறுதிகொண்டே
பருமங்கொள் குரலினனாய் — மொழி
பதைத்திட லின்றியிங் கிவையுரைப்பான்;
மருமங்கள் எவைசெயினும் — மதி
மருண்டவர் விருந்தறஞ் சிதைத்திடினும்
கருமமொன் றேயுளதாம் — நங்கள்
கடன்; அதை நெறிப்படி புரிந்திடுவோம் (130)

என்பது பாரதியார் தருமனது அந்த உயர்வைக் குறிப்பிடும் பாடல். தடுத்துரைத்த தம்பியருக்குத் தாம் முன்பின்னாய்ந்து செய்த முடிவும் விதியினால் உண்டாகவிருக்கும் விளைவுகளும், கடமைதவறாமையின் சிறப்பும் எல்லாம் தருமனால் நன்கு போதிக்கப்படுகின்றன.

''குன்றினிலே யேற்றிவைத்த விளக்கைப்போலக்
குவலயத்துக் கறங்காட்டத் தோன்றினாய் நீ
.......................................................
ஐயனே பாண்டவர் தம் ஆவிநீயே''

என்று நால்வரோடு சேர்ந்து நாமும் தருமனுக்குக் கையெடுக்கத் தோன்றுகின்றது இந்நிலையில்.

சகுனி சூதுக்கழைத்தபோது அச்சூதினை வெறுத்துக் கூறிக் காட்டும் நியாயங்களுள் அறம் ஓங்கவும், கலைகள் வளரவும், சத் தியம் தழைக்கவும் தான் செய்கின்ற ஆட்சியைப்பற்றி அவன் கூறு வதைப் பொல்லாத சகுனி தற்புகழ்ச்சி என்று பழிக்கின்றான். எனினும் பொதுமக்களின் உயிர்க்குறுதியான நல்லாட்சியிலே

தருமனது கருத்து நின்றதென்ற பெருஞ்சிறப்பினையே உண்மையில் அவை காட்டுவன. சூதிலே தோற்றபின்னர், அத்தருமனது பொறுமைக் குணமானது மலைவிளக்காகிவிடுகின்றது. பாஞ்சாலி சபைக்கு வந்து நியாயம் கேட்கும்போதும், அவள் துகிலுரியப்படும் போதுமெல்லாம் அவனது பொறுமை சோதிக்கப்படுகின்றதெனினும் இறுதி வெற்றி பொறுமைக்கேயாவதைக் காண்கின்றோம்.

**பாஞ்சாலி** இவ்வாறு பெரும் புகழ்படைத்து விளங்கிய பாண்டவரது தருமபத்தினி. பாஞ்சாலி சபதக் கதாபாத்திரங்களுள்ளே, பாரதியாரது உயிர்போன்று விளங்குபவள். பாரதியார் தனது தெய்வமான சக்தியைப் புகழ்ந்து பல பாடல்களைப் பாடியவர். வேதகாலத்து இருடிகளைப்போன்று சிருட்டிதத்துவத்தை வடித்துப் பராசக்தி, ஜன்மபூமி, பெண் என்ற மூன்று பெரிய அம்சங்களாகப் பாடியவர். அவருடைய சக்திதாகம் இந்தப் பாஞ்சாலியைப் படைத்ததினுலே ஒருவாறு தணிந்திருக்கும் என்று நாம் சொல்லக்கூடியவாறு பாஞ்சாலியை அன்னை பராசக்தியின் உருவமாகவும், அடிமையுற்று அல்லலுறும் பாரதமாதாவின் தோற்றமாகவும், மக்கட் சமூகத்திலே நசுக்குண்டு கிடக்கும் பெண்ணினத்தின் பிரதிநிதியாகவும் படைத்ததன்மூலம் அந்த மூன்று அம்சங்களையும் ஒரே பொருளிற் சிருட்டித்துநின்று அந்த ஆற்றலில் வேதகாலத்து முனிபுங்கவர்களையும் அவர் வென்றுவிட்டார் எனலாம்.

மகா பாரதமாகிய காவியத்திற்குக் கதாநாயகி பாஞ்சாலி. பாரதியார் செய்த பாஞ்சாலி சபதக் காவியத்திலும் அந்த உயர்வினிலே இன்னெருபடி ஏற்றிவைக்கப்பட்டிருக்கிருள். அவர் ஊட்டிய புதுமைக் கருத்துக்கள் சிலவற்றினுல் பாஞ்சாலி நாற்குணமும், நல்லெழிலும், தெய்வ பக்தியும், பெரியோரைப் பணிதலும், தீமையைத் தீண்டாததீரமும் பொருந்தியவள். கணவனது வாழ்விலே வரும் இன்பதுன்பங்களிலெல்லாம் இணைந்து பங்குகொண்டு வாழும் இலட்சியப்பெண். பெண்குலத்துக்கே உரியனவான இந்தப் பழமைப் பெருங்குணங்களோடு அரசியலறிவும், பெண்ணுரிமைக்காகப் போராடும் வீரப்பாங்கும் ஒருங்கேகொண்ட சிறப்புப் பொருந்திய புதுமைப் பெண்ணுகவும் பாரதியார் அவளைத் தமது காவியத்தில் படைத்துக் காட்டுகிருர். இந்திரப்பிரத்தத்திற்கு வந்த விதுரரை மெய்நிலைத் துறப் பணிகின்ற பாஞ்சாலி, மாலை வருணனையில் கணவனது மகிழ்ச்சியைக் கூட்டும் குலமகளாகி, அத்தினுபுரத்து அந்தப்புரத்திலே உற்ருருக்கேற்ற பொற்ருெடியாக உறவாடி, மன்னரவைக்கு இழுத்துச் செல்லப்படுவதிலிருந்து வீரவெறி வளரப்பெற்று, துகிலுரி

யப்படும்போது கண்ணன் கழலிணைகளைச் சரண்புகுந்து தானே தெய்வம்போற் காட்சிதந்து, சபதம் கூறுகையிலே ஐம்பெரும் பூதங்களையும் தனக்குச் சான்றுபகரப் பணிவித்த கற்பின் கொழுந்தாக விளங்கி நிற்கின்றாள்.

எதிரியே போற்றத்தக்க செந்திரு பாஞ்சாலி என்பதை,

"ஒளி, மின்னு மமுதமும் போன்றவள் — இவர்
மேவிடு தேவியை வைத்திட்டால் — அவள்
துன்னு மதிட்ட முடையவள் — இவர்
தோற்ற தனைத்தையும் மீட்டலாம்"

என்ற சகுனியின் கூற்றால் பாரதியார் விளக்குகின்றார். திரௌபதியைப் பணயம் வைக்குமாறு கூறிய சகுனியின் கூற்றுக்குத் தருமன் இணங்கினான் என்பதைக் கூறும்போது பாரதியாரது உள்ளம் துடிக்கின்றது. பாஞ்சாலியின் சிறப்புகளை அங்கு மேலும் விவரித்துக் கூறுகின்றார். 'பாஞ்சால நாட்டினர் தவப்பயனாக உதித்தவள், பாண்டவரது உயிருக்குயிரானவள், ஓவியம் நிகர்த்த பேரழகி, நடைபயிலும் காமவல்லி யென்று சொல்லத் தக்கவள், எங்கு தேடினும் கிடைக்கப்பெறாத பெரிய திரவியம், இன்பவளமான செந்திரு' என்றெல்லாம் கூறியும் பாரதியார் மனநிறைவு பெற்றிலர். செருப்புக்குத் தோல் பெறுதற்காகத் தனது செல்வக்குழந்தையை ஒருவன் கொல்வது போன்றிருக்கின்றது, சூதில் இழந்தவற்றை வெல்லலாம் என்ற நப்பாசையால் அவளைப் பணயம் வைக்கும் தருமனது இழிநிலை என அவர் கூறுகின்றார். இந்தக் கொடிய செயலைத் தருமன் செய்தமையைப் பாரதியாரால் மன்னிக்கவே முடியவில்லை. வீமன் வாயால் தருமனது கைகளை எரித்துவிடப் பாரதியார் நெருப்புத் தேடுவதெல்லாம் பாஞ்சாலியின் உயர்ந்த சிறப்பிலே அவருக்கிருந்த ஈடுபாடு காரணமாகவேதான் நிகழ்ந்ததெனலாம். பாஞ்சாலியைச் சூதில் பணயம் வைத்ததற்காகக் கனன்றெழுந்த பாரதியார், துரியோதனன் அவளைச் சபைக்கு அழைத்தான் என்று கூறும்போது அதைச் சகிக்கமுடியாது இயற்கையனைத்துமே பெரிய பாடுபட்டதாக எடுத்துரைக்கின்றார். இதனை 252-ம் பாடலுள் விரிவாகக் காணலாம். பராசக்தியின் அம்சமான பாஞ்சாலிக்கு இழைக்கப்படும் துன்பத்தினால் அறநெறி சிதைந்து பாரதநாடே அழியப்போகின்றதென்பதற்குரிய அறிகுறிகள் அப்பாடற் பகுதியுள் காட்டப்படுகின்றன.

பாஞ்சாலியை மன்றுக்கு அழைக்கும் தேர்ப்பாகன் "அம்மனே போற்றி, அறங்காப்பாய் தாள் போற்றி என்று அறத்திற்கு வேலி

யான அவளது உயர்வுக்கு வணக்கம் செலுத்தக் காண்கின்றோம். அப்பால் அரசியல் ஞானியாகப் பாஞ்சாலியின் தோற்றம் தோன்றி வளர்கின்றது.

"என்னை முன் னேகூறி இழந்தாரா தம்மையே
முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா
சென்று சபையில்இச் செய்தி தெரிந்துவா"

என்று பாகனை அவள் திருப்பிவிடுகின்றாள். பாகன் மீண்டும் தக்க விடை பெறாது வந்ததனால், அறம் உணர்ந்தோர் இல்லை துரியோதனனது அவைக்களத்தில் என்பதை உணர்ந்து கலங்குகின்றாள்.

"நாயகர் தாம் தம்மைத் தோற்றபின் — என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை — புலைத்
தாயத்தி லேவிலைப் பட்டபின் — என்ன
சாத்திரத் தாலென்னைத் தோற்றிட்டார்? — அவர்
தாயத்தி லேவிலைப் பட்டவர் — புவி
தாங்கும் துருபதன் கன்னி நான்"

என்ற அவளுடைய கேள்விக்கு நல்ல விடை கிடைத்திலது. மாடு நிகர்த்த துச்சாதனன் வருகின்றான். அவனுக்குத் திரௌபதி நீதி நெறிகளை எடுத்துக் கூறிக் 'கட்டுத்தவறி மொழிதல்' வேண்டாம் என்கின்றாள். அருட்கண் ணழிவெய்திய பாதகனான அவனுக்கு 'ஆடி விலைப்பட்ட தாதி நீ' என்பதைவிட, தான் கூறக்கூடிய அறிவு சான்ற விடை வேறென்ன தெரியும்? பாஞ்சாலியின் குழலைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துச் சென்று மன்னரவையில் நிறுத்துகிறான். கோவலன் வெட்டுண்டகாலை வீரக்குரலெழுப்பிய கண்ணகி, 'சான்றோரும் உண்டுகொல், சான்றோரு முண்டுகொல்' என்று அக்கொடுமையைத் தடுத்தற்குப் பெருமக்கள் யாரும் மதுராபுரியில் இல்லையோ என்று கேட்டாளெனச் சிலம்பு கூறும். பாரதி படைத்த பாஞ்சாலியும் அப்படியே தன்னைக் கொடுமை செய்தவரை விலக்கி நிறுத்தாத பெருமக்களையும், பொதுமக்களையுமெல்லாம் தைரியமாகக் கண்டிக்கின்றாள். நீதிசாத்திரங்களில் வல்லுனரான வீட்டுமருடன் சட்டத்தை எடுத்துக்காட்டித் தன் வழக்கைத் தானே பேசிவாதிட்டு நிற்கின்றாள். வீட்டுமரது தீர்ப்புக்கு, மேல் விளக்கம் (அப்பீல்) இல்லாத நிலைகண்டு 'பெண்மையினைக் கண் பார்க்கவேண்டும்' என்று வேண்டுகின்றாள். கிடைத்தது துகிலுரியப் படவேண்டிய தீர்ப்புத்தான். இறுதியில் இனி மானிடராற் பயனில்லை

என உணர்ந்த பாஞ்சாலி உட்சோதியுட் கலந்து ஒருமையுறுகின்ருள். ஒரு பெரிய பாடம் நமக்கு இதிலே கிடைக்கிறது. விதிதான் வலிய தெனினும் அதைச் சாட்டாகச் சொல்லிக்கொண்டு சும்மா சோம்பிக் கிடக்காமல் நமது முயற்சியால் நல்லாக்கங்களுக்கு உழைக்க வேண்டும் என்பதும், அப்படிப்பட்ட முயற்சியால் நம் கடமையை நாம் சரிவரச்செய்து நின்ருேமானுல் நமக்குத் தீங்குருது காக்கும் வேலையை இறைவன் தானே முன்வந்து செய்வான் என்பதும் பாஞ்சாலியின் மூலம் நமக்குக் காட்டப்படுகின்றன. துகில் வளர் கின்றது, வளர்கின்றது, வளர்ந்துகொண்டே செல்கின்றது.

தனது அறிவாற்றலால், உயர்ந்த குணநலத்திஞல், பக்திச் சிறப்பினுல் தன்னைத் தானே காத்துக்கொள்ளுகின்ருள் பாஞ்சாலி. சமூகத்திலே எத்தகைய உயர்ந்த இடத்தையும் பெண்கள் வகிக் கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாகி வெற்றிப்புகழோடு பாஞ்சாலி இக்காவியத்தில் நிற்கின்ருள். அவளது வீரநெஞ்சம், தன்னை இகழ்ந் தோரைப் பழிவாங்கத் துணிவுகொள்ளுகின்றது. குலைவுற்ற கூந் தலை, அதனைக் குலைத்தோனுகிய துச்சாதனன், அதற்குக் காரண மான துரியோதனன் - இருவரது இரத்தமாகிய நெய்தடவியல்லாது தான் முடிக்கப்போவதில்லையென்று வீராவேசம் பொங்கக் கூறு கின்ருள்.

பாரதியாரது படைப்பிலே பாஞ்சாலி ஒரு இலட்சியப்பெண். எந்த இடர்வரினும் தளராது விளங்கும் மன உறுதியும், வீரமும், பெண்ணினத்தின் உரிமைகளுக்காகப் போராடி நிற்கும் திறமையும், வாக்குவன்மையும் மிக்கவள்; பெரியோரைப் போற்றும் பண்பினள்; பெரிய அரசியல் ஞானிகளையும் வென்ற அரசியல் அறிவு படைத் தவள்; பெண்மையின் பண்பெல்லாம் விளங்கும் பழைய புதுமைப் பெண். புதிய பாரதத்துக்கு முன்மாதிரியாக இருக்கட்டுமென்று பாரதியார் நிறுவிவைத்த பெண்மைச்சிலை, பாஞ்சாலி.

**அரிச்சுனன்** பாஞ்சாலியைத் தன்னுயிரென மதிப்பவன். கண் ணனின் தோழன். பாரதியாரே வேருேர் இடத்தில், கண்ணன் அரிச் சுனனுக்குத் தோழனுயிருப்பதுபோல், பராசக்தி தன்னுடன் இருந்து துணைசெய்யவேண்டுமென்று வேண்டுகிருர். அரிச்சுனன் வில் வித்தையில் இணையில்லாதவன், மிக்க அழகுடையவன், நிறைந்த இரசிகத்தன்மை வாய்ந்தவனென்பதை மாலைச் சூரியனை அனுபவிப் பதற்கான பாத்திரமாகப் பாரதியார் அவனையே தெரிவுசெய்து கொண்டதிலிருந்து நன்கு தெளிவாகும்.

சிறந்த வீரம் உடையனுயினும் மனப்பதற்றம் சிறிதும் இல்லாதவன். பாஞ்சாலியைப் பணயம் வைத்ததைப் பொருது தருமவேந்தனை வீமன் கண்டித்தபோது அவனுக்கு அறிவுரை புகன்று கோபத்தை ஆற்றியவன். 'சினம் என்னும் தீ அறிவைப் பொசுக்க வல்லது' என்பதில் நம்பிக்கையுடையவன்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும் எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்
வழிதேடி விதிஇந்தச் செய்கை செய்தான்;
கருமத்தை மேன்மேலுங் காண்போம், இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம் மாறும்
கருமத்தை அப்போது வெல்லக் காண்போம்" (283)

என்று அவன் கூறுவதிலிருந்து, தருமமே இறுதியில் வெற்றி பெறும் என்பதிலும், மாருத விதியின் வலிமையிலுங் கொண்ட நம்பிக்கையோடு, தன்னம்பிக்கையையும் ஒருபோதும் கைவிடாதவன் அரிச்சுனன் என்பது புலப்படும். தருமம் அழிந்துபோகத்தக்க சூழ்நிலையை ஆக்கித் தன்னுயிர்ப் பாஞ்சாலியின் துகிலை உரியப் பணித்த கன்னனைப் போரில் மடியச்செய்ய அவன் சபதங்கூறுகின்றுன். பெண்மையை இழிவுசெய்யும் கயவர்களை அழிக்க உறுதிகொள்ளும் தீரனுகப் பாரதியார் அவனைக் காட்டி மகிழ்கின்ருர்.

**வீமன்** மிகுந்த உடற்பலமுடையோன். அரிச்சுனனைப் போலன்றிக் கோபம் மிகும்போதெல்லாம் பதற்றம் அடையப் பெறுபவன். பகைவரை அழிக்கத் தருணம்நோக்கி இருப்போனுதலால் அதற்காகக் கிடைக்கும் சிறிய சந்தர்ப்பத்தையும் இழக்க விரும்பாதவன். விதுரனது அழைப்பினை ஏற்றுப் பெரும்படையுடன் அத்தினுபுரம் செல்வோம் என்று கூறுகின்ருன். கௌரவர்களைப்பற்றி "நெடுநாட்பகை கண்டாய் — இந்த நினைவினில் யான் கழித் தனபல நாள்" என்று குறிப்பிடுகின்ருன்.

"போரிடச் செல்வோமடா — மகன்
புலைமையும் தந்தையின் புலமைகளும்
யாரிட மவிழ்க்கின்ருர் — இதை
எத்தனை நாள்வரை பொறுத்திருப்போம்"

என்பதும் அவன் வாக்கு.

துரியோதனுதியோரதும், திருதராட்டிரனதும் சூழ்ச்சித் திறங்களை இகழ்ந்து தனது வீரத்திலுள்ள நம்பிக்கையினுல் நீண்டநாள்

காத்திருந்து பெற்ற இத்தருணத்தை விடாது போருக்குச் செல்வதே முறை என்று தருமணுறைவக் கேட்கின்றுன். சூதிலே தருமன் பாஞ்சாலியைப் பணயம் வைத்ததற்காக அவனைக் கண்டிக்கும் வார்த்தையிலிருந்து (273 - 281) வீமன் பாஞ்சாலிபால் வைத்திருந்த பேரன்பையும் மதிப்பையும் நாம் காணலாம். அத்தகைய திரௌபதியை மன்னரவைக்களத்து மானபங்கப்படுத்த நினைந்த துரியனையும், துச்சாதனனையும் பாரதப்போரிலே கொல்லச் சபதம் எடுக்கின்றுன்,

"நாய்மகனுந் துரியோதனன் தன்னை
.................. ........................
தொடையைப்பிளந்துயிர் மாய்ப்பேன் — தம்பி
சூரத் துச் சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன் — அங்கு
கள்ளென ஊறும் இரத்தம் குடிப்பேன்"

என்று எவரும் அஞ்சத்தக்கதாக இருக்கின்றது அவன் கூறும் சபத மொழிகள்.

**சகுனி** தான் இத்தகைய பயங்கரமுடிபு சகோதரர்களிடை யேற்படக் காலாக இருந்தவன். சூதிலே வல்லவன். தருமனுக்குச் சூதாட்டத்திலே உள்ள பெருவிருப்பைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு ஐவரையும் வீழ்த்தியவன். தருமனைச் சூதிற்கு உடன்படுத்துதற்காக அவன் கூறிய மொழிகள், அவனது சொற்சாதுரியத்தை நன்கு காட்டுவன. நீதிசாஸ்திரங்களில் வல்லவனுன திருதராட்டிரனும் துரியோதனனுடைய கெடுமதிக்கு உடம்படத்தக்க சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தவன். துரியோதனனுக்கு மிகுதியும் உற்றவன் இவனே என்பதை

"எங்கும் புவிமிசை உன்னைப்போல் — எனக்கில்லை
இனிது சொல்லுவோர்"

என்று துரியோதனன் வாயால் பாரதியார் நமக்குக் காட்டுகின்றுர். துரியோதனனுடைய அறிவின்படி சகுனி:

"கலைகளுணர்ந்த நல் வேதியப் பாவலர் செய்தவாம் — பழங்
காவியம் பற்பல கற்றனை மாமனே"

என்று புகழப்படுபவன். திருதராட்டிரனுல் 'பிள்ளையை நாசம் புரியவே ஒருபேயென நீ வந்து தோன்றினுய்' என்று இகழப்படுபவன். பாரதியாருக்கு அவன் 'தோல்விலைக்குப் பசுவினைக் கொல்

லும் துட்டன்' 'பீடிழந்த சகுனி' ஆகின்றுன். அதனுலேதான் விதுரரது வாயால், சூதாடும் மன்றிலே தருமர் தோற்றுக்கொண் டிருக்கும்போது,

"அருகு வைக்கத் தகுதியுள்ளானே
அவனே வெற்பிடைப் போக்குதி அண்ணே"

என்று சகுனியை நாடுகடத்துமாறு பாரதியார் வேண்டுகின்ருர். துரியோதனன் சகுனியுடன் சதியாலோசனை செய்தபகுதி, திருதராட் டிரனுடன் சகுனி நடத்திய உரையாடற்பகுதி, சூதாட்டத்திற்குத் தருமனை உடன்படுத்த அவன் முயலுதலும் சூதாடலுமாகிய பகுதி கள் என்பவற்றுள்ளே இக் "கயமகனது" குணுதிசயங்களைப் பரக்கக் காணலாம்.

**துச்சாதனன்** சகுனியைப்போன்ற ஒரு கொடியவன். துரி யோதனனது தம்பியருள்ளே கொடுமையாற் பெரியவன். 'தீமை யில் அண்ணனை வென்றவன்' என்று பாரதியார் இவனது கொடுமை யின் பேரளவைச் சுருங்கக்கூறி விளங்கவைத்துள்ளார். அண்ணன் கூற்றினை வேதவாக்காகக் கொள்ளும் துச்சாதனனையன்றிப் பாஞ் சாலியை மன்றினுக்கு இழுத்து வருவதற்கு ஏற்ற பாத்திரம் வேறு யாருமிலர். பாஞ்சாலி கூறிய அறிவுரைகளோ, ஒழுங்குமுறை களோ, நீதியுரைகளோ அவனுக்கு விளங்கவில்லை. அவளுடைய கற்றைக் குழல் பிடித்துக் கரகரவென்று இழுத்துவரவே அவனுல் முடிந்தது. பலம் நிறைய இருந்தும் வெற்றிரைச்சல் போடுவ திலேயே நம்பிக்கை மிக்கவன். மன்னவர்கள் முன்னிலையில் நீதி கேட்ட பாஞ்சாலியைத் 'தாதியடி தாதி' என்று திட்டிய பாதகன். அவளது துகிலை உரிவதற்குப் பெருங்களிப்போடு முன்வந்த கொடி யோன். தன்செயலால் தனக்கே அழிவை விதைத்துக்கொண்ட வன். வீமன் இவனது கடைகெட்ட தோள்களைப் பிய்த்தெறியச் சபதம் செய்ததை முன்பு கண்டோம்.

**விகருணன்** துட்டஞன துச்சாதனனுக்கும் துரியோதனனுக் கும் தம்பியே எனினும் குணநலத்தால் அவர்களிலும் மாறுபட் டோன். பாஞ்சாலிக்கு இழைக்கப்பட்ட துன்பத்தைக் காணச் சகி யாது துடித்தவன். தீயவழியிற் செல்லும் தன் சகோதரர்களைத் தடுத்து நிறுத்தி நல்வழிக்குத் திருப்பிவிடப் பாடுபட்டவன். வீட்டுமர் கூறிய நியாயத்தீர்ப்பைப் பிழை என்று துணிந்து கூறினவன். கௌரவர்களது கொடிய சூழலிற் தோன்றினுலும் நல்லகுணமனைத்

தும் வாய்ந்த ஒரு நீதிமானுகப் படைக்கப்பட்ட பாத்திரம் இந்த விகருணன்.

**கன்னன்** பாரத மகாகாவியத்துள்ளே வருகின்ற பெருந் தலைவர்களுள் ஒருவன். நல்ல வீரனும், சிறந்த அழகனுமாகிய கன்னன் தனக்கு ஈடு இணையில்லாத கொடைவள்ளலாக விளங்கினவன். அவனை 'மைநிகர் வான்கொடையான்' (மேகத்தை ஒத்து வரையாது கொடுப்போன்) என்று பாரதியார் கூறித் திருப்திப் படுவதிலிருந்து அவன் புகழை நாம் அறியலாகும். எனினும், துரியோதனனிடத்து நட்புக்கடனும், நன்றிக்கடனும் பூண்ட காரணத்தால் அவனது தீச்செயல் அனைத்துக்கும் உடந்தையாகவே இருந்திருக்கின்ருன். அதனுல் பாண்டவரிடத்தில் இயற்கையாகவே பகைமை வளரப்பெற்றவன். துச்சாதனன் பாஞ்சாலியைத் தீதுரைகள் புகன்றபோது மகிழ்ந்து சிரித்தவன். நீதிநெறியறிந்த விகருணன், பாஞ்சாலியை அவையிடை அழைத்தமை பிழை என்று பேசியபோது அவனை எதிர்த்துப்பேசி நிறுத்திவிட்டபின்னர், அக்கால வழக்கம் ஒன்றினையும் எடுத்துக்காட்டி:

> ''மார்பிலே துணியைத் தாங்கும் வழக்கம்கீ ழடியார்க்கில்லை
> சீரிய மகளுமல்லள் ஐவரைக் கலந்த தேவி,
> யாரடா பணியாள்! வாராய்; பாண்டவர் மார்பிலேந்தும்
> சீரையுங் களைவாய் தையல் சேலையுங் களைவாய்''

என்று கட்டளையிட்டவன். பாஞ்சாலி துகிலுரியப்படுதலே கௌரவரது பேரழிவுக்குக் காரணமான பாஞ்சாலி சபதத்தில் போய் முடிந்தது. காவிய நிறைவுக்குரிய வித்து துகிலுரிதல். துகிலுரிதலுக்குக் கட்டளையிட்ட இக் கன்னனை மடிக்க அரிச்சுனனும்சபதம் எடுக்கின்ருன்.

பாஞ்சாலி சபதம் இவ்வாறு பல்வேறு குணநலன்களைக் கொண்டுள்ள பல்வேறு பாத்திரங்களின் நடமாட்டம் உடையது. பாரதியாரது விருப்பு, வெறுப்பு, ஆவேசம், துன்பம், இன்பம், கடவுட் பக்தி யாவற்றுக்குமே இப்பாத்திரங்கள் காலாயுள்ளவர்போல் நன்கு படைக்கப்பட்டு விளங்கும் காப்பியம் இப்பாஞ்சாலி சபதம்.

# 14. பாரதியார் — உரையாசிரியர்

பாரதியாரது இருதயத் துடிப்பின் எதிரொலியினை நன்கு காட்டு கின்ற ஒரு இலக்கியப் படைப்புத்தான் பாஞ்சாலி சபதம். தனது காலத்தில் பாரதநாடு அரசியல் அடிமை, சமூக அடிமை, பொரு ளாதார அடிமை ஆகிய தளைகளிற் சிக்குண்டிருந்த இழிநிலையை யும், அவற்றிலிருந்து விடுபடுமாற்றையும் விளக்குவதற்கெழுந்த ஒரு காவியம். பாரததேசப் பெண்களை, ஆடவர்சமூகம் தனக்கு அடிமை களாகக் கருதி நடத்திவந்த கொடுமையை நீக்குதற்கு வழிவகுக் கவும் தான் கண்ட புதுமைப்பெண்ணின் வடிவத்தைப் படைத்துக் காட்டவும் வாய்ப்பளித்த மகா காவியம் ஆதலால் பொதுமக்கள் அனைவரும் — சிறிதே தமிழ் கற்றோருங்கூட — எளிதில் விளங்கிக் கொள்ளத்தக்க வகையிலே இலகுவான செய்யுள் நடையிலும், நொண்டிச்சிந்து முதலான பலவகைச் சிந்து, வண்ண மெட்டுக் களிலும் நூலைப் படைத்தளித்தார். ஆயினும் 'எங்கே', யாருக் கேனும் நூலில் ஏதும் விளங்காமற்போதலுங் கூடுமோ என்று கவலைப்பட்டார் போலும். 1912-ம் ஆண்டில் தாமே நூலின் முதலாம் பாகத்தைப் பதிக்கும்போது சிறந்ததொரு 'பொருள் விளக்கமும் குறிப்புகளும்' அப்பகுதிக்கு எழுதிச் சேர்த்து வெளியிட்டார்கள். நூற்பொருளை எப்படியும் பொதுமக்கள் உள்ளத்திற் பதித்துவிட வேண்டும் என்று பாரதியாருக்கு இருந்த ஆசையின் அளவையும் அதனால், இந்நூற் பெருமைபற்றிப் பாரதியார் கொண்டிருந்த உயர்ந்த கருத்தையும் நாம் அறியலாகும் எனினும், இலக்கியம் படைக்கும் துறையில் பாரதியாருடைய இன்னொரு பேராற்றலின் சிறப்புப்பற்றியும் நாம் அறிந்து மகிழவும் இவ்வுரைப்பகுதி வாய்ப் பளித்திருக்கின்றதெனலாம். நல்ல கவிதைகளும், கட்டுரைகளும் எழுதுவதில் மட்டுமே பாரதி வல்லவன் என்று கருதியிருந்த மக்க ளுக்குத் தாம் ஒரு சிறந்த உரையாசிரியருமாவர் என்பதைப் பாஞ் சாலி சபதத்துக்குத் தாம் எழுதிய உரையின் சிறப்பினால் அவர் நிரூபித்துவிட்டார்.

சொற்பொருள் கூறுவதும், திரட்டுரையான பொழிப்புரை கூறு வதும், உரையோடு விளக்கமும் செய்வதும் அகலவுரை கூறுவதும் எனப்பல வழிகளை உரையாசிரியர்கள் செய்யுட்பொருள் விளக்கத் துக்காக மேற்கொள்வதுண்டு. அவர்கள் சொற்பொருளை நன்கு விளக்கம் செய்தற்கும் செய்யுட்சிறப்பை எடுத்துக்காட்டுதற்கும் பயன்படுவதான இலக்கணக் குறிப்புகளை வேண்டியவிடத்துக் கூறு

வார்கள். இவையனைத்தையும் தனித்தனி எடுத்துக்காட்டுவதோடு அமையாது, இன்றியமையாதவிடங்களில் அனைத்தையும் ஒன்றுபடுத்திக்கூறி நல்விளக்கமும் செய்யுள் முழுவதற்குமோ அன்றி முக்கியமான சில சொற்களுக்கு மட்டுமோ நயம் கூறும் நல்லுரைகளையும் பழைய உரையாசிரியர்களிடம் கண்டிருக்கின்றோம். 204 செய்யுள்களைக்கொண்ட பாஞ்சாலி சபதத்து முதலாம் பாகம் ஒன்றுக்கு மட்டும், அதுவும் மிகச் சுருங்கிய அளவில் பாரதியார் உரையும் விளக்கமும் செய்துள்ளார் எனினும் மேலே நாம் கண்டவை முதலாகிய உரைப்பண்புகளுள் எதிலும் குறைவுபடாது, இடங்களின் பொருத்தம்நோக்கிப் பாரதியார் திறம்படத் தமது உரை எழுதும் ஆற்றலை அப்பகுதியுட் பயன்படுத்தியுள்ளார். அச் சிறப்புக்கள் அனைத்தும் இந்த உரைப்பகுதி எங்கணும் பரந்து விளங்கக் காண்போம்.

எதையும் சுருங்கச்சொல்லி விளங்கவைப்பது கற்போர், கேட்போர் யாவரையும் கவர்ந்து நிற்றலோடு சொல்வோனது மதிப்பினையும் உயர்த்துவது. சொற்பொருள் கூறும்போது பாரதியார் இம்முறையினைக் கூடியவரை கையாண்டுள்ளார். உரியோர் — பந்துக்கள் (16), வின்னயம் — வில் வித்தை, யுத்த சாஸ்திரம் (158), இளங்கொடி — பாஞ்சாலி (160), ஆலம்உறத்தழுவி — மார்புறத்தழுவி (265), வல்லமர் — சூதுப்போர் (177), என்றெல்லாம் சொற்பொருள் நன்கு விளங்குமாறு தனித்தனிச் சொற்களால் உரை கூறிச் செல்வது பாரதியாரின் தனிச்சிறப்பாக உள்ளது. சில இடங்களில் பெருந்தொடர்களுக்கே தனிச்சொல்லொன்றால் அவர் நல்விளக்கம் செய்யக் காண்கின்றோம். 'நூல் விலக்கிய செய்கைகளஞ்சும் நோன்பினேன் (171) என்ற தொடரின் பொருள் நன்கு விளங்குவது எனினும் யாரை இத்தொடர் குறிப்பிடுகின்றது என்பதிலேதான் சிலவேளை மயக்கம் ஏற்படல்கூடும். இதனை, நன்குணர்ந்த பாரதியார் 'தருமராஜன்' என்றுமட்டுமே முதலில் இத்தொடருக்கு உரை கூறுகின்றார். உரைக்கு விளக்கம் போன்று அதன்பின்னரே வருகின்றது, 'அறநூல் விதிகளைத் தவறாதவன்' என்னும் நேரான உரைப்பகுதி. இந்த இடத்திலே சொற்பொருளைக் காட்டிலும் விளக்கச் சொல்தான் முதன்மைபெற்று நிற்கின்றது என்பதனை உணர்த்துதலின்மூலம் உரைகூறப் புகுவோர் முக்கியமாகக் கருத்துச் செலுத்த வேண்டிய பகுதிகளையும் மறைமுகமாக விளக்கிச், சொற்பொருள் கூறும் துறைக்கு நல்ல வழிகாட்டியாகவும் பாரதியார் விளங்குகின்றார்.

சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் முறையையன்றி, சுருக்க மான விளக்கங்களைத் தருதலாற் பொருளை தெளிவுபடுத்திக் கூறும் சிறப்பினையும் இவர் உரையுட் சில இடங்களில் நாம் காணலாம். தனது உள்ளக் கருத்தைத் தெளிவுறக் காட்டுவதே, ஒரு நூலாசிரி யன் தனது நூலுக்குத் தானே உரை எழுதப்புகுதலின் முக்கிய நோக்கமாகும் என்பதை அவ்விடங்களில் நாம் தெளிவுற உணர முடிகின்றது. ''மறைக்குல மறவர்களிருவர் (17) என்ற தொடருக்கு ''வேதமோதும் குலத்திலே பிறந்தவராயினும் மறவர் தொழிலைக் கொண்ட துரோணன், கிருபன் என்னும் மஹான்கள்" என்று தெளிவுரை தந்துள்ளனர். சகுனியைக் குறிப்பிடுவதாகிய 'பழிக் கவற்றையோர் சாஸ்திரமெனப் பயின்றோன்' (168) என்னும் தொட ருக்கு ''பிறர் ஸங்கீதம், கணிதம், வியாகரணம், யுத்ததந்திரம் முதலிய சாஸ்திரங்கள் படிப்பதுபோலச் சூதாட்டத்தை ஒரு சாஸ் திரமாகப் பயிற்சி செய்து எதிர்க்கமுடியாத நிபுணத்துவம் வாய்ந் திருந்த சகுனி'' என்று மேற்கொண்டு வேறு விளக்கம் கூற வேண் டாத வகையில் நயமுந் தெளிவும் தந்திருப்பதும், 'தோல் விலைக் குப் பசுவினைக்கொல்லும்' (171) என்னும் பகுதிக்கு, ''தோல்விலை யாகக் கிடைக்கும் பொருளை விரும்பிப் பசுவைக் கொல்லுதல் போலப் பொருளாசையால் யுதிஷ்டிரனைக் கெடுத்துத் தருமநாசஞ் செய்யத் துணிந்தவனாகிய சகுனி'' என்று விளக்கம் செய்திருப் பதும் எல்லாம் இவ்வகையைச் சார்ந்த சிறந்த தெளிவுரைப் பகுதி களேயாகும்.

நூலின் முதற் பாடலில் உள்ள 'ஆம்' என்னும் சொல்லுக்கு எழுதப்பட்டுள்ள விளக்கம் மிகுதியும் பாராட்டத்தக்க ஒன்றாக இருக்கின்றது. ''ஆமெனும் பொருளனைத்தாய் 'உள்ள வஸ்துக்கள் யாவு மாகி' என்பது பொருள். 'ஆம்' என்பது சம்மதியைக் குறிப் பது மட்டுமேயன்றி உண்மையையும் குறிக்கும். வடமொழியில் ஓம் என்னும் சொல்லுக்கு 'ஆம்' என்றே பொருள். எவ்விடத் தும் இல்லையாதல் இன்றி 'ஆம்' என இருத்தல் பற்றியே வேதத்தில் பிரமத்துக்கு 'ஓம்' என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதறிக." இப் பகுதியுள் பாரதியார் 'ஆம்' என்னும் சொல்லில் அடங்கியுள்ள தத் துவப் பொருளை ''எவ்விடத்தும் இல்லையாதல் இன்றி" என்ற தொட ரால் சுருக்கமும் தெளிவும் பொருந்த நன்கு விளக்கியிருப்பதைக் காணலாம். ''மறவர் (11) என்ற சொல்லுக்கு 'க்ஷத்திரியர்' என்று பொருள்'' கூறிய ஆசிரியர் அதனை விளக்கும் விதமும், இவ்வ கையினுள் அடங்குவதேயாகும். எனினும் 'மறவர்' என்ற சொல்

லுக்குப் 'போர்வீரர்' என்றுள்ள பொதுக்கருத்தையும் பாரதியார் மறக்கவில்லை என்பதை 'மறைக்குலமறவர்' (17) என்று அவர் குறிப்பிடும் தொடரால் அறியலாம். 'சூத்திரர்' என்ற சொல் தற்கால வழக்கிலே பொருத்தமின்றிப் பயின்று வருதல் பாரதியாருள்ளத்தை மிகுதியும் வருத்திற்று. அதனை எடுத்துக்காட்டி விளக்குவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை, அவர் 'மாசனம்' (17) என்னும் சொல்லுக்குத் தெளிவுரை கூறும்போது ஏற்படுத்திக் கொள்கிறார். ''மாசனம் - மஹாசனங்கள்; பொதுப்படையான குடிகள்; இவர்களே தேசத்திற்கு உயிரானவர்கள் இவர்களைச் 'சூத்திரர்' என்பது தற்கால வழக்கு. சூத்திரர் என்னும் பெயரைச் சிலமூடர் இழிவான பொருள்பட வழங்குதல் பற்றி, நூலில் அப்பெயர் தரவில்லை'' என்பது அப்பகுதி. கவிதை கட்டுரைகளில் மட்டுமின்றிச், செய்யுள் உரை கூறுமிடத்தும் இழிவழக்கு முதலானவற்றைக் கண்டிக்கலாம் என்பதை உரையாசிரியரான பாரதியார் இதனுல் நன்கு காட்டுகின்ருர் எனலாம். சொற்பொருளை, பொருத்தமும் சமமுமான வெவ்வெறு மொழிச் சொற்களைத் தந்தாவது நன்கு விளக்கிவிடவேண்டுமென்பது அவர்கருத்து. ''உடல் வலித் தொழில் (160) - கஸ்ரத்; சரீரபலத்துக்காகச் செய்யப்படும் அப்பியாசங்கள்; இதனை வடமொழியில் ''வ்யாயாமம்'' என்பர்'' என்றும்; ''வழக்கு (175) வழக்கம், பூர்வாசாரம், மாமூல்'' என்றும் அவர் கூறுவது எல்லாம் இப்பெரு நோக்கம் கொண்டெழுந்தனவே எனலாம்.

நல்ல உரைகாரர் இலக்கணக் குறிப்புகளை வேண்டியவிடத்துக் காட்டிச் செல்லும் வழக்கத்தினைப் பாரதியார் மறந்து விடவில்லை. ''அறத் தோன்றல் (166) தருமபுத்திரனே என்னும் விளி; 'கவறை-கவற்றை' என்றிருத்தல் நேர்;'' என்பனவும் 189:6, 192:2, ஆகிய இடங்களில் முறையே உள்ள ''என்பது கொள்ளக் கிடக்கின்றது'', ''என்பது தொக்கு நிற்கின்றது'' என்பனவும்; 168ஆம் பாட்டில் ''கவற்றை'' என்று பாடியிருப்பது மெல்லாம் பாரதியார் இலக்கண மரபையும் மறவாது பின்பற்றியுள்ள சிறப்பைக் காட்டும் பகுதிகளே. ''கெலித்திடல் (199)-வெல்லுதல் இது திசைச் சொல், கிராமியம்'' என்று கூறியிருப்பதும் இவ்வகையைச் சேர்ந்ததே எனலாம்.

விளக்க உரைகாரர் போன்று அங்கங்கே சில பகுதிகளுக்குப் பாரதியார் கூறியுள்ள செய்யுள்நயம் மிகச்சிறந்த முறையிலமைந்து அவரது உரைவளத்தை மிகுத்து நிற்கின்றது. சரஸ்வதி தேவியின் உருவ அழகை, உருவகக் கண்கொண்டு சிருட்டிக்கும் சிறப்புடையது, பாஞ்சாலிசபதத்து 4ஆம் பாடல், சரஸ்வதிதேவி வேத

மாகிய தன்கண்களுக்கு, உரையாகிய கரியமையைப் பூசியுள்ளாள் என்பது 'மிக்கபல்லுரை எனும் கருமை இட்டாள்' என்னும்பாடற் பகுதிக்குரிய பொருளாகும் கண்களை அழகூட்டிநிற்கும் மைபோல, வேதங்களிலுள்ள கருகலான உட்பொருளையும் தெளிவுறவிளக்கி நிற்பன அதன் உரைகள் என்பதனைப்பாரதியார் நயம்பட விளக்கு கின்றார்: ''வேதமாகியகண்ணில் (ஞானநூல்களாகிய கண்ணில்)பல வித 'வியாக்கியானங்கள்,' 'பாஷ்யங்கள்' என்னும் கரியமையைப் பூசியவள். மை கண்ணுக்கு நல்லது, அழகுங்கூட. ஆனால் அளவுக்கு மிஞ்சிப் பூசினால் விகாரமாகத் தோன்றுவதுடன், கண்ணே போனா லும் போய்விடும். நமது தேசத்தில் ஒருவேளை இப்படி நடந்திருக் குமோ? சரஸ்வதி அறிவுத் தெய்வமாதலால் அவளுக்கு ஆத்ம ஞானமே (வேதமே) விழியெனப்பட்டது'' என்னும் இந்த உரைப் பகுதியில், வேண்டாத விரிவுரை மூலபாடத்தையே மாற்றிவிடவல் லது என்று உரையெழுதும் முறைக்கும் பாரதியார் வரம்பு செய் கின்றார். வேதங்கள் திரிபுபடப் பிற்காலத்தே உணரப்பட்டிருப்ப தற்கு ஒரு வேளை, வரம்பு கடந்து சென்ற 'பாஷ்யங்கள்' (உரை கள்) தாம் காரணமாகி யிருக்குமோ என்று அவர் கேட்பது கற்றோர் கருத்தினை மிகுதியும் சிந்திக்கத் தூண்டும் ஒன்றாயுள்ளது. 'நின்றி டும் புகழ்ச்சீனம்' (34), 'கேட்கும் காதும் இழந்து விட்டாயோ'(20) 'அவனை வெற்பிடைப் போக்குதி அண்ணே' (203) என்னும் பாடற் பகுதிகளின் விளக்கக் குறிப்புகளெல்லாம் இவ்வாறு சிறந்த நயம் கூறும் பகுதிகளே யென்னலாகும்.

வியாசபாரதத்தை முதனூலாகக் கொண்டே பாஞ்சாலிசபதத் தினை எழுதினாராதலால் அம்முதனூலில் இல்லாதவற்றைத் தம்ம தில் புகுத்துதற்குப் பாரதியார் பெரிதும் அஞ்சினார். அப்படிச் செய் வது பாவம் என்பது அவர் கருத்து. அதனால் அப்படிமாறுபட்டது போற் காணப்படும் இடங்களைத் தம் உரை வளத்தால், சரிவரத் தெளிவுபடுத்த முனைந்திருக்கிறார் என்பதை நாம் காணலாம். 'அர பியர் ஒட்டைகள்' (33) தருமனுக்குவந்த காணிக்கைப் பொருள் களுள் காணப்படுகின்றன பாஞ்சாலிசபதச் செய்யுட்பகுதியில். ஆனால், வியாசபகவான், ஒட்டைகள் அராபியாதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டன என்று தம் நூலுட் குறிப்பிடவில்லை. ஆகவே 'அரபியர் ஒட்டைகள்' என்று தாம்குறிப்பிட்டதற்குப் பாரதியார், காரணத்தோடு கூடிய நல்விளக்கத்தைத் தம் உரைப்பகுதியுட் காட்டவிழைந்தார். ''வியாசமுனிவர் அரபிதேசமென்று பெயர் குறிப்பிடாவிடினும், அவரது வர்ணனைகளைப் பார்க்குமிடத்துத் தரும

புத்திரன் யாகத்துக்குக் காணிக்கையாக வந்த ஒட்டைகள் அரபிதேசத் தன என்று தெளிவாகத் தோன்றுகின்றது. இன்று அரபிதேசத் திலே தான் ஒட்டைகள் அதிகமாக வழங்குதலறிக" என்பது அவர் கூறும் விளக்கம். முதனூலாசிரியர்பால் வைத்திருந்த பெரு மதிப்போடு, பாரதியாரது தன்னடக்கச் சிறப்பையும் இப்பகுதி யினுல் நாம் அறியலாம். இது போன்றதே "நீதித்தருமனும் சூதி லன்புள்ளோன் (104) தருமன் சூதாட்டத்திலே பிரியமுள்ளவனென் றும், அழைத்தால் எளிதில் இணங்கிவிடுவான் என்றும் சகுனிகருது வதாக முதனூலிலேயே காணப்படுகின்றது" என்னும் பகுதியும், நீதித்தருமன், நீதியைச் சிதைக்க வல்ல சூதில் எப்படி அன்புள்ள வனுவான் என்று நாம் பாரதியாரிடமும் சில வேளை கேட்டுவிட லாமல்லவா! பாரதியாருள்ளத்திலும் சிலவேளை இக்கேள்வி எழுந்தி ருத்தல் கூடும்! 'முதனூலாசிரியர் கூற்றைத் தான்மாறுபடக் கூற லாகாது ஆதலால் கூறியுள்ளேன்' என்று உணரவைத்துப் பாரதி யார் விலகி விடுகிறுர்.

உரை கூறும்போது தமக்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்களைப் பயன் படுத்திக் கொண்டு, சிந்தனை நிறைந்த அறிவுரைகளைப் பாரதியார் காட்டுவது சிறப்பான இன்னேர் அம்சமாகும். பிராமணர் என்ற சாதியார் வேதகாலத்திலிருந்தே பாரதஜாதி முழுமையின் அறிவுக் கும் பொறுப்பாளிகளாக இருந்தார்களாம். அவர்கள் தம் கடமை களைத்தவருது நடத்தியிருப்பார்களாயின் மற்றையசாதியினரும் தம் நெறிதவறி இருக்கமாட்டார்கள் என்பது பாரதியார் கருத்து. அத ஞல் ஒரு தேசத்தின் உயர்வு தாழ்வுகளுக்குப் பிராமணர்களே பொறுப்பாளிகளெனப் பாரதியார் குறிப்பிடுவதன் மூலம் குலப் பண்பினை எவரும் விலகிநடத்தல் கூடாது என்று அனைவர்க்கும் பொதுவாக அவர் அறமுரைக்கும் சிறப்பினை இப்பகுதி நன்கு காட்டுகின்றது. 69, 70 ஆகிய பாடல்களின் உரைப்பகுதியும், 'பூர் வாசார மென்ற காரணத்தால் தீயவழக்கங்களை அனுசரித்தல் பாரத தேசத்திற்கு ஏற்பட்டசாபம், (175) என்றும், "பழமையிலே பெரும் பகுதி உயர்வு சான்றதுதான்...... ஆயினும் இழிந்த அமானுஷிக நடைகள் சில இவற்றோடு கலந்துள்ளன" (178-181) என்றும் பண்டைய மூடப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதைக் கண்டிக் கும்பகுதிகளெல்லாம் நிறைந்த அறிவுரை சான்று விளங்கும் உரைப் பகுதிகள்,

பாரதியார் தமது நூலுக்கு எழுத முற்பட்டது குறிப்புரை தான். ஆயினும் சிலஇடங்களில் மேலேகண்டவாறு விளக்கஉரை யாகவும், செய்யுள் நயமாகவும், அறிவுரையாகவும் ஒருசில இடங் களில் அகல வுரையாகவுங்கூட அது அமைந்து அவரை ஒரு சிறந்த உரையாசிரியராக்கியுள்ளது. மாலை வருணனைப்பகுதிக்கு (147-152) விளக்கங்கூறும்போது, மாலைச்சூரியனை எவ்வாறு கண்டனுபவித் தல்வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டி நம்மிடத்து இயற்கையை இரசிக்கும் ஆற்றலை வளர்த்துவைக்கவும் முயன்றிருக்கின்றார் உரை யாசிரியராகிய பாரதியார், என்பதற்கு விளக்கக்கட்டுரை போன்று நீண்டமைந்த அப்பகுதி சான்றாயுள்ளது.

இவ்வாறான உரைநடுவே தமது கவிதைப்போக்கைப்பற்றிய குறிப்புகளையும் எழுதிவைக்கப் பாரதியார் தவறினாரில்லை. காவி யஞ்செய்வோர் இயற்கைக் காட்சிகள், காதல், போர், அறம் முதலான வெவ்வேறு துறைகளைப்பற்றிப் பாடும்போதெல்லாம் அப் பொருளுக்கேற்ற நடையுடைய செய்யுள்களை அமைத்துச் செல் லும் வழக்கம் கொண்டிருக்கின்றனர். அவ்வாறே பாரதியாரும், தமது நூலமைப்பிலும் வேண்டியமாற்றங்களைக் கவிதைப்போக்கிலே மேற்கொண்டு தம் காவியத்தை இனிமைப்படுத்தியுள்ளார். அவ்வா றமைந்த வேறுவேறான சந்தங்களை எல்லாம் பொருத்தமான 'தரு'க் களைக் காட்டுவதன் மூலம் விளக்கியுள்ள பாரதியாரது உரையா னது, நல்ல இசையமைப்பு முறைகளையும் காட்டும் ஒன்றாயுள்ளது. இவை இன்ன சந்தப்பாடல்கள், இவை நொண்டிச்சிந்து, இவை விருத்தம் என்பனவாக அவர் கொடுக்கும் இசைப்பேதக்குறிப்புகள், செய்யுட் பொருளறிந்து இன்புற நன்கு வழிசெய்து நிற்பன. 185-195 உள்ளபாடல்களை விளக்கும்போது

"லால லாலலா லா லாலா
லால லாலலா லா

என்ற மெட்டுள்ள சிந்துகள்; தெருவில் ஊசிகளும் பாசிமணிகளும் விற்பதோடு பிச்சை எடுக்கவும் செய்கிற பெண் கள் 'மாயக்காரனம்மா - கிருஷ்ணன், மகுடிக்காரனம்மா' என்று பாடும் நடை; சூதாட்டவருணனைக்கும் அதில் ஏற்படும் பர பரத்த வார்த்தைகளையும் செய்கைகளையும், விளக்குதற்கும் இந் நடை மிகவும் பொருந்தியதென்பது எளிதிலே காணப்படும்" என்று பொதுமக்களுக்கு நன்கு தெரிந்ததான இசைப்பாடலொன் றுக்கு, மேலும் பொருத்தமானமுறையில் இசைவிளக்கம் செய்து காட்டுகின்றார். செய்யுளில் வரும் கூற்றுகள் யாருடையன என்

பதில் வாசகர்கள் தவருது கவனம்செலுத்தவேண்டும் என்பது பாரதியாரது உள்ளத்தே யுள்ள இன்னெரு முக்கியமான குறிப் பாகும் என்பது அவரது உரையிடைப் புலப்படுவதாகும். "ஒரு வனுடப் பணயம்-தருமன் சொல்லுவது" (186:1-4): "துரியோ தனன் கூறுவது" (186:5-8); "இஃது கர்ணன் வசனம்" (187:1-3); "தருமன் வசனம்" (187:5-8) என்பனவெல்லாம் அவர் காட்டுகிற சுருக்கமான அத்தகைய சந்தர்ப்ப விளக்கங்களாகும். இவ்வாருன சிறப்புகளால் பாரதியார் மிகச் சிறந்ததோர் உரையாசிரியருமாக விளங்குகிருர் என்று நாம் துணிந்துகொள்ளலாகும்.

வாழ்க பாரதி நாமம்.

ஸ்ரீ லங்கா அச்சகம்
யாழ்ப்பாணம்.